போதிதர்மர்

பற்றிய அற்புதமான விஷயங்கள்!

The Miraculous Adventures of Bodhidharmar

எஸ். குருபாதம்

போதிதர்மர் பற்றிய அற்புதமான விஷயங்கள்

The Miraculous Adventures of Bodhidharmar

எஸ். குருபாதம்

மணிமேகலைப் பிரசுரம்
தபால் பெட்டி எண் : 1447
7 (ப.எண் 4), தணிகாசலம் சாலை,
தியாகராயநகர், சென்னை – 600 017.
தொலைபேசி : 2434 2926, 2434 6082
மின்அஞ்சல் : manimekalai1@dataone.in
மின் இணையம் : www.tamilvanan.com

நூல் விவரம் BOOK - DETAIL

நூல் தலைப்பு	:	போதிதர்மர் பற்றிய அற்புதமான விஷயங்கள்
Title of the book	:	The Miraculous Adventures of Bodhidharmar
ஆசிரியர்	:	செல்வத்துரை குருபாதம்
Name of Author	:	**Selvadurai Gurupatham**
E-mail	:	gurujeya@ymail.com
Residence	:	180 Bonspiel Drive, Toronto, MIE 5K4 Ontario, Canada.
Cover Design, Typeset,	:	ஜெயஜோதி (ஜெயா) குருபாதம்
Pictorial Images & Editing	:	Jeyajothy(Jeya) Gurupatham (nee Paramsothy)
Type set by	:	Nadarajah Nanthakumar
Language	:	Tamil
Year of Publication	:	2014
Edition	:	First Edition
Copyright reserved	:	Author
Paper	:	70 GSM
Book Size	:	Demi Size (14 x 21 Cm.)
Point Size	:	11 Point
மொத்த பக்கங்கள்	:	xvi + 288 = 304 பக்கங்கள்
No. of Pages	:	xvi + 288 = 304
Price	:	**Rs. 200.00**
D.T.P.	:	P.S. Muthu Graphics, Chennai - 15.
Printing	:	Script Offset, Chennai - 94
Publisher	:	Manimekalai Prasuram, Chennai - 17

அட்டைப்பட விளக்கம்:

ஒளி

ஞானஒளி போதிதர்மரின் தோற்றம்

Cover page illustration:

Radiance

Image of Bodhidharmar

உள்ளே

	பக்கம்
● அணிந்துரை	vi
● நூல் அறிமுகம்	viii
● என் பார்வையில் இந்நூல்...	x
● 'என்' நூலைப்பற்றி 'நான்'	xiv

பாகம் 1

ஒரு கண்ணோட்டம்

(At a glance)

அத்தியாயம்		
1.	'பௌத்தம் இந்து மதத்தின் நிறைவு' - சுவாமி விவேகானந்தர்	2
2.	பௌத்தம் ஒரு கண்ணோட்டம்	6
3.	'பௌத்த மதம் ஊடாக இந்திய – சீன நல்லுறவு' – பிரதமர் நேரு	20
4.	தமிழ்மொழி பேசும் இடத்தில் மாபெரும் புத்தஞானி – சீனத்துறவி Xuan Huang	29
5.	பெண்ணைக் 'குரு'வாக ஏற்று பெண்களைப் பெருமைப்படுத்திய ஞானி	33
6.	மதங்கள் பெண்கள் கையிலிருந்தால் மதங்கொள்ளாது மதங்கள் மதங்களாகவே இருக்கும்	44
7.	சென் (Zen) பௌத்தத்தின் ஜனனமும் முதலாவது குருவும்	57
8.	பௌத்தம் பொலிவிழந்தது, போதிதர்மர் சீனா பயணம்	65
9.	சீன எல்லையில் அரசவரவேற்பில் பேரரசர் ''வூ'' (Wu Tai) உடன் முரண்பாடு	70
10.	ஷோலின் ஆலயத்திலிருந்து வெளியேற்றப்பட்டார்! மலைக்குகையினுள்ளிருந்து தியானித்தார்!	76

11. சீனாவில் நிலவிய 'யின்' (Yin), 'யாங்' (Yang) கோட்பாடுகளுடன் 'சான்' (Chan) 87

12. தான் ஒரு மாபெரும் மகான் என்பதை அறியாத மாபெரும் மகான் 98

13. தற்காப்புக்கலையின் தந்தை 107

14. இலங்காவத்திர சூத்திர ஞானத்தைச் சீனாவில் விதைத்தார் 113

15. கௌதம புத்தரின் பாதையில் பயணித்தார் போதிதர்மர் 116

16. போதனைகளில் மொழிப்பிரச்சினை 131

17. பேரசர் வெய் (Wei) தன் உட்குரலைக் கேட்டார் 145

18. போதிதர்மர் ஒரு மருத்துவ விஞ்ஞானி: அக்கியூபங்சர் (Acupuncture) மருத்துவத்தின் தந்தையா? 152

19. மேற்கே அறிவியலுக்கு சோக்கிரட்டிஸ் கிழக்கே போதிதர்மர்! 158

20. சீடர்களின் சில கேள்விகளுக்குப் போதிதர்மரின் சில பதில்கள் 165

21. உயிர்த்தெழுந்தார் போதிதர்மர்! இமயத்தின் மடியில் தன்னை ஒப்படைத்தார்!! 170

22. உடலுறுப்புத் தானம் பற்றிய சிந்தனையின் முன்னோடி 189

23. சென் புனித ஏடு 'கோன்' (Koan) / 'குங்ஆன்' (Kung-an) 193

24. சீனாவில் போதிதர்மர் பாடசாலை 196

25. திடீர் விழிப்புணர்வடைதல் (ஞானம்) (Attaining sudden enlightenment) 203

26. ஞானிகளைப் பைத்தியக்காரர் என்கிறார்களே... ஏன்? 207

27. ஒளிவட்டம் (தேஜஸ்) Aura of light 215

பாகம் 2

விதிமுறைகள் இல்லாது வாழ்வதே இந்த ஞானிகளின் விதிமுறைகள்

(Living without any precepts are the precepts of the following saints)

28. ஹொடாய் (Hotei):
சிரிப்பால் மக்கள் மனதை ஒருமைப்படுத்தியவர்!
சிரிப்பால் விழிப்புணர்வைத் தூண்டியவர்!! 218

29. ரின்சாய் ((Rinzai):
'ஒரு கை ஓசையைக் கேளுங்கள்'' 237

30. தியோஜினிஸ் (Diogenes):
'மனிதனைத் தேடுகிறேன்' 242

31. இந்தியாவின் நல்லெண்ணத் தூதுவர் (Goodwill Ambassador) 264

பாகம் 3

எல்லாமானவராகவும் எல்லாமற்றவராகவும் இரு

(Be Empowered as well as Unempowered...)

32. 'சும்மா இரு' (Be Non-self) 274

● சில ஆய்வு நூல்கள் (Selected Bibiliography) 285

■■

அணிந்துரை

கௌதம நீலாம்பரன்

போதிதர்மர், தென்னிந்தியாவில் – தமிழ் மண்ணில் தோன்றிய ஞானப் பேரொளி. சீன தேசத்தை ஆட்கொண்டது மட்டுமல்லாது, உலகம் முழுக்கத் தமது அருள் மணம் கமழச் செய்த பெருமை இவருடையது. 'ஜென்' (Zen) தத்துவம், தற்காப்புக்கலை, மருத்துவ அறிவியல் என இவருடைய மானுடநேயப் பணியின் எல்லை மிக விரிவானது. ஆசியாவின் அற்புதஜோதியான புத்தபெருமானின் மறு அவதாரமாகவே போதிதர்மர் உலக அறிஞர்களால் பேசப்படுகிறார்.

போதிதர்மர் பற்றி, 'ஏழாவது அறிவு' திரைப்படம் மூலம் இயக்குநர் ஏ.ஆர். முருகதாஸ் அவர்கள்தான் வெகுஜன கவன ஈர்ப்பினை நிகழ்த்தினார் என்பது மறுக்க முடியாத உண்மை என்றபோதிலும், மணிமேகலைப் பிரசுரம் வெளியிடுகின்ற 'போதிதர்மர் பற்றிய அற்புதமான விஷயங்கள்' என்கிற இந்த நூல் வெளிச்சத்திற்குக் கொண்டுவரும் செய்திகள் ஏராளம். போதிதர்மர் பற்றிய வரலாற்றுச் செய்திகள் இவ்வளவு உள்ளனவா? என நம்மை பிரமிக்க வைக்கிறது இந்த நூல்.

ஆசிரியர் எஸ். குருபாதம், இந்த நூலை எழுத மிக விரிவான ஆராய்ச்சிகள் செய்திருக்கிறார். அவருடைய அறிவார்ந்த கடின உழைப்பு இந்த நூலின் ஒவ்வொரு அத்தியாயத்திலும் புலப்படுகின்றது. மொத்தம் 32 அத்தியாயங்கள் உள்ளன. ஒவ்வொன்றும் ஒரு தனி நூலாக எழுதத்தக்க அளவு ஆழமான விஷயங்களைப் பேசுகின்றன.

போதிதர்மர் பற்றி ஜவஹர்லால் நேரு குறிப்பிட்டுள்ள செய்தி தொடங்கி, ஏராளமான வரலாற்றுத் தகவல்களை நம் முன் வைக்கிறார் குருபாதம். உலக சரித்திரத்தில் பௌத்த நெறியை ஒளிரச் செய்த மிகப்பெரிய தமிழ்ஞானியான போதிதர்மர் பற்றி மட்டுமல்லாது, தர்மரட்சகா, புத்தபத்திரா, குமாரஜீவா, பரமார்த்தா, ஜினகுப்தா, குணபத்ரா என ஏராளமான இந்திய ஞானிகளைப் பற்றி விவரிக்கிறார்.

இந்த நூல் பெண் ஞானியர்கள் பற்றி மிக உயரிய கருத்தினை முன்வைக்கிறது. பௌத்த நெறியின் பல்வேறு நிலைப்பாட்டினை விவரிக்கிறது. சூஃபி மார்க்கம், ஜென் தத்துவம், சைதன்யர்கள் மற்றும் ஹொடாய் (Hotai) எனும் சிரிக்கும் புத்தர் பற்றியெல்லாம் ஏராளமான செய்திகளை நமக்களிக்கிறது.

சமய தத்துவ உலகில் இந்த நூல் மிக உயரிய இடத்தினைப் பெறும் என்பதில் எவ்வித அய்யமும் எனக்கில்லை. ஆன்மிக ஞானத்தேடல் உள்ளவர்களுக்கு இந்நூல் ஒரு தத்துவஞானச் சுரங்கம் எனலாம். அள்ள அள்ள அரிய விஷயங்கள் பல வந்துகொண்டே இருக்கின்றன.

தவறவிடாமல் இந்நூலை வாங்கி வாசிப்பவர்கள் பாக்கியவான்கள்!

கௌதம நீலாம்பரன்

('தினத்தந்தி' ஆதித்தனார் விருதுபெற்ற வரலாற்று நாவலாசிரியர்)

கௌதம நீலாம்பரன்,
(P.கைலாசநாதன் M.A)
123—6, 4—D.சாய்சதோவர்
100 அடி புறவழிச் சாலை,
வேளச்சேரி, சென்னை—600 042
செல் : 9444034080

South Eastern University of Sri Lanka
ශ්‍රී ලංකා අග්නිදිග විශ්වවිද්‍යාලය
இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம்

நூல் அறிமுகம்

இந்நூல் பல்வேறு ஆய்வுகளின் அடிப்படையில் எழுதப்பட்டுள்ளது. 'போதிதர்மர் யார்' என்ற வினாவிற்கு விடையளிக்கிறது. பாரத முதற் பிரதமர் திரு. ஜவகர்லால் நேரு அவர்களின் உலகப் புகழ்பெற்ற Glimpses of World History, The Discovery of India போன்ற நூல்களில் போதிதர்மரைப் பற்றிக் குறிப்பிட்டுள்ள விஷயங்களை ஆசிரியர் மேற்கோளாகக் காட்டி இந்நூலின் அத்தியாயங்களைச் சிறப்பாக நகர்த்தியுள்ளார். போதிதர்மரைப் பற்றிப் பிரதமர் நேருவின் நூல்களின் மூலம் ஆராய்ந்துள்ளது இந்நூலுக்கு வலுவூட்டுகிறது. பௌத்தத்தின் ஊடாக நிலவிய இந்திய – சீன நல்லுறவை மகான் போதிதர்மரது சீன விஜயம் வெளிக்காட்டுவதாகவும் அந்நல்லுறவு மீண்டும் மலரவேண்டியது காலத்தின் கட்டாயமென இந்நூல் கோடிட்டுக் காட்டுகிறது.

சென் பௌத்தத்தையும், சென் ஞானிகளையும் இந்நூலின் ஊடாக அறியக்கூடியதாகவுள்ளது. வாசிக்கத் தூண்டும் பல தகவல்களையும், உதாரணங்களையும் கொண்டமைந்துள்ள இந்நூல், மத போதனைகளின் உட்பொருள் மாறாமல் மக்களைச் சென்றடைவதற்கு மொழிகளின் அமைப்பும் முக்கியம் என்ற கருத்தையும் முன்வைக்கிறது. மதங்களைப்பற்றிக் கற்க விரும்பும் மாணவர்களும் மற்றும் பொது ஆர்வமுள்ளவர்களும் வாசிக்கவேண்டிய நூல். ஒரு மதத்தினர் மற்றைய மதங்களைப் புரிந்துகொண்டு மத நல்லிணக்கத்துடன் வாழவேண்டும் என்பதை இந்நூல் கருப்பொருளாகக் கொண்டுள்ளது. போதிதர்மர், பிரக்ஞதாரா என்ற பெண் ஞானியைத் தனது 'குரு'வாக ஏற்று அவர்முன் ஞானம் அடைந்ததை முன் உதாரணமாகக் கொண்டு, காலத்துக்குக் காலம் வாழ்ந்த பெண் ஞானிகளின் ஆன்மிக

ஞானத்தை சுட்டிக் காட்டுவதோடு, பெண்களின் கைகளில் மத அமைப்புகள் இருந்தால் மதங்கள் மதம் கொள்ளாது மதங்களாகவே இருக்கும் என ஆசிரியர் இந்நூலின் ஊடாக மிக அழகாகக் கூறுகிறார்.

போதிதர்மர் ஒரு தூய தங்கச்சுரங்கம். அவர் ஆன்மிகம், அறிவியல், தற்காப்புக்கலை, அக்கியூபங்சர், மருத்துவ விஞ்ஞானம் என மனித மேம்பாட்டுக்காக உலகுக்கு வழங்கிச் சென்றுள்ள செல்வங்களைப் பற்றிய விவரங்களை இந்நூலில் காணக்கூடியதாக உள்ளது. அறிவியலில் மேற்கே சோக்ரட்டீசுடன் கிழக்கே போதிதர்மரை இணைக்கிறார் ஆசிரியர். இவரைக் கௌதம புத்தர் பாதையில் பயணித்த ஒரு புத்தராகவே இந்நூல் விளக்குகிறது. இவரது வாழ்க்கை புரியாத புதிராக இருப்பது போலவே இவரது இறுதிக்கால நிகழ்வும் புதிராகவே உள்ளது.

போதிதர்மர் கடின உழைப்பு, விடாமுயற்சி, சுறுசுறுப்பு, புத்திக்கூர்மை, விவேகம், ஆற்றல் போன்றவற்றை ஆன்மிகமாகப் பார்க்கிறார். ''உங்களுக்குள் உள்ளே சென்று, உங்களை அறியுங்கள். உங்களை நீங்கள் அறிந்துகொண்டால் ஏனையவை முக்கியமற்று மறைந்துவிடும்'' போன்ற அவரது போதனைகளை இந்நூல் உள்ளடக்கியுள்ளது. ஒவ்வொரு மதங்களும், அதன் போதனைகளும் உலகிற்கு அழகைப் படைத்து அவை மனிதன் மனித நேயத்துடன் மனிதனாக வாழ்வதற்குத் துணை நிற்கின்றன என ஆசிரியர் கூறுகின்றார். இந்நூலாசிரியர் பல்வேறுபட்ட பல நூல்களை வெளியிட்டு மனிதகுலம் சிறப்பாக வாழ்வதற்குப் பணிசெய்ய வாழ்த்து கிறேன்.

கலாநிதி அனுசியா சேனாதிராஜா
சிரேஷ்ட விரிவுரையாளரிர் (வரலாற்றுப் பிரிவு)
தென்கிழக்குப் பல்கலைக்கழகம், ஒலுவில், இலங்கை

'மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்'

என் பார்வையில் இந்நூல்...

போதிதர்மர் பண்டைய சீன நாகரிகத்தில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்திய தமிழ்ஞானி என்பதை இந்நூலினூடாகக் காணக்கூடியதாக உள்ளது. பலருக்கும் தெரியாத ஓர் அரிய சரித்திரத்தை இந்நூலாசிரியர் குருபாதம் அவர்கள் எமக்குத் தருகின்றார். எளிய வசனநடையில் எல்லோரும் வாசித்து அறிந்துகொள்ளக்கூடிய விதத்தில் தந்துள்ளது தனிச்சிறப்பு என்பேன். ஆசிரியர் தனது கருத்துக்களைத் துணிந்து கூறுவதை நான் காணக்கூடியதாக இருக்கிறது. இவ்விடத்தில் இவர் போதிதர்மர் போல் செயல்படுவதை நான் காண்கிறேன்.

புத்த மதத்தின் வரலாற்றையும், அம்மதம் எவ்வாறு மற்றைய தேசங்களுக்குப் பரவியது என்பதையும் விளக்குகின்றார். இந்நூலை வாசிப்பதன் மூலம் எமது தமிழ் நாட்டில் பிறந்து [காஞ்சி] தமிழ் நாட்டிலேயே ஞானம் பெற்ற ஞானி போதிதர்மர் அவர்கள் எவ்வாறு ஒரு பழைய நாகரிகமான சீனாவில் ஒரு தாக்கத்தை ஏற்படுத்தினார் என்பதைத் தெளிவாகப் புரிந்துகொள்ளக்கூடியதாக உள்ளது. பல பரிமாணங்களில் பரிணமித்தவரும், பல்வேறு துறைகளில் மிளிர்ந்தவரும், ஏழாம் அறிவைப் பெற்றவருமான பௌத்த ஞானியான போதிதர்மர் அவர்கள் ஒரு தமிழன் என்பதை அறியும்போது நாம் தமிழர் எல்லோரும் பெருமை கொள்வோமாக.

அனைத்துத் தமிழரும் படித்துப் பெருமைப்படக்கூடிய சிறந்த நூல் இது என்பேன்.

சோ. ஆதிகணபதி

Dr. ஆதிகணபதி சோமசுந்தரம்
Dental Surgeon
பகுதி நேர விரிவுரையாளர், பல் வைத்தியபீடம்,
ரொறன்ரோ பல்கலைக்கழகம்,
உரிமையாளரும் பிரதம ஆசிரியரும்,
'கனடா முரசொலி' பத்திரிகை, ரொறன்ரோ, கனடா
தலைவர், ஆதிஅருள்நெறி மன்றம், ரொறன்ரோ, கனடா
அறங்காவலர், ரொறன்ரோ ஆதிசிவன் ஆலயம், கனடா
2191, Warden Ave, Toronto, MIT 3N9, Ontario, Canada.
e-mail : draathy@gmail.com
17/03/2014

■■

'என்னைப்பற்றி நான்'

மலேஷியாவின் தலைநகரான கோலாலம்பூரில் பிறந்தேன். எனது தந்தை அங்கு புகையிரத இலாகாவில் Section Superintendent ஆகப் பணிபுரிந்தார். அப்போது அங்கு நிலவிய யுத்த அசம்பாவிதங்கள் காரணமாக சிறுபிராயத்திலேயே யாழ்ப்பாணம் சென்று அங்கு வாழ்ந்து, ஆங்கிலம் கற்பிப்பவராகப் பணியை ஆரம்பித்து, பத்திரிகைத் துறையில் ஆர்வம் காரணமாக யாழ்ப்பாணத்திலிருந்து அப்போது வெளிவந்துகொண்டிருந்த ஒரேயொரு தேசியத் தினசரியான (National Daily) 'ஈழநாட்டில்' உதவி ஆசிரியராகப் (Sub-Editor) பணிபுரிந்தேன். பின்பு சவுதி அரேபியா சென்று Yanbu நகரில் உள்ள ஒரு ஸ்தாபனத்தில் நூலகராகவும் (Librarian), அந்த ஸ்தாபனத்தின் செய்தி இதழின் (Bulletin) நிர்வாக ஆசிரியராகவும் (Managing Editor) பணிபுரிந்தேன். பின்பு கனடா (Canada) நாட்டில் ரொறன்றோ (Toronto) மாநகரில் குடியேறி, அங்கு ஒரு சட்ட நிறுவனத்தில் 'Paralegal' ஆகவும், சத்தியப்பிரமாண ஆணையராகவும் (Commissioner of Oaths) கடமையாற்றி தற்போது எழுத்துப் பணியில் ஈடுபட்டுள்ளேன்.

நான் எனது மாணவ பிராயத்திலிருந்து இன்றுவரை ஏராளமான பலதுறை சார்ந்த நூல்கள் (Non fictions) வாசித்து அவற்றிலிருந்து பெற்றுக்கொண்ட அறிவு, சிந்தனை,

அனுபவங்களை ஒருங்கே திரட்டி அவைகளை நூல் வடிவம் ஆக்குகின்றேன்.

யாழ்ப்பாணம் வேம்படி மகளிர் கல்லூரியில் ஆசிரியராகப் பணியாற்றிப் பின்பு கனடாவில் உள்ள ரொறன்றோ மாவட்ட கல்விச் சபையின்கீழ் (Toronto District School Board) ஆசிரியராகப் பணியாற்றிக்கொண்டும், அதிபருக்கான தராதர பாடநெறியைப் (Principal's Qualification Program) பூர்த்தி செய்து தொடர்ந்து கற்பிக்கும் பணியில் இருக்கும் எனது வாழ்க்கைத் துணை ஜெயா (Jeyajothy) அவர்கள் எழுத்துப் பணிக்கு உயிரூட்டமாக உள்ளார்.

'என்னைப்பற்றி நான்' என்ற அறிமுகத்துடன் ஆரம்பித்து 'எங்களைப் பற்றி நாங்கள்' என்ற அறிமுகத்துடன் நிறைவு செய்து இந்நூலை உங்கள் கரங்களில் தவழவிடுகின்றோம்.

வெளிவந்துவிட்ட நூல்:

மறுபிறப்பு பற்றிய ஆச்சர்யமான தகவல்கள்



வெளிவரும் நிலையிலுள்ள நூல்கள்:

- குழந்தைகளை வளர்க்காதீர்கள்; வளரவிடுங்கள்
- மனமே மகிழ்ந்திரு
- மதமற்ற மதம்
- வழிகாட்டும் 'தந்திரா' (Tantra)
- பரீட்சையில் பெற்ற புள்ளி நூற்றுக்கு நூறு 100/100
- உலக சமாதானத்தை நோக்கி... (Towards The World's Peace...)

'யாதும் ஊரே யாவரும் கேளிர்'

மனிதநேயத்துடன்,

எஸ். குருபாதம்

ஜெ. குருபாதம்

gurujeya@ymail.com
28/12/2013

■■



'என்' நூலைப்பற்றி 'நான்'

பாரத முதல் பிரதமர் திரு. ஜவகர்லால் நேரு அவர்களது உலகப்புகழ் பெற்ற நூல்களான The Discovery of India, Glimpses of world History ஆகிய நூல்களைக் கிட்டத்தட்ட நாற்பத்தைந்து (45) வருடங்களுக்கு முன் நான் எனது மாணவப் பருவத்தில் மேலோட்டமாக வாசித்தபோது போதிதர்மரைப்பற்றி முதன் முதலில் அறிந்து கொண்டேன்.

பின் நாட்களில் ஓஷோ அவர்களின் சொற்பொழிவுகள் அடங்கிய நூல்களை வாசிக்கும்போது மகான் போதிதர்மர் அவர்களைப் பற்றிய நிறைய விடயங்களைத் தெரிந்து கொண்டேன். மகான் போதிதர்மர் அவர்கள் எனது கதாநாயகனாகிவிட்டார். இல்லை! இல்லை!! அவர் எனது மானசீகக் குருவாகிவிட்டார். அவரைப் பற்றிய விவரங்களை உங்களுடன் பகிர்ந்து கொள்வது மகிழ்ச்சியைத் தருகிறது. 'போதிதர்மர் பற்றிய அற்புதமான விஷயங்கள்' என்ற இந்நூலை எழுதி வெளியிடுவதன் மூலம்

நல்லதொரு பணி செய்ததாக ஆத்மதிருப்தி ஏற்படுகிறது. ஆய்வு செய்யப்பட வேண்டிய இந்த மாபெரும் மகானைப்பற்றி நிறைய நூல்கள் வெளிவரவேண்டும். இந்த உலகம் அவரை நன்கு அறியவேண்டும்.

புத்தர், பேதிதர்மர், லா-சூ போன்ற பல ஞானிகளினதும் ஷோலின் ஆலயத்தினதும் காலங்கள் பற்றிய தகவல்களில், ஒன்றுக்கொன்று முரண்படுகின்றன. எந்த நூல்களிலும் காலங்கள் திட்டவட்டமாகக் கூறப்படவில்லை. அதனால் இதுதான் சரியான ஆண்டு என்று என்னால் கூறமுடியவில்லை. காலக்கணிப்பைப் பொறுத்தவரை ஒரே குழப்பமாக உள்ளது. இதைத் தெளிவாகக் கூறக்கூடியவர்கள் சரித்திர ஆய்வாளர்களே. சமயக் கதைகள், உப கதைகள் எழுதுவதற்கு எடுத்துக்கொள்ளப்பட்ட அக்கறை வரலாறு எழுதுவதற்கு எடுத்துக்கொள்ளப்படவில்லை என்பதே எனது அபிப்பிராயம்.

நான் ஒரு நூல் வாசகனாகத் திரட்டிய தகவல்களை இந்நூல்மூலம் பகிர்ந்துகொள்கிறேன். இப்புத்தகத்தின் அத்தியாயங் களில் காணப்படும் பல படங்கள் அச்சம்பவங்களை சித்திரிப்பதற்காகவே பிரசுரமாகின்றனவே தவிர அவை முழுமையாகப் பொருத்தமானவையல்ல.

2013 ஆடி மாதத்தில் அச்சுப்பதிவாகிய 'மறுபிறப்பு பற்றிய ஆச்சரியமான தகவல்கள்' என்ற எனது நூலில் உள்ள 'போதிதர்மர் உயிர்த்தெழல்' என்ற அந்த அத்தியாயத்தை விரிவுபடுத்தி 'போதிதர்மர் பற்றிய அற்புதமான விஷயங்கள்' என்ற தலைப்பில் அவரது வரலாற்றை நூலாக வெளியிடுகின்றேன்.

என் வாழ்நாளில் உணராத ஒரு மகிழ்வை இந்நூல் வெளியிடுவதன் மூலம் உணர்கிறேன். என்னை நான் பார்க்கும்போது எனக்கு மனநிறைவு ஏற்படுகிறது. வாசகர்களாகிய நீங்கள் ஞானஒளி போதிதர்மர் அவர்களை அறிய அறிய நீங்கள் உங்களை அறியாமல் சிறகடித்துப் பறந்து பல சிகரங்களைத் தொட்டுவிடுவீர்கள்.

போதிதர்மர் மனிதநேயம் நிறைந்த விழிப்புணர்வுள்ள மனிதரா? சிந்தனையாளரா? புரட்சியாளரா? அறிவியல் மேதையா? மானிடவியல் விஞ்ஞானியா? மருத்துவ விஞ்ஞானியா? ரிஷியா? சித்தரா? யோகியா? மகானா? ஞானியா? புத்தரா? அனைத்திற்கும் அப்பாலா...?

போதிதர்மர் யார்?

மனித நேயத்துடன்,

என்றென்றும்
போதிதர்மரின் எண்ணத்துடன்,

11.11.2013

எஸ். குருபாதம்

பிற்குறிப்பு: இந்தியாவில் வாழ்ந்த தந்தமெஸ் (Dantemus) ஞானியை நாம் மறந்துவிட முடியாது. அலெக்சாண்டர் இந்தியா மீது படையெடுத்தபோது இவரைச் சந்தித்தார். இந்த ஞானி மாவீரன் அலெக்சாண்டரின் ஆணவத்தை அவருக்கு உணர்த்தியது மாத்திரமல்ல மரணத்தை நோக்கிய விழிப்புணர்வைக் கொடுத்தவர். இந்த ஞானியின் வரலாறும் ஆராயப்பட வேண்டும்.

E-mail : gurujeya@ymail.com
180 Bonspiel Drive
Toronto, MIE 5K4
Ontario, Canada.

■■

''யாதும் ஊரே யாவரும் கேளிர்''

பாகம் 1

ஒரு கண்ணோட்டம்

(At a glance)

அத்தியாயம் 1

பௌத்தம் இந்து மதத்தின் நிறைவு

- சுவாமி விவேகானந்தர்

(11.09.1893ல் இருந்து 27.09.1893 வரை அமெரிக்காவில் உள்ள சிக்காகோ நகரில் இடம்பெற்ற சர்வசமய பேரவையில் (world's parliament of religions) சுவாமி விவேகானந்தர் அவர்கள் 26.09.1893 அன்று புத்த மதத்தைப்பற்றி ஆற்றிய உரை இது - இராமகிருஷ்ண மடம், மயிலாப்பூர் வெளியீடு, தமிழ்நாடு.)

நான் பௌத்தன் அல்ல என்பதை நீங்கள் கேள்விப்பட்டு இருப்பீர்கள். ஆனாலும் நான் ஒரு பௌத்தன். சீனாவும், ஜப்பானும், இலங்கையும் புத்த மகானின் உபதேசங்களைப் பின்பற்றுகின்றன. இந்தியா அவரைக் கடவுளின் அவதாரம் என்று போற்றி வணங்குகிறது. நான் பௌத்த மதத்தை விமர்சிக்கப் போவதாக சற்றுமுன் கூறினார்கள். அதன் பொருளை நீங்கள் சரியாகப் புரிந்துகொள்ளவேண்டும். கடவுளின் அவதாரம் எனக் கூறி நான் வழிபடுபவரை நானே விமர்சிப்பது என்பது என்னால் நினைத்துக்கூடப் பார்க்க முடியாத ஒன்று. ஆனால் புத்தர் பெருமானை அவரது சீடர்கள் சரியாகப் புரிந்துகொள்ளவில்லை என்பதுதான் எங்கள் கருத்து. இந்து மதத்திற்கும் (நான் இந்து மதம் எனக் குறிப்பிடுவது வேத மதத்தைத்தான்) இந்நாளில் பௌத்தமதம் என்று குறிப்பிடுகிறதே அதற்கும் உறவு, யூத மதத்திற்கும் கிறஸ்தவ மதத்திற்கும் உள்ள உறவுதான்.

ஏசு கிறிஸ்து ஒரு யூதர், சாக்கிய முனிவர் ஓர் இந்து. யூதர்கள் கிறிஸ்துவை ஒதுக்கித்தள்ளியது மட்டுமின்றி, அவரைச் சிலுவையிலும் அறைந்தார்கள். இந்துக்கள் சாக்கிய முனிவரைக் கடவுள் என்று ஏற்று வணங்குகிறார்கள். இந்துக்களாகிய நாங்கள் எடுத்துக்கூற விரும்பும், தற்கால பௌத்த மதத்திற்கும் புத்த பகவானின் உண்மை உபதேசத்திற்கும் உள்ள முக்கியமான வேறுபாடு என்னவென்றால் சாக்கிய முனிவர் எதையும் புதிதாக உபதேசிக்க வரவில்லை என்பதுதான். அவரும் ஏசுநாதரைப்போன்று, நிறைவு செய்யவே வந்தார், அழிக்க வரவில்லை.

ஏசுநாதர் விஷயத்தில், பழைய மக்களாகிய யூதர்கள்தானும் அவரைச் சரியாகப் புரிந்துகொள்ளவில்லை. புத்தர் விஷயத்தில், அவரைப் பின்பற்றியவர்களே அவரது உபதேசங்களின் கருத்தை உணரவில்லை. பழைய ஏற்பாடு நிறைவு செய்யப்படுவதை யூதர்கள் புரிந்துகொள்ளாதது போன்று, இந்துமத உண்மைகள் நிறைவு செய்யப்படுவதை பௌத்தர்கள் அறிந்து கொள்ளவில்லை. மீண்டும் சொல்கிறேன்: சாக்கிய முனிவர் இந்து மதக்கொள்கைகளை அழிக்க வரவில்லை, ஆனால் இந்து மதத்தின் நிறைவு, அதன் சரியான முடிவு, அதன் சரியான வளர்ச்சி எல்லாம் அவரே.

இந்துமதம் இரு பாகங்களாகப் பிரிந்து உள்ளது. ஒன்று கர்மகாண்டம், மற்றொன்று ஞானகாண்டம். ஞான காண்டத்தைத் துறவிகள் சிறப்பாகக் கற்கின்றனர். இதில் ஜாதி கிடையாது. மிக உயர்ந்த ஜாதியைச் சேர்ந்தவரும் மிகத் தாழ்ந்த ஜாதியில் பிறந்தவரும் துறவியாகலாம். அப்போது அந்த இரண்டு ஜாதிகளும் சமமாகிவிடுகின்றன.

மதத்திற்கு ஜாதி இல்லை. ஜாதி என்பது வெறும் சமுதாய ஏற்பாடு. சாக்கிய முனிவரே ஒரு துறவிதான். வேதங்களில் மறைந்து கிடந்த உண்மைகளை வெளிக்கொணர்ந்து அவற்றை உலகம் முழுவதற்கும் தாராள மனத்துடன் பரவச்செய்த பெருமைக்கு உரியவர் அவர். உலகத்திலேயே முதன்முதலாக சமயப் பிரசாரத்தைச் செயற்படுத்தியவர், ஏன், மதமாற்றம் என்ற கருத்தை உருவாக்கியவரே அவர்தான்.

எல்லாரிடமும், குறிப்பாக, பாமரர்களிடமும் ஏழை எளியவர்களிடமும், ஆச்சரியப்படும் வகையில் பரிவு காட்டிய

பெரும் புகழுக்கு உரியவர் அவர். அவரது சீடர்களுள் சிலர் பிராமணர்கள். புத்தர் உபதேசம் செய்த காலத்தில், சமஸ்கிருதம் பேச்சு மொழியாக இல்லை. பண்டிதர்களின் நூல்களில் மட்டுமே அந்த மொழி இருந்தது. புத்தரின் பிராமணச் சீடர்களில் சிலர் அவரது உபதேசங்களைச் சமஸ்கிருதத்தில் மொழிபெயர்க்க விரும்பினர். அதற்கு அவர், ''நான் ஏழைகளுக்காக வாழ்பவன், என்னை மக்களின் மொழியிலேயே பேசவிட்டு விடுங்கள்'' என்று திட்ட வட்டமாகக் கூறிவிட்டார். அதனால்தான் இன்றளவும், அவரது போதனைகளில் பெரும்பகுதி, அந்நாளைய பேச்சு மொழியிலேயே உள்ளது.

தத்துவ சாஸ்திரத்தின் நிலை என்னவாகவும் இருக்கட்டும், மெய்ஞான நிலை என்னவாகவும் இருக்கட்டும், உலகத்தில் மரணம் என்ற ஒன்று உள்ளவரையில் மனித இதயத்தில் பலவீனம் என்பது இருக்கும் வரையில், மனிதனின் பலவீனம் காரணமாக, அவன் இதயத்திலிருந்து எழும் கூக்குரல் இருக்கும்வரை கடவுள்மீது நம்பிக்கை இருந்தே தீரும்.

தத்துவ சாஸ்திரத்தைப் பொறுத்தவரை, புத்ததேவரின் சீடர்கள் நிலையான மலை போன்ற வேதங்களோடு மோதிப் பார்த்தார்கள். ஆனால் அவற்றை அழிக்க முடியவில்லை. மற்றொரு புறம் அவர்கள் ஆண், பெண் அனைவரும் பாசத்தோடு பற்றிக்கொண்டு இருந்த அழிவற்ற இறைவனை நாட்டினின்று எடுத்துச் சென்றுவிட்டார்கள். அதன் பயன், பௌத்தமதம் இந்தியாவில் இயற்கை மரணம் எய்தியது. அது பிறந்த நாட்டிலேயே, பௌத்தன் என்று கூறிக்கொள்ள ஒருவர்கூட இன்று இல்லை.

அதே வேளையில், பிராமண சமுதாயத்திற்குச் சில இழப்புக்கள் ஏறபட்டன. சீர்திருத்தும் ஆர்வம், எல்லாரிடமும் வியக்கத்தக்க வகையில் பரிவும் இரக்கமும் காட்டல், பக்குவமாய் மாற்றியமைக்கும் இங்கிதப் பாங்கு முதலிய பௌத்தப் பண்புகளைப் பிராமண சமுதாயம் இழந்தது. இந்தப் பண்புகள்தாம் இந்தியாவைப் பெருமையுறச் செய்திருந்தது. அந்நாளைய இந்தியாவைப்பற்றி, ஒரு கிரேக்க வரலாற்று ஆசிரியர், பொய் சொல்லும் இந்துவையோ,

கற்பிழந்த இந்துப் பெண்ணையோ நான் பார்க்கவில்லை" என்று கூறுகிறார்;.

புத்த மதமின்றி இந்து மதம் வாழ முடியாது. அவ்வாறே இந்து மதமின்றி புத்த மதமும் வாழமுடியாது. பிரிவின் காரணமாக என்ன நேர்ந்தது என்று பாருங்கள்! பிராமணர்களின் நுண்ணறிவும் தத்துவ ஞானமுமின்றி பௌத்தர்கள் நிலைத்து வாழ முடியாது. பௌத்தர்களின் இதயமின்றி பிராமணர்களும் வாழ முடியாது. பௌத்தர்களும் பிராமணர்களும் பிரிந்ததுதான் இந்தியாவின் வீழ்ச்சிக்குக் காரணம். அதனால்தான் இந்தியா முப்பது கோடி பிச்சைக் காரர்களின் இருப்பிடமாகிவிட்டது. கடந்த ஆயிரம் ஆண்டுகளாக நாடு பிடிப்பவர்களின் அடிமையாக இருக்கிறது. ஆகவே பிராமணனின் அற்புதமான நுண்ணறிவையும், புத்தரின் இதயம், உயர்ந்த உள்ளம், வியப்பிற்கு உரிய மனிதாபிமானம் இவற்றையும் ஒன்றுசேர்ப்போமாக.

குறிப்பு:

Chicago 26.09.1893

இப்பேரவையில் இலங்கையைச் சேர்ந்த அனாகரிக தர்மபாலா (Anagarika Dharmapala) தேரவாத பௌத்தத்தைப்பற்றியும் சென் பௌத்த மதசார்பில்; ஜப்பானைச் சேர்ந்த சோஜன்ஷகு (soyan Shaku) வும் கலந்து கொண்டு புகழ்பெற்ற பேருரை ஆற்றினார்கள். அந்த இருவரும் சுவாமி விவேகானந்தருடன் இப்படத்தில் காணப்படுகிறார்கள்.

■■

அத்தியாயம் 2

பௌத்தம் ஒரு கண்ணோட்டம்



சித்தாத்தர் (புத்தர்) 566 BCE காலப்பகுதியில் நேபாளத்தின் தெற்குப் பகுதியில் உள்ள லும்பினி (Lumbini) நகரில் அரச குடும்பத்தில் இராணி மாயாவிற்கும் (Maya) அரசர் சுத்தோதனருக்கும் பிள்ளையாகப் பிறந்தார். பிறக்கும் போது உள்ளங் கையிலும், உள்ளங் காலிலும் சக்கர அடையாளத்துடன் பிறந்தார் என அவரது வாழ்க்கைக் குறிப்பில் காணப்படுகிறது.

அக்கால அரசர்கள், இளவரசர்கள் பலதாரத் திருமணம் (Polygamy) செய்துகொள்ளும் வழக்கம் இருந்தது. அவ்வழக்கத்திற்குப் பின்வருவன காரணங்களாக அமைகின்றன எனலாம்.

- அரச வாரிசாக ஆண்குழந்தை பிறக்கக்கூடிய சந்தாப்பங்கள் அதிகம் ஏற்படலாம்.
- மனைவிகளின் இருப்பிடங்களில் மாறி மாறி தங்குவதால் எதிரிகளின் கண்காணிப்பிலிருந்து அரசர் தப்பிவிடலாம்.
- எந்த ஒரு இராணியும் இராச்சியத்தின் மேல் ஏகபோக உரிமைகொள்ளாது அவர்களைத் தவிர்த்து விடலாம்.
- அரசனுக்குப் பின்னால் ஆட்சி உரிமை பெண்ணுக்குச் செல்லாமல் தவிர்த்தும்விடலாம்.

பலதாரத் திருமணம் ஆண் மேலாதிக்கத்திற்கு உதவியது. அதாவது பெண்ணின் குரல் ஆட்சியில் ஒலிக்காமல் தடுக்க பலதாரத் திருமணம் உதவியது. சித்தார்த்தரும் இதற்கு விதிவிலக்கல்ல, அக்கால வழமைப்படி இவருக்குப் பலதாரத் திருமணம் பெற்றோர்கள் செய்துவைத்தனர். அவரது முதலாவது திருமணம் 16-ஆவது வயதில் அரச குடும்பத்தைச் சேர்ந்த யசோதரா (Yashodhara) வுடன் நடந்தேறியது. பின்பு கோபா (Gopa), மனோதரா (Manodhara), முர்கஜா (Murgaja) என வேறு மூன்று பெண்களைத் திருமணம் செய்தார். இவரது 18-ஆவது வயதில் யசோதரா மூலம் இராகுல் (Rahul) என்ற மகன் பிறந்தான்.

மூப்பு, பிணி, இறப்பு, துறவறம் இவைகளைப் பார்த்த சித்தார்த்தருக்கு மனதில் தோன்றிய வினாக்களுக்கு இவரது ஆசான்களால் பதில் அளிக்க முடியவில்லை. தன் வினாவிற்கு விடைதேடி சித்தாத்தர் துறவியானார். அவர் காலத்தில் பெரும் முனிவர்களாய் இருந்தவர்களைத் தன் வினாக்களுடன் அணுகினார். அவர்களில் அலறா–ஹலமாவும் (Alara-Kalama), உத்தரகா–இராமபுத்திராவும் (Udraka-Ramaputra) தியானம் செய்துபார் என்றனர். அவர்களிடம் தியானம் கற்றார். ஆனால் அவரது வினா பதில் காணவே முடியாத வினாவாக இருந்தது. சில வருடங்களின் பின் அவர் தனது முயற்சியற்ற முயற்சியால் மனதை வெறுமையாக்கவும், எண்ணங்கள் தோன்றாமல் நிறுத்தவும் அறிந்துகொண்டார். தானே தனக்குள் உண்மையைத் தேடிச்சென்றார், ஞானமடைந்தார்.

ஞானமடைந்த பின் 45 வருடங்கள் ஊர் ஊராகத் திரிந்து தர்மபோதனைகள் செய்தார். 485 BCE காலப்பகுதியில் தனது 80 வயதில் வட இந்தியாவில் குஷின் நகரில் (Kushin Nagar) தனது இறுதிப் பிரசங்கத்தை நிகழ்த்திவிட்டு அங்கு இரண்டு மரங்களிற்கு (Peepal Tree / Saal Tree) நடுவில் தியான முறையில் அமர்ந்திருந்தார். (சில ஏடுகள் அந்த மரங்களிற் கிடையில் படுத்திருந்தார் எனக் குறிப்பிடுகின்றன.) தனது உடலிருந்து தான் வெளியேறப் போவதாகவும் தன்னை யாரும் வணங்கக் கூடாது எனவும், தனது ஞாபகார்த்தமாக எதையும் வைத்திருக்கக்கூடாது எனவும், தான் கடவுள் இல்லை எனவும் கூறிய பின்பு சீடர்கள் முன்னிலையில் மரணப் படிநிலைகளை விளக்கிக்கொண்டே அவரது உடல் இறந்தது. உடல் தகனம் செய்யப்பட்ட பின்பு அந்த உடலின் சாம்பலைத் தூபிக்குள் (Stupas) வைத்துச் சில சீடர்கள் வணங்க ஆரம்பித்துவிட்டார்கள். புத்த வழிபாடு அன்றிலிருந்து ஆரம்பமாகியது.

புத்தருடன் ஒத்துப்போகாதவர்கள்: -
போதனை குறித்து சர்ச்சை

புத்தருடன் ஒத்துப்போகாதவர்கள் புத்தரின் வார்த்தைகளின் முக்கியத்துவம் அடியோடு இல்லாமல் போய்விடும் அளவிற்கு வியாக்கியானம் செய்ய ஆரம்பித்தார்கள். இது ஒரு நுட்பமான தந்திரம் ஆகும். புத்தர் புதிதாக ஒன்றும் சொல்லி

விடவில்லை, அவர் கூறிய அனைத்தும் உபநிடதங்களிலும், வேதங்களிலும் காணப்படுகின்றன என்றனர். புத்தர் ஒரிஜினல் இல்லை அவர் ஒரு டுப்பிளிகேற் என்றனர். புத்தரை ஏற்றுக்கொண்டவர்கள் புத்தர் இறந்த பின்பு 33 வகையான பௌத்த தத்துவங்களை முறைப்படுத்தி வைத்தார்கள். புத்தரை ஏற்றுக்கொள்ளாதவர்கள் எதிர் வியாக்கியானம் செய்யத் தொடங்கி அதைச் சுனாமி வேகமாக்கி, புத்தரது முக்கிய செய்திகளைத் திரித்து வித்தியாசப்படுத்திவிட்டார்கள். வெடித்த மதக் கலவரங்களால் பௌத்தம் இந்தியாவை விட்டு வெளியேற வேண்டியதாகப் போய்விட்டது. எதிராளிகள் எதிர் வியாக்கியானம் செய்து புத்தர் உபநிடதங்களிலும், வேதங்களிலும் இருப்பதைத் தவிர வேறெதுவும் புதிதாகச் சொல்லவில்லை என்று தரப்படுத்தல் செய்தனர். அவர்களது அதிகாரக் கை உயர ஓங்கியது. எதிர் வியாக்கியானம் செய்யப்பட்டவைகளை புத்த போதனைகளாகக் கூறி புத்தர் ஒரிஜினல் இல்லை என்று வாதிட்டனர். இயேசுவைக் கொன்றவர்கள் அவரது வார்த்தைகளுக்கு வியாக்கியானம் எழுதவில்லை. ஆனால் இங்கு புத்தரது வார்த்தைகளுக்குப் புது வியாக்கியானம் எழுதப்பட்டுவிட்டது.

கௌதம புத்தரது உயிர் பிரிந்த அடுத்த ஆண்டு 486 BCE காலப் பகுதியிலே முதலாவது புத்த சபை (First Buddhist Council) ராஜ் ஹரா (RajaGrha) நகரில் கூடியது. சீனாவிலிருந்து புத்த துறவிகளுடன் சென்று அங்கு பிரசன்னமாகியிருந்த முதலாவது சீடன் காசியப்பா (இவர்தான் சென் பௌத்தத்தின் முன்னோடியாவார்.) புத்தபிரானின் போதனைகளைத் தொடர்ந்து பின்பற்ற வேண்டும் எனவும், துறவிகள் அதன் பிரகாரம் ஒழுக வேண்டும் எனவும் இவைகளைத் தாங்கள் எல்லோரும் சேர்ந்தே முன்னெடுக்க வேண்டும் எனவும் சபை ஒன்றை நிறுவி அதன் ஊடாகப் புத்த போதனைகள் அனைத்தும் தொகுக்கப்பட வேண்டும் என வலியுறுத்தினார். ஒரு துறவி வெளிப்படையாகப் பின்வருமாறு கூறினார்: "புத்தர் தன் உடலை நீக்கிவிட்டார். அவர் இல்லாதது மகிழ்ச்சிக்குரியதே. துறவிகள் எப்படி வாழவேண்டும், என்னென்ன செய்ய வேண்டும் என்று கூறினாரோ அவைகள் அனைத்தையும் தளர்த்த வேண்டும்" இத்துறவியின் பேச்சு சற்று சலசலப்பை ஏற்படுத்தியது.

ஞானி காசியப்பா அவர்கள் புத்தர் கூறியவைகள், அவரது போதனைகள் அனைத்தும் எதுவித மாற்றமுமில்லாமல் எழுதப்பட வேண்டும் எனக் கேட்டுக்கொண்டார். பின்பு காசியப்பா அவர்கள் சற்று ஒதுங்கியவர் போலவே வாழ்ந்து இயற்கை எய்திவிட்டார்.

ஒரு இழுபறி நிலை ஏற்பட்டு காலம் உருண்டு ஓடியது. சபைகள் கூடுவதும் கலைவதுமான நிலையில் ஆக்கபூர்வமாக எந்த நிலைப்பாடும் ஏற்படவில்லை. புத்தரின் போதனைகளை எழுத முயற்சி செய்தனர். புத்தர் இறந்த பின்பே புத்தரது போதனைகள் எழுதப்பட்டன. புத்தரது பிரசங்கத்தை ஆரம்பத்திலிருந்து கேட்ட சீடர்கள் எல்லோரும் ஒன்று கூடினர். தங்களுக்கு ஞாபகமாக இருப்பதை ஒப்புவித்தனர். அங்கே இணக்கங்கள், முரண்பாடுகள், வாதங்கள், பிரதிவாதங்கள் இடம்பெற்றன. 33 பிரிவுகளாகப் பிரிந்தனர் அந்த 33 பிரிவினரும் புத்தபோதனையடங்கிய 33 ஏடுகளை எழுதினர். புத்தர் மக்களது சாதாரண மொழியைப் போதனை யாக்கியவர். மகாயன (Mahayana) பீடமே பௌத்தத்தில் முதன்மை பெற்றது.

புத்தர் இறந்தபின்பு மோட்சத்திற்குச் சென்றதாகவும், அங்குப் பிரவேசியாமல் வெளியிலே நின்றுவிட்டார் எனவும், கடைசி மனிதன் ஞானமடையும்வரை மோட்ச உலகில் பிரவேசியாமல் வெளியே நின்று ஞானம் கொடுக்கிறார் போன்ற கற்பனைக் கதைகள் பரவின. இந்தக் கற்பனைக் கதைகள் பலரை இன்றும் கவர்ந்து கொண்டே இருக்கின்றன. மக்கள் கற்பனைக் கதைகளில் நம்பிக்கை வைக்கிறார்கள். கற்பனையாக இருக்கும் என்று சிந்திக்க விரும்புவதில்லை. அப்படியான சிந்தனை மத நிந்தனை எனக் கருதுகிறார்கள். சகல மதங்களும் கற்பனைக் கதைகளில் வேர் ஊன்றுகின்றன. கற்பனைக் கதைகளையே மக்கள் மதங்களாக இன்றும் பார்க்கிறார்கள், அவைகளைக் கொண்டாடுகிறார்கள்.

தன்னுணர்வும், விழிப்புணர்வுமற்ற சமூகம் இவைகளுக்கு விதிவிலக்கு இல்லை. 'மதப்பிரச்சாரங்கள், மதப் போதனைகள் மனிதனைச் சுதந்திரமாக வளரவிட விரும்புவதில்லை' விழிப்புணர்வுடனும், தன்னுணர்வுடனும் தனி மனிதன் வளர்ச்சி அடைந்துவிட்டால் மதங்கள் மறைந்து விடும்.

[தன்னுணர்வில் அமைதியாக வளர்ச்சியடைவதுதான் இந்தக் குழப்பத்திலிருந்து விடுபடுவதற்கு ஒரே வழி. ஒவ்வொருவரும் சுயமாகத் தானாகவே வளர்ச்சியடைய ஆரம்பிக்க வேண்டும். வளர்ச்சியென்பது ஒரு தாயின் கருப்பையில் ஒரு குழந்தை வளர்வது போன்றது. ஒவ்வொரு தனிமனிதருக்குள்ளும் ஒரு புதிய மனிதன் பிறக்க வேண்டும். மாயைகள், உண்மைகளைப் பொய்மையாக்குதல் அனைத்தும் விழிப்புணர்வு கொண்டவர்களிடமும், தன்உணர்வு உள்ளவர்களிடமும் தோற்றுவிடும்.]

புத்தர் மக்களின் தன்னுணர்வையும், விழிப்புணர்வையும் வளர்த்தவர். அவர் காலத்தில் தலைகாட்டாது மறைந்திருந் தவர்கள் புத்தர் இறந்தபின்பு சடங்குகள், சம்பிரதாயங்கள், கிரியைகள், கடவுள் என மக்களைக் குழப்பிவிட்டனர். தங்கள் புது வியாக்கியானங்களை அரங்கேற்றிவிட்டனர். புத்தர் தெளிவானவர், புத்தர் புதிய பாதையைக் காட்டியவர். சித்தாத்தராக இருந்தபோது அவர் கூறியவைகளையும் அவர் ஞானம் அடைந்தபின் கௌதமபுத்தரான பின் கூறியவை களையும் சேர்த்துப் பார்க்கக்கூடாது. இரண்டையும் ஒரே மனிதர்தான் கூறியிருந்தாலும் அவரது இரண்டு நிலைகளும் வித்தியாசமானவை, அவர் ஞானமடைந்தபின் கௌதம புத்தராகக் கூறியவைகளை மாத்திரம் நாம் புத்த போதனை களாக எடுத்துக்கொண்டால் அவைகள் ஒரிஜினலாகத்தான் இருக்கும் என்பது இந்நூல் ஆசிரியரின் அபிப்பிராயம்.

புத்தர் ஞானமடைந்த பின் அவர் தன் சீடர்களிடம் முதன்முதலில் கூறியது: "மனைவி யசோதராவைச் சந்தித்து அவரிடம் பேச விரும்புகின்றேன்" என்றார். புத்தரின் சீடர்கள் கூறினார்கள். "உங்களைப்பற்றி என்ன நினைப்பார்கள்? நீங்கள் பிரிந்து 12 வருடங்கள், ஏன் இப்போது அந்த நினைப்பு ஏற்பட்டது?" என்றார்கள். புத்தர் "நான் என்னுடைய நன்றியைத் தெரிவிக்கவேண்டும், அவளுக்கு நன்றிக்கடன் பட்டிருக்கிறேன்" என்றார்.

புத்தர் அரண்மனைக்குத் திரும்பினார், யசோதராவைச் சந்தித்தார். யசோதரா புத்தர்மீது கோபப்பட்டாள், 12 வருட கோபம் அது, தன்னையும் பிள்ளையையும் திடீரென கைவிட்டு, சொல்லிக்கொள்ளாமல் பிரிந்து சென்ற கோபம்

அது. புத்தர் "அப்பொழுது புரியாமல் செய்துவிட்டேன், தவறை உணர்ந்து மன்னிப்பு கேட்கிறேன். இப்பொழுது புரிந்தநிலையில் இருக்கிறேன், அப்பொழுது இந்த விழிப்புணர்வில் நான் இருக்கவில்லை, என்னுடைய அனுபவத்தை உன்னோடு பகிர்ந்துகொள்ள விரும்புகின்றேன்" என்றார். புத்தரின் தலையைச் சுற்றி ஒளிவட்டம் (Aura of light), தனது கணவர் இந்த ஒளிவட்டத்தினுள் மறைந்து விட்டார் என்பதை உணர்ந்த யசோதரா புத்தரின் காலில் விழுந்து 'தன்னைச் சீடராக ஏற்றுக்கொள்ளும்படி வேண்டினார்.' (புத்தரின் மனைவியும் ஒரே ஒரு மகன் இராகுலும் பின்னாளில் துறவியாகிவிட்டார்கள்.)

புத்தர் – யசோதரா சந்திப்பைப் பற்றி இரவீந்திரநாத் தாகூர் அவர்கள் ஒரு அழகான கவிதை எழுதியிருக்கின்றார். யசோதரா – புத்தரிடம் கேட்கிறார் ''நீங்கள் ஒரு விஷயத்தை மட்டும் கூறுங்கள், நீங்கள் எதையெல்லாம் அடைந்திருக்கிறீர்களோ, அவைகளை எல்லாம் என்னால் கவனிக்க முடிகிறது, ஒரே ஒரு விஷயத்தை மட்டும் சொல்லுங்கள்; இங்கேயே இந்த வீட்டிலேயே அதை உங்களால் அடைய முடியாதா?'' அதற்குப் ''புத்தரால் முடியாது என்று சொல்ல முடியாது'' என்கிறார் தாகூர். அங்கேயே நிகழ முடியும் என்பது புத்தருக்குத் தெரியும், ஒரு காட்டிலோ, குளத்திலோ, மலை அடிவாரத்திலோ, ஆற்றங் கரையிலோ, மரத்திற்குக் கீழோ வசிப்பதற்கும் ஞானத்திற்கும் எந்த சம்பந்தமும் கிடையாது. அந்தப் பேரியக்க உயிர்த் தன்மை எங்கேயும் இருக்கிறது என்பதைப் புத்தர் உணர்ந்திருப்பதால் முடியாது என்று சொல்லமுடியாது எனக் கவிதையில் தாகூர் கூறுகிறார்.

ஒரு நூற்றாண்டிற்குப் பின் வைசாலி (Vaishali) நகரில் கூடிய பௌத்த சபையின் கூட்டத்தைத் தொடர்ந்து ஹீனஜான பௌத்தம் (Hinayana Buddhism) மஹா ஜன பௌத்தம் (Mahayana Buddhism) என இரண்டுபட்டது.

பாட்டாளிபுரத்தை (Pataliputtra) தலைநராகக் கொண்டு ஆண்ட அசோக சக்கரவர்த்தி (268 - 239 BCE) புத்த போதனைகள் இந்தியாவிற்குள்ளும் வெளியிலும் பரவுவதற்குப் பெரும் பங்காற்றினார். ஆயிரம் கல்விமான்களைக் கூட்டி

பௌத்த மத வளர்ச்சிக்கு மாநாடு கூட்டி ஆராய்ந்தார். (பாட்டாளிபுரம் தற்போது பட்னா Patna பகுதியாக உள்ளது.) இதன் விளைவாக இவரது மகன் மஹிந்தா, மகள் சங்கமித்தை இருவரும் புத்த துறவிகளுடன் இலங்கை (Sri Lanka) சென்றனர். அப்போது ஆப்கானிஸ்தான் மற்றும் மத்திய ஆசியாவிலும் பௌத்தம் பரவியிருந்தது.

இந்தியப் படையெடுப்புக்குப் பின் அலெக்சாண்டரால் 327 -325 BCE காலப் பகுதியில் உருவான ஹெலனிக் இராஜ்ஜியத்தின் (Hellenic Kingdom) கிரேக்க அரசரான மிலிந்தாவும் (Milinda / Menander) பௌத்தத்தைத் தழுவினார்.

குப்த வம்ச அரசாட்சியிலும் (320- 540 CE), ஹர்ஷா (Harsha) (606- 646 CE) அரசாட்சியிலும் பௌத்தம் இந்திய கலாச்சாரத்தின் ஆணிவேரானது மாத்திரமல்ல ஆசியாவின் நாகரிக வளர்ச்சிக்குப் பௌத்தம் அடித்தளமானது. பௌத்த மடாலயங்கள் புனரமைக்கப்பட்டு, கல்விக்கூடங்கள் நிர்மாணிக்கப்பட்டு, தத்துவம், மருத்துவம், வானியல், இலக்கணம், அறிவியல் கற்பிக்கப்பட்டன. 13–ஆம் நூற்றாண்டு காலப்பகுதியில் பௌத்த – இந்து முரண்பாடுகள் விரிவடைந்து ஒன்றுக்கொன்று பகையாகிவிட்டன. முஸ்லிம் படையெடுப்புக்களாலும் பௌத்த மடாலயங்கள் அழிவுற்றன. பௌத்தம் முற்றாக இந்திய மண்ணில் ஸ்தம்பித்தது. 11–ஆம் நூற்றாண்டளவில் மியன்மாரும், தாய்லாந்தும் இந்தியாவின் பௌத்த வழிகாட்டலைப் பெறமுடியாமல் வேறு நாடுகளை அணுகின. இலங்கை தேரவாத பௌத்தத்தை பின்பற்றிக் கொண்டிருந்ததை முன் உதாரணமாக எடுத்து தாய்லாந்தும், மியன்மாரும் தேரவாத பௌத்தத்தைப் பின்பற்றின.



Padmasambhava

திபெத்தில் ஏழாம் நூற்றாண்டு காலப்பகுதியில் (7th Century CE) பௌத்தம் பரவிவிட்டது. 8-ம் நூற்றாண்டில் (8th Century CE) திபெத்தில் Samye நகரில் முதலாவது பௌத்த மடாலயம் இந்தியக் கல்விமான் சாந்தகசித்தா

(Shantakashita) வினதும் இந்திய தந்திரா பௌத்த ஞானி (Tantric Saint) பத்மசம்பவா (Padmasambhava) வின் உதவியுடன் அங்கு ஆரம்பிக்கப்பட்டது.

முதலாவது நூற்றாண்டில் (CE) பௌத்தம் சீனாவில் பரவத் தொடங்கியது. திபெத், தாய்லாந்து, இலங்கை, மியன்மார், ஆப்கானிஸ்தான், போன்ற நாடுகள் இந்திய பௌத்தத்தைத் தங்கள் நாடுகளுக்குப் பொருந்தக்கூடிய முறையில் சிறு மாற்றங்கள் செய்துகொண்டன. சீனாவில் ராங் அரசவம்ச (Tang Dynasty) ஆட்சிக் காலத்தில் (618 - 907 CE) பௌத்தம் சீனக் கலாச்சாரத்திலும் நாகரிகத்திலும் முக்கிய பங்கு வகித்தது. இக்காலத்தில் மஹாஜன பௌத்த பாடசாலைகள், தியான நிலையங்கள் வேகமாக நிர்மாணிக்கப் பட்டன. நான்காம் நூற்றாண்டில் (CE) சீனமுறையிலான பௌத்தம் கொரியாவிலும் ஆறாம் நூற்றாண்டில் (CE) ஜப்பானிலும், வியட்னாமிலும் பரவியது. (இரண்டாம் நூற்றாண்டு CE காலப்பகுதியில் வியட்னாமில் பௌத்தம் பரவியபோதும் சீனபௌத்த முறையை 6-ஆம் நூற்றாண்டில் தழுவினார்கள்).

1893 இல் அமெரிக்காவில் உள்ள சிக்காகோ நகரில் இடம்பெற்ற சர்வசமயப் பேரவையில் (World's Parliament of Religions) தேரவாதப் பௌத்தத்தைப் பற்றிய கேள்வி எழுந்தது. (இந்தப் பேரவையில்தான் சுவாமி விவேகானந்தர் அவர்கள் இந்து மதப் பிரதிநிதியாகத் தன் புகழ்மிக்க பேருரையை நிகழ்த்தியிருந்தார்.) இம்மாநாட்டில் இலங்கையிலிருந்து பௌத்த பிரதிநிதியாகக் கலந்துகொண்ட அனாகரிக தர்மபாலா (Anagarika Dharmapala) அவர்கள் பதிலளித்து புகழ்மிக்க பேருரையை நிகழ்த்தியிருந்தார். பாராட்டுதல்களில் இந்து நாடுகள் சுவாமி விவேகானந்தரை முக்கியப்படுத்தின. பௌத்த நாடுகள் அனாகரிக தர்மபாலாவை முக்கியப் படுத்தின. சென் பௌத்தத்தின் பிரதிநிதியாக ஜப்பானைச் சேர்ந்த சென்குரு சோயென் ஷகு Soyen Shaku கலந்து கொண்டார்.

தேரவாத பௌத்த புனித நூலான 'திரிபீட' (Tripita) பாலி மொழியில் இலங்கை அரசர் வற்றகமுனியின் (Vattagamuni) முயற்சியால் 29 BCE காலப்பகுதியில் எழுதப்பட்டது. ஐந்தாம்

நூற்றாண்டில் (CE) இந்தியாவிலிருந்து பௌத்த துறவி புத்த ஹோஷா இலங்கை சென்று பாலி மொழியில் உள்ள தேரவாத பௌத்தத்தைச் சமஸ்கிருதத்தில் மொழிபெயர்த்தார். இந்த ஏடு 'Visuddhbimagga' எனப்படுகிறது. அதாவது புனிதத்திற்கான பாதை என்பதே இந்த ஏட்டின் பெயர். இது தேரவாத பௌத்தத்திற்கு வழிகாட்டி நூலானது. இலங்கை, மியன்மார், தாய்லாந்து ஆகிய நாடுகள் ஹீன ஜான, தேரவாத பௌத்தத்தைத் தொடர்ந்தும் பின்பற்றினார்கள்.

முதலாம் நூற்றாண்டில் (CE) சீனாவில் மஹாஜன பௌத்த கருத்துக்கள் நன்கு பரவிவிட்டன. இரண்டாம் நூற்றாண்டளவில் (CE) சமஸ்கிருதத்திலிருந்த மஹாஜன புனித ஏடுகள் சீனமொழிக்கு மாற்றப்பட்டுவிட்டன. சோங் வம்சாவளி (Song Dynasty) ஆட்சிக் காலத்தில் (972 -983 CE) பௌத்த நூல்கள் அச்சுப் பதிவாகியுள்ளன. திபெத்திய பௌத்த நூல்கள் சீனாவில் பீஜிங் (Beijing) நகரில் 5-ஆம் நூற்றாண்டு ஆரம்பகாலத்தில் அச்சுப் பதிவாகின.

மஹாஜன பௌத்தத்தில் உள்ள போதிஸற்வா (Bodhisattva) சூத்திரா புத்தபிக்குகளுக்கு, பிக்குனிகளுக்கு மற்றும் பொதுமக்களுக்குமான நெறிமுறைகள், அன்பு, கருணை, ஞானம் இவைகள் எல்லாவற்றையும் போதிக்கிறது. 'உலகில் உள்ள அனைத்து உயிரினங்களுக்காக நாம் புத்தர் நிலையை அடைவோம்' எனக் கூறுகிறது. புத்தர் (Buddha) என்பது விழிப்புணர்வு. ஞானம் அடைந்தவர் எனச் சமஸ்கிருதத்தில் பொருள்படும்.

போதிதர்மர் தன் சீடர்களுக்கு "உங்களுக்குள் இருக்கும் புத்தரை அறியுங்கள், நீங்கள் புத்தர் என்பதை அறிந்து கொண்டால் உங்கள் சுயத்தை (Self - Nature) இருப்பைத் (Being) தெளிவாக அறிந்துகொண்டால் ஏனையவை எதுவும் முக்கியமல்ல" என்றார்.

(குறிப்பு: புத்த தன்மை, புத்த நிலை (Buddhahood) என்றால் ஞானம் என்ற பொருள்படும்.)

தேரவாதப் பௌத்தத்தில் பொய், கொலை, களவு, கள், காமம், பாதகமான செயல்கள் எனவும் இவைகள் மனதில் தோன்றக்கூடாதெனவும் வலியுறுத்துவதோடு துறவிகள் மேலும்

கடைப்பிடிக்க வேண்டியவைகளாக மத்தியானத்திற்கு பின்பு உணவு தவிர்க்க வேண்டும், எக்காலத்திலும் ஆபரணங்கள் அணியக்கூடாது, கேளிக்கைகளில் கொண்டாட்டங்களில் புலன் இன்பங்களைத் தூண்டக்கூடிய நிகழ்ச்சிகளில் பங்கேற்கக் கூடாதெனவும், பணம் கையாளக் கூடாதெனவும், மென்மையான படுக்கைகள் பாவிக்கக் கூடாதெனவும் வலியுறுத்திக் கூறுகிறது.

பௌத்த நாடுகள் இரண்டாகப் பிளவுபட்டு இருக்கின்றன. ஜப்பான், சீனா, கொரியா போன்ற நாடுகள் மஹாஜன (Mahayana) பாதையைப் பின்பற்றுகின்றன. அந்த நாடுகளில் Zen சென் மதம் நிலைபெற்றுள்ளன. இலங்கை ஒரு பௌத்த நாடு. ஆனால் அங்கு சென் பௌத்த மதம் தெரியாமல் இருக்கலாம். இலங்கை ஹீன ஜான (Hinayana) பாதையைப் பின்பற்றுகிறது. இலங்கையில் போதிதர்மரைத் தெரியாமல் இருக்கலாம். காரணம் அவர் மஹாஜனப் பாதையை நாடியவர். அதனால் அவர் சீனா, ஜப்பான், கொரியா போன்ற நாடுகளில் பிரபல்யமானவராக இருப்பது போல் ஹீனஜானவை பின்பற்றும் நாடுகளில் பிரபல்யமாக இல்லாமல் இருக்கலாம்.

மஹாஜன பௌத்தத்தைப் பரப்பியவர் போதிதர்மர் அவர்கள். அவருக்கு முன்பு அதை யாரும் அவர்போல் உயிரோட்டத்துடன் வெளிக்கொணராததால் போதிதர்மர் தான் முதன் முதல் மஹாஜன பாதையின் மறுவடிவமான zen மதத்தைப் பரப்பியதாகக் கருதப்படுகிறார்.

போதிதர்மர் அவர்கள் போதிஸற்வா (Bodhisattva), மஹாஜன பாதையைப் பின்பற்றியவர், சிரிப்பு புத்தர் (Hotei) றின்சாய் (Rinzai) அவர்களும் சென் பௌத்த ஞானிகளாவார்கள். இலங்கை போன்ற நாடுகள் ஹீன ஜான (Hinayana) பௌத்தம் அகற்றா (Arhata) பாதையில் செல்கின்றன. போதி சத்வாவிற்கும் அகற்றாவிற்கும் இடையிலான முரண்பாடு இருபத்தைந்து நூற்றாண்டுகளாக உள்ளது. அகற்றா என்பது ஞானம் அடைந்த பின்பு 'சுய' (Self - Nature)த்தை அறிவது, போதிஸற்வாஸ் என்பது 'சுய'த்தை அறிந்தவுடன் ஞானம் அடைவது.

எந்த மதத்தை எடுத்தாலும் அவைகளுக்குள் ஏற்பட்டிருக்கும் உப பிரிவுகளுக்குள் முரண்பாடுகளும், விரோதங்களும் இருக்கின்றன. பௌத்தம், சமணம், கிறிஸ்தவம், இஸ்லாம், ஜூடயிஸ்ம், இந்து ஆகிய மதங்களுக்குள் இருக்கும் உட்பிரிவுகள் தங்களுக்குள் ஒன்றை ஒன்று கௌரவமாகப் பார்ப்பதில்லை.

இந்து சமயத்திற்குள் சிவனை முழுமுதற் கடவுளாகக் கொண்ட சைவம், விஷ்ணுவை முழுமுதற் கடவுளாகக் கொண்ட வைஷ்ணவம், சக்தி வழிபாட்டை மேற்கொள்ளும் சாக்தம், சூரிய வழிபாட்டை முதன்மையாகக் கொண்ட சௌரம், கணேசரைப் பிரதானமாக வழிபடும் காணாபத்தியம், முருக வழிபாட்டை முன்னிலைப்படுத்தும் கௌமாரம் ஆகிய உட்பிரிவுகள் ஒருவரையொருவர் ஏற்றுக்கொள்ளாமல் தங்களுக்குள் மோதி இரத்தக்களரியை ஏற்படுத்தி மதக்கலவர பூமியாக்கினர்.

சமணமதத்திற்குள் ஸ்வற்றம்பராஸ் (Sevetambaras), திகம்கராஸ் (Digamgaras) என இரு பிரிவாகப் பிரிந்து ஒருவரை ஒருவர் முழுமையாக ஏற்றுக்கொள்ளவில்லை. ஸ்வற்றம்பராஸ் பிரிவினர் தங்கள் அடையாளமாக வெள்ளை ஆடை அணிந்துகொண்டனர். இவர்கள் சமணமதக் கோட்பாடுகளை எழுதிப் பாதுகாக்கப்படவேண்டும் என்பதில் உறுதியானவர்கள். திகம்கராஸ் பிரிவினர் ஆடை அணிவ தில்லை, மத்க்கோட்பாடுகள் என்று எழுதிப் பின்பற்றுவ தில்லை, பெண்கள் முக்தியடைய முடியாது போன்ற நிலைப்பாடுகளைக் கொண்டவர்கள்.

பௌத்தத்தில் மஹாஜன, ஹீனஜன என்றும் கத்தோலிக்கர், கத்தோலிக்கர் அல்லாதவர்கள் என கிறிஸ்தவத்திலும் யூதர்களது யுடஸ்யம் புதிய ஏற்பாடு, பழைய ஏற்பாடு போல இரண்டாகப் பிரிந்துள்ளது. இஸ்லாமின் பிறிதொரு பிரிவே சூஃபி மதம். பிரிவுகளால் அவர்கள் ஒருவருக்குள் ஒருவர் முரண்பட்டார்கள். மத உட்பிரிவுகளில் மோதல்கள் உண்டு

ஒவ்வொரு மதமும் தாங்கள் மாத்திரம் உயர்ந்தது, 'உண்மை' தங்களுக்கு மட்டும்தான் உரியது என்றே

போதிக்கின்றன. பிற மதங்களை ஏற்கும்படி எந்த மதமும் தெளிவாக நேரடியாகக் கூறுவதில்லை. பிற மத நம்பிக்கைகளை மதியுங்கள் என்று எந்த மதமும் போதிக்கவில்லை. ஒவ்வொரு மதமும் தாங்கள்தான் 'உண்மை' என்று ஏகபோக உரிமை கோருகின்றன.

கிறிஸ்தவர்கள் இயேசுவைப் பற்றிப் பேசுகிறார்கள், பௌத்தர்கள் புத்தரைப்பற்றிப் பேசுகிறார்கள், சமணர்கள் மகாவீரரைப் பற்றிப் பேசுகிறார்கள், இஸ்லாமியர்கள் நபிகள் நாயகத்தைப் பற்றிப் பேசுகிறார்கள், சூஃபி மதத்தினர் றாபியா (Rabiah Aladawiyah) வைப்பற்றிப் பேசுகிறார்கள், சென் மதத்தினர் போதிதர்மர், றின்சாய், சிரிக்கும் புத்தர் ஹொடாய் (Hotei) வைப் பற்றிப் பேசுகிறார்கள். இந்து மதத்தினர் கிருஷ்ணர் பற்றிப் பேசுகிறார்கள்.

ஒரு மதத்தினர் மற்ற மதத்தினை ஏற்றுக்கொள்ள வேண்டும். தன் மதத்தைப் போல மற்ற மதத்தினையும் மதிக்க வேண்டும், மற்ற ஞானிகளைத் தன் மத ஞானிகளைப்போல் பார்க்க வேண்டும். ஆனால் இன்று இந்த உலகத்தில் உள்ள ஆன்மிகவாதிகளோ, பிரசங்கிகளோ, மதவாதிகளோ, மதபீடத் தலைவர்களோ, மதகுருமார்களோ, பொதுமக்களோ எவரும் சகல மதத்தின் ஞானமடைந்த ஞானிகளை ஒன்றாகச் சேர்த்துப் பார்க்கத் தவறுகின்றனர். அவர்கள் எல்லோரும் ஞானமடைந்த மகான்கள்தானே! மதச் சொற்பொழிவாளர்கள் எந்த ஒரு மதம் சார்ந்தவராக இருந்தாலும், மற்ற மதங்களை மேற்கோள் காட்டி சொற்பொழிவு பிரசங்கங்கள் செய்வதில் தயக்கம் காட்டுகிறார்கள். தங்களுக்குள் தடை போட்டுக் கொண்டு, தடை போடாதவர்கள் போல் இருக்கிறார்கள். அத்தனை ஞானிகளதும் அணுகுமுறைகள் வித்தியாசப் படலாம், போதனைகள் வித்தியாசப்படலாம், செயல்கள் வித்தியாசப் படலாம், அவர்கள் பேசிய மொழிகள் வித்தியாசப் படலாம், அவர்கள் தனித்துவங்கள் வித்தியாசப்படலாம், ஆனால் அத்தனை ஞானிகளும் மனதைக் கடந்து (No-mind) மனமற்ற நிலையை அடைந்து அவர்கள் ஒரே நிலையில்தான் இருந்தனர். தாங்கள் அறிந்த 'உண்மையில்' ஒரே நிலையில் தான் என்றும் இருந்தார்கள். எவரும் எந்த மத நம்பிக்கை உள்ளவர்களாகவும் இருக்கலாம், அந்த ஞானிகளை

அனைவரும் ஒன்றாக இணைத்துப் பார்க்க மத வேற்றுமை படிப்படியாக நீங்கிவிடும். 'நாம் எல்லோரும் ஒன்றே என்ற மனிதம் மலர்ந்துவிடும்.' அனைத்து மதங்களையும் ஏற்றுக்கொண்ட ஆன்மிக மனம் உடையவர்களாக ஒவ்வொருவரும் மாற மத ஐக்கியம் ஏற்பட்டுவிடும்.

ஞானம் அடைந்தவர்கள் பலவிதமானவர்கள். நாம் அனைவரும் ஞானம் அடைந்தவர்கள் எல்லோரையும் ஒன்றாக இணைத்து சமமாகப்பார்க்க வேண்டும். அந்த ஞானிகளுக்குள் 'ஒருமை' (Oneness) உண்டு. அதேபோல் மக்களும் பலவித மானவர்கள், அவர்களது வித்தியாசங்கள் அவர்களது விஷேட தனித்துவம், அந்த விஷேட தனித்துவமே அழகானது. அந்த அழகு எல்லோரிலும் உண்டு. அந்த அழகே எங்களை ஒருமைப்படுத்துகிறது (Oneness). வித்தியாசங்களை இரசிப்போம், அவைகளை ஏற்போம். பூங்காவில் பல வர்ணத்தில் பலவித வடிவத்தில், பலவித நறுமணத்தில் மலர்கள் இருப்பதே பூங்காவை அழகுபடுத்துகிறது. அந்த வித்தியாசம் தரும் அழகை இரசிக்கிறோம். அந்த இரசித்தல் மனிதர்களை ஒருமைப்படுத்துகிறது (Oneness).

மக்கள் பிரச்சனை இல்லை,
மதங்கள் பிரச்சனை இல்லை,
உலகம் பிரச்சனை இல்லை,
நாம் விழிப்புணர்வு அற்று இருப்பதால்தான் பிரச்சனை ஏற்படுகின்றது.

ஒரு மதத்தினர் மற்ற மதத்தினரைப் புரிந்துகொள்ள முயல்வதில்லை. ஒவ்வொரு மதத்தினரதும் வழிபாட்டு முறைகளில் வாழ்க்கை முறைகளில் இருக்கும் சிறுசிறு வித்தியாசங்களை முதலில் புரிந்துகொண்டால் அங்கே முழுமையான புரிந்துகொள்ளல் மலர்ந்துவிடும்.

■■

அத்தியாயம் 3

'பௌத்த மதம் ஊடாக இந்திய - சீன நல்லுறவு'

- பிரதமர் நேரு



பாரத முதல் பிரதமர் திரு. ஜவஹர்லால் நேரு அவர்கள் எழுதி 1946 இல் வெளிவந்த The Discovery Of India என்ற நூலிலிருந்து எடுக்கப்பட்ட சில விஷயங்களை இங்குக் குறிப்பிடுகின்றேன். இந்நூலானது அக்காலத்தில் உலகம் முழுவதும் விற்பனையில் (Best Seller) முன்னணியிலிருந்தது. இன்றும் உலகப் புகழ்வாய்ந்த நூலாகவேயிருக்கிறது. அந்த நூலிலிருந்து எடுக்கப்பட்டவையே இவ்அத்தியாயத்தில் கூறப்பட்டு உள்ளன.

பௌத்த மதத்தின் ஊடாக இந்தியாவும் - சீனாவும் மிக அருகாமையில் வருகின்றன, அதன் ஊடாகப் பல தொடர்புகள் ஏற்பட்டன. கடல்வழி மார்க்கமாக வர்த்தகமும் இருந்திருக்கின்றது. தரைமார்க்கமாக மக்கள் போக்குவரத்து நடைபெற்ற அடையாளங்கள் நேபாளம், அசாம், வங்காளம் ஆகிய இடங்களில் எளிதாகக் காணக்கூடியதாக உள்ளது. சீனாவிலிருந்து "பட்டு" இந்தியாவை வந்தடைந்தது.

பௌத்த மதம் இந்தியாவிற்குள் பரவத் தொடங்கியதும் இந்தியாவிற்கும் - சீனாவிற்கும் இடையில் இருநாட்டில் உள்ள ஞானிகள், சிந்தனையாளர்கள், மற்றும் யாத்திரீகர்களின்

போக்குவரத்தும் தொடங்கியது. ஹிமாலய மலையடிவாரத்தாலும், கோபி பாலைவனம் (Gobi Desert), பள்ளத்தாக்குகள் ஊடாகவும் ஆபத்தானதும் உயிர் அச்சுறுத்தலுமான இந்தப் பிரயாணத்தை மேற்கொண்டனர். இந்தப் பயங்கரமான பிரயாணத்தில் தொண்ணூறு வீதத்திற்கு மேற்பட்டோர் இறந்தேவிட்டனர்.

உயிரைப் பயணம் வைத்து சீனாவிலிருந்து இந்தியா வந்தவர்கள் இங்கேயும், இந்தியாவிலிருந்து சீனா சென்றவர்கள் அங்கேயும் தங்கள் சொந்த நாடுகளுக்குத் திரும்பாமல் தாங்கள் சுவீகாரம் செய்துகொண்ட அந்தந்த நாடுகளை தங்கள் தாய்நாடு போல் ஏற்றுக்கொண்டு தங்கிவிட்டார்கள். போக்குவரத்துக் கேற்ற இன்னொரு மார்க்கமான கடல்வழிப் பாதையும் இருந்தது. யாவா, சுமாத்திரா, மலேயா, நிக்கோபார் தீவுகள் ஊடாக இந்தியாவுக்கும் சீனாவுக்குமிடையிலான இந்த கடல்வழிப்பாதையும் பாதுகாப்பானதாக இருக்கவில்லை. கடல்வழியும், தரைவழியும் மாறிமாறிப் பாவிக்கப்பட்டன. மத்திய ஆசியாவில் புத்தமதமும் இந்தியக் கலாச்சாரமும் வேகமாக பரவத் தொடங்கின.

இந்தியாவிற்கும் சீனாவுக்கும் இடையே உள்ள நாடுகளில் மடாலயங்களும், பாடசாலை போன்ற கற்கும் நிலையங்களும்; அங்கொன்றும், இங்கொன்றுமாக ஆரம்பிக்கப்பட்டன. இந்தியாவிலிருந்து செல்பவர்களையும், சீனாவிலிருந்து இந்தியா வருபவர்களையும் இந்த மடாலயங்கள், நிலையங்கள் வரவேற்றன. சீனாவிலிருந்து இந்தியா நோக்கி வந்த ஞானிகள், சிந்தனையாளர்கள் போன்றோர் இந்தோனாசியா வில் இந்தியர்கள் செறிந்து வாழும் பகுதிகளில் மாதக் கணக்காகத் தங்கியிருந்து சமஸ்கிருதம் கற்று இந்தியாவிற்குள் பிரவேசித்தனர்.

சீனப் பேரரசரான மிங்ராய் (Ming Ti) அவர்களின் அழைப்பில் 67 A.D காலப் பகுதியில் காசியப்பா மாதங்க (Kasyappa Matanga) என்ற ஞானி முதன் முதலில் இந்தியாவிலிருந்து சீனா சென்றடைந்தார். அங்கு லோஜாங் (Loa Yang) என்ற



Kumara jiva

மாகாணத்தில் லோ (Lo) ஆற்றங்கரையில் குடியேறினார். அவருடன் தர்மறக்சா (Dharmaraksha) என்ற துறவியும் சென்றிருந்தார். இவர்களைத் தொடர்ந்து புத்தபத்திரா (Buddhabhadra), ஜினபத்திரா (Jinabhadra), குமார ஜீவா (Kumara jiva), பரமார்த்தா (Paramartha), ஜினகுப்தா (Jinagupta), போதிதர்மா (Bodhidharma), ஆகிய ஞானிகள் காலப்போக்கில் இந்தியாவிலிருந்து சீனா சென்றடைந்தனர். இவர்கள் எல்லோரும் தங்களுடன் பல துறவி களையும் கூட்டிச் சென்றனர். ஆறாம் நூற்றாண்டில் லோ மாகாணத்தில் மாத்திரம் 3,000 இந்திய புத்த துறவிகளும் 10,000 இந்தியக் குடும்பங்களும் இருந்ததாகக் கூறப்படுகிறது.

இந்திய ஞானிகள் தங்களுடன் சமஸ்கிருதத்தில் இருந்த கையேடுகளைக் கொண்டு சென்று காலப்போக்கில் சீன மொழியில் மொழிபெயர்த்தெழுதினார்கள். சில ஞானிகள் தங்கள் ஞான அனுபவங்களை சீன மொழியில் எழுதினார்கள். இந்திய மகான்கள் சீன இலக்கியத்திற்கும் பெரும் பங்களிப்பு செய்துள்ளார்கள். 401 A.C காலப்பகுதியில் அங்கு சென்ற குமாரஜீவா எழுதிய நூல்களில் 47 நூல்கள் மாத்திரம் இந்தியாவிற்கு கிடைத்தன. அவர் சீனமொழியில் தனிச் சிறப்புமிக்க ஆற்றல் பெற்றிருந்தார்.

இந்தியாவின் மிகப் பெரும் ஞானியான நாகர்யுனாவின் (Nagarjuna) வாழ்க்கை வரலாற்றை அவர் சீனமொழியில் மொழிபெயர்த்தார். ஆறாம் நூற்றாண்டின் (6 A.C) மத்திய பகுதியில் சீனா சென்ற ஜினா குப்தா (Jinagupta) 37 சமஸ்கிருத நூல்களைச் சீனமொழியில் மொழி பெயர்த்து எழுதியுள்ளார். இவரது சீனமொழிப் புலமையால் கவரப்பட்ட பேரரசர் ராங் (Tang) இவரது சீடன் ஆனார்.

இந்தியாவிற்கும் - சீனாவிற்கும் இடையிலான பிரயாணம் இரு வழிப்பாதை போன்று அமைந்தது. பல சீன ஞானிகளும்



இந்தியா வருகை தந்தனர். அவர்களில் மிக முக்கியமானவர்கள் பாஹின் (Fahien/ Fahsien) சங்யுன் (Sung Yun), சூஆன் -சேன்; (Hsuan-Tsane, Chwen Chuag) யி-சிங் (1-Tsing, Yi-Tsing) ஆவார்கள். பாஹின் அவர்கள் 5-ஆவது நூற்றாண்டில் இந்தியா வந்தார். இவர் சீனாவில் குமாரஜீவா அவர்களின் மாணவனாக இருந்தவர். இவர் இந்தியாவிற்குப் பிரயாணமாவதற்கு முன்பு தனது குரு குமாரஜீவாவிடம் சென்றார்.

அவர் பாஹினிடம் ''இந்தியாவில் ஆன்மிகத்தை மாத்திரம் தேடவேண்டாம், அதில் மாத்திரம் உனது காலத்தை செலவழிக்காமல் இந்திய மக்களையும், இந்திய மக்களது கலாச்சாரம், பண்பாடு, வாழ்க்கை முறைகளையும் அறிந்து கொள்ள வேண்டும் என்று குமாரஜீவா ஆலோசனை கூறினார். சீனா முழுமையாக இந்தியாவையும் இந்திய மக்களையும் அறிய உன் பிரயாணம் பயன்படவேண்டும்'' என்று கூறி அவரை குமாரஜீவா ஆசீர்வதித்து அனுப்பிவைத்தார். பாஹின் (Fahien) இந்தியாவையடைந்து பட்டாளிபுத்ரா பல்கலைக் கழகத்தில் (Pataliputra University) கல்வி கற்றார்.

சீனாவிலிருந்து இந்தியா வந்தவர்களில் மிகவும் பிரபல்யமானவர் சூஆன்-சேன் (Hsuan-Tsang). இவர் 7-ஆம் நூாற்றாண்டைச் சேர்ந்தவர். இவர் தரைமார்க்கமாக இந்தியாவை அடைந்தார். சீனாவிலிருந்து இந்தியா பிரயாணமாகும்போது அரசன் ராங் (Tang) வழியனுப்பி வைத்தார். இவர் இந்தியா பூராவும் பிரயாணம் செய்தார். இவர் போகுமிடமெல்லாம் மதிக்கப்பட்டார். மக்கள் அவருக்கு மரியாதை செலுத்தினர். நாலந்தா பல்கலைக் கழகத்தில் (Nalanda University) கல்வி கற்றார். பாடலிபுத்ராவும் பலவிதமான கல்வித்துறைக்குப் பிரபல்யமாக இருந்தது. அங்கு 10,000 மாணவர்கள் வரையில் கல்வி கற்றுக் கொண்டிருந்தார்கள். சூஆன்-சேன் சட்டத்துறையில்

முதுமானிப்பட்டம் பெற்று பின்னாளில் நாலந்தா பல்கலைக் கழகத்தின் உப அதிபரானார் (Vice Principal).

இவர் எழுதிய சி–யூ–கி (Si-yu-ki) என்ற நூலில் இந்தியா பற்றிக் குறிப்பிட்டிருந்தார். குறிப்பாக இந்தியக் கல்வி முறையைப் பாராட்டுகிறார். பல்கலைக் கழகத்தில் இலக்கணம் (Grammar) கலை விஞ்ஞானம் (Science of Arts and Crafts) மருத்துவம் (Medicine) தர்க்கவியல் (Logic) தத்துவம் (Philosophy) ஆகிய பல துறைகள் திறம்பட இயங்குவதாகக் கூறுகிறார். இந்திய மக்கள் கல்வி கற்பதில் ஆர்வமுள்ளவர்கள் எனவும் கல்வியை நேசிக்கிறவர்கள் எனவும் கூறுகிறார். இந்திய மக்களைப்பற்றிக் குறிப்பிடும்போது இலகுவான மனம் கொண்டவர்கள், கண்ணியமாக நடந்துகொள்வார்கள், பணவிசயத்தில் கபடத்தனமில்லை, நீதி பரிபாலனத்தில் கருணையுள்ளவர்கள், சத்தியத்திற்குக் கட்டுப்பட்டவர்கள், அரச நிர்வாகத்தில் நேர்மையானவர்கள், பழகுவதற்கு இனிமையானவர்கள், குற்றவியலைப் பொறுத்தவரை குற்றவாளிகளோ அல்லது கலவரக்காரர்களோ மிகக் குறைவு என்கிறார். அவர் மேலும் குறிப்பிடுவதாவது இந்திய அரச நிர்வாகம் கருணையினதும், அன்பினதும் அடிப்படையில் அமைந்திருக்கிறது. மக்களை அடிமைப்படுத்தி வேலை செய்விப்பதில்லை. இலகுவான முறையில் நிர்வாகம் உள்ளது. உள்நாட்டு வெளிநாட்டு வர்த்தகர்கள் நாட்டுக்குள் வருவதும் போவதுமாகத் தங்கள் கடமைகளில் ஈடுபட்டுக்கொண்டே யிருக்கிறார்கள் என்கிறார்.

சூஆன்-சேன் (Hsuan-Tsang) சீனா திரும்பும்போது தன்னுடன் பல சுவடிகள், ஏடுகள் (Manuscripts) எடுத்துச் சென்றார். இவர் சீனா சென்றடைந்ததும் சீனப் பேரரசராலும், மக்களாலும் வரவேற்கப்பட்டார். தன்னுடன் எடுத்துச் சென்ற ஏடுகளைச் சீனமொழியில் மொழிபெயர்த்தார். பல நூல்கள் எழுதினார், தன் அனுபவங்களை நூலாக்கினார். இவர் இந்தியா நோக்கி அன்று பிரயாணமாகும்போது அரசன் (Tang) இவருக்கு வழங்கிய குளிர்பானத்தில் ஒரு சில மண் துகள்கள் கலந்து கொடுத்து கூறினாராம் "வெளிநாட்டின் கோடி பெறுமதியான தங்கத்தைவிட சொந்த நாட்டின் மண்ணே சிறந்தது" எனக் கூறினார் என ஒரு கதை உண்டு. சூஆன்-

Hsuan Tsang in Nalanda, India

சேங் (Hsuan-Tsang) அவர்கள் சீனாவிலும், இந்தியாவிலும் நன்கு மதிக்கப்பட்டார். இவரது பிரயாணத்தால் இரு நாடுகளுக்குமிடையில் அரசியல் தொடர்பு ஏற்பட்டது. சீன மன்னர் ராங் (Tang) அவர்களும் வடஇந்தியாவில் அரசாட்சி செய்து கொண்டிருந்த அரசன் ஹர்சவர்த்தனா (Harshavardhana of KanauJ) அவர்களும் இரு நாடுகளுக்குமான தங்கள் தூதர்களைப் பரிமாற்றம் செய்துகொண்டனர். *654* A.C காலப்பகுதியில் இந்தியாவைச் சேர்ந்த புத்தமத மேதை ஸ்தவிர பிரஜ்னதேவ் (Sthavira Prajnadeva) சமஸ்கிருதத்தில் சூஆன்-சேன் (Hsuan-Tsang) க்கு எழுதிய இரு கடிதங்கள் சீனாவில் பாதுகாக்கப்படுகின்றன. சூஆன்-சேன் இந்தியாவிற்குத் தான் அனுப்பிய பதில் கடிதம் ஒன்றில் இவ்வாறு குறிப்பிடுகிறார். 'நான் என்னுடன் கொண்டுவந்த சூத்திராக்களிலும் (Sutras) சாஸ்திராக்களிலும் (Shastras) யோகசார்யபூமி - சாஸ்திராவை மொழிபெயர்த்துவிட்டேன் அத்துடன் ஏனைய நூல்களும் மொழிபெயர்த்துள்ளேன். .எல்லாமாகக் கிட்டத்தட்ட 30 நூல்கள் வரையில் இருக்கும். சீனாவுக்குத் திரும்பி வரும் பாதையில் பல புனித நூல்களைத் தொலைத்துவிட்டேன். அவற்றின் பட்டியலை இத்துடன் அனுப்புகின்றேன், முடியுமானால் எனக்கு அனுப்பிவையுங்கள், நான் உங்களுக்குச் சிறு அன்பளிப்புகள் இத்துடன் அனுப்புகின்றேன். தயவு செய்து அவற்றை ஏற்றுக்கொள்ளுங்கள்.' ஏற்கனவே இந்தியாவில் இருந்து நண்பர்கள் அவருக்கு ஒரு சோடி வெள்ளை வஸ்திரம் தங்கள் ஞாபகமாக அனுப்பியிருந்தார்கள். அத்துடன் இந்தியாவிலிருந்து ஏதாவது நூல்கள் தேவை என்றால் அறிவிக்கவும், நாங்கள் அவற்றை அனுப்பிவைப்போம் என அன்பு மடல் எழுதியிருந்தார்கள்.

சூஆன்-சேன் (Hsuan-Tsang) இறந்த பின்பு சீனாவிலிருந்து இ-சிங் (I-Tsing Or Yi-tsing) என்ற சீனக் கல்வியாளர் *671* A.C

காலப் பகுதியில் இரண்டு வருடப் பிரயாணத்தின் பின் இந்தியத் துறைமுகமான தம்பிராலிப்தி (Tamralipti-Hooghly) வந்தடைந்தார். இந்தியா வரும் வழியில் சுமாத்திராவில் உள்ள சிறிபோகா (Shribhoga) நகரில் பல மாதங்கள் தங்கியிருந்து சமஸ்கிருதம் கற்றார். இவர் பிரயாணம் செய்த காலப் பகுதியில் மத்திய ஆசியாவில் பல அரசியல் மாற்றங்கள் நடந்துகொண்டிருந்தன. பல புத்த மடாலயங்கள் இருந்த இடம் தெரியாமல் மறைந்துகொண்டிருந்தன. ஈரான்(பேர்சியா) இந்தியா, மலாயா, சுமாத்திரா, சீனா இவற்றிற்கிடையிலான கடல் போக்குவரத்தும், வர்த்தகமும் அதிகரிக்கத் தொடங்கின. யி-சிங்(I-Tsing) பாரசீகக் கப்பலில் குவாங்ருவங்ல் (Kwangtung) இருந்து சுமாத்திரா சென்று பின்பு இந்தியா அடைந்தார்.

நாலந்தா பல்கலைக்கழகத்தில் பல வருடங்கள் மாணவனாக இருந்து கல்வி கற்றார். சீனா திரும்பும்போது பல நூற்றுக்கணக்கான சமஸ்கிருத நூல்கள் தன்னுடன் எடுத்துச் சென்றார். இவர் இந்தியாவைப் புண்ணியதேசம் (Noble Land) என்றும் சீனாவைத் தெய்விக தேசம் (Divine Land) என்றும் கூறுகிறார். இவர் சமஸ்கிருதத்தில் பெரும் பாண்டித்தியம் உடையவராக விளங்கினார். அந்த மொழியை மிகவும் நேசித்தார். சீனாவில் சமஸ்கிருதம் சில இடங்களில் கற்பிக்கப்பட்டது. டாங் (Tang) மன்னர் காலத்தில் வாழ்ந்த சோன்வென் (Shonwen) என்ற புத்த பிக்கு சமஸ்கிருதத்தைச் சீனமொழியுடன் இணைத்து, புதிய சொற்களை உருவாக்கினார். சீன மன்னனைச் சமஸ்கிருதத்தில் தேவபுத்திர (Deva Putra) அதாவது கடவுளின் மைந்தன் அல்லது மேலோகத்தின் மகன் என்ற அர்த்தத்தில் அழைத்தனர். இந்தியாவில் புத்தமதம் மறையத் தொடங்க இந்திய - சீனா உறவும் மறையத் தொடங்கியது.

புத்தமதம் கற்க வரும் சீனதேசத்துக் கல்வியாளர்களின் வருகையும் நின்றுவிட்டது. 11 A.C நூற்றாண்டிலிருந்து தொடங்கிய அரசியல் புரட்சிகளால் ஏராளமான புத்த ஞானிகள் புத்தமத மேதைகள், துறவிகள் எனப் பல்லாயிரக் கணக்கானோர் ஆயிரக்கணக்கான ஏடுகள், சுவடிகள் அனைத்தையும் எடுத்துக்கொண்டு இமயமலைச் சாரலைக் கடந்து நேபாளத்திற்குள்ளும், திபெத் நாட்டிற்குள்ளும்

சென்றுவிட்டனர். இவர்களில் பெரும்பாலோர் சீனாவிற்குள் சென்றுவிட்டனர்.

புத்தமதம் சம்பந்தமான ஏடுகளைவிட இவற்றில் வானசாஸ்திரம், கணிதம், மருத்துவம் சம்பந்தமான ஏராளம் ஏடுகளும் அடங்கும். இவைகள் அந்தந்த நாட்டு மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டன. இவற்றின் பல மூலப்பிரதிகள் அசல் (Original) இன்றும் அங்குப் பேணப்படுவதாகக் கூறப்படுகிறது. சீனாவில் சுங்-போ வைப்பகத்தில் (Sung Pao Collection) 8,000 ஆக்கங்கள் இருப்பதாகக் கருதப்படுகின்றது. திபெத் பூராகவும் இந்திய ஏடுகளே உள்ளன. இந்தியா - சீனா - திபெத் ஆகிய நாடுகளுக்கிடையிலான கல்வியாளர்கள், துறவிகள் மேதைகளுக்கிடையில் ஒத்துழைப்பு நிலவியதினால் சமஸ்கிருத - சீனமொழி அகராதியும், சமஸ்கிருத - திபெத்திய மொழி அகராதியும் 9ஆவது, 10ஆவது A.C நூற்றாண்டு காலப் பகுதியில் உருவாகின. இது மகாவியூபதி (Mahavyutpatti) என அழைக்கப்பட்டது.

சீனாவில் 8-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த (A.C) மிகப் புராதன நூல் ஒன்று கண்டுபிடித்தார்கள். அந்த நூல் சமஸ்கிருதத்தில் இருந்தது. அந்த நூல் மர அச்சில் பதிக்கப்பட்டிருந்தது (Printed From the Wooden Block). 10-ஆம் நூற்றாண்டில் இம்பீரியல் பிரிண்டிங் கொமிசன் சீனாவில் ஆரம்பிக்கப்பட்டு துரித கதியில் இத்துறை வளர்ச்சியடைந்தது. அக்காலப்பகுதியில் இந்தியாவில் எப்படியான அச்சுப்பதிவு இருந்தது என்பது தெரியவில்லை. அச்சுப்பதிவுத் தொழில் நுட்பம் சீனாவிலிருந்து ஜெர்மனிக்கு சென்று பின்பு 15–ஆம் நூற்றாண்டில் உலகில் பல நாடுகளுக்குப் பரவிவிட்டது.

1000 வருடங்களுக்கு மேலாக இந்தியாவும் - சீனாவும் தத்துவம், கலை, அறிவியல், வாழ்வியல், விஞ்ஞானம் என இரு நாடுகளும் பரஸ்பரம் பகிர்ந்துகொண்டிருந்தனர். சீனாவின் செல்வாக்கு இந்தியாவில் இருந்ததை விட இந்தியாவின் செல்வாக்கு சீனாவில் அதிகம் பரவியிருந்தது. சீனா தான் இந்தியாவிலிருந்து பெற்றுக்கொண்ட அறிவியல் ஞானத்தை சீனா நாட்டிற்கும், மக்களுக்கும், அவர்களின் வாழ்க்கை முறைக்கும் ஏற்ப மாற்றியமைத்தது. புத்தரது சிந்தனைகள், கருத்துக்கள், சீன ஞானிகளான கொன்பியூசியஸ்,

லாசூ அவர்களின் கருத்துக்களில் பிரதிபலிக்கின்றன. புத்தரது கருத்துக்களில் உபநிடதம் பிரதிபலிப்பதாகக் கூறப்படுகிறது..

வூசென் (Wuchen) எழுதிய 16-ஆம் நூற்றாண்டில் பிரபல்யமாகக் கருதப்பட்ட குரங்கு (Monkey) என்ற அந்த சீன நூலில் சூஆங்-சேன் (Hsung - Tsang) இந்தியா செல்லும்போது அவருக்கேற்பட்ட திகிலூட்டும் அனுபவங்களையும் இந்தியா அடைந்த பின் அவருக்குக் கிடைத்த அறிவியல் ஞானத்தையும் மையமாக வைத்து எழுதப்பட்ட அந்த நூலை அதன் ஆசிரியர் இந்தியாவிற்குச் சமர்பணம் (Dedication) செய்துள்ளார்.

இந்தியாவிற்கும் சீனாவிற்கும் இடையில் தொடர்புகள் பல நூற்றாண்டுகளாகத் துண்டிக்கப்பட்ட பின் பிரிட்டிஷ் கிழக்கிந்திய கொம்பனி (British East Indian Company) யின் ஆதிக்கம் இந்த இரண்டு நாட்டுக்குள்ளும் புகுந்துவிட்டது. இந்தியாவிற்குள் அதிக காலம் ஆதிக்கம் நீடித்தது. ஆனால் சீனாவில் அதிக காலம் நீடிக்கவில்லை.

இந்தியாவும் சீனாவும் ஆதியில் நிலவிய அந்த நட்புறவையும், பரஸ்பர நல்லெண்ணத்தையும் மீண்டும் மலரவிட்டு, தொலைந்த அந்த 'உறவை' மீட்டெடுத்து இரு நாடுகளும் இணைந்து புதிய சக்தியாகப் பரிணமிக்க வேண்டும். இரு நாட்டு மக்களையும் இணைக்கக்கூடிய சக்தி இரு நாட்டுக் கலைத்துறைக்கும், ஊடகங்களுக்கும் உண்டு. நட்பும், நல்லுறவும் ஏற்கனவே நிலவியது. அது மீண்டும் மலர வேண்டும். அது காலத்தின் கட்டாயம் என்பதே இந்நூலாசிரியரின் அபிப்பிராயமாகும்.

■■

அத்தியாயம் 4

தமிழ்மொழி பேசும் இடத்தில் மாபெரும் புத்த ஞானி

சீனத்துறவி சுவான் சாங்

சீனக் கல்விமானும், பௌத்த துறவியுமான சுவான் சாங் *(Xuan Zang) 596 - 664* CE காலப் பகுதியைச் சேர்ந்த இவர் இந்தியாவில் பத்து வருடம் தங்கியிருந்து புத்த மதத்தை ஆய்வு செய்தார். இந்தியா முழுக்க பிரயாணம் செய்தார். தென்னிந்தியாவில் தமிழ்மொழி பேசும் இடத்திற்குச் சென்றபோது ஒரு மிகப்பெரிய புத்த ஞானியைப் பற்றி அறியக்கூடியதாக இருந்தது எனத் தனது பிரயாணக் குறிப்பில் *(Travel Diary)* எழுதியிருந்ததாக கிழக்கத்தைய மதங்கள் (Eastern Religions) என்ற நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது. இவர் குறிப்பிடும் அந்த புத்தஞானி போதிதர்மராகத் தான் இருக்கவேண்டும்.

Xuan Zang

போதிதர்மர் தென் இந்தியாவில் காஞ்சியைத் தலைநகராகக் கொண்டு ஆண்ட பல்லவ மன்னரின் வம்சத்தைச் சேர்ந்தவர். இவர் துறவியாகுமுன் இளவரசராக இருந்தவர்.

பல்லவரின் கட்டடக்கலை:



Angkor Wat, Cambodia



பல்லவ மன்னர்கள் வடித்த சிற்பங்கள் மாமல்லபுரம், காஞ்சி போன்ற இடங்களில் இன்றும் காணப்படுகின்றன. பல்லவ மன்னர்களில் ஒருவரான 2-ஆவது சூரியவர்மன் 12-ஆவது நூற்றாண்டின் ஆரம்பகாலத்தில் உலகத்திலேயே மிகப் பெரிய இந்து ஆலயம் ஒன்றைக் கம்போடியாவில் உள்ள அங்கோரில் நிர்மாணித்தார். 16-ஆவது நூற்றாண்டிலிருந்து இந்த ஆலயப்பிரதேசம் அங்கோர்வற் (Angkor Wat) என அழைக்கப்படுகிறது. இதன் பொருள் ஆலயநகரம் (Temple City) என்பதாகும். நஹர் என்ற சமஸ்கிருதச்சொல் நோஹார் (Nokor) என்ற கம்போடிய ஹமர் (Khmer) சொல்லாக மருவி ஆலயத்தைக் குறிக்கும் வற் (Wat) என்ற ஹமர் சொல்லுடன் சேர்த்து அங்ஹோர் வற் (Angkor Wat) உருவாகியுள்ளது.

15-ம் நூற்றாண்டில் இந்த ஆலயம் தேரவாத பௌத்தர்களினால் (Theravada Buddhist) மாற்றத்துக்குள்ளானது. அதனால் பௌத்தத்தின் சின்னங்கள் அடையாளங்கள் அங்கு உண்டு. 1586-இல் அங்கு சென்ற போர்த்துக்கேய பௌத்ததுறவியான அன்ரோனியோ மக்டலனா (Antenic Da Magdalena) ''இந்தஆலயம் சாதாரண மனித அறிவுக்குப் புலப்படாத முறையில் அமைந்துள்ளது. இது போன்ற கட்டிடக்கலை உலகில் வேறு எங்கும் பார்த்ததில்லை'' என்று குறிப்பிட்டுள்ளார்.

Henri Mouhot

19ம் நூற்றாண்டின் மத்தியில் அங்கு சென்ற பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த ஆய்வாளர் ஹென்றி மௌஹாற் (Henri Mouhot) என்பவர் தனது பிரயாணக் குறிப்பில் ''அங்ஹோர் வற்றைப் பாராதவர்கள் மைக்கல் அஞ்சலோவின் (Michael Angelo) சிற்பங்களையும் கிரேக்க நாட்டிலும், ரோமாபுரியிலும் காணப்படும் கட்டிடக் கலையைப் புகழ்வார்கள்'' எனக் குறிப்பிட் டுள்ளார்.

பல்லவ மன்னனான சூரியவர்மன் தன்னை அடக்கம் செய்யக் கட்டிய நினைவாலயம் என்ற கருத்தும் நிலவுகிறது. எலனர் மனிக்க (Eleaner Mannikka) என்ற பெண் ஆய்வாளர் ''சூரிய, சந்திரனின் சுழற்சிக் கணிப்பு முறை புனித பிரபஞ்ச (Sacred Space) மண்டபத்தினுள் அமைக்கப்பட்டுள்ளது எனவும், பிறிதொரு மண்டபத்தில் இலங்காபுரியில் இடம்பெற்ற இராமர் - இராவணரது போரும், இந்தியாவில் குருஷேத்திரத்தில் இடம்பெற்ற மகாபாரதப் போரும் சித்தரிக்கப்பட்டுள்ளன எனவும், குளிர் காலத்துக்கும் (Winter Solstice) வசந்த காலத்துக்கும் (Spring Equinox) இடைப்பட்ட 91 நாட்களைக் குறிக்கும் அடையாளங்களும் மண்டபத்தில் காணப்படுவதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

இந்தியக் கலாச்சாரத்தை, தத்துவத்தை (Indian culture and philosophy) தழுவியதே 'அங்கோர்' (Angkor) கலாச்சாரமாகும். ஹமர் சாம்ராச்சியம் (Khmer Empire) இந்து-பௌத்தம் உள்ளடக்கியதாகவே இருந்தது. அங்கோர்வற்றில்

சமஸ்கிருதத்தில் வாசகங்கள் பொறிக்கப்பட்டுள்ளன. 'பொக்கற்றோர்' எனும் கம்போடிய தற்காப்புக் கலையின் பல நுட்பங்கள் பற்றிய விளக்கங்கள் (Various techniques of Bokator) செதுக்கப்பட்டள்ளன. விஷ்ணுவுக்கும் சிவாவுக்குமான ஆலயங்கள் அங்கே உண்டு. சர்வாதிகாரி பொல்பொட் (Polpot) ஆட்சிக் காலத்தில் (1975 -1979) ஹமறூஜ் (Khmer Rouge) படையினரால் அங்கோர்வற் ஆலயம் பெரும் சேதாரத்துக்குள்ளானது.

இவை பல்லவர் காலத்தின் சிற்பக் கலையையும் கட்டிடக் கலையையும் எடுத்துக்காட்டுகின்றன. அத்துடன் பல்லவர்கள் மருத்துவம், வானசாஸ்திரம், ஆன்மிகம் போன்ற துறைகளிலும் கவனம் செலுத்தியவர்கள்.



Angkor Wat

■■

அத்தியாயம் 5

பெண்ணைக் குருவாக ஏற்று பெண்களைப் பெருமைப்படுத்திய ஞானி

போதிதர்மர் அவர்கள் பெண் அடிமை நிலவிய காலத்தில் ஒரு பெண்ணைத் தன் தியான குருவாகவும் ஆன்மிக வழிகாட்டியாகவும் ஏற்று அவரது நேரடி சீடராகி அவர் முன்னிலையில் ஞானமடைந்தார். ஒரு பெண்ணைத் தனக்கு ஆசானாக்கி பெண்கள் பற்றிய ஒரு விழிப்பை ஏற்படுத்தி உலகில் பெண்ணுக்கு அதி உயர் கௌரவம் கொடுத்து பெண்களைப் பெருமைப்படுத்தியவர்

போதிதர்மர் என்ற பெயர் வெவ்வேறு மொழிகளில் வெவ்வேறு விதமாகக் கூறப்படுகிறது. தமிழில் போதிதர்மர், ஆங்கிலத்தில் Bodhidharma, சமஸ்கிருதத்தில் பூ-ராய்-தாமோ (Po-Tai- Tamo) தாய்லாந்துமொழியில் Tak mor, வியட்னாமிய மொழியில் B-d-d-t-mo, ஜப்பானிய மொழியில் தரும தேசி, (Daruma Daishi) எனவும். 'தாமோ' (Tamo) எனவும், சீனாவில் 'தாமு' (Dhamu), போதி (Bodhi) எனவும், திபெத்தில் போதிதர்மோத்ரா (Bodhi Dharmottara) எனவும் அழைக்கப் படுகின்றார்.

பல்லவ வம்சத்தைச் சேர்ந்த சாடிலி குடும்பத்தில் இளவரசராக தென் இந்தியாவில் உள்ள காஞ்சியில் 452 A.D காலப்பகுதியில் வாழ்ந்தவர் எனச் சில குறிப்புகளும் கந்தவர்வ மன்னனின் மூன்றாவது மகனான இளவரசர் என வேறு சில குறிப்புகளும் கூறுகின்றன. இளவரசருக்குரிய பயிற்சிகள் பெற்று அரசனாக இருப்பதற்கான முழுத் தகமையுடன் புத்திக்கூர்மையும், அறிவும், பேராற்றலும், ஆளுமையும் உடையவராக விளங்கினார்.

ஆன்மிகத் தேடல்:

போதிதர்மர் அவர்கள் அறிவியல், வானசாஸ்திரம், அரச நிர்வாகம், குதிரையேற்றம், யானையேற்றம், போர்க்கலை, தற்காப்புக்கலை, ஆன்மிகம், மருத்துவம், அட்டமாசித்தி, அட்டாங்கயோகாக்கலை போன்ற துறைகளில் சிறந்து விளங்கினார். இளமையிலே விழிப்புணர்வும் ஞானமும் உள்ளவராகக் காணப்பட்டார். ஒருவர் தனது சுயத்தை (Self-Nature) அறிந்தால் மரணம் வாழ்வின் முடிவல்ல என்பதை அறிந்துகொள்ளலாம் என்பதால் தன்னை அறிதலில், சுயத்தை உணரலில் (Self - Realization) இறங்கினார். இந்த லௌகீக வாழ்வு அர்த்தமற்றது என்பதால் அவர்

உலகுக்கு எதிரானவராக இருக்கவில்லை
உலகத்தைத் துறக்கக் கூறவில்லை
மரணத்துக்கு எதிராகப் போராடவில்லை

போதிதர்மர் கேள்வியும் பதிலுமானார்:

போதிதர்மர் இளவரசர் அந்தஸ்தைத் துறந்தார். தந்தை குறுக்கிட்டார். ''மரணத்திலிருந்து உங்களால் என்னைக் காப்பாற்ற முடியுமா? மரணத்திலிருந்து உங்களால் உங்களைக் காப்பாற்ற முடியுமா? மரணத்துக்கு அப்பால் என்ன உள்ளதென்பதை அறியப்போகின்றேன், தயவு செய்து என்னைத் தடுக்காதீர்கள்'' என்றார் போதிதர்மர் அவர்கள். தந்தை ஒரு கணம் யோசித்தார். ''உன்னை நான் தடுக்கவில்லை, காரணம் மரணத்தை என்னால் தடுக்க முடியாது. மரணத்திற்கு அப்பால்... என்ன உள்ளதென்பதும் எனக்குத் தெரியாது, நீ அந்த உண்மையைத் தேடுவதற்கு என் ஆசீர்வாதம், நான் குடும்பப் பிணைப்பால் யோசிக்கின்றேன், நீ இளவரசன், அரசருக்குரிய அத்தனை தகுதிகளும் உனக்கு உண்டு, நீ இந்தப் பல்லவ சாம்ராச்சியத்தை விட அதி உயர்ந்த ஒன்றைத் தெரிவு செய்துவிட்டாய், உன் தேடல் சாம்ராச்சியத்தையும் விட உயர்ந்தது. மரணத்தைப் பற்றி கேள்வி கேட்பாய் என்று நான் எதிர்பார்க்கவில்லை. மரணத்தைத் தடுக்க முடியாதென்றால் உன்னைத் தடுக்க வேண்டாம் என்று கூறுகிறாய்'' என்றார் தந்தை. போதிதர்மர் துறவியானார்.

ஆன்மிகக் குரு:

Pragnatara

காஞ்சியில் இளவரசராக இருந்தபோது இவருக்கு மனதில் திடீரெனக் கேள்வி தோன்றியது, மரணத்தைத் தடுக்கலாமா? மரணத்துக்கு அப்பால் உள்ளது... என்ன? இந்த வினாக்களுக்கு விடை காண முற்பட்டார். பல துறவிகளை அணுகினார் ஆனால் இவரது கேள்வி, கேள்வியாகவே இருந்தது. விடை தேடும் வினாவாக அது இவர் மனதில் வளர்ந்துகொண்டேயிருந்தது. மரணத்தைக் கடந்து மரணத்துக்கு அப்பால் என்ன என்பதைத் தியானம் மூலம் அறிய பிரகியத்ரா (Pragyatara) என்ற பெண் ஞானியை அணுகினார். இவர் பௌத்த பீடத்தின் 27-ஆவது பிரதான குருவானவர். ஒருவர் "தன் சுயத்தை (Self-Nature) தன் இருப்பை (Being), தான் யார்? என்பதை அறிந்தால் ஒருவர் மரணத்துக்கு அப்பால் உள்ளதை அறியலாம், ஒருவர் தன்னை அறியாதவரை மரணம்தான் முடிவு என்று ஏற்கவேண்டிவரும்" என்றார். - பிரக்ஜத்ரா.

பௌத்த மதத்தின் 27–ஆவது பிரதான குருவான பெண் ஞானி பிரக்ஞத்ரா (27th Patriarch of Buddhism) இவரது வினாவுக்கு விடை அளித்து, தியானம் கற்பித்து, இவரது சந்தேகங்களைத் தீர்த்து, இவருக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தி தியானமூலம் மனதைக் கடந்து, மனதை வெறுமையாக்கி, அந்த ஒன்றுமற்ற வெறுமைக்கப்பால் மரணத்தை அனுபவித்து அறிய வழிகாட்டினார். மனதைக் கடந்து அதற்கப்பால் உள்ள நிலையையும் உணர்ந்துகொண்டார். இவரது பெயரைப் போதி தர்மா (Bodhi Dharma) என மாற்றினார். போதி (Bodhi) என்றால் ஞானம் போதிதர்மா என்றால் சுயவிழிப்புணர்வு (Self Nature Of Awareness) என்று பொருள்படும். இவரது இயற்பெயர் போதிதாரா (Bodhitara) எனவும் சிலர் இது தவறு தருமதேசி (Dharmadeshi) என்பதே இவரது இயற்பெயர் என்று கூறுவோரும் உண்டு. இவர் Dharma Master எனவும் அழைக்கப்பட்டுள்ளார்

பெண்ஞானி முன்னிலையில் ஞானமடைந்தார்:

இவர் தன் சுயத்தை (Self - Nature) அறிந்தார், தன்னை உணர்ந்துகொண்டார் (Self - Realized). போதிதர்மர் தன் தியான ஆசான் பெண் ஞானியான பிரஜ்னதாரா முன்னிலையில் ஞானம் அடைந்தார். இவரைச் சீனா செல்ல ஆசான் பணித்தார். பௌத்தம் அங்கு தளர்ந்த நிலையில் இருந்தபோது போதிதர்மரைச் சீனா சென்று மஹாஜன பௌத்தத்தையும் அதன் உப பிரிவான சரஸ்வத் தத்துவத்தையும் போதிக்கும்படி பணித்தார். (மகாஜன பௌத்தம் பொதுவாக மக்கள் பின்பற்றக்கூடிய வழிமுறைகளையும் ஹீனயான பௌத்தம் துறவு வாழ்க்கையைப் பற்றியும் கூறுகிறது.)

போதிதர்மரைச் சீனாவுக்கு அனுப்பும்போது அவரது குரு கூறியது "சீனாவில் மக்களைக் குழப்பாதபடி மஹாஜன பௌத்தத்தை விளக்கவும். சீனாவில் மக்கள் இதைப் புரிந்துகொண்டால் உலகில் உள்ள மக்களில் ஐந்து பேரில் ஒருவர் புரிந்துகொண்டதற்குச் சமன்" என்றார். சீனாவின் ஜனத்தொகையைக் கவனத்தில் எடுத்துதான் இப்படிக் கூறியிருந்தார்.

போதிதர்மருக்கு முன்பு சீனாவின் பேரரசர்களின் அழைப்பில் ஆயிரக்கணக்கான பௌத்த அறிஞர்கள், துறவிகள், பண்டிதர்கள், சீனா சென்றுள்ளனர். அவர்களில் பலர் பௌத்த சாசனங்களை, ஏடுகளை, புனித நூல்களை, சீனமொழியில் மொழிபெயர்த்து வழங்கியுள்ளார்கள். பலர் போதனைகளைக் கற்பித்தனர். பலர் பௌத்த போதனைகளைக் கிராமம் கிராமமாகச் சென்றே போதித்தனர். இவர்கள் எல்லாம் 'ஞான'மடையாதவர்களாவர். ஞானமடைந்தவர்களைச் சீனா காணவில்லை. போதிதர்மருக்கு முன் போனவர்கள் எல்லாம் வாசித்து அறிந்தவைகளைதான் போதித்தனர், கூறினர், கற்பித்தனர். அனைத்தும் அவர்களின் சொந்த அனுபவமல்ல.

போதிதர்மர் சீனாவில் தன் ஞான அனுபவங்களை மக்களுடன் பகிர்ந்துகொள்ள வேண்டும் என்று அவரது குரு விரும்பினார். சீனாவில் இவரது தோற்றம், பார்வை, நேர்மை, துணிச்சல், வீரம், அமைதி, அன்பு, கருணை, தெளிவு



என்பன மக்களை இவர் பக்கம் நோக்கச் செய்தது. மக்கள் முதன் முதலாக ஞானமடைந்தவரைப் பார்த்தார்கள். இவரூடாகக் கௌதம புத்தரைப் பார்த்தனர். 'ஞானம்' (Enlightenment) என்ற சொல்லைக் கேட்டதும் மக்களுக்குள் மின்சாரம் பாய்ந்தது போல் இருந்தது. சீன மக்கள் தங்கள் ஐயங்களைத் தீர்க்க போதிதர்மரால்தான் முடியும் என நம்பினர். போதிதர்மர் கடின உழைப்பு, விடாமுயற்சி, சுறுசுறுப்பு இவைகளேயே ஞானம் என்றார்.

இதே கருத்தை குருநானக்கும் கூறுகிறார்.

சீக்கிய மதம்:



வட இந்தியாவில் பஞ்சாப் (Punjab) மாநிலத்தில் சீக்கிய மதம் (Sikhism) பிறந்தது. இம்மதத்தின் பிரதான குருவாக இருந்து உபதேசம் செய்தவர் குருநானக் (GuruNanak). இவரது காலம் 1469-1539 எனக் கணிக்கப் பட்டுள்ளது. இவரது போதனைகளடங்கிய புனித நூல் சாஹிப் கிறாந்த் (Sahip Granth) என அழைக்கப்படுகிறது.

சீக்கிய மதம் 3 முக்கிய போதனைகளை மையப்படுத்து கிறது.

1. கடவுளின் நாமத்தை அனுதினமும் ஜெபித்தல்.
2. கடின உழைப்பு, சுறுசுறுப்பு, முயற்சி இவைகள் வாழ்வின் ஆதாரங்கள்.
3. தன்னலமற்ற உதவி, சேவை, ஈகை, பகிர்தல் என்பனவற்றைக் கடைப்பிடித்து வாழ்தல்.

சீனாவில் பல நூற்றாண்டுகளுக்கு முன்பே பௌத்தம் நன்கு பரவியிருந்தது. அங்கு முதலில் கொன்பியூசியசின் தத்துவம் (Confucianism) பரவியிருந்தது. கொன்பியூசியசின் தத்துவத்தில் மக்கள் சலிப்படைந்த படியால் பௌத்தம் அங்கு பரவியிருந்தது. பௌத்தம், சுயம் (Self), ஆன்மா (Soul), உண்மை (Truth), மனம், தன்னை அறிதல் (Self - Realization) மனதைக் கடத்தல், மரணத்திற்கு அப்பால் செல்லல், மறுபிறப்பு, பிரக்ஞை (consciousness) போன்றவைகளைத் தெளிவாகக் கூறின. கொன்பியூசியசின் கருத்துக்கள் பெரும்பாலும் மனம் சார்ந்தவைகளில் அதிகம் அக்கறை காட்டின. கொன்பியூசியசின் தத்துவத்தில், கருத்தில், கோட்பாட்டில், காணாததை மக்கள் பௌத்தத்தில் கண்டனர்.

சீனாவில் ஏற்பட்ட முதல் மாற்றம் மதமாற்றமே:

கொன்பியூசியஸ் காலத்தில் சீனாவில் லா-சூ (Lao-tzu) லீசு (Lich Tzu) போன்ற ஞானிகள் சீனாவில் இருந்தார்கள். அப்போது கொன்பியூசியஸின் தத்துவமே மேலோங்கியிருந்தது. கிறிஸ்தவ மிஷனரி தங்கள் மதத்தை சீனாவில் பரப்பினார்கள். ஏழைகளுக்கு உணவு, உடை, இருப்பிடம், கல்வி, வழங்கினார்கள். ஆன்மிகம் ஒருவருக்கு உள்ளே 'உள்' நிகழுவதாகும், அதனால் அது வெளியில் தெரியாது, ஆனால் மதமாற்றமென்பது 'உள்ளே'' நிகழ்வதல்ல, அது வெளியில் நிகழ்வதால் அது 'வெளியே' தெரியும். ஒருவருக்குள் ஆன்மிக மாற்றம் நிகழ்வது வேறு, அதே நேரத்தில் மதமாற்றம் என்பது வேறு.

சீனாவில் ஏற்பட்ட முதல் மாற்றம் மதமாற்றமாகவே இருந்தது. பௌத்தத்தை மக்கள் இலகுவாக விளங்கினார்கள், அப்படியான ஒரு மாற்றம் மக்களுக்குத் தேவைப்பட்டது. கொன்பியூசியசின் கோட்பாடுகளும் மக்களைச் சலிப்படையச் செய்துவிட்டது. உலகில் பெரிய நாடான சீனா பௌத்த நாடாக மாறிப் பல நூற்றாண்டுகளுக்குப் பின்பே போதிதர்மர் சீனா சென்றடைந்தார். அவர் அங்குச் சென்றபோது 30 ஆயிரம் (30,000) பௌத்த விகாரைகளும், மடாலயங்களும் இருந்தன. இருபது இலட்சம் (20,0000) பௌத்த துறவிகள்

இருந்தார்கள். இந்த எண்ணிக்கை அப்போதிருந்த சீனமக்கள் தொகையில் இது ஐந்து சதவீதமாகும்.

இந்தியாவிலிருந்து சீனா சென்றவர்கள் எல்லாம் மதப்பண்டிதர்கள், சமஸ்கிருதப் பண்டிதர்கள், வித்துவான்கள், கல்விமான்கள், துறவிகள், போதனையாளர்கள், தத்துவவாதிகள் ஆவார்கள். ஞானம் அடைந்தவர்கள் யாரும் அதுவரை சென்றதில்லை எனலாம். புத்தர் முன்னிலையில் ஞானமடைந்த முதலாவது சீடனாகக் கருதப்படும் காசியப்பா அங்கு சென்றவர். ஆனால் அவர் எந்தவித செயற்பாடும் இல்லாமல் அமைதியாக காலத்தைக் கழித்துவிட்டார். இவரிலிருந்து மக்களை எதுவும் சென்றடையவில்லை. காசியப்பா முதலாவது சென்பௌத்த குருவுமாவார். ஆனால் இவர் சென் பௌத்த மனங்களில் இடம்பிடிக்கவில்லை.

சீனாவில் கால் பதித்த முதலாவது ஞானம் அடைந்த துறவியாக போதிதர்மர் கருதப்படுகிறார். ஞானம் அடைந்தவரை சீனா தேசம் அதுவரை கண்டதில்லை எனலாம். இவரது சீனா விஜயம் அங்கு முக்கியமடைந்து பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது. சீனதேசத்திற்கு தேவைப்பட்டதெல்லாம் இன்னொரு கௌமத புத்தர்தான். தன் அனுபவத்தில் தான் அடைந்ததை (ஞானத்தை) மக்களிடம் பகிர்ந்துகொள்ளும் ஒருவர் தேவைப்பட்டார். தாங்கள் கேள்விப்பட்டவற்றைக் கூறுபவர்கள், வாசித்து அறிந்தவற்றைப் போதிப்பவர்கள் சீனாவில் அப்போது நிறைந்திருந்தார்கள். உண்மையை உண்மையாக அடைந்தவர்கள், சுயத்தை உணர்ந்தவர்கள் (Self - Nature), இருப்பை (Being) அறிந்துகொண்டவர்கள் தங்கள் நேரடி அனுபவங்களைப் போதனையாகக் கூற அப்போது அங்கு யாரும் இருக்கவில்லை.

ஞானத்தில் ஆண் - பெண் வேற்றுமை இல்லை:

சீனா ஞானத்தைப் பெறத் தயாராக இருந்தது. தான் அடைந்த ஞானத்தை விதைக்கப் போதிதர்மர் அவர்களுக்கு இடம் தேவைப்பட்டது. சீனாவைத் தெரிவுசெய்தது போதிதர்மர் அவர்கள் அல்ல, அவரது வழிகாட்டியான ஞானி பிரஜ்னதாரா அவர்களே.


Thilopa

இதேபோல்தான் வங்கத்தைச் சேர்ந்த ஞானி திலோபாவுக்கும் நடந்தது. தான் பெற்ற ஞானத்தை வழங்க சீடர்களைத் தேடினார். அவருக்கு ஞானமார்க்கத்துக்கு வழி காட்டிய அவரது குருவான பெண் ஞானியான தாகினி (Dakini) திலோபாவுக்கு "ஊர் ஊராக அலைந்து திரிந்து ஞானத்தைப் பெறத் தகுதியாக உள்ளவரைக் கண்டு பிடி" எனக் கூறினார். தேடி அலைந்து திரிந்தவர் திபெத் நாட்டைச் சென்றடைந்தார். இந்தியாவிலிருந்து பௌத்தம் படிப்படியாக வெளியேறிய துடனான நிகழ்வே திலோபா, போதிதர்மர் போன்ற மகான்கள் வெளியேற்றமும் ஆகும். திபெத் சென்ற திலோபா அங்கு மஹாமுத்ரா ஞானத்தை விதைத்தார். போதிதர்மர் போன்றே இவரும் இளவரசர் அந்தஸ்தைத் துறந்து துறவியானவர்.

போதிதர்மருக்கு தீட்சை கொடுத்தது ஒரு பெண்ணே!
திலோபாவுக்கு தீட்சை கொடுத்ததும் ஒரு பெண்ணே!

ஞானம் அடைந்த பல ஆண்கள் இருந்தபோதும் ஏன் போதிதர்மர் அவர்கள் தனக்கு வழிகாட்டியாக, குருவாக, ஆசானாக, ஒரு பெண்ணைத் தெரிவு செய்தார்?

பெண்களும் ஞானம் அடையக்கூடியவர்கள் என்பதை வெளிப்படுத்துவதற்காகவும், ஞானமடைந்த பெண்ஞானிகள் இருப்பதை அறியப்படுத்துவதற்காகவும், பெண் ஞானிகளின் வழிகாட்டலில் ஆண் துறவிகளும் ஞானம் அடையலாம் என்பதற்காகவும், ஆண் – பெண் வேற்றுமை ஞானத்தில் இல்லை என்பதற்காகவும் இருக்கலாம். போதிதர்மர் பெண்களுக்குக் கௌரவம் கொடுத்த மகா மனிதராவார். பெண் அடிமை நிலவிய காலத்தில் பெண்ணைத் தன் ஆசானாக ஏற்றுக்கொள்ளும் பக்குவம் அவருக்கு இருந்தது.

போதிதர்மரின் சீனாப் பயணம்:

527 AD யில் போதிதர்மர் தென் இந்தியாவிலிருந்து கடல்மார்க்கமாகவும், தரைமார்க்கமாகவும் பிரயாணம் செய்து

மலேசியா, சுமாத்திரா, இந்தோனேசியா, பலேம்பாங்க் (PalemBang,) தாய்லாந்து, வியட்னாம், கம்போடியா ஊடாக சீனாவில் நான்யூ (Nan-Yueh) பகுதியில் கால்வைத்தார். தென்சீனாவில் பேரரசர் 'வூ ராய்' (Wu-Ti) அரசாண்டு கொண்டிருந்தார். அவர் லியாங் (Liang Dynasty) வம்சாவளியைச் சேர்ந்தவர்.



போதிதர்மர் சீனா அடையுமுன் தான் கடந்து சென்ற நாடுகளில் எல்லாம் மஹாயன பௌத்ததையும், தற்காப்புக் கலையையும் பரவச் செய்தார். இவரது பெயரைச் சுருக்கி தர்மா (Dharma) என்றும் தாமோ (Ta-Mo) என்றும் மக்கள் அழைத்தனர். இந்தியாவிலிருந்து மதப் பிரதிநிதியாகப் பல நாடுகளுக்கு சென்ற முதல் மறைஞானி இவரே.

ஞானி போதிதர்மர், கௌதமபுத்தருக்கு அடுத்த ஸ்தானத்தில் வைத்து மக்களால் பார்க்கப்பட்டார். இவர் கௌதம புத்தர் வழியில் பௌத்த பீடத்தின் 28-ஆவது பிரதான குருவாகவும் (பீடாதிபதியாகவும்) சென் பௌத்த பீடத்தின் முதலாவது பீடாதிபதியாகவும் விளங்கினார். இவருக்கு முன்பு இருந்த 27 பிரதான பீடாதிபதிகளையும் அந்த ஞானிகளையும் மக்கள் தெரிந்திருக்கவில்லை.

போதிதர்மர் மூலம் தான் 27-ஆவது பிரதான குருவாகவும், பீடாதிபதியாகவும் இருந்த ஞானி பிரக்ஞதாரா அவர்கள் தெரியவருகிறார். போதிதர்மரை வழிநடத்திய அவரது குரு மக்கள் மத்தியில் நிலைக்கவில்லை.

போதிதர்மர் அவர்களைத் தவிர வேறு எவராலும் இன்றுவரை கௌதமபுத்தர் அளவுக்கு உயர முடியவில்லை. ஆனால் இவர் கௌதமபுத்தரைத் தாண்டி பல துறைகளை உள்ளடக்கிய புத்தராகிவிட்டார். ஞானம் உள்ளவர்கள் புத்தர் என்று அழைக்கப்படுகின்றனர். புத்தர் என்றால் ஞானம் என்ற பொருள் உண்டு.



கொடிய வன விலங்குகளி லிருந்தும் புயல், சூறாவளி, இயற்கை சீற்றங்களிலிருந்தும் உயிர் தப்பி மண் சரிவுகளில் (Land Slide) புதையுண்டு உயிருடன் மீண்டு வந்தும் பனிப் புயலினதும் (Blizzard) பனிச்சரிவு களிலும் (Avalanche) உயிர் தப்பி மூன்று வருட உயிர் ஆபத்தான பிரயாணத்தின் பின் தென் சீனா சென்றடைந்தார்.

காஞ்சி இராச்சியம் வடஇந்திய அரசர் ஊடாக போதிதர்மரது விஜயத்தை சீன அரசருக்குத் தெரியப் படுத்தியது. போதிதர்மரது தென்சீனா வருகையை அறிந்த மன்னன் வூ பெருமகிழ்ச்சி அடைந்தார். ஞானம் பெற்ற ஞானியினது கால்கள் தன் ஆட்சிப்பிரதேசத்தில் பதியப் போவதை பெரும்பேறாகக் கருதினார். மன்னர் 'வூ ராய்' (Wu Ti) பௌத்த வளர்ச்சிக்காகப் பெரும்; தொண்டாற்றிக்கொண்டிருந்தார். பௌத்த விகாரைகள், மடாலயங்கள் ஏராளம் நிர்மாணித்திருந்தார். பலதுறவிகளுக்கு அன்னதானம் வழங்கிக்கொண்டிருந்தார். பாலிமொழியில், சமஸ்கிருதத்தில் இருந்த பௌத்த போதனைகளைச் சீன மொழியில் மாற்றிக்கொண்டிருந்தார். பௌத்த மத பாடசாலைகள் அமைத்து புத்த போதனைகள் கற்பித்துக் கொண்டிருந்தார். "அரசர் தன் வாழ்வில் இதுவரை ஞானம் பெற்ற ஞானி எவரையும் சந்தித்ததில்லை'' அவர் சந்தித்தவர்கள் எல்லாம் பண்டிதர்கள், வித்துவான்கள்,

கல்விமான்கள், தாங்கள் வாசித்து அறிந்தவற்றைக் கூறும் மதச்சொற்பொழிவாளர்கள், உபநியாசகர்கள், புத்த போதனைகளைத் தங்கள் விளக்கத்திற்கேற்ப அப்படியே பிரசங்கம் செய்தவர்களைத்தான். அவர்கள் அனைவரும் அந்த 'உண்மையை' அறியாதவர்கள், அந்த 'உண்மையை' அனுபவிக்காதவர்கள், தங்கள் சொந்த சுய தரிசனத்தில் எதையும் கண்டவர்கள் அல்லர். தங்களுக்குச் சாட்சியாக ஆதாரம் காட்ட பிறர் கூறிய 'உண்மைகளை'த் தந்திரமாக உரைப்பவர்களாகத்தான் இருந்தார்கள். சொந்த அனுபவத்தில் எதையும் உணராதவர்கள்.

தென் சீன எல்லையில் மாபெரும் மகான் போதிதர்மர் அவர்களை வரவேற்கத் தன் பரிவாரங்களுடனும் பத்தாயிரம் துறவிகளுடனும் பேரரசர் வூ-ராய் (Wu-Tai) புறப்பட்டார்.

■■

அத்தியாயம் 6

மதங்கள் பெண்கள் கையில் இருந்தால் மதங்கள் மதங்கொள்ளாது மதங்களாகவே இருக்கும்!

புத்தர், மஹாவீரர், இயேசு, திலோபா, போதிதர்மர் இவர்களது பயணத்தில் பெண்களின் ஆன்மிகப் பங்களிப்பு உண்டு. துறவறம் பூண்ட சித்தாத்தர் (புத்தர்) பலநாட்கள் ஆகாரம் உண்ணாமல் கடும் விரதமிருந்து நலிந்து, மெலிந்து உடல் தளர்ந்தநிலையில் இருந்தார். அச்சமயத்தில் நிரஞ்சனா (Niranjana) ஆற்றில் நீராட இறங்கிய சித்தாத்தர், ஆற்று அலையினால் இழுத்துச் செல்லப்பட்ட போது, அவர் ஆற்றங்கரையிலிருந்த மரத்தின் வேரைப்பிடித்து தன்னைக் காப்பாற்றிக் கரையேறினார். அந்த பசுமையான ஆற்றங்கரையில் சற்று தூரத்தில் ஒரு பெண்ணின் ரீங்காரமான கிராமியப்பாட்டு இவரது காதில் விழுந்தது.

'யாழின் தந்தி இறுக்கமாக இருந்தால் இசைமீட்டாது
தந்தி தளர்ச்சியாக இருந்தால் இசை மீட்டாது
தந்தி சரியாக இருந்தால் இன்னிசை மீட்டிட
நாம் ஆடலாம், பாடலாம்'

இவரின் வாடிய நிலையை அவதானித்த அக்கிராமப் பெண் சுஜாதா (Sujata) பால்கஞ்சியுடன் (Milk Porridge) இவரை நோக்கி ஓடிவரும்போது அவள் இசைத்த கிராமியப் பாடல்தான் அது. அக்கஞ்சியைக் பருகியதும் சித்தாத்தர் புத்துயிர் பெற்றார். அப்பெண் சுஜாதா அக்கிராமத்தில் ஒதுக்கப்பட்டவர் ஆவார்.

Siththarthar with Sujata

அவர் கல்வி, கேள்வி எதுவுமில்லாதவர். ஞானம் அடைய, உண்மையை அறிய உணவை நிராகரிக்கத் தேவையில்லை என்ற செய்தி சித்தாத்தருக்கு (புத்தர்) சுஜாதாமூலம் கிடைத்தது. 29 வயதில் துறவறம் பூண்டவர் 36 வயதில் இதை உணர்ந்தார். அவரைச் சுற்றியுள்ள பசுமையைப் பார்த்தார். அவை எதுவும் உணவை நிராகரிக்காமல் முழுமையாக வாழ்வதையும் கண்கூடாகப் பார்த்தார். பின்பு முயற்சியற்ற முயற்சியினால் தனது 36 வயதை அண்மிக்கும்போது சித்தாத்தர் ஞானமடைந்து கௌதம புத்தரானார். புத்தர் ஞானமடைவதற்கு தெரிந்தோ தெரியாமலோ கயாவில் (Gaya) உள்ள உறுவில்வ - செனானி (Uruvilva-Senani) கிராமத்தை சேர்ந்த பெண் சுஜாதா (Sujatha) அவர்களும் ஒரு வழிகாட்டியாகியுள்ளார். அக்கிராமத்தின் பெயர் காலப்போக்கில் "சுஜாதா" என மாற்றமடைந்துவிட்டது.

சமண மத மாபெரும் ஞானி மஹாவீரர் இளவரசராக இருந்தபோது திருமண மானவர் எனவும் அவருக்கு ஒரு புதல்வனும் இருந்தார் எனவும் கூறப்படுகிறது. மனைவி இல்லையேல் அவர் அடைந்திருப்பதை அடைய முடியாமல் இருந்திருக்கலாம் என்பது என் அபிப்பிராயம். புத்தரும் இளவரசர், மஹாவீரரும் இளவரசர், இருவருக்கும் தங்கள் தன்முனைப்பை (Egotism) நீக்க 12 ஆண்டுகள் பிடித்தன. அரச சௌகரியங்கள், அரண்மனை, வசதிகள், குடும்பம், சுற்றுச் சூழல், சிறுபிராயத்தில் மனதில் பதிந்துவிட்ட அரச அந்தஸ்து, கற்றவை, கேள்விப்பட்டவை எல்லாம் பல அடுக்குகளாக மனதில் பதிந்திருந்தன. அந்த அடுக்குகள் மனதில் இருந்து அற்றுப்போக அவ்வளவு காலங்கள் எடுத்தன. மனதை வெறுமையாக்க கிட்டத்தட்ட 12 வருடங்கள் தேவைப்பட்டன.

போதிதர்மரும் இளவரசரே. அவரது மனதில் பதிந்திருந்த அரண்மனை வாழ்வு, இளவரசர் அந்தஸ்து, அவரது கௌரவங்கள், வசதிகள், சௌகரியங்கள் அனைத்தையும் தியானமூலம் நீக்கி மனதை வெறுமையாக்க வழிகாட்டியவர் பெண்ஞானி பிரக்ஞதாராவே. இவர் மூலம் போதிதர்மரை மக்கள் அறிந்து கொண்டனர்.



இயேசு அவர்கள் 30 வயதில் போதனைகள் செய்ய ஆரம்பித்தார். இவர் ஒரு சாதாரண எளிமையான குடும்பத்தில் பிறந்தவர். கல்வி அறிவு இல்லாத குடும்பப் பின்னணி. இவருக்கு தன்முனைப்பை (Egotism) நீக்கி மனதை வெறுமையாக்க 30 நாட்களே போதுமானதாக இருந்தது. காரணம் பல அடுக்குகள் அவரது மனதில் பதியவில்லை. தூய புத்தருக்கு கிராமப் பெண் சுஜாதா உதவியது போல் கள்ளம் கபடமற்ற இயேசு நாதரின் தூய்மை கிராமப் பெண் மேரி மக்டலீனினால் வெளி உலகுக்குத் தெரியவந்தது. சில சீடர்கள் தூய்மையாக நோக்கத் தவறினார்கள். அதேபோல் சுஜாதா கொடுத்த ஆகாரத்தை புத்தர் பெற்றுக் கொண்டதால் புத்தரின் சீடர்கள் சிலர் தூய்மையாக நோக்கத் தவறினார்கள். இயேசு, புத்தர், மகாவீரர் போன்றோர்கள் கருணையானவர்கள், புனிதமானவர்கள், கள்ளம் கபடமற்ற வெறுமை மனதைப் பெற்றவர்கள். அவர்கள் 'ஒருமை'யானவர்கள் (oneness) அதனால் வித்தியாசங்களிற்கு அப்பாற்பட்டவர்கள். அவர்களுக்கு உலகில் உள்ள அத்தனை மக்களும் ஒன்றே.

தந்திரா தத்துவத்தை சஹாறா முனிவருக்கு போதித்ததும் ஒரு பெண் ஞானிதான். சுவாமி விவேகானந்தர் அவர்கள் இந்துமதத்தில் தோன்றிய முதல் ஞானியும் பெண் என்று கூறியதாக வாசித்த ஞாபகம் உண்டு. பெண் ஞானிகளும், பெண் ரிஷிகளும் இந்து மதத்தில் நிறைந்து இருந்தனர். காலப்போக்கில் ஆண் மேலாதிக்கம் தந்திரமாக அவர்களை மறைத்து விட்டது.

தந்திரா ஞானி திலோபா ஞானியாகுமுன் இளவரசராக வங்காளப் பகுதியில் வாழ்ந்து வந்தவர். (988 -1069 CE) இவரது ஆன்மீக வழிகாட்டியாக இருந்தவர் தக்கினி (Dakini) என்ற பெண்ஞானியே. அவரது ஆலோசனையில் திபெத்தைச் சென்றடைந்து "மகாமுத்திரா" வை அங்கு அறிமுகப்படுத்தினார். போதிதர்மருக்கு பெண்ஞானி பிரக்ஞதாரா ஆன்மிக

வழிகாட்டியாக இருந்தது போல திலோபாவுக்கு பெண்ஞானி தக்கினி (Dakini) ஆன்மிக வழிகாட்டியாக இருந்தார்.

றாபியா ஆல்அத்வியா (Rabiah Aladawiya)



றாபியா என்னும் பெண்மணியே சூஃபி (Sufi) மதத்தின் முதலாவது மறைஞானியாவார். இவரது காலம் 717 - 801 CE ஆகும். இஸ்லாமிய மதத்திலிருந்து தோன்றிய ஒரு பிரிவு என்று கூறலாம் என்பது என் அபிப்பிராயம். றாபியா ஈராக்கில் (Iraq) உள்ள பஸ்ரா (Basra) நகரில் ஏழைக் குடும்பத்தில் பிறந்தவர். கல்வி, கேள்வி ஞானம் எதுவுமில்லாதவர், ஆரம்பக் கல்வியைக் கூடப் பெறாதவர். இவர் சிறுமியாக இருந்தபோது அடிமையாக விற்கப்பட்டார். ஏனைய அடிமைகளைவிட வித்தியாசமானவராக இருந்தார். இவரது பேச்சுக்கள், செய்கைகளில் விழிப்புணர்வும், தெளிவும், மாற்றமும், இருப்பதை அவதானித்த எஜமானிற்கு சற்று அச்சம் ஏற்பட்டது. றாபியா அடிமையாக இருக்கும்போது ஞானமடைந்துவிட்டார். இப் பெண்ணுக்கு என்ன நடந்தது? இப்பெண்ணில் பிசாசு குடிகொண்டுவிட்டதா? என யோசித்தார் எஜமான். தொடர்ந்து அடிமையாக வைத்திருந்து வேலைவாங்கப் பயந்த அந்த முதலாளி றாபியாவை விடுதலை செய்துவிட்டார்.

இவரில் இருந்த மாற்றத்தையும் ஞானத்தையும் புரிந்து கொள்ள முடியாத ஆண் சமூகம் வழமை போலவே இவரையும் "சூனியக்காரி", "பெண் பேய்" என்று கூறியது. ஆனால் இவர் தொடர்ந்தும் தான் உணர்ந்த உண்மையை உரைத்தார். **ஞானி றாபியா ''நரகலோகத்திற்கு பயந்து கடவுளை தொழாதீர்கள், புண்ணிய லோகத்தை அடைவதற்காக தொழாதீர்கள், இந்த இரண்டுமே சுயநலம் தான் என்றார். எந்தக் குறிக்கோளுடனோ, எதிர்பார்ப்புடனோ, சுயநலத்துடனோ தொழுகை மேற்கொள்ளாது, எதுவித தூண்டுதலும் இல்லாமல், எதுவித காரணமும் இல்லாமல், எதுவித நோக்கமும் இல்லாமல் கடவுளை தொழவேண்டும்'' என போதனை செய்தார்.**

இவரது போதனையால் அச்சமடைந்த கல்விமான்கள், மதப்பிரச்சாரகர்கள் இவருடன் விவாதித்தனர். கல்வி கற்காத

அந்த மறைஞானி தினமும் ஆண் மேலாதிக்கத்தின் அச்சுறுத்தல்களுக்கும், மிரட்டல்களுக்கும் முகம் கொடுத்துக் கொண்டேயிருந்தார். பல இன்னல்களுக்கு மத்தியில் தன் போதனையில் உறுதியாக இருந்தார். நரகலோகத்தை முன்வைத்து பயமூட்டியும், புண்ணியலோகத்தை முன்வைத்து ஆசையூட்டிய மதவாதிகளுக்கு முன் இவர் பிரகாசமாக ஒளி வீசினார்.

இவரது பிரார்த்தனையைப் பாருங்கள் :

"கடவுளே!
நரகலோகத்திற்குப் பயந்து உன்னை வணங்கினால்
என்னை நரகலோகத்தில் எரித்து விடு,
சொர்க்கலோகத்திற்காக உன்னை வணங்கினால்
சொர்க்க லோகத்திலிருந்து என்னைத் துரத்திவிடு,
உன்னை வணங்க வேண்டுமென்பதற்காக வணங்கினால்
உன்பார்வையை என்மீது படரவிடாமல் இருந்து விடு"

சூஃபிகள் கால் நுனிவிரலில் சுழன்று, சுழன்று வேகமாக நடனமாடி தங்களை மறந்து தங்கள் மனதைக் கடந்து செல்லும் தியான முறை கொண்டவர்கள். உலக அதிசயங்களில் ஒன்றான இந்தியாவில் உள்ள "தாஜ்மஹாலை" வடிவமைத் தவர்கள் சூஃபி ஞானிகளே. சூஃபி மதம் கடின உடல் உழைப்பை, உற்சாகத்தை, உடல் இயக்கத்தை தியானம் எனக் கூறுகிறது. சொற்களிலும், சொற்பொழிவுகளிலும் (Sufism) சூஃபி மதம் அதிக அக்கறை கொள்வதில்லை. இவர்கள் செயல்களிலும், நடைமுறைச் செயற்பாடுகளிலும் அக்கறை உள்ளவர்கள். அதில் தெய்வீகத்தைக் காண்பவர்கள் அவர்கள்.

சூஃபி மதத்தின் புனித நூலின் பெயர் 'நூல்கள் எல்லாம் அடங்கிய நூல்' என்பதே ஆகும் (The Book of The Books). அப்புனித நூலில் எந்த வார்த்தைகளும் இல்லை. உலகிலே ஒரு வார்த்தையோ அல்லது எந்த ஒரு எழுத்தோ அல்லது எந்த ஒரு வசனமோ இல்லாத மதநூல் இதுதான்.

அந்நூலில் வெறும் வெள்ளை வெற்றுத்தாள்கள் மாத்திரம்தான் இருக்கிறது. இதைப் பல நூற்றாண்டுகளாக ஒரு மறைஞானியிடமிருந்து அதற்கடுத்த ஞானிக்கு பொக்கிஷம்

போல் கைமாற்றப்பட்டுக் கொண்டிருக்கிறது. இந்நூல் மிகுந்த மரியாதையுடன் பாதுகாக்கப்படுகிறது.

எல்லாம் அடங்கிய நூல் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது. இதைப் படிக்க முடியுமா? இதை அச்சிட எந்த வெளியீட்டாளரும் முன்வரவில்லை. காரணம் அதில் வார்த்தைகள் இல்லை. அது ஒரு வெறும் வெற்றுத்தாள் புத்தகம் மட்டுமே.

மனித மனம் வெள்ளைத்தாளில் கறுப்பு மையால் எழுதப்பட்ட வார்த்தைகளைத்தான் புரிந்துகொள்ளும். காரணம் எண்ணங்களைத்தான் சொற்களாக, வசனங்களாக தாளில் எழுதப்படுகிறது. எண்ணங்கள் எல்லாம் மறைந்த பிறகு நாங்கள் எல்லோரும் 'நூல்கள் எல்லாம் அடங்கிய நூலாகி' விடுகிறோம். அதாவது 'ஒன்றும் அற்ற நிலை' அந்த நிலை தான் 'கடவுளின் நிலை' என்கிறது சூஃபி மதம்.

கடவுள் ஆணா அல்லது பெண்ணா? அப்படி எதுவும் இல்லாமல் ஒன்றுமற்ற உயிர்த்தன்மையாக (Being) இயங்கிக் கொண்டு இருப்பதே இதன் விளக்கமாகிறது என்பது என் அபிப்பிராயம். உலகில் உள்ள அனைத்து மதங்களும் அந்த வெறுமையை (Non- Self) நோக்கித்தான் செல்கின்றன.

பெண் - ஆண் விழிப்புணர்வு:

ஓர் ஆணின் விழிப்புணர்வு அதிகரிக்கும்போது அவரிடம் பெண்மையின் குணங்கள் மிகுதியாகின்றன. மகான்கள், பெரியவர்கள், மகாத்மாக்கள், ஞானிகள் என்று நாம் பெருமதிப்புக் கொடுக்கும் உன்னதமானவர்களின் குணங்கள் பெண்ணின் குணங்கள்தான். இராமர், புத்தர், மஹாவீரர், இயேசு இவர்கள் பெண்மையின் குணங்களால் மேலோங்கியவர்கள். அந்தப் பெண்மை அவர்களுக்குள் மேலோங்கியதால் வணக்கத்துக்கும் வழிபாட்டிற்கும் உரியவர்களாகிறார்கள். அந்த நிலையை அடைய அவர்கள் பல பரிமாணங்களை தாண்ட வேண்டியிருந்தது.

அன்பு, பொறுமை, மென்மை, கருணை, பரிவு, பாசம், சாந்தம், அமைதி, காருண்யம், நம்பகத்தன்மை, நீதி, நியாயம்,

நேர்மை இவைகள் பொதுவாக பெண்களின் குணங்கள் ஆகும். இக்குணங்களை அடைய ஆண்கள் பலவிதமான பயிற்சியில் ஈடுபடுகிறார்கள். மனோதத்துவ டாக்டரிடம் ஆலோசனை பெற்றும் பார்க்கிறார்கள், தெய்வ வழிபாடு, பூசை, விரதம் என்று தங்கள் மனதில் பெண்களின் பொதுவான குணங்களை தாங்கள் அடைய தங்களை அறியாமலே அந்த முயற்சியில் பல நூற்றாண்டுகளாக ஈடுபடுகிறார்கள். ஆனால் பெண்களின் மென்மை, அன்பு, கருணை, இவைகளை பெண்களின் பலவீனங்கள் என்ற கருத்தை ஆண்கள் தந்திரமாக பெண்களின் மனதில் உருவேற்றி வைத்திருக்கிறார்கள். ஆண்களில் காணப்படும் பெண்ணின் இயல்பான குணங்களான அன்பு, கருணை இவைகளை எடுத்துவிட்டால் ஆண்களிடம் மிஞ்சுவது அரக்க குணங்கள்தான். அந்த ஆண்குணங்கள் உலகை ஆளுகிறது, யுத்தத்தை ஆண்குணம் தீர்மானிக்கிறது.

மனித இனத்தை தலைகுனிய வைக்கும் வலிமை இது. பரிணாம வளர்ச்சியில் பின்தங்கியிருப்பதையே இவை காட்டுகின்றன. மனித இனம் வெட்கப்பட வேண்டியதிற்குப் பதிலாக அரசு பெருமைப்பட்டு அழிவில் ஈடுபட்டவர்களுக்கு தங்கப்பதக்கம், பதவிஉயர்வு, உயர்விருதுகள், கௌரவங்கள் வழங்குகிறது. இறந்த தொகையைப் பார்த்து, அழிவைப் பார்த்து பெருமைப்பட்டுக் கொள்கிறார்கள்.

உலகில் தலைமைப் பொறுப்புகளில், நிர்வாகப் பொறுப்புகளில், ஆட்சிப் பொறுப்புகளில், பெண்கள் அதிகம் இருந்தால் போர் அதிகளவில் இருக்காது. இராணுவத் தளபதிகளாக, பொலிஸ்மா அதிபர்களாக பெண்கள் இருந்தால் அநாவசியமான துப்பாக்கிச் சூடுகள் இடம் பெறாது. அன்பு குறிக்கோளாகும்போது அது போருக்கு முடிவெடுக்காது, அணு ஆயுதங்களை ஆதரிக்காது, இறப்பை மையமாகக் கொண்டு சுற்றாது.

ஆண் ஆதிக்க சமுதாயம் இது, ஆண் விதிமுறைகளை உருவாக்குகிறான். அவைகளை பெண்கள் பின்பற்ற வேண்டும் என எதிர்பார்க்கிறான். பெண்ணை கணவனின் சிதையில் குதி என்று கூறியவன் ஆண், மிகக் கொடூரமான பெண் அடிமையை அமுல்படுத்தியிருந்தான்.

மென்மையான பெண்ணுக்கு சிதையில் குதிக்கும் அந்த தைரியம் இருந்திருக்கிறது. அன்புக்கும், கருணைக்கும் உரிய அவளிடம் அதற்கே உரிய பலமும் இருந்திருக்கிறது. போர்களை உருவாக்குவது ஆண்கள். ஆனால் பாதிக்கப்பட்டவர்கள் பெண்கள்தான். தன் கணவனை இழந்தாள், குழந்தைகளை இழந்தாள், தன் சுயமரியாதையை இழந்தாள், உளரீதியான, உடல்ரீதியான, பெரும் பாதிப்புக்குள்ளானாள். போரில் முற்றுகையிடப்பட்ட நகரத்தை வென்றுவிட்டால் முதலில் தாக்குதலுக்கு உள்ளாவது பெண்கள்தான். ஆனால் பெண் எந்த விதத்திலும் போருடன் தொடர்பு உள்ளவள் அல்ல. பெண்மையின் குணங்களுக்கு பெரும் மரியாதை செலுத்த வேண்டும். இந்த முழு உலகமும் பெண்மைக் குணங்களை உடையதாய் மாறினால் போர்கள் மறையும். அன்பான, கருணைமிக்க உலகம் கிடைக்கும். அனைத்துலகமும் பெண்கள் கையில் இருந்தால் நாடுகள் அனைத்தும் நல்லரசாக மலர்ந்து விடும், போர்கள் தானாகவே மறைந்துவிடும் அன்பும், கருணையும் மேலோங்கிய உலகமாகிவிடும். மத அமைப்புகள் பெண்கள் கையில் இருந்தால் உலகில் மதப் போர்கள், மோதல்கள், பூசல்கள், மதக் கொலைகள் போன்றவைகளில் இருந்து உலகம் தப்பிவிடும்.

உலகில் அமைதி நிலவ தாய்மை மலர வேண்டும்:

அரசியலும், மதங்களும், மார்க்கங்களும், கடவுளின் இராச்சியமும் ஆண்கள் மயமாகத்தான் இருக்கிறது. ஆண் உருவாக்கிய சமுதாயத்தில் பெண் தன்னை இணைத்துக் கொள்கிறாள். புதிய மண்ணில் புதிதாக நடப்பட்ட செடி கூட மலரத்தயாராக இல்லை, ஆனால் இவள் புதிய மண்ணில் உடனே மலர்கிறாள். பெண்கள் அனைத்து மதங்களிலும் பிரதம மதகுருவாக இருப்பதற்கான தன்மையை இயற்கை அவர்களுக்கு வழங்கியுள்ளது. ஆனால் ஆண்களுக்கு அத்தன்மை இல்லாத தால் அவர்கள் அதற்கான பயிற்சியைப் பெற்றிட வேண்டும்.

பெண்ணின் வாழ்வே அன்பை அடிப்படையாகக் கொண்டது. அவளிடமிருந்து ஆண் இதைக் கற்றுக்கொள்ள வேண்டும். ஆனால் ஆண்கள் அதை அடைய பல படிகளைத் தாண்ட வேண்டியிருக்கும். அதனால்தான் உலகில் ஆண்களைவிட பெண் ஞானிகள், பெண் மகான்கள், பெண்

ரிஷிகள், பெண் முனிவர்கள், பெண் யோகிகள் அதிகளவில் இருந்தார்கள். ஆண் மேலாதிக்கம் பெண் மெய்ஞானிகளை மறைத்து விட்டது. இதேபோல் பெண் விஞ்ஞானிகளை முற்காலத்தில் ஆண் சமூகம் ஏற்றுக்கொள்ளவில்லை. பெண் விஞ்ஞானிகள் பயத்தின் காரணமாக தங்கள் கண்டு பிடிப்புக்களை தங்கள் தந்தையின் பெயரில் வெளியிட்டிருக் கிறார்கள். சிலர் தங்கள் பெயரின் முதல் எழுத்தை மாத்திரம் பாவித்திருக்கிறார்கள். பல பெண் விஞ்ஞானிகள் வெளி உலகத்துக்கே தெரியாமல் மறைந்துவிட்டார்கள்.

உதாரணம்:

முற்கால (ancient) எகிப்தில், கிரேக்கத்தில் பல பெண்கள் விஞ்ஞானிகளாகவும் டாக்டர்களாகவும் இருந்திருக்கிறார்கள். அப்பெண்களின் வரலாற்றை எழுதிய ஆண்கள் உண்மையை எழுதாமல் அப்பெண்களை விமர்சித்து இழிவுபடுத்தி எழுதி ஆவணப்படுத்தியதாக The Usborne Book of Scientists என்ற நூல் கூறுகிறது.

அ. எகிப்தில் வாழ்ந்த பெண் விஞ்ஞானியான Hypatia (A.D. *370-415)* நட்சத்திரங்கள், கிரகங்கள், சூரியன் இவைகளின் நிலைகளை அளக்கும் கருவிகளை (Scientific Instruments including plane astrolabe) கண்டுபிடித்தார். ஆண் மேலாதிக்கத்தின் விமர்சனத்திற்கு உள்ளானது மட்டுமல்ல, இவர் காலப்போக்கில் படிப்படியாக மறைக்கப்பட்டும் விட்டார்.

ஆ. அடா (Ada Countess of lovelae *(1815-1852)* காலப்பகுதியில் இங்கிலாந்தில் வாழ்ந்தவர். இவர் Calculator போன்ற ஒரு கருவியை வடிவமைத்தார். Computer-க்கு முன்னோடியாக இக்கருவி அமைந்தது எனலாம். அதுமாத்திரம் அல்ல, இவரே முதலாவது computer programmer என்றும் கூறலாம். இவர் தனது ஆய்வை வெளியிட முன்வந்தபோது ஆண் மேலாதிக்கத்தால் தடுக்கப்பட்டதால் தனது பெயரின் முதல் எழுத்தை (Initial) மாத்திரம் தனது வெளியீடடில் பாவித்தார். இந்தப் பெண் விஞ்ஞானி உலகத்துக்குத் தெரியாத விஞ்ஞானியாக மறைக்கப்பட்டுவிட்டார். அவர் கவிஞர் Lord Byron - இனது மகள் என அறியப்படுகிறது.

இ. Russia-வைச் சேர்ந்த பெண்ணான Sophia Krukovsky ஒரு கணித மேதை. இவர் A.D. 1850-1891 காலப்பகுதியைச் சேர்ந்தவர். இவர் ஜேர்மனியிலுள்ள Heidelberg நகரில் குடியேறியவர். அந்நகரில் உள்ள பல்கலைக்கழகத்திற்கு கல்வி கற்கச் சென்றபோது பெண் என்ற காரணத்தால் அனுமதி மறுக்கப்பட்டது. அதனால் பிரத்தியேகமாக தனிப்பட்டமுறையில் ஆய்வு மேற்கொண்டு 1874-இல் Gottingen University-இல் தனது ஆய்வைச் சமர்ப்பித்து கலாநிதிப்பட்டம் பெற்றார் ஆனால் அவருக்கு எந்தப் பல்கலைக்கழகமும் பதவி நியமனம் வழங்க முன்வரவில்லை. இறுதியில் 1884-இல் University of Stockholm, Sweden அவருக்குப் பேராசிரியர் பதவி வழங்கியது.

ஈ. மேரி கூரி (Marie Curie) அம்மையாருக்கு பல தடைகளைத் தாண்டியபின் 1903-இல் பௌதிகவியலுக்கும் 1911-இல் இரசாயனவியலுக்குமாக இரண்டு தடவை நோபல் (Nobel Prize) பரிசு பெற்று விஞ்ஞான உலகில் ஆண் மேலாதிக்கத்தை தகர்த்திய முதலாவது அதியுயர் பெண் விஞ்ஞானியென இவரைக் கூறலாம். உலகிலுள்ள பிரபல்யமான பல்கலைக்கழகங்களில் ஒன்றான Paris நகரிலுள்ள Sorbonne University-யில் முதலாவது பெண் பேராசிரியரும் இவரே.

உ. நாட்டின் பிரதமர்களாக பெண்களை முன்னிலைப்படுத்தியது ஆசியாதான். 'இ' இகரத்தில் ஆரம்பிக்கும் நாடுகளான இலங்கை, இந்தியா, இஸ்ரவேல் இவற்றைத் தொடர்ந்து ஐரோப்பாவிலுள்ள இங்கிலாந்திலும் அம்மாற்றம் நடந்தது. இவர்கள் அனைவருக்கும் முன்பே ஆர்ஜன்ரீனாவைச் சேர்ந்த திருமதி பெரோன் அவர்கள் உலகின் முதல் பெண் பிரதமராக வரும் வாய்ப்பு இருந்தபோதும் ஆண் மேலாதிக்கச் சூழ்ச்சியால் அவர் அதை அடைய முடியவில்லை.

ஊ. பிரித்தானியப் படைகளை எதிர்த்து பிரான்சு நாட்டின் விடுதலைக்காகப் போராடிய ஜோன் ஒவ் ஆர்க் (Joan of Arc) என்ற இளம் பெண் வீராங்கனை ஆண் மாறு

வேடத்தில் போராடி 14.05.1431-இல் தனது 19-ஆவது வயதில் எதிர்ப்படைகளினால் கைது செய்யப்பட்டு 'பிசாசு', 'சாத்தான்', 'சூனியக்காரி' என குற்றம் சாட்டப்பட்டு உயிருடன் தீயிட்டுக் கொல்லப்பட்டார்.

இது விடுதலைக்கு எதிரானதல்ல, இது Joan of Arc–க்கு எதிரானதல்ல, இது பெண்களுக்கு எதிரான மிகக் கொடூரமான வன்முறையாகும். அறிவியல் வளர்ச்சியில் உலகம் வலுவேகமாக முன்னேறிக்கொண்டு சென்றாலும், நாகரிகத்தில் மாற்றங்கள் ஏற்பட்டுக் கொண்டிருந்தாலும் ஆண் மேலாதிக்கத்தின் சதியை, சூழ்ச்சியை, வன்முறையை இன்றும் பெண்கள் சந்திக்க வேண்டியுள்ளது.

ஒரு தகவல்:

சுதந்திர இந்தியாவின் முதல் பெண் மந்திரியான ரேணுகா ராவ் அவர்கள் (Renuka Rao) 1947-ஆம் ஆண்டு தனது கன்னிப்பேச்சில் பாராளுமன்றத்தில் இவ்வாறு குறிப்பிட்டார். "பெண்களுக்கான ஒதுக்கீட்டை நான் வன்மையாக எதிர்க்கிறேன், ஏனெனில் அது பெண்களின் திறமைக்கும் ஆற்றலுக்கும் இழுக்கு." பின்பு அவர் தனது இறுதிக் காலத்தில் "ஆண்களை நம்பினோம் கிடைத்தது ஏமாற்றம்" எனக் குறிப்பிட்டிருந்தார்.

ஒரு செய்தி:

2008-இல் அமெரிக்காவில் ஜனநாயகக் கட்சிக்குள் அமெரிக்க ஜனாதிபதி வேட்பாளர் தேர்வுக்கான தேர்தல் நடைபெற்றபோது அக்கட்சிக்குள் இறுதி வேட்பாளர்களாக ஒஸ்மான் ஒபாமாவும் (Osman Obama) முன்னாள் ஜனாதிபதியின் மனைவி ஹிலாறி கிளின்ரனும் (Hilary Clinton) போட்டி போட்டார்கள். உட்கட்சித்தெரிவில் ஒபாமா கட்சி வேட்பாளராகி இறுதியில் 04.11.2008-இல் ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்று அமெரிக்க ஜனாதிபதியானார்.

உட்கட்சி வேட்பாளராக நின்ற ஹிலாறி கிளின்ரன் உட்கட்சித்தேர்வில் தோல்வியைத் தழுவிக்கொண்டு போகும்போது தனது தேர்தல் பிரச்சாரத்தின்போது கண்ணீர் மல்க 'ஆண் சமூகம் என்னைத் தோற்கடிக்க இரகசியமாக வேலை செய்கிறது. ஒரு பெண் ஜனாதிபதியாக வருவதை

அவர்கள் விரும்பவில்லை. முப்படைத் தளபதிகள் எல்லாம் ஆண்கள், நான் ஜனாதிபதியானால் நான் ஒரு பெண் பிரதம முப்படைத் தளபதியாக (commader in chief) கொடுக்கும் உத்தரவுகளைப்பெற ஆண்கள் விரும்பமாட்டார்கள்' என்றார்.

பாராட்டுதல்களில் ஆண் - பெண் பேதம்:

ஆணை முதன்மைப்படுத்த பெண் தன் திறமைகளை முற்காலத்தில் மறைத்துக் கொண்டாள். இது பல நூற்றாண்டு காலமாக கைக்கொள்ளப்பட்டே வருகிறது. மனித சரித்திரத்தில் நடந்த மாபெரும் இழப்புக்களில் இதுவும் ஒன்று. பெண்கள் தங்கள் திறமைகளை வெளிக்கொண்டுவந்த போதெல்லாம் மட்டுப்படுத்தப்பட்ட பாராட்டாகத்தான் இருக்கிறது. ஆணின் வெற்றியை மனித குலத்தின் வெற்றிபோல் பாராட்டுதல்கள் அளிக்கப்படுகின்றன.

ஒரு நிகழ்வு:

2002-ஆம் ஆண்டு அமெரிக்காவில் உள்ள Sault Lake city நகரில் குளிர்கால ஒலிம்பிக் (Winter Olympics) விளையாட்டுப் போட்டியில் கனேடிய பெண்கள் ஹொக்கி அணி (Canadian Women's Hockey Team) முதல்முறையாகத் தங்கப்பதக்கம் எடுத்தது. அதே நேரத்தில் ஆண்கள் அணியும் (Men's Hockey Team தங்கப்பதக்கம் எடுத்தது. கனேடிய ஊடகங்களில் (Media) ஆண் அணியின் தங்கப் பதக்கத்துக்குத்தான் அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது. பெண் அணி அதிக முக்கியத்துவம் அடையவில்லை. கனடாவுக்குத் திரும்பிய போது விமான நிலைய வரவேற்பிலும் வரவேற்பில் வித்தியாசம் தெரிந்தது.

2006-ஆம் ஆண்டு குளிர்கால ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டி இத்தாலியில் உள்ள Turin நகரில் இடம்பெற்றது. Canadian Women's Hockey Team மீண்டும் தங்கப்பதக்கம் பெறறது. ஆண் அணி எந்தப் பதக்கமும் பெற்றுக்கொள்ள வில்லை. தொலைக்காட்சி, வானொலி, பத்திரிகைகள் எல்லாம் 2002-ஆம் ஆண்டு ஆண்கள் அணி பெற்ற தங்கப் பதக்கத்தைப் பற்றியே புகழாரம் சூட்டிக்கொண்டு இருந்தார்கள். மீண்டும் தங்கப்பதக்கம் பெற்ற பெண் அணிக்கு அதிக முக்கியத்துவம்

கொடுக்கவில்லை. அந்த Winter Olympics-இல் Canada Men's Curling Team தங்கப்பதக்கம் எடுத்தது. ஊடகங்கள் மிகுந்த புகழாரம் சூட்டின.

பெண்ணின் வெற்றிக்குக் குறைத்தே மதிப்பு அளிக்கப் படுகிறது. ஆண்களிற்கு ஏதாவது ஒரு இடத்தில் புகழாரம் சூட்டப்படுகிறது.

மத அமைப்புகளின் நுட்பமான தந்திரம்:

ஒரு காலத்தில் மத அமைப்புகள் அறிவுள்ள, விவேகம் உள்ள, வீரம் உள்ள பெண்களை சூனியக்காரி என்று கூறியது மாத்திரமல்லாமல் பெண்கள் எரிக்கப்பட்டனர். அப்படி கொலை செய்யப்பட்ட பெண்கள் மிகுந்த தீர்க்க தரிசனம் கொண்டவர்களாகவே இருந்தார்கள். இது சூனியக்காரிக்கு எதிரானதல்ல, பெண்களுக்கு எதிரானதாகும். மத அமைப்புக் களும் ஆண் ஆதிக்கத்தில்தான் இருந்தன, இப்பொழுதும் அப்படித்தான் இருக்கின்றன. பெண்கள் சகல மதவழிபாட்டு இடங்களிலும் பிரதம மதகுருவாகாதவரை மதரீதியான இந்த வேற்றுமைகள் சுலபமாக நீங்காது.

பெண் ஆன்மிகமானவள்:

பொதுவாகப் பெண்கள் இயல்பாகவும், இயற்கையாகவும் ஆன்மிகமாகவே வாழ்கிறார்கள். அவர்கள் வாழ்வில் ஆன்மிகப் பண்புகள் பிரதிபலிக்கின்றன. இவைகள் அவர்களிற்குக் கிடைத்த "வரம்."

ஆண் – பெண் வேற்றுமை சகல துறைகளிலும் நிலவிய உலகில் பிரக்ஞதாரா என்ற பெண்ணைத் தனது குருவாக ஏற்று பெண்ணின் நுண்ணறிவில் தன்னைப் புடம் போட்டுக் கொண்டவர் ஞானி போதிதர்மர். அதே நேரத்தில் 1500 வருடங்களுக்கு முன்பே தாரணியைத் தனது சீடராக அறிவித்து ஆண் – பெண் பேதத்தைத் தகர்த்தியவர். இவர் பெண்களைப் கௌரவப்படுத்தி அவர்களது ஞானத்தை வெளியுலகிற்கு வெளிப்படுத்திய மாபெரும் மகான்.

■■

அத்தியாயம் 7

சென் பௌத்தத்தின் ஜனனமும் முதலாவது குருவும்

சென்மதத்தை நிறுவியவர் போதிதர்மர் அல்ல மகா காசியப்பா (Maha Kashyapa) அவர்கள். இவர் மக்கள் முன் பேசியதில்லை, போதனை செய்ததில்லை, இவர் வாய் திறந்து அதிகம் பேசாதவர். அதனால் இவர் மறக்கப்பட்டு விட்டார். புத்தரின் முன்னிலையில் முதலாவதாக ஞானம் அடைந்து புத்தரது முதலாவது பிரதம சீடரானவர் இவர்.

ஒரு நிகழ்வு

வைசாலி (Vaishali) கிராமத்தில் உள்ள பாதணி தைக்கும் ஏழைத் தொழிலாளி ஒருவரது வீட்டின் குளத்தில் தாமரைப்பூ பூத்தது. அந்த நேரம் தாமரைப் பூவுக்குரிய காலமல்ல. அந்தப் பகுதியில் எங்கும் தாமரைப்பூ இல்லை. இந்த ஏழையின் வீட்டுக்குளத்தில் மாத்திரம் ஒரே ஒரு பூ மலர்ந்திருந்தது. இதைப் பார்த்ததும் அந்த ஏழைக்குடியானவனுக்குச் சந்தோசம். இதை நல்ல விலைக்கு விற்கலாம் இதை அரசன் வாங்குவார் என்று தாமரை மலருடன் அரண்மனையை நோக்கிச் சென்றார். போகும் வழியில் அந்த ஊர்ச் செல்வந்தர் தங்க இரதத்தில் வந்து கொண்டிருந்தார். இந்த ஏழையின் கரத்தில் தாமரைப் பூவைப் பார்த்தார். தன் இரதத்தை நிறுத்தினார்.

செல்வந்தர் : தாமரைப் பூ என்னவிலை?

ஏழைத் தொழிலாளி : எனக்கு விலைமதிக்கத் தெரியாது. நீங்கள் தரும் பணத்தை ஏற்றுக்கொள்கிறேன்.

செல்வந்தர் : நீ புத்தரைப் பற்றி கேள்விப்பட்டிருக்க மாட்டாய் அவர் அயல் கிராமத்தில் தங்கியிருக்கிறார். தாமரைப் பூ இல்லாத இந்தப் பருவத்தில் கிடைத்த இந்தத் தாமரைப் பூவைப் புத்தரது காலடியில் வைக்கப் போகின்றேன். இந்த மலர் புத்தரிடம் செல்லப்போகிறது அதனால் நான் உனக்கு 500 தங்க நாணயம் தருகிறேன்.

ஏழைத் தொழிலாளி : திகைப்புற்றார். இதை நம்பமுடியவில்லை அந்த நேரத்தில் அரசனின் தேர்வந்தது. தாமரைப் பூவை அரசர் பார்த்தார்.

அரசர் : தாமரைப் பூ என்னவிலை? சரி! அந்த செல்வந்தர் எவ்வளவு தருகிறேன் என்றாரோ அதைவிட நான்கு மடங்கு தருகிறேன்.

ஏழைத் தொழிலாளி : மேலும் குழப்பமடைந்தார். இந்த மலருக்கு 2000 தங்க நாணயம் ஏன் இவ்வளவு பெறுமதி என அரசனை மிகவும் பௌவியமாகக் கேட்டார்.

செல்வந்தர் : (அரசனைவிட செல்வம் குவித்து வைத்துள்ளார். அரசனுக்கு கடனாகவும் செல்வம் கொடுத்துள்ளார். தான் அரசனை விட கூடுதலாக விலை கொடுத்து வாங்கி அரசனைத் தோற்கடிக்க தீர்மானித்துவிட்டார்). ஏழை வியாபாரியிடம் கூறினார். "இப்பொழுது நானும் அரசனும் போட்டியாளர்கள். யார் உனக்கு அதிகவிலை தருகிறார்களோ அவருக்கே உன் தாமரைப் பூவைக் கொடுத்து விடு, அரசரது விலையில் இருந்து மேலும் நான்கு மடங்கு அதிகம் தருகிறேன்."

ஏழைத் தொழிலாளி : குழப்பமடைந்தார். இந்தப் போட்டியால் நாலு நாலு மடங்காக விலை ஏறிக்கொண்டே

போகிறது. அந்த ஏழைத் தொழிலாளியால் கணக்குப் பார்க்க முடியவில்லை, திகைப்புற்று மௌனமாக இருவரையும் மிக அடக்கமாக மாறி மாறிப் பார்த்துக்கொண்டேயிருந்தார். 'நான் இந்தப் பூவை விற்க விரும்பவில்லை. நீங்கள் இருவரும் யாரோ ஒரு கௌதம புத்தருக்குக் கொடுப்பதற்காகப் போட்டி போடுகிறீர்கள். புத்தரை நான் பார்த்ததில்லை, கேள்விப்பட்டதில்லை, நானே அவரிடம் சென்று இந்தத் தாமரைப் பூவை வைத்திருங்கள். எனக்கு இது வேண்டாம் இதனால் பெரும் போட்டியே உருவாகிவிட்டது என்று கூறிப் புத்தரிடம் ஒப்படைக்கப் போகின்றேன்' என்றார். எனக்குப் பணமும் வேண்டாம்" என்றார்.

செல்வந்தர் : (வேகமாகப் புத்தர் இருக்கும் இடம் போய்ச் சேர்ந்தார்.) பாதணி தைக்கும் ஏழைத் தொழிலாளியால் தோற்கடிக்கப்பட்டேன். தாமரைப் பூவுக்கு காசு பெற மறுத்துவிட்டார்.

அரசர் : (வேகமாக புத்தர் இருக்கும் இடம்போய்ச் சேர்ந்தார்.) என் செல்வம் அனைத்தும் கொடுக்க முன்வந்தேன். ஆனால் அந்த ஏழை என்னைத் தோற்கடித்துவிட்டார்.

(ஏழைத் தொழிலாளி கௌதம புத்தர் இருக்கும் இடம் போய்ச் சேர்ந்தார். புத்தரின் காலைத் தொட்டு வணங்கினார். தாமரைப் பூவை புத்தரின் காலடியில் வைத்தார்.)

கௌதம புத்தர் : உனக்கு இவர்கள் தந்ததை நீ பெற்றிருக்க வேண்டும். ஆனால் உனக்கு நான் எதுவும் தரப் போவதில்லை.

ஏழைத் தொழிலாளி : (கண்ணீர் மல்க கூறினார்) "இந்தப் பூவை நீங்கள் பெற்றுக்கொண்டால் மாத்திரம்

எனக்குப் போதும். அதுவே எனக்கு கிடைக்க இருந்த அனைத்துச் செல்வங்களிலும் பெரிது. அவர்கள் தர இருந்த செல்வம் எனக்கு கணக்குப் பார்க்கத் தெரியாது. நான் கூலிவேலை செய்து திருப்தியாக வாழ்கிறேன். நான் செல்வந்தராக வரவேண்டும் என்பதற்காக இந்தப் பூவை விற்கச் செல்லவில்லை, உழைத்து வாழ்ந்தால் போதும். உழைப்புக்கேற்ற ஊதியம் தான் எனக்குத் தேவை. பணச் சர்சைக்காக பூவுடன் நான் தெருவுக்குச் செல்லவில்லை."

(கௌதம புத்தர் தாமரைப் பூவைக் கையில் எடுத்தார். அந்த மலரை உற்றுப்பார்த்தபடியே நின்றார்.)

(ஏழைத் தொழிலாளி தனக்குள் உள் மாற்றம் நிகழ்வதை உணர்ந்து கொண்டிருந்தார். புத்தரினால் ஆசீர்வதிக்கப்பட்டார்)

(கௌதம புத்தர் காலை பிரார்த்தனை நடை பெறத் தயாராகிக் கொண்டிருந்த வேளையில் இந்த நிகழ்வு நடந்து கொண்டிருக்கிறது. துறவிகள், பின்பற்றுபவர்கள், பொதுமக்கள் பெருந்திரளாக அங்குக் கூடியுள்ளார்கள். விநாடிகள் நிமிடங்களாகி நிமிடங்கள் மணித்தியாலங்களாகி மணத்தியாலங்கள் நகர்ந்து கொண்டே செல்கிறது.)

மகாகாசியப்பா (Mahakashyapa) - இவர் புத்தரின் சீடர்களில் ஒருவர். ஒருநாளும் வாய்திறந்து பேசியதில்லை, இவரைப்பற்றி எவருக்கும் தெரியாது. இன்றைய நிகழ்வு இவருடையதாக அமைகிறது. இன்றைய நிகழ்வுக்கு முதலும், இதற்குப் பின்பும் இவரைப்பற்றி யாரும் அறிந்து கொண்டதில்லை. பௌத்த நூல்களிலும் இவரைக் காண்பதே அரிதாகவே உள்ளது.



புத்தர் தாமரைப் பூவைக் கையில் வைத்து உற்றுநோக்கிக் கொண்டிருப்பதைப் பார்த்ததும் என்றும் வாய் திறக்காத காசியப்பா கடகடவென வாய்விட்டு வெகுளித்தனமாகச் சிரிக்கலானார். கௌதம புத்தர் இவரைத் தனக் கருகாமையில் அழைத்து அந்தப் பூவை அவரது கையில் கொடுத்தார், கொடுக்கும்போது ஞானத்தையும் பூவின் ஊடாக அவருக்கு மாற்றினார். காசியப்பா கௌதம புத்தரை வணங்கி தனது இருக்கையில் போய் அமர்ந்து கண்களை மூடிக்கொண்டார். காசியப்பா ஞானம்பெற்று புத்தரின் முதலாவது பிரதம சீடரானார்.

"மகாகாசியப்பா (Mahakashyapa) ஞானத்தைப் பெற தகுதியாகிவிட்டார் என்பதை இன்று அவரது வெகுளித்தனச் சிரிப்பு வெளிக்காட்டியது. அவர் தனக்குள்ளே ஊடுருவிச்சென்று தன்னை அறிந்துவிட்டார். அதன் அடையாளமாக அவருக்கு இந்தத் தாமரைப் பூவைக் கொடுத்தேன்" என்றார் புத்தர்.

கௌதம புத்தர் தோற்றுவித்த தியான் (Dyan) முறைகள் சென் மதமாகியது. தியான் என்ற சமஸ்கிருதச்சொல் தியானத்தைக் குறிக்கும். 'தியான்' (Dhyan) என்ற சொல்லே திரிபடைந்து 'சான்' (Chan) ஆகிப் பின் 'சென்' (Zen) ஆகியது. மகாகாசியப்பா அவர்களே தான் சென் மதத்தை தோற்றுவித்தவர். இந்த நிகழ்விலிருந்து கிட்டத்தட்ட 1000 வருடங்களுக்குப் பின்பு தோன்றிய போதிதர்மா அவர்கள் சென்மதத்தை தோற்றுவித்தவர் போல் அமைந்துவிட்டது.

அறிவு, ஆற்றல், திறமை, சுறுசுறுப்பு, துணிச்சல், வீரம்,ஞானம், தியானம், புத்திக்கூர்மை, விழிப்புணர்வு எல்லாம் சேர்ந்தவர் போதிதர்மர். பலரது விழிப்புணர்வைத் தூண்டியவர். பலருக்கு ஞானப்பாதையை, தங்களை உணர, சுயத்தை அறிய வழிகாட்டியவர். மகாகாசியப்பா சென்மதத்தை

தோற்றுவித்ததுடன் மக்களுக்கு தெரியாமல் உலகத்திற்குத் தெரியாமல் மறைந்துவிட்டார். சென் பௌத்தத்தைப் பரப்பியவர் போதிதர்மர். அவர்தான் சென் பௌத்தத்தின் முதலாவது குருவாகக் கருதப்படுகிறார். சென் இந்தியாவில்தான் பிறந்தது. இது தமிழகத்தில் காஞ்சியில் பிறந்ததாகத்தான் கருதப்பட வேண்டும்.

சீனப்பேரரசர் மிங் - டை (Ming - Ti) அவர்களின் அழைப்பில் காசியப்பா (கி.மு. 5-ஆம் நூற்றாண்டு)சீனா சென்றார். இவர்தான் முதன்முதலில் சீனா சென்ற இந்திய ஞானி. இவர் லோ-யான் (Lo- Yang) என்ற மாகாணத்தில் லோ (Lo) ஆற்றங்கரையில் குடியேறினார். இவர் தியானம் (Dhyan - சமஸ்கிருதத்தில் தியான்) பழக்கினார். மகாஜன பௌத்தம், போதி ஸத்வாஸ் (Bodhisattvas) இவைகளைப் போதித்தார்.

இந்தியாவில் தோன்றிய இந்த 'தியான் - சான் - சென்' இன்று சீனா, ஜப்பான், கொரியா, ஆகிய நாடுகளில் நிலைபெற்று சீனாவில்தான் இந்த மதம் தோன்றியதாகக் கருத்து நிலவுகிறது. சீனாவில்தான் இந்த மதம் முதலில் மலர்ந்தது உண்மை. இந்த மதம் சீனாவில் உறக்க நிலையில் இருந்தபோது போதிதர்மர் அவர்கள் அங்குச் சென்ற பின்பே சென்மதம் சீனாவில் புதிய உத்வேகம் பெற்றது. உலகமே இதுவரை காணாத மிகப் பெரும் மதப் புரட்சியாளரான பெரும் ஞானி போதிதர்மரே.

சென்மத ஆன்மிகவாதிகள் தாங்களே எதையும் தயாரித்து பாவிக்கும் தனித்துதவமுடையவர்கள். அவர்கள் தாங்கள் பாவிக்கும் பொருட்களில் இன்னொன்று அதே பிரதியில் இருக்காமல் இருப்பதற்காகத் தாங்களே வாங்கிப் பாவிக்கும் பொருட்களை உடைத்து ஒட்டிப் பொருத்திப் பாவிப்பது உண்டு, ஏனெனில் அதை உடைத்து ஒட்டிய பின்பு அது ஒரு வித்தியாசமான வடிவமாகிவிடும்.

(உதாரணம்) தேனீர் கோப்பையை (Tea cup) உடைத்து அதைப் பொருத்திப் பாவிப்பார்கள். அந்த வித்தியாசமான வடிவத்தில் வேறு தேனீர் கோப்பை இருக்க முடியாது அல்லவா?

போதிதர்மரது ஊன்றுகோலில் தொங்கின பாதணி மாதிரியே சென் மத ஆன்மிகவாதிகள் அணிகின்றனர்.

போதிதர்மர் சீனாவில் தியான் dhyan னைப்பற்றி மக்களுக்கு எடுத்துக் கூறினார். Chan என்ற உச்சரிப்பும் கொடுத்தது. சீனாவில் முதலில் இதை தியான் (Dhyan) மதம் என்றனர். 'தியான்' காலப்போக்கில் 'சான்' ஆகி, ஜப்பானில் பரவியபோது 'சென்' (zen) என உச்சரிக்கப்பட்டு சென் பௌத்தம் ஆக நிலைபெற்றுவிட்டது. Dhyan-Chan-Zen என மாறி மொழிப்புரட்சியை செய்துள்ளது. 'தியான்' (தியானம்) என்பது மனதுக்கு அப்பால் செல்லல், எண்ணங்களுக்கு அப்பால் சென்று வெறுமையை அடைதல். தியான் என்பதே இதனது ஆரம்பமாகும். நேரடியாக அந்த அர்த்தத்தைக் கொடுக்கிறது. Chan, Zen என கூறும்போது அது அதன் அடிப்படைக் கருத்தை மொழி மாற்றத்தால் இழந்துவிட்டது.

சென் பௌத்த மதம் ஏற்படுத்தும் விழிப்புணர்வில் ஒரு கண்ணோட்டம்:

- சுறுசுறுப்பாக இயங்கிக்கொண்டே எண்ணங்களை நிறுத்துங்கள்.
- கண் விழித்தபடியே பாருங்கள். எதுவும் உங்கள் கண்களுக்கு தெரியக்கூடாது.
- ஒரு கை ஓசையைக் கேளுங்கள்.
- பூமியின் சுழற்சி ஓசையைக் காது கொடுத்துக் கேளுங்கள்.
- சொற்கள் இல்லாமல் கருத்தை விளக்குங்கள்.
- எந்த வடிவமும் இல்லாமல் சித்திரம் வரையுங்கள்.
- சென்மத ஆசான்கள் தங்கள் மாணவர்களுக்கு விடை எளிதில் காணமுடியாத விஷயத்தை வினாவாக வழங்கி, அவற்றைத் தொடர்ந்து முயற்சிக்கும்போது அவர்களுக்கு தெளிவேற்பட்டு, புதிய சிந்தனை பிறக்க வழி சமைக்கிறார்கள்.
- சென் ஆசான்கள் கண் இமைக்காமல் உற்று நோக்கியும், தங்கள் உடலுக்கு அதிர்வை ஏற்படுத்தி நடுங்கியும்,

தங்கள் சக்தியை இன்னொருவருக்கு மாற்றுகிறார்கள். நெற்றிப் புருவத்தை மேலும் கீழும் அசைத்தல், ஒருவர் முன்னின்று தொடர்ந்து சிரித்தல் மூலமும், தங்கள் சக்தியை மாற்றினார்கள். இவைகளை அனுபவித்தவர் களுள் உள்மாற்றம் நிகழ்ந்தன. போதிதர்மர் உற்று நோக்கும்போது அவரது கண்களை நேராக சந்தித்தவர்களது கண்கள் ஊடாக போதிதர்மர் அவர்களுக்குள் ஊடுருவிவிடுவார். அதைப் பெற்றவர்களும் மாற்றம் அடைந்தனர்.

- ஜப்பானில் வாழ்ந்த சிரிக்கும் புத்தர் சென் ஞானியான ஹொடாய் (Hotei) தன் உடல் குலுங்கச் சிரிப்பதன் மூலம் விழிப்புணர்வை ஏற்படுத்தி, சக்தியைப் பிறருக்கு மாற்றினார்.

- இதே போலவே இந்தோனேசியாவில் பாலித்தீவில் வாழ்ந்த லத்திகான் ஞானியான பபக்சுபுத் தன் உடல் அதிர்வின் மூலம் சக்தியை இன்னொருவருக்கு மாற்றினார்.

- தகுதியானவர் கிடைக்கும்வரை அதாவது தகுதியுள்ளவர் களுக்காகத் தங்கள் கொடையைக் கொடுப்பதற்கு மகான்கள் காத்திருக்கும் வழக்கம் உடையவர்கள்.

■■

அத்தியாயம் 8

பௌத்தம் பொலிவிழந்தது போதிதர்மர் சீனா பயணம்



பாரத முதல் பிரதமர் ஜவஹர்லால் நேரு அவர்கள் தனது மகள் இந்திராகாந்தி அவர்களது 13-ஆவது பிறந்த தினத்திற்கு மத்திய சிறையில் (Central Prison, Naini) இந்திய சுதந்திர போராட்ட கைதியாக இருந்து எழுதிய கடிதத்தைத் தொடர்ந்து அடுத்த 2½ வருடங்கள் எழுதிய அனைத்துக் கடிதங்களையும் தொகுத்து Glimpses of world history என்ற பெயரில் நூலாக 1934-இல் வெளிவந்தது. இந்த நூல் உலகப் பிரபல்ய நூல்களில் ஒன்றாகும். இந்தியாவிற்கும் சீனாவிற்குமிடையில் பௌத்தமதம் ஊடாக நிலவிய நல்லுறவைப் பற்றியும் போதிதர்மர் அவர்களைப்பற்றியும் தன் மகள் சிறுமியான இந்திராகாந்தி அவர்களுக்கு எழுதிய கடிதங்களில் குறிப்பிட்டுள்ளார். அதன் சாராம்சத்தை மாத்திரம் ஒரு தகவலுக்காகப் பின்வரும் பத்திகளில் இங்கு பதிவு செய்கின்றேன்.

இந்தியாவும் சீனாவும் தங்களுக்குள் ஒற்றுமை கண்டு நல்லுறவாக இருந்தனர். இந்தியக் கட்டிடக்கலை சீனாவிற்குள் நுழைந்தது. சீனாவின் அரச நிர்வாக முறையும், வாழ்வியல் பற்றிய தத்துவக் கருத்துக்களும் அண்டை நாடுகளுக்கும் பரவியது. ஜாவாவில் உள்ள பொரோபோதர் (BoroBodur)

நகரில் உள்ள புராதன புத்தவிகாரை இந்திய சிற்பிகளால் கட்டப்பட்டது. அந்த விகாரையின் உட்சுவர்களில் புத்தருடைய முழு வாழ்க்கை வரலாறு செதுக்கப்பட்டுள்ளது. இது புத்தருடைய ஞாபகார்த்தமாக மாத்திரமில்லை இந்தியாவின் உடைய சிற்பக்கலையின் ஞாபகார்த்தமாகவும் உள்ளது. பிலிப்பைன்ஸ் நாட்டில் நிர்மாணித்த சட்டசபையில் செதுக்கப்பட்ட சிற்பங்களில் புராதன இந்திய ஞானியான மனுவையும் (Manu) புராதன சீனஞானியான லா-சூவையும் (Lao -Tzu) செதுக்கியுள்ளார்கள்.

தென் இந்தியாவில் பெரும்பகுதி குறிப்பாகத் தமிழர்கள் பிரதேசம் பல்லவ மன்னர்களின் ஆட்சிக்குட்பட்டிருந்தது. காஞ்சியை தலைநகராகக் கொண்டு பல்லவர்கள் ஆண்டனர். பல்லவர் காலத்தில் மலேசியாவில், போர்ணியோவில், சுமத்திராவில், ஜாவாவில் குடியேற்றம் நடந்தது. குடியேற்றம் நடந்த இடங்கள் இந்தியப் பெயர்களையே தாங்கியுள்ளன. இந்தியாவினதும், சீனாவினதும் குடியேற்ற நாடானது கம்போயா. தற்போது இதன் பெயர் கம்போடியா. அங்கு பௌத்தமதம் படிப்படியாகப் பரவியது, காலப்போக்கில் இஸ்லாம் பரவியது. மலாயாவில் (தற்போது மலேசியா) இந்தியாவினதும் சீனாவினதும் கலவை அங்கே உண்டு. இந்துமதம், சமணமதம், பௌத்தமதம் இவைகளின் ஊற்று இந்தியாதான். கிறிஸ்தவம் ரோம் (Rome) உட்பட ஐரோப்பாவில் பரவ முதல் கடல் மார்க்கமாகத் தென்இந்தியாவில் பரவிவிட்டது. மிஷனரிமார்கள் கடல் மார்க்கமாகவே பிரவேசித்தனர்.

குப்த மன்னர்கள் இலங்கையுடன் நட்புறவு கொண்டனர். இலங்கையில் பௌத்த மதம் செழித்து வளர்ந்தது. இலங்கை மகாவர்ண மன்னன் சமுத்திரகுப்தாவுக்குத் தங்கம், வைரம் அன்பளிப்பாக அனுப்பி கயாவில் சிங்கள மாணவர்கள் தங்குவதற்கு மடாலயம் (Monastary) நிறுவினார். (சமுத்திரகுப்த மன்னன் இந்தியாவின் நெப்போலியன் என அழைக்கப்



Samudragupta

பட்டார்.) சீனாவிலிருந்து பா-ஹீன் (Fa-Hien) இந்தியாவில் சுற்றுப்பிரயாணம் செய்துவிட்டு இலங்கை சென்று இரண்டு வருடங்கள் தங்கினார். அதன் பின்பு இந்தியா திரும்பி அங்கிருந்து கடல் மார்க்கமாகச் சீனா திரும்பும்போது சில ஏடுகளை (Scriptures) தன்னுடன் எடுத்துச் சென்றுவிட்டார்.

தென் இந்தியாவில் கப்பல் கட்டும் (Shipbuilding) தொழில் திறம்பட இயங்கியது. கப்பல் மூலமாக வர்த்தகம் பிற நாடுகளுடன் இடம்பெற்றது. கௌதமபுத்தர் வாழ்ந்த காலத்தில் விஜயன் இந்தியாவிலிருந்து இலங்கை சென்று இலங்கையைக் கைப்பற்றி அரசாண்டான். விஜயன் இலங்கைக்கு குதிரைகளுடனும், யானைகளுடனும் கப்பலில் பிரயாணம் செய்வது போன்ற காட்சி அஜந்தா குகைகளில் உள்ள ஓவியத்தில் காணப்படுவதாக நேரு அவர்கள் குறிப்பிடுகிறார்.

சீனாவில் பௌத்தமதம் பரவப்பரவ இந்தியாவிலிருந்து பௌத்தத் துறவிகள், ஞானிகள் அங்குச் செல்லத் தொடங்கினார்கள். இந்தியாவில் நாலந்தாவில் பௌத்த மதக் கல்வி ஆராய்ச்சி மைய இடமாகவும், காசி இந்துமதக் கல்வி ஆராய்ச்சி மைய இடமாகவும் இருந்தது. இந்த இரு ஆராய்ச்சி மையங்களும், புனித இடங்களும் ஒன்றுக்கொன்று அருகாமையில் இருந்தன. ஆனால் நல்லுறவு நிலவவில்லை. பௌத்தம் தன் மகிமையை இழக்க பௌத்தத் துறவிகளும், ஞானிகளும் இந்தியாவை விட்டு வெளியேறி இமயமலைச் சாரலைக் கடந்து சீனாவுக்கும், திபெத்துக்கும் சென்று விட்டனர்.

இக்காலப் பகுதியில் பல்லவ மன்னனின் வழித் தோன்றலான இளவரசர் போதிதர்மர் தென்இந்தியாவிலிருந்து கப்பலில் சீனாவில் உள்ள கன்டோன் (CanTon) நகரை 526 A.C காலப்பகுதியில் சென்றடைந்தார் என நேரு அவர்கள் குறிப்பிடுகிறார்கள். இவர் புத்தமதத்தின் 28–ஆவது பீடாதிபதியாக (Head And Patiarch) இருந்தவர். அவர் சீனா சென்றதற்குப் பௌத்தமதம் இந்தியாவில் குன்றிவருவது ஒரு காரணமாக இருக்கலாம் என நேரு அவர்கள் குறிப்பிடுகிறார். இவர் சீனாவையடைந்தபோது நடுத்தர வயதை கடந் திருந்தார். இவருடன் பௌத்த துறவிகளும் சென்றிருந்தனர்.

இவருக்குப் பின்பும் பல பௌத்தத் துறவிகள் இந்தியாவிலிருந்து சீனா சென்றிருந்தனர். சீனாவில் உள்ள லோ-ஜாங் (Lo-Yang) மாகாணத்தில் மாத்திரம் மூவாயிரம் (3,000) இந்திய பௌத்த துறவிகளும் பத்தாயிரம் (10,000) பௌத்த இந்தியக் குடும்பங்களும் அந்தக் காலப் பகுதியில் வசித்தனர். புத்தர் ஞானம் அடைந்தது இந்தியாவில், புத்தர் பிறந்தது நேபாளத்தில் உள்ள லும்பினி நகரில் (Lumbini), புத்தர் போதனை செய்தது இந்தியாவில், பௌத்த புனித நூல்கள் அனைத்தும் இருந்ததும் இந்தியாவிலே. பௌத்தத்தின் மகிமை இந்தியாவை விட்டுப் படிப்படியாக வெளியேறியதால் சீனதேசம் முக்கிய பௌத்த நாடாக மாறியது.

பேரரசர் 'டாங்' (Tang) பல குறுநில ஆட்சி நிலங்களாக பிளவுபட்டு இருந்த சீனாவை ஒன்றாக இணைத்தார். அங்கு மதம் பரப்பச் சென்ற இஸ்லாமிய, கிறிஸ்தவத் துறவிகளை கௌரவித்தார். அவர்களுக்கு மதிப்புக் கொடுத்து அவர்கள் கூறுவதைச் செவிமடுத்துக் கேட்டார். மன்னர் இஸ்லாமியர், கிறஸ்தவர், நெஸ்டோரியன்ஸ் (Nestorians) என்ற பாகுபாடு இல்லாமல் நடந்துகொண்டார். அராபியர் கன்டோனில் (Canton) பள்ளிவாசல் கட்ட அனுமதித்தார். இன்று உலகில் உள்ள பழமை வாய்ந்த (1400 வருடங்களுக்கு மேலான) மசூதியில் அதுவும் ஒன்று. அரசர் டாங் (Tang) கிறிஸ்தவ தேவாலயம் அமைக்கவும் அனுமதி வழங்கினார்.

இக்காலப் பகுதியில் சீனாவின் செல்வாக்கு ஆசியாவில் உயர்ந்தது. கலை, தத்துவம், நாகரிகம், தொழில் வளர்ச்சி போன்ற வழிகாட்டலுக்கு ஆசியாவில் பல நாடுகள் சீனாவை எதிர்பார்த்தன. இந்தியாவில் குப்தர்களது ஆட்சிக்குப் பின் மகிமை மங்கத் தொடங்கிவிட்டது. சீனாவின் வளர்ச்சியாலும், உயர்வாலும், அங்கு ஆடம்பரமும், ஏனோதானோ என்ற வாழ்வும் ஏற்பட்டதால் அரசு அதிக வரியைச் சுமத்தியது. மக்கள் டாங் (Tang) வம்சாவளியினரின் 300 வருட ஆட்சிக்கு முடிவு வைத்தனர். இவர்களது ஆட்சி 907 A.C வரை நீடித்திருந்தது. அக்காலம் சீனாவின் பொற்காலமாகக் கருதப்பட்டது. சீனாவுடன் ஒப்பிடும்போது ஐரோப்பா எவ்வளவோ பின்தங்கியிருந்தது. சீனாவிடமிருந்துதான் ஐரோப்பா பல வளர்ச்சிகளைக் கண்டறிந்தது. அச்சு யந்திரம்,

காகிதத்தாள் (Paper) துப்பாக்கி வெடிப்பவுடர், (GunPowder), தொழில் நுட்பம், பொறியியல், விஞ்ஞானம் போன்ற பல துறைகளில் உலகத்துக்குச் சீனா முன்னோடியாகத் திகழ்ந்தது.

King Harshavardhan

வட இந்தியாவை ஹர்சா-வர்த்தனா (Harsha-Vardhana) 629 A.C காலப்பகுதியில் ஆண்டுகொண்டிருக்கும்போது ஹையூன் சாங் (Hiuen Tsang) இந்தியா சென்று பின்பு இலங்கை சென்றார். பின்பு இவர் சீனா திரும்பும்போது இந்தியா சென்று ஏராளமான புனித ஏடுகளை (Holy Scriptures) தன்னுடன் எடுத்துச் சென்று விட்டார். ஹையூன் சாங் (Hiuen Tsang) தனது பிரயாண அனுபவங்களை நூலாக்கினார். அந்த நூலில் இவர் போதிதர்மாவைப்பற்றி கூறும்போது ''இடுப்பைச் சுற்றி செம்பிலான தகடு (Copper Plate) அணிந்திருப்பார். இவரைப் பற்றிய பல சுவாரஷ்யமான கதைகள் உண்டு. இவர் புத்திக் கூர்மையும், மதியூகமும், அறிவும், ஞானமும் உள்ளவர்'' என்கிறார்.


Hiuen Tsang

■■

அத்தியாயம் 9

சீன எல்லையில் அரச வரவேற்பில் பேரரசர் 'வூ' (Wu Tai) உடன் முரண்பாடு!

King Wu Ti

போதிதர்மர் தென் சீனா சென்றபோது அரசர் Wu-Tai உடனான சந்திப்பு பேரரசருக்குத் தோல்வியில் முடிந்தது. ஏனெனில் அரசர் சாதாரணமாக வரையறுக்கப்பட்டவராகவும் போதிதர்மர் உண்மையை உணர்ந்த உண்மையானவராகவும் இருந்ததால் இருவருக்கும் இடையில் ஒரு சமநிலை நிலவவில்லை.

அந்தச் சந்திப்பைப்பற்றி அறியுமுன்பு, பேரரசர் 'வூ' (WU) அவர்களைப்பற்றி இந்திய முதல் பிரதமரான திரு. ஜவகர்லால் நேரு அவர்கள் தனது பிரபல்யமான நூலான 'The Dicovery of India' வில் என்ன கூறுகிறார் என்பதை இங்குப் பார்ப்போம்.

ஹையான் (hyan) அரச வம்சத்தில் (Hyan Dynasty) 6வது வழித்தோன்றலான Wu-Ti 50 வருடம் மகா சக்கரவர்த்தியாக அரசாண்டார். இவர் காலத்தில்தான் சீனாவுக்கும் இத்தாலிக்கும் இடையில் முதன் முதல் வர்த்தகம் ஆரம்பமானது என்றும் சீனா பெரும் பொருளாதார வளர்ச்சி கண்டது எனவும் குறிப்பிட்டுள்ளார். அங்குப் பௌத்த மதம் மேலோங்கி வளர்ந்ததும் அரசர் 'வூ' காலத்தில்தான். அவர் திருத்தொண்டுகளிலும் திருப்பணிகளிலும் தர்ம காரியங்களிலும் ஈடுபட்டார். பல்லாயிரம் மடாலயங்கள் விகாரைகள் நிர்மாணித்தார். இவருக்கு முதல் 5-ஆவது வழித்தோன்றலாக அரசாண்டவர்

ஒரு பெண். சீனாவின் முதல் பெண்அரசி என அவரைக் குறிப்பிடுகிறார் நேரு அவர்கள்.

ஞானம்:

சுறுசுறுப்பு, விடா முயற்சி, கடின உழைப்பு, விவேகம், ஆக்கம், ஆற்றல், அறிவு, புத்திசாலித்தனம் இவை அனைத்தையும் ஆன்மிகமாகக் கருதுகிறது சென்மதம். இவை அனைத்தையும் 'ஞானம்' என்கிறது. சுருக்கமாகக் கூறினால் ஞானி போதிதர்மர் கூறும் ஞானம் என்பது spirituality, Intellect, and Physical Excellence இவைகளை உள்ளடக்குகிறது. அவர் தான் கேள்விப்பட்டவைகளையோ அறிந்தவைகளையோ கூறவில்லை. அவர் தன் சொந்த அனுபவங்களையே கூறினார். அத்துறைகளில் போதிதர்மர் சிறந்தும் விளங்கினார். தன் சொந்த அனுபவங்களுக்கே செயல் வடிவம் கொடுத்து மக்களுக்கு ஊக்கம் கொடுத்தார்.

எல்லையில் போதிதர்மருக்குப் பெரும் அரச வரவேற்பு:

காஞ்சி அரசர் ஒரு வட இந்திய அரசர் ஊடாக போதிதர்மர் வருகையைத் தென்சீன அரசருக்கு அறிவித்திருந்தார். கி.பி. 527-இல் போதிதர்மர் தென்சீனா சென்றபோது புத்தமதத்தின் ஆழ்ந்த ஈடுபாடுடைய பேரரசர் 'வூ' (Wu) தனது இராச்சியத்தின் எல்லையில் 10,000 துறவிகளுடனும், அரச உயர் அதிகாரிகளுடனும், தனது பரிவாரங்களுடனும் சகல அரச மரியாதையுடன் இவரை வரவேற்றார். ஒரு காலில் ஒரு பாதணியும் மற்றயதைத் தலையிலும் வைத்திருந்தார். இடுப்பைச்சுற்றி செம்பினாலான பட்டியும் (Copper Belt), இடுப்பில் ஒரு சிறு துணியும், கையில் ஒரு தடியும், ஒரு விசித்திரமான கிறுக்குத் தோற்றத்துடனும் காணப்பட்டார்.

போதிதர்மர் அப்படியான தோற்றத்தில் வருவார் என்று யாரும் எதிர்பார்த்து இருக்கமாட்டார்கள். பேரரசர் போதிதர்மரைப் பார்த்ததும் திகைப்படைந்தார். ஆனால் தன்னை சுதாகரித்துக்கொண்டார். இவருக்கு என்ன பைத்தியமோ? இவர் என்ன விசித்திரமான மனிதராய்

இருக்கிறார் என நினைத்தார். அரசர் 'வூ' வின் ஆச்சரியத்தை உணர்ந்துகொண்ட போதிதர்மர் சிரித்தார்.

"இந்த ஆள் என்ன பைத்தியமோ என்று நீர் நினைக்கலாம், கண்டிப்பாய் அப்படித்தான் நினைத்தும் இருந்திருப்பீர், நான் அதைக் கணித்துச் சொல்வேன். ஆனால் உம்மால் எதையும் கணிக்க முடியாது. அதுதான் வேறுபாடு. நீர் அதை வாய்விட்டுச் சொல்லாவிட்டாலும் என்னால் கணிக்க முடியும்" என்றார் போதிதர்மர். திகைப்படைந்த அரசர் அமைதியாகத் தன் ஐயங்களை வினவினார்.

அரசர் : புத்தமதத்தின் வளர்ச்சிக்குப் பெரும் செலவு செய்கிறேன். பல ஆயிரம் மடாலயங்கள், விகாரைகள் நிர்மாணித்துள்ளேன். புத்த போதனைகளைச் சீனமொழியில் மொழி பெயர்த்து, போதனை செய்விக்கிறேன். தினமும் பத்தாயிரம் துறவிகளுக்கு உணவளிக் கிறேன். தர்ம காரியங்கள் செய்கிறேன். பௌத்தம் வளர்வதற்கும் துறவிகளுக்கும் இல்லையென்று சொல்லாமல் பெரும் 'தானங்கள்' செய்கிறேன். எனக்கு என்ன கிடைக்கும்?

போதிதர்மர் : எதுவும் இல்லை, நரகலோகம் என்று ஒன்று இருக்குமானால் உமது செய்கைகள் உம்மை அங்கே கொண்டுபோய் விழச்செய்யும். உன் தானங்களுக்குள்ளும், தர்ம காரியங்களுக்குள்ளும் பெரும் பேராசையும் சுயநலமும் மறைந்திருக் கிறது அவற்றுடன் சேர்ந்து உனக்கு அழிவும் வரும்.

அரசர் : என்ன சொல்கிறீர்கள்? நான் செய்வதெல்லாம் புண்ணியச் செயல்கள், புனிதமாகவே வாழ் கிறேன்!!.

போதிதர்மர் : உமது புண்ணியம், புனிதம் உம்மை நரகக் குழியில்தான் வீழ்த்தும் தர்மம், புண்ணியம், புனிதம் என்று எதுவுமில்லை.

அரசர் : நான் கூறுவது உங்களுக்குப் புரியவில்லை. நம் இருவருக்குமிடையில் சரியான மொழித் தொடர்பு இல்லை. அதனால் நான் கூறுவது உங்களுக்குப் புரியவில்லை.

போதிதர்மர் : உமக்கும் எனக்கும் இடையில் எப்படித் தகவல் பரிவர்த்தனை இடம்பெறமுடியும். நீர் மேலே வரவேண்டும். அல்லது நான் கீழே வர வேண்டும். அப்போதுதான் நாம் பொருந்த முடியும். நீர்தான் மேலே வரவேண்டும். அதற்கு முயற்சித்துப்பாரும்.

அரசர் : 'பேருண்மை'யின் அதிஉயர் கருத்து என்ன? (What is the highest meaning of noble truth?)

போதிதர்மர் : பேருண்மை என்று ஒன்றும் இல்லை.

அரசர் : நீங்கள் யார்?

போதிதர்மர் : தெரியாது.

அரசர் : நான் யார்?

போதிதர்மர் : தெரியாது.

அரசர் : முன்னோர்கள் சொன்ன பிரகாரம் நடக்கிறேன், பெரும் துறவிகள் கூறுவது போலெல்லாம் தர்ம காரியங்களும், தானங்களும் புண்ணியங்களும் செய்கிறேன். உங்கள் பதில்கள் வித்தியாசமாக உள்ளன. எனக்குப் புண்ணியம் கிடையாதா? மேலோகம் கிடையாதா? (அரசர் செய்வதெல் லாம் புண்ணியம் எனத் துறவிகள் கூறியிருந் தனர்.)

போதிதர்மர் : ஒன்றுமில்லை!

அரசர் : உங்களுடன் தொடர்ந்து கதைப்பதில் அர்த்த மில்லை. நான் உங்களை ஏற்றுக்கொள்ள வில்லை. எனது நாட்டுக்கு விருந்தினராக வந்துள்ளீர்கள். நீங்கள் எனது அரண்மனையில் அரச விருந்தினராகத் தங்கலாம்.

போதிதர்மர் : உங்கள் இராச்சியத்திற்குள் வரமாட்டேன், இந்த எல்லைக்கப்பால் வரமாட்டேன். உமது எல்லையை நீர் தீர்மானித்துக்கொள்ளும். உமக்கு மரணம் நெருங்கும்போது என் நினைவு வரும். மரண பயமும், தனிமையும் உமது போலி நம்பிக்கைகளை எதிர்பார்ப்பு களை, புண்ணியங்களை, மேலோக கற்பனை களை எல்லாம் தகர்த்தெறியும். உம்மை நீர் அரசராகப் பார்க்கிறீர். புண்ணியங்கள், நன்மைகள் செய்பவராக எண்ணிக்கொள்கிறீர். மேலோக கற்பனைகளை வளர்த்துக்கொள்கிறீர். 'நீ நீயாக இல்லை', அரச பதவியை எடுத்தால் 'நீ யார்?' உமது பத்தாயிரம் துறவிகளை எடுத்துவிட்டால் 'நீ யார்?' நீ கூறிய அத்தனையையும் எடுத்து விட்டால் 'நீ யார்?'. 'நீ யார்?' என்பதை 'நீ' அறியாதவரையில் உனக்குள் குழப்பம் இருக்கும். நீங்கள் விரும்பிய போதெல்லாம் என்னை எப்போதும் சந்திக்கலாம்.

(நாட்டை ஆளும் பேரரசரை எதிர்க்கும் துணிச்சல் எப்படித் துறவி போதிதர்மருக்கு ஏற்பட்டது? அரசன் படைப்பலத்தை மட்டும் தான் நம்புகிறான் இவர் தன் ஆத்ம பலத்தை அல்லவா நம்புகிறார். அவரது ஆத்ம பலமே அவரது வலிமை. இவர் உண்மையைத் தவிர வேறு எதுவும் பேசத் தெரியாதவர். உண்மையே அவரது பலம்.)

அரசர் : (தன்னை ஒரு சாமானியராகப் போதிதர்மர் கருதியதால் கோபத்துடன் அரண்மனை திரும்பினார்.)

போதிதர்மர் : தென்சீனாவுக்குள் செல்லாது யாங்கிஸ் (Yangtze River) ஆற்றைக் கடந்து வடசீனா சென்றார்.

சில வருடங்களின் பின்:

தென் சீனாவில் அரசர் 'வூ' (Wu-Ti) அரசாண்ட சாம்ராஜ்யத்தை கோஜிங் (Hou Jing) படைகள் கைப்பற்றினர். அரண்மனை அமைந்திருந்த நான்ஜிங் (Nan Jing) நகரம்

வீழ்ச்சியடைந்தது. அரசர் சிறைவைக்கப்பட்டார், உணவு வழங்கப்படவில்லை சகலதையும் இழந்தார், அவருடன் இருந்தவர்கள் தூர விலகினர். பல இன்னல்களைச் சந்தித்த அரசர் தனி மனிதர் ஆனார். துன்பத்தில் மூழ்கினார். அரசர் தான் 'யார்?' எனச் சிந்திக்கத் தொடங்கினார்.

சிறையிலிருந்து 'நரகலோகம்', 'நரகலோகம்' என்று புலம்பினார். நோய்வாய்ப்பட்டு, எல்லோராலும் கைவிடப் பட்டு, மரணம் நெருங்கும்போது போதிதர்மரின் ஞாபகம் வந்தது. தனது குடும்பத்தைச் சேர்ந்தவர்களை அழைத்துக் கூறினார் "போதிதர்மர் எங்கிருந்தாலும் கூட்டிவாருங்கள். எனக்கு உதவக்கூடியவர் அவர் ஒருவரே" என்றார்.

இவரது உறவினர் போதிதர்மரைத் தேடிச்சென்றபோது, அவர்களுக்கு அதிர்ச்சிச் செய்தி காத்திருந்தது. போதிதர்மர் 'இல்லை' என்பதை அறிந்தனர். அவர் அரசர் 'வூ' க்கு ஒரு செய்தியைச் சீடர்களிடம் விட்டுச் சென்றுள்ளார் என்பது தெரியவந்தது. அச்செய்தி பின்வருமாறு இருந்தது. ''இறக்கும்போது என்னை நினைவுகொள்வீர், உங்கள் மறுவுலகக் கற்பனை இப்போது உடைந்து நொறுங்கத் தொடங்கிவிட்டது. மரணபயம் உங்கள் நம்பிக்கைகளை தகர்த்துவிட்டது. மரணத்தை ஆனந்தமாக ஏற்றுக் கொள்ளுங்கள் – காரணம் மரணம் தர்க்கமற்றது.''

அரசர் 'வூ'க்கு இச்செய்தி தெரிவிக்கப்பட்டது. "நான் பேரரசராக, தலைவணங்காதவராக இருந்தபோது போதிதர்மர் கூறியவை. அன்று எனக்குப் புரியவில்லை. மறு உலக எண்ணத்திலே இருந்துவிட்டேன். போதிதர்மரைப் பயித்தியக் காரராக நினைத்துவிட்டேன். அன்று அவர் என்னைக் காப்பாற்ற முயற்சி செய்தார். அதை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. எனக்கு நடக்கப்போவதை அவர் அன்றே கணித்துவிட்டார். இந்த நேரத்தில் உதவக்கூடியவர் அவர் என்று நினைத்தேன். அந்த மகானைப் போய்ப் பார்க்கத் தவறிவிட்டேன். புரிந்துகொள்ள முடியாத ஒரு மாபெரும் மகான் அவர்" என்றார்.

■■

அத்தியாயம் 10

ஷோலின் ஆலயத்திலிருந்து வெளியேற்றப்பட்டார்! மலைக் குகையினுள்ளிருந்து தியானித்தார்!

போதிதர்மர் தென் சீனாவில் அரசர் வூ டாய் (Wu Tai) உடன் முரண்பட்டு வட சீனா நோக்கிச் செல்லும்போது தென் சீனாவில் உள்ள Yedu (Waide) நகரில் ஒரு மண்டபத்தில் புத்த போதனைகள் பற்றிய விளக்கவுரை நடைபெற்றுக் கொண்டிருந்ததை அவதானித்தார். அங்கு ஏராளமானோர் கூடியிருந்தனர். அம்மண்டபத்தினுள் பிரவேசித்த போதிதர்மர் அந்த விளக்க உரைகளை மறுத்து உரைக்க வேண்டியவராகி விட்டார். உரை நிகழ்த்தியவருக்கும் போதிதர்மருக்கும் இடையில் கடும் வாக்குவாதம் ஏற்பட்டது. அங்கு ஒரு மோதல்நிலை உருவானது. அங்கு இருந்தவர்கள் போதிதர்மரை வெளியேறும்படி கூச்சலிட்டனர். அவர் மண்டபத்தை விட்டு வெளியேறும்போது அந்த மண்டபத்தில் இருந்த சிலரும் அங்கு விளக்கவுரை நிகழ்த்திக்கொண்டு இருந்தவரும் இரகசியமாகப் போதிதர்மரைப் பின் தொடர்ந்தார்கள்.

போதிதர்மர் யாங்கிஸ் (Yangtze River) ஆற்றைக் கடந்து வட சீனா செல்வதற்காகப் படகில் ஏற முற்பட்டபோது தடுக்கப் பட்டார். படகோட்டி அவரைப் படகில் ஏற அனுமதிக்கவில்லை. மோடன், முரடன், பயித்தியக்காரன் என்று அங்கு இருந்தவர்கள் கூச்சலிட்டு அவரைப் படகில் ஏறாமல் தடுத்துவிட்டார்கள். அவரை ஆற்றங்கரையில் விட்டுவிட்டு படகு சென்றது. ஆற்றங்கரையிலிருந்த

நாணல் புற்களை (Reed) ஆற்றின்மேல் போட்டு அதன்மீது ஏறிநிற்க அது படகுபோல் மிதந்து சென்றுகொண் டிருந்தபோது மறு படகை அண்மித்ததும் போதிதர்மர் யாங்கிஸ் ஆற்றின் (Yangtze-River) மேலாகப் பறந்து சென்று மற்றப் படகுக்கு முன் மறுகரையை அடைந்தார். போதிதர்மர் Yangtze ஆற்றைக் கடந்து சென்றுவிட்டார். Yedu நகரிலிருந்து பின் தொடர்ந்தவர்கள் மேலும்; அவர் பின்னால் தொடர்ந்து சென்றார்கள். ஆனால் போதிதர்மர் அவர்கள் மீது தன் பார்வையைச் செலுத்தவில்லை.

பஞ்சைப்போல் இலேசாதலும், ஆகாயத்தில் பறத்தலும், நீரின்மேல் நடத்தலும் போன்ற அட்டமா சித்தியான இலகிமா கலையும் தெரிந்த ஒரு மாபெரும் சித்தர் போதிதர்மர்.



இவர் வட சீனா சென்று ஷாஷி (Shaoshi), ஷோங் (Shong) மலையடிவாரத்தில் உள்ள ஷோலின் (Shaolin) ஆலயத்தில் தங்கி இருந்தபோது இவரது அஞ்சாமை நடவடிக்கை யினால் மோடன் எனக் கூறி அங்கிருந்தும் வெளியேற்றப் பட்டார்.

அதனால் அவர் மலையின் மேலே ஏறிச்சென்று அங்கு இருந்த குகையினுள் 9 வருடம் சுவரை உற்றுப் பார்த்தபடி (Wall Gazing) தியானித்தார்.

Shaolin Temple







ஷோலின் ஆலயம் பேரரசர் ஷோவென் (Shaowen) கொடுத்த நிலத்தில் இந்தியாவிலிருந்து சீனா சென்று ஷியாவோ ஷெங் (Xiao Sheng) பௌத்தம் போதித்த இந்திய

பௌத்த துறவியான பற்றுவோ Batuo (Buddha Bhadra) என்பவரால் *495* A.D. யில் நிர்மாணிக்கப்பட்டதாகவும் அங்கு போதிதர்மர் *527* A.D. காலப் பகுதியில் சென்றதாகவும் ஏடுகள் கூறுகின்றன.

இந் நூலாசிரியராகிய என் அபிப்பிராயம் புராணக் கதைகள் எல்லாம் எழுத எடுத்த அக்கறை வரலாறுகளை எழுதிவைக்க எடுக்கப்படவில்லை என்பதே! போதிதர்மர் எப்போது பிறந்தார்? எப்போது இறந்தார் என்பதெல்லாம் சரியாகத் தெரியாது. எல்லாம் நூற்றாண்டுகளிலே கூறப்படுகிறது. போதிதர்மர் பற்றிக் கூறும் நூல்கள் ஒன்றுக்கொன்று முரண்படுகின்றன. காரணம் வரலாறு சரியாக எழுதப்படவில்லை. வரலாறுகள் வாய்வழி மூலம் பரவியவை. காலத்துக்குக் காலம் காலத்துக்கு ஏற்ற மாதிரி திரிபுபட்டது மல்லாமல் அவற்றைக் கூறுபவர்களும் தங்களுக்கு ஏற்றவிதமாகக் கூறிவிடுகிறார்கள். இவ்வாறாகப் பொருள் மாற்றம் அடைந்துவிட்டது. காலத்துக்குக் காலம் இந்த கருச்சிதைவு நடந்துகொண்டுதான் இருக்கிறது. போதிதர்மரின் வரலாறும் அப்படி அமைவது துர்பாக்கியமே. அவரது வரலாறும் அவர் பற்றிய தகவல்களும் ஒன்றுக்கொன்று வேறுபட்டு காணப்படுகின்றன. இவர் ஏன் இந்தியாவில் தன்-ஞானத்தை விதைக்கவில்லை என்பது எந்த நூலிலும் காணப்படவில்லை.

சுவரைப் பார்த்துப் போதனை:

போதிதர்மர் குகையினுள் சுவரைப் பார்த்தே உபதேசம் செய்துகொண்டே இருப்பார். அங்கு செல்பவர்கள் அவரது முதுகுக்குப் பின்னால் உட்கார்ந்து இருந்து அதனைக் கேட்பார்கள். அங்கு ஆட்கள் இருந்தாலென்ன, இல்லாவிட்டாலென்ன அதனைக் கவனத்தில் கொள்ளாது சுவரைப் பார்த்தபடி தொடர்ந்து பிரசங்கம் (Sermon) செய்து கொண்டேயிருப்பார்.

Yedu நகரில் இருந்து பின் தொடர்ந்தவர்கள் போதிதர்மர் தியானம் செய்துகொண்டிருந்த குகைக்கு வெளியில் மறைந்திருந்து அவர் என்ன செய்கிறார் என்பதை அவதானித்தனர். அவர்களில் ஒருவராகப் போதிதர்மருடன் வாக்குவாதப்பட்டவரும் இருந்தார். போதிதர்மரது தியானத்தைப் பார்த்து ஆச்சர்யப்பட்ட அவர் தன்னைச் சீடனாக ஏற்றுக்கொள்ளும்படி கேட்டார். போதிதர்மர் பதிலளிக்கவும் இல்லை, அவரைத் திரும்பிப் பார்க்கவும் இல்லை. அவர் நீண்டகாலமாக குகைக்கு வெளியில் காத்து இருந்தார்.

சீடனின் செயல்:

ஒரு நாள் அவர் தன் விசுவாசத்தைக் காட்டுவதற்காகத் தனது இடது கரத்தைத் துண்டித்து போதிதர்மர் முன் எறிந்து விட்டு "நீங்கள் திரும்பி என்னைப் பார்க்காவிட்டால் என் தலையை கொய்யப்போகின்றேன்'' என்றார். போதிதர்மர் திரும்பிப் பார்த்துச் சொன்னார் "நீ உன் தலையை வெட்ட வேண்டியதில்லை, உன் தலையை நீ சரியாகப் பாவிக்க வேண்டும்'' என்று கூறி அவன் பக்கம் திரும்பி அவரைக் கண் இமைக்காமல் உற்று நோக்கினார். போதிதர்மரது கண்களைப் பார்த்த அவர் தன் கட்டுப்பாட்டை இழந்தார், தன் ஆணவத்தை இழந்தார், அவர் தன்வசம் இல்லை, மகுடிக்கு கட்டுப்பட்ட பாம்பு போல் ஆகிவிட்டார். அவருக்குள் உள்மாற்றம் நிகழத் தொடங்கியது.

இது எப்படிச் சாத்தியமானது?

போதிதர்மரது நெற்றிப்புருவத்தின் மத்தியில் 3-ஆவது கண் (Third Eye) அவருக்கு உண்டு. இந்தச் 'சக்ரா'வை (Chakra) சமஸ்கிருதத்தில் அஜ்னா (ஓம்) Ajna என அழைக்கப்படுகிறது. இதை 3-ஆவது கண் எனவும் அழைப்பர். இதுதான் சக்திமிக்க நெற்றிக்கண் ஆகும். நெற்றிக்கண்ணிலிருந்து வெளிவரும்

ஒளிக்கதிர் Indigo நிறம் உடையது. இந்த Ajna சக்ரம் (3ஆவது கண்) திறக்கப்பட்டவர்கள் தெளிவாக ஊடுருவிப்பார்க்கும் சக்தியும், தொலைவில் உள்ளதைப் பார்க்கக்கூடிய வலிமையும், நடக்கப்போவதை முற்கூட்டியே அறியக்கூடிய உள்ளுணர்வும் கொண்டவர்கள். இவர்கள் தங்கள் உள்ளுணர்வால் மாத்திரம் வழிநடத்தப்படுவார்கள். இவர்கள் தெளிவான உட்பார்வை உடையவர்கள். இவர்களது காந்தப் பார்வையை நேருக்கு நேர் சந்திப்பவர்கள் தங்கள் கட்டுப்பாட்டை இழந்துவிடுவார்கள். அவர்கள் தங்கள் வசம் இருக்கமாட்டார்கள். அதுமாத்திரமல்ல அவர்களுக்குள் 'உள்'மாற்றம் நிகழத் தொடங்கிவிடும். இக்கண் உடையவர்கள் வலிமைமிக்க நோக்குவர்ம சக்தியுடையவர்கள்.

தன் இடது கரத்தைத் துண்டித்த அவர் வேறு யாரும் அல்ல. அவர்தான் பின்பு போதிதர்மரின் பிரதம சீடராக மாறிய Huiko (Huike) என ஏடுகள் கூறுகின்றன. இவரது இயற்பெயர் Shen Guang. இவர் சீன சென் மார்க்கத்தில் 2-ஆவது குருவாகவும், புத்த பீடத்தின் போதிதர்மருக்கு அடுத்த 29-ஆவது குருவாகவும், பின்பு சோலின் ஆலயத்தின் பிரதம குருவாகவும் இருந்தார். இவர் தனது வலது கரத்தைத் தன் நெஞ்சில் வைத்து தலை குனிந்து மரியாதை செலுத்தி வரவேற்பது வழக்கம். இதுவே காலப்போக்கில் வலது கையை நெஞ்சில் வைத்து வரவேற்கும் ஒரு சம்பிரதாயமாக மாறிவிட்டது. இந்த 'ஒரு கை' வணக்கமுறை மரபாக மாறி இன்றும் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது.

போதிதர்மர் நீண்டகாலம் தியானம் இருந்ததால் தூக்கம் வராமல் இருக்க தன் கண் மடலை வெட்டி எறிந்துவிட்டார். அதனால்தான் அகண்ட கண்களை உடையவராகி விட்டார்.

அவரது உற்றுநோக்கலின் வலிமையினால் அவர் பார்த்த இடத்தில் சுவரில் துவாரம் ஏற்பட்டுவிட்டது. இவர் நீண்ட காலமாக உட்கார்ந்தபடியே தியானத்தில்

இருந்ததால் இவருக்குக் கால்களே இல்லை என்று நினைத்து அக் காலத்தில் போதிதர்மரது உருவத்தைப் படங் களாக வரைந்தபோது கால்கள் இல்லாமலேயே வரைந்து விட்டார்கள்.

இவரது ஞானத்தை அறிந்த சோலின் ஆலயத்துறவிகள் இவரை அந்த ஆலயத்துக்கு அழைத்து வந்து குருவாக அமர்த்தினர். அங்குத் துறவிகள் பலவீனமாகக் காணப்பட்டதால் உடற்பயிற்சியும் தற்காப்புக்கலையும் பழக்கினார்.

தியானம்:

இவரது ஆழமான தியானத்தால் உடலின் உள்ளே உள்ள ஏழு சக்கரங்களும் திறந்து புத்தர்நிலையை (ஞானநிலை) அடைந்திருந்தார். ஏழு சக்கரங்கள் (Chakras / Body of light) பற்றிய சிறு விளக்கம் ஒரு தகவலுக்காக இங்குக் குறிப்பிடுகிறேன்.

1. **மூலாதர் (லம் - பூமி) Muladhar / Root Chakra / Kundalini:** இது உடலின் ஆசனப்பகுதிக்கு மேல் உள்ளது. இச்சக்கரம் திறக்கப்பட்டவர்கள் சக்திமிக்கவர்களாக (Strength, Vitality, Stability) இருப்பார்கள். தனித்துவம் (Individuality) உடையவர்கள், சுய நம்பிக்கை அதிகம். அதனால் தங்கள் கருத்தைத் துணிந்து பக்கசார்பற்றுப் பேசும் ஆற்றல் உடையவர்கள், என்றும் சமநிலையில் இருப்பார்கள், வினாடிக்கு வினாடி வாழ்வார்கள், தங்கள் உடலுடனும் மிக நெருக்கமான தொடர்புடையவர்கள். இந்தச் சக்கரம் திறக்கப்பட்டவர்களிலிருந்து வெளிவரும் ஒளிக்கதிர் செங்கதிர் (Red Ray) நிறம் உடையது.

2. **ஸ்வடிஸ்தான (வம் - நீர்)** Swadisdana / Sacral Chakra: இது உடலின் நாபிப்பகுதியில் உள்ளது. இந்தச் சக்கரம் உடல் உணர்வுகளுடனும், உணர்ச்சியுடனும் (Deals with feeling and sexuality) தொடர்புடையது. இயல்பாக,

THE CHAKRAS



இயற்கையாக பாலியல், உணர்ச்சி அவர்களுள் வீழ்ச்சியடைய இயற்கையாக அதைக் கடந்தவர்களாகி விடுவார்கள். ஆண் பெண் வித்தியாசம் மறைந்து சம நிலையில் இருப்பார்கள். இந்தச் சக்கரம் திறக்கப்பட்டவர்

களிலிருந்து வெளிவரும் ஒளிக்கதிர் செம்மஞ்சள் (Orange ray) நிறம் உடையது.

3. **மனிபுறா (ரம் - தீ) Manipura / Solar Plexus Chakra:** இது வயிற்றுப் பகுதியுடன் தொடர்புடையது. மனவலிமை (Power / will) உடையவர்கள். தங்களைத் தாங்களே வழிநடத்தி இலக்கை (Goal) சுலபமாக அடைவார்கள். எந்த நிலைமையானாலும் தங்கள் நிலையைத் தங்கள் கட்டுப்பாட்டில் வைத்திருப்பார்கள். ஜனத்திரள் மத்தியிலும் நல்லுணர்வுடன் (Good feeling of dignity) இருப்பார்கள். ஆக்ரோஷமாகவும் (Aggresive) செயல்படக் கூடியவர்கள். இந்தச் சக்கரம் திறக்கப் பட்டவர்களிலிருந்து வெளிவரும் ஒளிக்கதிர் மஞ்சள் (Yellow ray) நிறம் உடையது.

4. **அனஹரா (யம் - காற்று) Anahata / Heart Chakra:** இது இருதயப் பகுதியைச் சார்ந்ததால் இருதயச் சக்ரா எனவும் அழைக்கப்படுகிறது. இது அன்பு, நேசம், இணக்கம், கருணை, காருண்யம், பரிவு (Love, compassion, harmony, caring, endearment...) போன்றவைகளுடன் தொடர் புடையது. மக்களால் நேசிக்கப்படுவார்கள். இவர்களும் மக்களை நேசிப்பவர்களாக இருப்பார்கள். இந்தச் சக்கரம் திறக்கப்பட்டவர்களிலிருந்து வெளிவரும் ஒளிக்கதிர் பச்சை (Green ray) நிறம் உடையது.

5. **விசுத்தா (கம் - ஆகாயம்) Visuddha / Throat Chakra:** இது தொண்டைப் பகுதியைச் சார்ந்தது. இது பேச்சு, சொற்பொழிவு, உபதேசம், போதனை போன்றவற் றுடனும், தன்னை வெளிப்படுத்துதலுடனும் (self - expression and communication) தொடர்புடையது. இவர்கள் தங்களை உணர்ந்தவர்களாகவும், தங்கள் இருப்பை (being), சுயத்தை அறிந்தவர்களாகவும், இருப்பார்கள். இந்தச் சக்கரம் திறக்கப்பட்டவர்களிலிருந்து வெளிவரும் ஒளிக்கதிர் நீல (Blue ray) நிறம் உடையது.

6. **அஜ்நா (ஓம்) Ajna / Brow / 3rd Eye Chakra:** இது நெற்றிப்புருவ மத்தியில் அமைந்துள்ளதால் இதை 3ஆவது கண் எனவும் அழைப்பர். இதுதான் சக்திமிக்க

நெற்றிக்கண் ஆகும். இக்கண்ணிற்கு மகத்தான சக்தி உண்டு. நுண்ணறிவும், உள்ளுணர்வும் (Intuition/ Perception) அற்புத சக்தியும் மிக்கவர்கள். பிரபஞ்சம் நன்கு அறிந்தவர்கள். எதிர்காலத்தை உணர்ந்தவர்கள். இந்தச் சக்கரம் திறக்கப்பட்டவர்களிலிருந்து வெளிவரும் ஒளிக்கதிர் இன்டிகோ (Indigo ray) நிறம் உடையது.

7. **ஸகஸ்ரரா Sahasrara / Crown Chakra:** இது மிகவும் உச்சமான சக்கரம். இது தலை உச்சியுடன் தொடர்பு உடையது. இது ஆன்மிகத்திற்கும், ஞானத்தின் (Spiritual and Wisdom) வெளிப்பாட்டிற்கும் உரியது. பிரக்ஞையை (Consciousness) தங்கள் கட்டுப்பாட்டிற்குள் வைத்து இருப்பார்கள். தங்கள் சுயத்தை (self), தங்கள் இருப்பை (Being) தங்கள் உயிர்த்தன்மையை அறிந்தவர்கள். பிரபஞ்சத்துடன் (Cosmic consciousness) தொடர்பில் இருப்பார்கள். இவர்கள் வெறுமைக்குள்ளால் (Emptiness) மனதைக் கடந்து சுயத்தைக் கடந்து அப்பால் (Non self) செல்பவர்கள். இந்தச் சக்கரம் திறக்கப்பட்டவர் களிலிருந்து வெளிவரும் ஒளிக்கதிர் ஊதா (Violet ray) நிறம் உடையது.



இந்தியப் பௌத்த மதத்தையும் இந்தியத் தற்காப்புக் கலையையும் வெளி நாடுகளில் பரப்புவதற்காக இந்தியாவிலிருந்து பிற நாடு களுக்கு முதலில் சென்றவரும் இவரே. அதே நேரத்தில் இந்தியா வின் நல்லெண்ணத் தூதுவராகவும், ஆன்மிகத் தூதுவராகவும் செயல் பட்டுக்கொண்டவர். இன்றுவரை ஒரு மனிதன் பல துறைகளுக்கு முன்னோடியாக இருந்தவரென்றால் அது போதிதர்மர் ஒருவரேதான். உலகில் இருந்த மிகப்பெரும் ஞானி இவர். ஆனால் இவரைப் பல ஏடுகள் குறிப்பிடும்போது மோடன், கிறுக்குப்பிடித்தவன், அகண்ட கண்காரன், நீலக்கண்காரன், பயித்தியக்காரன்,

பொல்லாதவன் என்றுதான் குறிப்பிட்டுள்ளன. போதிதர்மர் என்ற பெயர் மிக அரிதாகவே ஏடுகளில் குறிப்பிடப்பட்டு உள்ளன. இவரது வரலாறு எங்கும் முழுமையாக இல்லாமலும் முன்னுக்குப்பின் முரண்பாடு உள்ளதாகவும்தான் காணப் படுகிறது. காரணம் சாதாரண மனங்களின் புரிதலுக்குள் இவர் உட்படமாட்டார். இவர் சாதாரண மனங்களின் அறிதலுக் குள் உட்படாமல் எட்டமுடியாத உயரத்தில் மேலே நகர்ந்து செல்கிறார்.

■■

அத்தியாயம் 11

சீனாவில் நிலவிய 'யின்' 'யாங்' 'Yin' 'Yang' கோட்பாடுகளுடன் 'சான்' 'Chan'

இந்தியாவை ஆன்மிக நாடாகவும் (Land Of Spirituality), சீனாவைப் பண்பாடும் நாகரிகமும் (Land Of Ethics and Civilization) கொண்ட நாடாகவும், மேற்கை பகுத்தறிவு (Rationale) கொண்ட நாடாகவும் உலக தத்துவ கலாச்சாரம் (Philosophical Culture of the World) பிரித்துப் பார்த்தது.



சீனாவின் தத்துவம், அரச நிர்வாகம், சட்டம், கலாச்சாரம் இவைகளின் முன்னோடி கொன்பியூசியஸ் (Confucius) ஆவார். அவர் தத்துவத்தில் சோக்கிரடீசுக்கு சற்றும் குறைந்தவர் அல்ல. அக்காலத்தில் லா-சூ (Lao-Tzu) வும் சீனாவில் இருந்தார். இவர் லாசி (laozi), எனவும் லாவோட்சு (Laotzu) எனவும் அழைக்கப்பட்டார். கொன்பியூசியஸ் போலவே இவரும் ஒரு சிறந்த தத்துவ மேதையும் சிந்தனையாளரும் ஆவார்.



Lao-Tzu

லாசி (லாவோட்ஸ்) அவர்கள் தாவேஜிஸம் (Daoism / Taoism) கோட்பாட்டை நிறுவினார். இது ஒரு மதமாக மருவியது. இவர் வாழ்வின் அடிப்படை 'யின்' ('Yin') என்றார். அதாவது மென்மை (softness) பெண்மை (Femininity) சாந்தம் (Passiveness) இருண்மை (Darkness) என்கிறார். கொன்பியூசியஸ் வாழ்வின் அடிப்படையை 'யாங்'

('Yang') என்றார். அதாவது வலுமை (Strongness) ஆண்மை (Masculinity) சுறுசுறுப்பு (activeness) பிரகாசம் (Brightness) என்கிறார்.

கொன்பியூசியசின் கோட்பாடு அரச நிர்வாகத்தோடு தொடர்புடையது. லா-சூவின் கோட்பாடு இயற்கையுடன் சேர்ந்த வாழ்தலுடன் தொடர்புடையது. கொன்பியூசியசில் இருந்து 'Yang' தத்துவமும் லா-சூ விலிருந்து 'Yin' தத்துவமும் உருவாகின.

இவர்கள்; 5/6-ஆம் நூற்றாண்டு (BCE) பகுதியைச் சேர்ந்தவர்கள் எனக் கருதப்படுகிறது. லா-சூ சரித்திர சம்பந்தமான ஆவணங்களைச் சேகரித்து ஆவணப்படுத்துபவராக (Archivist) ஆரம்பத்தில் வேலை செய்தார். உலகத்தில் அக்காலத்தில் இருந்த புத்திசாலிகளில் இவரும் ஒருவர் ஆவார்.



இந்தப் பிரபஞ்சத்திற்கு 'யின்' (yin) 'யாங்' (yang) தான் குறியீடு எனச் சீன ஞானிகள் கூறுகிறார்கள். இந்தக் குறியீடு ஒரு வட்டமானது. இதன் சுற்றுக் கோட்டில் ஒரு வெள்ளை மீனும், ஒரு கறுப்பு மீனும் உண்டு. ஒரு மீனின் வாலை மற்ற மீன் கவ்வியபடி இணைந்து பூரண பிரபஞ்சமாக்கிறது. அரைவாசி வட்டம் வெள்ளை மீன் அடுத்த அரைவாசி வட்டம் கறுப்பு மீன், வெள்ளை மீன் 'யாங்' (Yang) இயற்கையில் ஆண்தன்மையும், கறுப்பு மீன் 'யின்' (yin) இயற்கையில் பெண்தன்மையையும் கொண்டிருக் கிறது. யின்னும் யாங்கும் ஒன்றிணைந்து எல்லாவற்றையும் படைக்கிறது.

இந்தப் பிரபஞ்ச அமைப்பில் நேர்நிலை (Positive) எதிர்நிலை (Negative) இல்லாமல் எதுவும் முழுமை பெற முடியாது. நேர் மின்னேற்றத்துடன் எதிர்மின்னேற்றம் சேர்ந்தால்தான் மின்சாரம் பெறமுடியும். Yin, Yang ஒன்றிணையும் பூரண ஒருமைப்பாட்டில்தான் வாழ்வு முழுமை பெறுகிறது.

லா-சூ (lao Tzu) கூறுகிறார்: சாதுக்கள் செயல் இல்லாமல் செயல்பட வேண்டும், சொற்கள் இல்லாமல் ஞானம் விளக்க வேண்டும். இதன் பொருள் இயற்கையுடன் சேர்ந்து வாழ்தல், அது அது அதன் வழியில் செல்லல், "இயற்கைக்கு முரணாக செயல்படாதீர்கள்" என்கிறார். இதன் பொருள் இயற்கையுடன் சேர்ந்து வாழுதலாகும்.

லா-சூவின் சீடனிடம் சீனப் பேரரசர் கேட்டார்: "ஒரு மறைஞானியின் அற்புதங்களைப்பற்றி கேள்விப்பட்டேன். அவர் தண்ணீரின் மேல் நடப்பார், வானில் பறப்பார், அவரைப் புவியீர்ப்பு விசையானது ஒன்றும் செய்வதில்லை என்றார். உன் குரு லா-சூ இது போன்ற அற்புதங்களைச் செய்வாரா?" என்று கேட்டார்.

லா-சூவின் சீடன்: ஆம், அவரால் செய்யமுடியும்.

அரசர்: அவர் இதுவரை எந்த அற்புதங்களையும் செய்யவில்லையே!

சீடன்: "அவர் அதிசயங்களையும், அற்புதங்களையும் செய்யும் தகுதியைப் பெற்றுள்ளதால்தான் அதைச் செய்யாமல் இருப்பதற்கான தகுதியையும் பெறுகிறார்" என்றார்.

புத்தர் எந்த அற்புதங்களையும் செய்யவில்லை. அதுவே சிறந்த அற்புதமாகும்.

லா–சூ (lao Tzu) கூறுகிறார்: ''மிகமிக ஆதிகாலத்தில் மக்கள் இயல்பாக இருந்தபோது அதாவது இயற்கையாக இருந்தபோது புத்திசாலிகளாக இருந்தார்கள். 'மதமே' இல்லாத காலத்தில் மக்கள் இயல்பாக இருந்தபோது சொர்க்கத்தைப் பற்றியும் நரகத்தைப் பற்றியும் நினைக்கவே இல்லை. சொர்க்கத்தையும் நரகத்தையும் காட்டுவதே மனப்பிரிவினைதான், ஆதிகாலத்தில் நீதி நெறிச் சிந்தனைகளும் உருவாகவே இல்லை. அப்பொழுது எந்த விதியும் சட்டமும் இல்லை. சட்டத்தினால்தான் மக்கள் குற்றவாளியாகி விட்டார்கள். நீதியை வலியுறுத்துவால் ஒழுக்கம் குறைந்தது. அதிகமான பண்பாட்டின் விளைவுகள் மீறல்களையும், குற்றங்களையும் உருவாக்கியது'' என்கிறார்.

கொன்பியூசியஸ் 3300 விதிகளை எழுதியிருந்தார். அவர் ஒரு சட்டவாதியும் ஆவார். லா-சூ எல்லா விதிகளையும் நீக்கினார். "எந்த விதியும் இல்லாமலிருப்பதே விதியாகும் என்றார்" மேலும் லா-சூ அவர்களின் முக்கியமான போதனை "எது சுலபமானதோ அது சரியானது, எது சரியானதோ அது சுலபமானது" (Easy is Right, Right is Easy).

கொன்பியூசியஸ் - லாசூ சந்திப்பு:

கொன்பியூசியஸ் : எது நல்லது, எது கெட்டது என்று வரையறுத்துச் சொல்லுங்கள்.

லா-சூ : வரையறைகள் குளறுபடிகளை உருவாக்கும், வரையறை என்பது பிரித்துப் பார்த்தல், வரையறை செய்வது உண்மையற்றதை உருவாக்கும். வரையறை செய்ய வேண்டாம். எது நல்லது எது கெட்டது என்று சொல்லாதீர்கள்.

கொன்பியூசியஸ் : என்ன சொல்கிறீர்கள்? எப்படி மக்களை ஒழுக்கமுள்ளவர்களாகவும், நல்லவர்களாகவும் இருக்கக் கற்றுக் கொடுப்பது?

லா-சூ : வழிகாட்டுதல்கள் குழப்பங்களை உருவாக்கும், வழிநடத்த நீங்கள் யார்? அவரவர்களை அவரவர்களிடமே விட்டு விடுங்கள்.

கொன்பியூசியஸ் : எப்படி?

லா-சூ : இயற்கையே போதுமானது, எந்த ஒழுக்கமும் தேவையில்லை, திணிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், முறைகள், ஒழுக்கப் பயிற்சிகள் தேவையில்லை. வெகுளித்தன்மை போதுமானது, இயற்கை போதுமானது. ''புரிந்துகொள்வதற்கு ஒருவருடைய மனம் தடையாக உள்ளது. ஒழுக்கத்தை யாரும் உருவாக்க முடியாது. ஒழுங்கு அதன் இயல்பாகவே உள்ளது. அது எப்பொழுதும் இருக்கிறது. ஒருவர்

ஒழுங்கை உருவாக்க முயற்சிசெய்யும் போது அவரே சீர்குலைவை உருவாக்கு கிறார். ஒழுங்குகள் இயல்பாக இருக் கின்றன. ஆதிகாலத்தில் மதங்கள் இல்லை, சட்டம் இல்லை, கோட்பாடு இல்லை, அக்காலத்தில் எது எதுவாகவோ அது அதுவாகவே இருந்தது. மதங்கள் தோன்றிய பின் மதச்சண்டைகள் தோன்றின, சட்டங்கள் உருவாக்கப்பட்ட பின் சட்ட மீறல்கள், ஒழுங்கீனங்கள் தோன்றின. ஒழுக்கம் வலியுறுத்தப்பட்ட பின்பு ஒழுக்கக் கேடுகள் தோன்றின'' என்றார்

(கொன்பியூசியஸ் திரும்பிச் சென்றார். அவரது சீடர்கள் கேட்டனர். "என்ன நடந்தது? லா-சூ அபாயமானவர் நீங்கள் அவரைச் சந்திக்காதீர்கள்" என்றார்.)

ஞானி கொன்பியூசியசிடம் சீடன் கேட்டான் "மகிழ்ச்சியாக பேரானந்தத்துடன் இருப்பது எப்படி?"

ஞானி : மகனே உன் கேள்வி வினோதமாக இருக்கிறது. ஒவ்வொருவராலும் அப்படித்தான் இருக்க முடியும். பேரானந்தமாகவும், மகிழ்ச்சியாகவும் இருப்பதற்கு கல்வியோ, பயிற்சியோ, பிரார்த்தனையோ, தியானமோ, வழிமுறைகளோ, கோட்பாடுகளோ எதுவுமே தேவையில்லாத ஒரு இயற்கை நிலை அது.

சீடன் : மகிழ்ச்சியும் பேரானந்தமும் இயற்கைநிலை என்பது புரிகிறது. அதற்கு எந்தவித முயற்சியும் தேவையில்லைதான். அது நம்மை அறியாமல் நம்முடன் இருக்கிறது. அதனுடன் தான் நாம் என்றும் இருக்க வேண்டும் என்பது புலனாகிறது என்றார்.

நீதிபதியாக நியமனம்:

சீனச் சக்கரவர்த்தி லா-சூவை நீதிபதியாக நியமித்தார். அந்தப் பதவிக்குத் தான் தகுதியில்லை என்றார். சக்கரவர்த்தி ஏற்கவில்லை. லா-சூ 'உங்கள் சட்டத்திற்கும் அமைப்பிற்கும் நான் சரியான ஆள் இல்லை' என்றார். சக்கரவர்த்தி

"உங்களை விட்டால் வேறு ஆள் கிடையாது" என்றார். நீதிபதியாக லா-சூ நியமிக்கப்பட்டார்.

ஒரு நிகழ்வு

முதல் நாள் ஒரு வழக்கு விசாரணைக்கு வந்தது. அந்த நகரிலேயே முதல் தரமான செல்வந்தரின் அரைப் பங்கு செல்வங்களைக் கொள்ளையடித்த ஒரு திருடனை காவல் துறையினர் கைது செய்து கொண்டுவந்து நீதிமன்றத்தில் நிறுத்தினார்கள். நீதிபதி லா-சூ முன் விசாரணைக்கு வந்தது. அவர் திருடனுக்கு 3 மாதச் சிறைத்தண்டனையும் செல்வந்தருக்கு 6 மாதச் சிறைத்தண்டனையும் வழங்கித் தீர்ப்புக் கூறினார். இதைக் கேட்ட செல்வந்தர் "நான் செல்வங்களை இழந்துள்ளேன். இது என்ன தீர்ப்பு" என்றார்.

நீதிபதி லா-சூ "நீங்கள் அளவுக்கு மீறிய செல்வங்களை சேர்த்து வைத்துள்ளீர்கள். உங்கள் பேராசைதான் திருடர்களை உருவாக்கியது, அதற்கு நீங்கள்தான் பொறுப்பு, குற்றம் உங்களுடையது. அதனால் அதிக காலம் சிறைவாசம் இருக்கவேண்டும்" என்றார். செல்வந்தர் "நான் போய் சக்கரவர்த்தியைப் பார்க்க வேண்டும். இந்த நாட்டின் சட்டத்தின்படி, நிர்வாக அமைப்பின்படி, அரசியல் அமைப்பின்படி உங்கள் தீர்ப்பு பிழை" என்றார். லா-சூ "அரசியல் சாசனத்தின்படி, சட்டத்தின்படி, நிர்வாக விதிமுறைகளின்படி பிழையாக இருக்கலாம். காரணம் அவைகளே பிழையானவை. அவைகள் அரசருக்காக உருவாக்கப்பட்டவை. மக்களுக்காக அல்ல. அதற்கு நான் பொறுப்பல்ல, நீங்கள் போய்ச் சக்கரவர்த்தியை பார்க்கலாம்" என்றார்.

செல்வந்தர் சக்கரவர்த்தியிடம் சென்று "அந்த ஆளை அந்தப் பதவியிலிருந்து நீக்குங்கள். அந்தப் பதவிக்கு அவர் பொருத்தமான ஆள் இல்லை. அவர் மிகவும் ஆபத்தானவர். உங்களையும் சிறைக்கு அனுப்பிவிடுவார். இவரிடம் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும்" என்றார். சக்கரவர்த்தி லா-சூக்கு கூறினார் "நீங்கள் இந்தப் பதவிக்கு தகுதியான ஆள் இல்லை" அதற்கு லா-சூ "நான் தகுதியான ஆள் இல்லை என்று உங்களுக்கு நான் கூறியதைத்தான் நீங்கள் எனக்கு கூறுகிறீர்கள். உண்மை என்னவென்றால் உங்களது

சமூகம், உங்களது சட்டம், உங்களது அரசியல் சாசனம் ஆகியவை சரி இல்லை. உங்களுக்குத் தேவை பிழையான ஆள், சரியான ஆள் அல்ல. தவறானதொரு வழிமுறையை நடத்திச் செல்வதற்கு உங்களுக்கு ஒரு தவறான ஆள் தேவை" என்றார்.

புத்தர், மகாவீரர், கன்பியூசியஸ், லா-சூ போன்றவர்கள் இருந்தபோது உலகம் இயல்பாகவே இருந்தது. மக்கள் தொகை மிகக் குறைவு என்பதும் ஒரு காரணமாக இருக்கலாம், அக்காலத்தில் வாழ்ந்தவர்கள் சக மனிதர்களது உணர்வுகளுக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்ததாகவும் இருக்கலாம். இவை எல்லாவற்றையும் விட மிகமுக்கிய காரணமாக புத்தர், மகாவீரர், லா-சூ போன்ற மகான்கள் எல்லாம் தங்கள் கருணையை, அலைவரிசையாக வெளி உலகத்துக்கு அனுப்பிக்கொண்டிருந்தவர்கள். இவர்களது கருணை, செயற்பாடுகள் பிறரது எதிர்மறை எண்ணங்களை செயலிழக்க செய்யவல்லவைகளாக இருந்தன. மகான்கள், ஞானிகள், சித்தர்கள் போன்றவர்கள் எதைச்செய்தாலும் மனதின் வழியாகச் செய்வதில்லை. அதனால் எல்லாம் இயல்பாகத் தானாகவே நிகழ்ந்தன. அவை எல்லாம் செயல்கள் இல்லை. அவர்கள் அதைப்பற்றி நினைப்பதே இல்லை. ஆனால் எல்லாம் நிகழ்கின்றன.

லா-சூ தன் சத்தியத்தைப் பற்றி என்றும் கூறப் போவதில்லை, எழுதப்போவதில்லை என்பதில் உறுதியாக இருந்தார். அரச தொந்தரவு காரணமாகச் சீனாவை விட்டு வெளியேற விரும்பினார். இவரது ஞானம் விளங்கிக் கொள்ள முடியாதது. இவர் குழந்தையாகப் பிறந்தபோது இவரது வயது 80 என்று கூறுவார்கள். அவ்வளவுக்கு சிறுபிராயத்தில் ஞானத்தில் முதிர்ச்சி அடைந்தவராகக் காணப்பட்டார். பிறக்கும் போதே நரைமுடி, வயதான பின்பு மனிதர்கள் இல்லாத இயற்கைச் சூழலில் இறக்க



விரும்பினார். எருமை மாட்டில் பிரயாணம் செய்து சீன எல்லையை அடைந்தார். சீன கன்கூ (hanku) மலைப்பிரதேச எல்லையை கடக்க முயற்சி செய்யும்போது சீனச் சக்கரவத்தி ஆணை பிறப்பித்தார். "லா-சூவை தடுத்து நிறுத்துங்கள், அவரைப் போகவிடாதீர்கள், அவரது ஞானத்தை அறிய வேண்டும்" எல்லைக் காவலர்களால் தடுத்து நிறுத்தப்பட்டார்.

நீங்கள் அறிந்த ஞானத்தை எழுதித் தாருங்கள், உங்களைப் போகவிடமாட்டோம் என மிரட்டினர். 2-3 வாரங்களுக்குள் திருக்குறள் வடிவில் எழுதி ஒப்படைத்தார். 81 சூத்திரங்கள் எழுதியிருந்தார். இந்த ஞான நூல் 'தாவோதிஜிங்' என்று அழைக்கப்படுகிறது. ஞானத்தை எழுதிக் கொடுத்த பின்பு போக அனுமதிக்கப் பட்டவர் பின்பு சீனா திரும்பி வந்ததாகத் தெரியவில்லை. அவர் இந்தியா சென்று போதிகயாவைத் தரிசித்து பின்பு பழனியில் இருந்த சித்தர் போகர் இவர் எனச் சில ஏடுகள் கூறுகின்றன. இவர் சமாதி நிலையிலும் கூடுவிட்டுக் கூடு பாய்ந்தும் பல வருடங்கள் வாழ்ந்ததாக அறியவருகிறது.



கைது செய்யப்பட்டு கைதியாக தடுப்புக் காவலில் வைத்து மிரட்டிப் பலவந்தப்படுத்தி, ஆயுத முனையில் பயமுறுத்தி எழுதிப்பெறப்பட்ட ஞானநூல் உலகிலே 'தாவோதிஜிங்' (Daodejing) ஆகத்தான் இருக்க முடியும்.

லா-சூ [லாசி] அவர்கள் 'சத்தியத்தைச் சொல்லிவிட முடியுமென்றால் அது சத்தியமாகாது' என முதல் வாக்கியமாக அந்த ஞான நூலில் எழுதியுள்ளார். உலகிலே எந்த ஞானநூலும் இப்படி ஆரம்பித்ததில்லை. சொல்லில் சொல்லிவிடமுடியாது அப்படிச் சொன்னால் அது சத்தியமாகாது என்பதுதான் அதன் பொருளாகிறது. சத்தியம் என்பது சொல்ல முடியாதளவிற்கு மிகவும் எளிமையானது என்றுதான் லா-சூ சொல்லாமல் சொல்கிறார். இதே கருத்துப் படத்தான் சமண மத ஞானி மகாவீரரும் 'உண்மை' மிக எளிமையானது என்கிறார். தேவையில்லாமல் வார்த்தைகளைப்

பிடித்துக் தொங்கத் தேவையில்லை என்பது இதன் கருத்தாகிறது. ஒரு 'உண்மை' எளிமையாக இல்லை என்றால் அது 'உண்மை'யாக இருக்க முடியாது. இதற்கு அறிவு வேண்டியதில்லை, உண்மைக்குத் தர்க்கம் வேண்டியதில்லை. உண்மை என்றும் எளிமையானதுதான். உண்மைகளை மனம் சந்தேகிக்கிறது. 'உண்மை' இவ்வளவு எளிமையானதாக, இவ்வளது சாதாரணமானதாக இவ்வளது இலகுவானதாக இருக்கமுடியுமா என மனம் கேள்வி கேட்கிறது. இந்த மனம் ஒரு விசித்திரமானதுதான். 'உண்மை' உண்மைதான், 'சத்தியம்' சத்தியம்தான்.

இஸ்லாமியர்கள் 'குரான்' கூறுவது உண்மை என்கின்றனர், யூதர்கள் தங்கள் புனித நூல் 'ரல்மட்' (Talmud) கூறுவது உண்மை என்கின்றனர். கிறிஸ்தவர்கள் "பைபிள்' கூறுவது உண்மை என்கின்றனர். இந்துக்கள் 'பகவத்கீதை, வேதம், உபநிடதம்' கூறுவது உண்மை என்கின்றனர். பௌத்தர்கள் 'தம்மபதம்/திரிபீட' கூறுவது உண்மை என்கின்றனர், சமணர்கள் தங்கள் புனிதநூல் 'கல்பசூத்திரா' கூறுவது உண்மை என்கின்றனர். தாவோஸிற் 'தாவோதிஜிங்' கூறுவது உண்மை என்கின்றனர். சூஃபிகள் 'நூல்கள் எல்லாம் அடங்கிய நூல்' கூறுவது உண்மை என்கின்றனர். சீக்கியர் 'கிராந்த்' கூறுவது உண்மை என்கின்றனர். சென் பௌத்தர்கள் 'கோன்' கூறுவது உண்மை என்கின்றனர். சொராஸ்திரியர் தங்கள் புனித நூல் 'அவஸ்ரார்' கூறுவது உண்மை என்கின்றனர்.

எது உண்மை? என்பது இரத்தக் களரியாகி கொலைவெறியாகிவிட்டது. இந்த 'உண்மை' உலகில் மதப் போராகிவிட்டது. இந்த 'உண்மை'யின் பேரால் கொலைகள், கொள்ளைகள், கீற்பழிப்புகள், கலவரங்கள், வன்முறைகள், அழிவுகள், நாசகாரவேலைகள் எத்தனை, எத்தனை நிகழ்கின்றன. இதற்குப் பெயர் 'புனிதப்'போர்.

எவருக்கும் தெரிந்திருப்பதும், தெரிந்துகொள்ள முடிந்ததும் அவைகள் எல்லாம் மனம் சார்புடையவையே. இதைப் புரிந்துகொண்டால் மனிதாபிமானம் உள்ளவராகவே என்றும் இருப்போம். பரந்த மனப்பான்மை கொண்டவராகி விட்டால் மற்றவர்களின் உணர்வுகளைப் புரிந்துகொள்ளலாம். "உண்மை"

எல்லையற்றது. இந்தப் பிரபஞ்சம் உண்மையால் நிரப்பப்பட்டுள்ளது.

'உண்மை' சத்தியம் எப்போதும் இலகுவானது. 'உண்மையில்' 'சத்தியத்தில்' எந்தச் சிக்கலும் இல்லை 'உண்மையும்' 'சத்தியமும்' என்றும் மிக எளிமையான தாகத்தான் இருக்கிறது, அதனால்தான் யாருக்கும் இதைப்பற்றி அக்கறையில்லை.

தாவோஸ்ம் (Taoism) தத்துவமாகி மதமாக மாறியது. தாவோ (Tao) என்றால் பாதை என்பது அதன் பொருள். இயற்கையுடன் சேர்ந்து இயல்பாக வாழ்தலையே இந்த மதம் வலியுறுத்துகிறது. இயற்கையையும் இயல்பையும் வலியுறுத்திய இந்த மதத்தினுள் காலப்போக்கில் மூடநம்பிக்கைகளும், மந்திரவித்தைகளும் கலந்து கலப்படமாகிவிட்டது. இம்மதம் காலப்போக்கில் மறைந்துவிட்டது. 'தாவோஸ்ம்'ன் சில தத்துவங்கள் சென் பௌத்தத்துடன் (Zen/Chan) கலந்து விட்டதாக வரலாறில் காணப்படுகிறது. சீனாவில் இதே காலப்பகுதியில் ஹான் (Huayen) தத்துவமும் இருந்தது, ஒரு காலப் பகுதியில் கொன்பியூசியசின் தத்துவம் வலுவடைய தாவோஸ்ம், பௌத்தம், எல்லாம் மறைந்துவிட்டன. **போதிதர்மா சென்ற பின்பு அங்கு உறக்க நிலையில் இருந்த பௌத்தம் உயிர்பெற ஏனையவை மறைந்துவிட்டன.**



சென்பௌத்தத்தின் முதலாவது குரு போதிதர்மர் (460-534 CE) என Eastern Philosophy என்னும் நூலில் காணப் படுகிறது. சென்மத பௌத்தம் போதிதர்மரில் ஆரம்பித்து பின்பு சீனாவில் வாழ்ந்த Huineng அவர்கள் 5-ஆவது குருவாகி காலப்போக்கில் 'Huineng Zen' என சீனாவில் அழைக்கப் பட்டது. ஜப்பானில் வாழ்ந்த ஞானி ரின்க்ஷஷாயின் பெயரில் ரின்ஷாய் சென் (Rinzai zen) என யப்பானிலும் அழைக்கப்பட்டது.

சென் பௌத்தம் (மஹாஜன பௌத்தம்) சீனா, ஜப்பான், கொரியா, வியட்னாம், ஆகிய நாடுகளுக்குள் ஊடுருவி

வேகமாக வளர்ந்தன. சீனாவில் நிலவிய 'yin' 'yang' கோட்பாடுகளுடன் போதிதர்மரால் விதைக்கப்பட்ட 'chan' (அல்லது) 'Zen' சேர்ந்துகொண்டது. கொன்பியூசியஸ் (confucius) லா-சூ அல்லது லா வோட்ஸ் (Lao-Tzu) இவர்களுக்குப் பின்பே போதிதர்மர் அவர்கள் சீனாவில் கால் பதித்தார். அங்கு அப்போது நிலவிய சோர்வு நிலையை தளர்த்தி புதிய உத்வேகத்தைக் கொடுத்தவர் போதிதர்மர் அவர்கள். அவர் விதைத்த ஞானம் அங்கு வேரூன்றிவிட்டது. மக்கள் போதிதர்மரின் சான்/சென் (Chan or Zen) தத்துவத்தின் ஊடாகச் செழிப்படைந்தார்கள். கொன்பியூசியஸின் தத்துவத் தினால் சோர்வடைந்திருந்த மக்களுக்குப் போதிதர்மர் விட்டமின் போலானார்.

Not thinking about anything is
Zen. Once you know this, walking,
sitting, or lying down, everything
you do is Zen.

~Bodhidharma

■■

அத்தியாயம் 12

தான் ஒரு மாபெரும் மகான் என்பதை அறியாத மாபெரும் மகான்



போதிதர்மர் போன்றவர்களைப் பற்றி தெரிந்துகொள்வது சிரமம். காரணம் அவர்கள் வரலாற்றின் ஒரு பகுதியாவதில்லை. மனித சமுதாயம் இயங்கும்போது அவர்கள் இயங்குவதில்லை. ஆசையின் மூலம் மனித குலம் இயங்கும்போது அவர் போன்றோர்கள் ஆசையின்மைக்குள் நுழைகிறார்கள். சமுதாயம் தேடும் வரலாற்றுக்குள் அவர்கள் போன் றோர்கள் வரமாட்டார்கள். ஏனெனில் காலத்தைக் கடந்து நித்தியத்தில் வாழ்வதால் இந்த நிலை ஏற்படுகிறது. நம்முடைய சாதாரண நிலையிலிருந்து பார்க்கும்போது அவர்கள் நமக்குப் புலப்படமாட்டார்கள். இவர் விஷயங் களை மறைப்பதற்காகச் சொற்களைப் பாவிப்பவர் அல்ல 'உண்மையைப்' பேசுவதற்காகவே சொற்களைப் பாவிப்பவர்.

போதிதர்மர் அற்புதங்கள் நிகழ்த்தும் வல்லமை இருந்தும் அதைப் பயன்படுத்தாமல் இருப்பதென்பது மிகச்சிறந்த வல்லமையாகும். உண்மையில் இது மிகவும் கடினமானது. அற்புதம் எதுவும் நிகழ்த்தாமல் இருப்பதே அனைத்திலும் சிறந்த அற்புதமாகும். ஓர் அற்புதத்தை மிகப் பெரிய அற்புதம் என்று எண்ணுவதைவிட அது குறித்துச் சற்றும் நினையா

திருப்பதும் அற்புதமே. அறநெறி என்ற பெயரில் அறிவுக்குப் பொருந்தாத எதையும் ஏற்காதவர்.



போதிதர்மர் ஒரு தூய தங்கச் சுரங்கம். அவர் விளங்கிக் கொள்ளப்பட வேண்டியவர், அவர் அவதானிக்கப்பட வேண்டியவர், அவர் சொல்வதைக் கவனிக்க வேண்டும், அவரை உள் வாங்கிக் கொள்ளவேண்டும், போதிதர்மர் துணிச்சல் மிக்கவர். பயம் அறியாதவர், அபார ஆளுமை கொண்டவர், சக்திமிக்கவர், அவர் முன்னிலையில் மக்கள் அமைதியாகிவிடுவர், அவரது குரல் சிங்கம் கர்ஜிப்பது போலானது. அவரது பேச்சு நீர்வீழ்ச்சி போன்றது. தான் என்ன சொல்ல வேண்டுமோ அதைப் பயமின்றிச் சொல்லிவிடுவார். தன்னைப் பற்றி என்ன நினைப்பார்கள் என்ற எண்ணம் அறவே இல்லா தவர், அதைப்பற்றி அக்கறை கொள்ளாதவர். அவர் பேசும்



பொழுது ஒரே பூரண அமைதி நிலவும், போதிதர்மர் தனிமையில் பேசுவது போல் இருக்கும் அங்கு வேறு யாரும் இருப்பது போல் தோன்றாது.

சீனாவில் சோலின் (Shoalin) ஆலயத்திற்கு அருகாமையில் உள்ள குகை ஒன்றில்; சுவரைப் பார்த்துக்கொண்டேயிருப்பார். அங்குச் செல்பவர்கள் அவருக்குப் பின்னால் உட்கார்ந்திருப்பார்கள், அவர்கள் கேள்விகள் கேட்பார்கள். ஆனால் அவர் சுவரைப் பார்த்துத்தான் பதில் சொல்லிக்கொண்டிருப்பார். யார் அங்கு வருகிறார்கள், போகிறார்கள் என்பது போதிதர்மருக்குத் தெரியாது. கேள்வி கேட்பவர்களைத் திரும்பிப் பார்க்காமலே பதில் சொல்வார்.



கேள்வி கேட்பவர் யாராக இருந்தாலும் அக்கறையில்லை. என்ன கேள்வி கேட்டாலும் சுவரைப் பார்த்தே பதில் சொல்வார், கேள்விகள் கேட்பவர்கள் அவரது முதுகைப் பார்த்தபடி பினனால் இருப்பார்கள். சுவருடன்தான் பேசிக்கொண்டேயிருப்பார் போதிதர்மர். தன் சொந்த உட்பார்வையில் (Own insight) மாத்திரம் அக்கறைகொண்டவர், கேள்வி கேட்பவர்களில் அல்ல.

சுவரை உற்று நோக்கும் தியானம் (Wall Gazing Meditation):

போதிதர்மர் அவர்கள் சுவரை உற்று நோக்கும் தியானம் மேற்கொள்பவர். அவர் தனது அகண்டு விரிந்த கண்களால் ஒருவரை உற்று நோக்கினால் அந்தப் பார்வையைப் பெற்றவர்கள் தங்களுக்குள் 'உள்மாற்றம்' நிகழ்வதை உணர்ந்தனர்.

போதிதர்மர் ஆட்களைப்பற்றி பேசிக்கொள்ளாதவர், அப்படிச் சிந்திப்பது மில்லை, உண்மையைத்தான் சிந்திப்பார், உண்மையைப்பற்றித்தான் பேசுவார். அதனால்தான் தனது முன்னிலையில் யார் இருக்கிறார், யார் இல்லை என்பதைப்பற்றி அக்கறை கொள்வதில்லை, மனித இனம் மீது மதிப்பும், மரியாதையும், அன்பும், கொண்டவர். அதனால்தான் சில வேளைகளில் கடுமையாக நடந்து கொள்கிறார். கருணையின் மறுபக்கம் ஆவேசம், அன்பின் மறுபக்கம் கோபம். ஆவேசத்தைக் குறுக்கினால் அங்கே இருப்பது கருணை. கோபத்தைக் குறுக்கினால் அங்கே மிஞ்சுவது அன்பு.

ஆரம்பத்தில் (Shoalin Temple) சோலின் தேவாலயத்தினுள் தான் இருந்தார். அங்கிருந்த துறவிகளுடன் கடுமையாக நடந்துகொண்டதால் வெளியேற்றப்பட்டார். அதன் பின்பே அருகாமையில் இருந்த குகை ஒன்றினுள் போய் இருந்தார்.

கௌதம புத்தர் வரிசையில் ஞானம் அடைந்தோர் பலர் இருந்தபோதும் போதிதர்மர் அவர்கள் சீனா, ஜப்பான், கொரியா, வியட்னாம், தாய்லாந்து, திபெத், கம்போடியா, மலேசியா, சியாம், சுமாத்ரா, போன்ற நாடுகளில் மிகவும் பிரபல்யமாக விளங்குகிறார். அந்த நாடுகளின் மொழி அமைப்பே அதைச் சாத்தியமாக்கிவிட்டது. அதனால் அந்த நாடுகளில் போதிதர்மரை எளிதாகப் புரிந்துகொள்ளக் கூடியதாக இருக்கிறது. அவர் அந்த நாட்டு மனங்களில் ஊடுருவிவிட்டார். வித்தியாசமான மொழியமைப்பினால், போதிதர்மர் இந்த நாடுகளில் முக்கியத்துவம் பெற்றார் எனலாம்.

கடின உழைப்பும், விடாமுயற்சியும், சோம்பல் அற்ற சுறு சுறுப்பான உடல் செயற்பாடும் ஞானம் என்றார். முயற்சியையும், உழைப்பையும் ஞானம் எனப் போதிதர்மர் அவர்கள் கூறுவதால் சென்பௌத்த மதம் பரவியுள்ள சீனா, கொரியா, ஜப்பான் போன்ற நாடுகள் தொழில் வளம் மிக்க நாடாக இன்று உலகத்தில் உயர்ந்து நிற்கின்றன. அந்த ஞானத்தை முழுமையாக நம்புகிறார்கள். முயற்சியும், உழைப்பும் இயல்பாக மாறிவிட்டது.

புத்தர் வரிசையில் போதிதர்மர் அவர்கள் பௌத்தத்தின் 28-ஆவது குரு, இவருக்கு முன்பும் பின்பும் இருந்தவர்கள் யாரும் தெரியாமலேயே போய்விட்டார்கள்.

1. காசியப்பா (Mahakasyapa), *2.* அனந்தா (Ananda), *3.* சனவசா (Sanavasa), *4.* உபகுப்தா Upagupta), *5.* தார்தகா (Dhrtaka), *6.* மிக்கா (Miccaka), *7.* வசுமித்ரா (Vasumitra), *8.* புதாநந்தி (Buddhanandi), *9.* புதாமித்ரா (Buddhamitra), *10.* பார்ஸ்வா (Parsva), *11.* புண்ணியாஸ் (Punyayasas), *12.* அனபோதி (Anabodhi), *13.* கபிமலா (Kapimala), *14.* நாகர்யுனா (Nagarjuna), *15.* கனதேவா (Kanadeva), *16.* குருலத்தா (Rahulata), *17.* சங்காநந்தி (Sanghanandi), *18.* சங்கயாசஸ் (Sanghayasas), *19.* குமாரத்தா (Kumarata), *20.* சயத்தா (Sayata), *21.* வாசுபந்து (Vasubandhu) *22.* மனோறித்தா (Manorhita), *23.* ஹக்லிநாஜாஸ் (Haklenayasas), *24.* சிம்கபோதி (Simhabodhi), *25.* வாசி-அசிற்றா (Vasi Asita), *26.* புண்ணியமித்ரா (Punyamitra),

27. பிரஜ்னதரா (Pranjnatara), *28.* போதிதர்மர் (Bodhidharma), 29. ஹியூகோ (Huike / Huiko), 30. செங்சான் SengT'san

சென் பௌத்தத்தின் ஸ்தாபகர் மகாகாசியப்பா அவர்கள். ஆனால் அவரைப் பற்றி மக்கள் தெரிந்துகொள்ள முடியாத அளவுக்கு அவர் இருந்து மறைந்துவிட்டார். போதிதர்மர் அவர்கள் தான் (Zen) சென் பௌத்தத்தை நிறுவியது போல சீனா, ஜப்பான், கொரியா, தாய்லாந்து, வியட்னாம், சியாம், சிங்கப்பூர், இந்தோனேசியா பர்மா, போன்ற நாடுகளில் நிலைத்துள்ளார். கௌதம புத்தருக்கு அடுத்து பெரிய ஞானியாக இவர் திகழ்ந்ததுதான் அதன் காரணம் ஆகிறது. அத்துடன் இவரது குண இயல்பும் இன்னொரு காரணமாகிறது. கடினப் போக்குடையவராகவும் மூர்க்கத்தனம், சீற்றம் கொண்டவராகவும், எளிதில் இணக்கம் காணாதவராகவும், அவர் இருந்தார். அவர் யாரையும் சாந்தப்படுத்த முயல்வதில்லை. உண்மையாக இருப்பவர், உண்மை பேசுபவர், உண்மையைச் செயல்படுத்துபவர். உண்மையைச் சிந்திப்பவர், இவரால் யாரும் காயப்பட்டால் அல்லது ஆறுதல் பெற்றால் எல்லாம் அவர் அவர்களைப் பொறுத்தது.

ஆறுதல் வார்த்தைகளைத் தேடிக் கண்டுபிடிப்பதில்லை. காரணம் ஆறுதல் வார்த்தை என்பது ஒருவித தாலாட்டு என்பதை அறிந்தவர். இதனால் போதிதர்மரை பயங்கரமாகப் பார்க்கும் காட்டுமிராண்டி மனிதராக ஓவியங்களில் வரைந்து விட்டனர். அவர் அப்படியானவர் இல்லை. மூர்க்கத் தனமானவர்தான் ஆனால் போலித்தனமான ஆறுதல் வார்த்தைகள் பேசத்தெரியாதவர். இவர் உண்மையை (Naked Truth) எதுவிதக் கலப்படமுமில்லாமல் அப்படியே அந்த உண்மையை நெற்றிக்கு நேர் கூறிவிடுவார். அச்சம், போலி, பொய் எதுவும் அறியாதவர். தெரிந்ததெல்லாம் 'உண்மை.' மனம் காயப்படக் கூறி அதன் மூலம் விழிப்புணர்வைத் தூண்டிவிடுவார். அதில் மறைந்திருந்த உண்மையைப் பலர் புரிந்துகொள்ளவில்லை.

போதிதர்மர் மிகவும் தனித்துவமானவர். அவரை விளங்கிக்கொள்வது எளிதல்ல. அவரது சீடர்களாக இருந்தவர்களில் சிலர் அவரைச் சரியாகப் புரிந்து

கொள்ளமுடியாமல் போனது துர்பாக்கியமே. இறுதி நாளில் தனக்குப் பின்னால் ஒருவரை நியமிக்கும்போது மிகவும் கண்டிப்பாக (Very Strict) நடந்துகொண்டார். உலகம் என்றும் கண்டிராத மிகவும் கண்டிப்பான ஆசான் இவர். இவரைப் போன்ற ஆசான் உலகில் வேறு எங்கும் இருந்தனரோ எனக்குத் தெரியாது. இவர் எவ்வளவு கண்டிப்பானவரோ அந்தளவு காருண்யம் மிக்கவர். அவரது கண்டிப்பு அனைத்தும் கருணையின் அடிப்படையிலே. கோயிலின் முன்றிலில் இருந்த வியாபாரிகளை இயேசு கிறிஸ்து நாதர் சாட்டையை எடுத்து துரத்தியது கோபத்தின் அடிப்படையில் இல்லை, அன்பின் அடிப்படையிலே. போதிதர்மரின் சீற்றம், ஆவேசம், அனைத்தும் அன்பின் அடிப்படையிலே.

தான் ஒரு பெரிய மகான் என்பதை அறியாதவர் போதிதர்மர் அவர்கள். உண்மையிலே ஞானம் உள்ளவர்கள் தங்களுக்கு ஞானம் உள்ளதை உணர மாட்டார்கள். பிறரால்தான் அதைக் கண்டுகொள்ள முடியும். ஒரு உண்மையான ஆன்மிக மனிதன் தனக்கு ஆன்மிக அனுபவம் இருப்பதை ஏற்றுக்கொள்ளமாட்டார். புத்தரிடம் அந்தப் பேரியக்க உண்மையைக் கூறுங்கள் என்றால் புத்தர் அமைதியாக உட்கார்ந்திருப்பாராம். உண்மையில் அந்த அனுபவத்தை அடைந்திருந்ததால்தான் அதை வார்த்தை களுக்குள் அடக்க முடியாது என்பதால்தான் அமைதி காத்தார். புத்தரிடம் உங்கள் தெய்விக அனுபவங்களைக் கூறுங்கள் என்றால் அதற்கு பதிலாக புன்முறுவல் பூப்பாராம். "ஒருவர் தன்னுடைய உள் உண்மை நிலையை அறிந்துகொண்டால் அதை அனுபவிப்பதைத் தவிர அதற்கு வேறு எந்த அத்தாட்சியும் இல்லை. யார் ஒருவர்தான் அந்த தெய்விக அனுபவங்களை அடைந்துவிட்டேன் என்று கூறினால் அவர் ஒரு மயக்கத்தில் தன்னைத் தானே ஏமாற்றிக்கொள்கிறார்' என தந்திரா முனிவர் (Tantric Sage) சஹாறா கூறுகிறார்.

ஒரு ஞானி தான் ஒரு ஞானி என்பதை அறியமாட்டார்.
ஒரு யோகி தான் ஒரு யோகி என்பதை அறியமாட்டார்.
ஒரு சுவாமி தான் ஒரு சுவாமி என்பதை அறியமாட்டார்.
போதிதர்மரும் அத்தகையவரே.

இவர் ஒரு மெய்ஞ்ஞானி, மருத்துவ விஞ்ஞானி, தற்காப்புக்கலையின் தந்தை, புத்தருக்கு ஈடான ஆன்மிகம் நிறைந்தவர். கிழக்கிற்குக் கிடைத்த அறிவியல் மேதை. உலகத்தில் எந்தவொரு நாட்டிலும் இவரைப் போன்று பல துறைகளில் ஞானம் நிறைந்த மாபெரும் மகான் இருந்ததே இல்லை.

போதிதர்மர் அவர்கள் சுயமாக ஓர் உண்மையைக் கண்டுபிடித்துவிட்டால் அதைத் துணிவுடன் தன்னுடைய கருத்து என்று சொல்லிவிடுவார். அது தவறாக இருக்கக் கூடும் என்ற எண்ணத்தினால் வேதங்கள், யோகா, உபநிடதங்கள், கீதை, பிரம்மசூத்திரம், மந்திரங்கள், பைபிள், குரான், தம்மபதம் போன்றவைகளை மேற்கோள்களாகவோ, ஆதாரங்களாகவோ அவைகளைத் தன் சுயதரிசனத்தில் கண்ட உண்மைக்கு நிரூபணமாக எடுப்பதில்லை.

வேதம், உபநிடதம், பிரம்மசூத்திரம், யோகா, மகா முத்திரை, குண்டலியம், போன்றவைகளை அருளியவர்கள் தங்கள் 'அறிதலை' நிலைநாட்ட ஆதாரங்களுக்கு எதையும் அழைக்கவில்லை. அவர்கள் போலவே போதிதர்மரும் தன் சுயதரிசனத்தில் அறிந்த உண்மைகளுக்கு யாரையும் சாட்சி யாக அழைக்கவில்லை.

பிறநாட்டில் உள்ளவர்கள் கூறிய கருத்தும் தன் கருத்தும் ஒருங்கே ஒத்துப்போகிறதென்று போதிதர்மர் சாட்சி கூறவில்லை. தன் 'அறிதலில்' தெளிவாக இருந்தார். இவர் கருத்து துணிச்சலானவை, அழுத்தமானவை, ஆதிஞானிகளுக்கு இருந்த துணிச்சல் இவருக்கு இருந்தது. ஆதி ஞானிகளுக்குப் பின் தன் 'அறிதலை' துணிந்து கூறியவர் இவரே. இவர் 'அறிதலுக்கு' இவர் 'அறிதலே' ஆதாரம், தனக்குத்தானே சாட்சியாக விளங்கினார், உண்மைக்குக் கவசம் தேவையில்லை. இவரது மனம் மரபிற்கும், சம்பிரதாயத்திற்கும், விதி முறைகளுக்கும், வழிமுறைகளுக்கும் கைதியாகவில்லை. அதனால் சுதந்திரமானவராகவே இருந்தார்.

ஆரம்பத்தில் இந்தியாவில் கற்ற பௌத்த போதனையில் மஹாஜன, சர்வஸ்ரிவடா, லங்கவத்தர சூத்திரா, இவைகள் ஊடாகவும், மேலும் யோகாகலை, அட்டமாசித்தி,

வர்மக்கலை, கலரிப்பட்டு இவைகள் ஊடாகவும் போதிதர்மர் தன்னை அடையாளப்படுத்தியிருந்தாலும் காலப்போக்கில் இவர் நகர்ந்து மேலே உயர்ந்து தன் சொந்த சுயதரிசனத்தில் உணர்ந்த உண்மையையும், அறிந்த ஞானத்தையும் வெளிப்படுத்திய மகான் இவர். இவருக்கு எந்த ஆதாரங்களும் மேற்கோள்களும் தேவைப்படவில்லை, காரணம் இவருக்கு சாட்சி இவரே, இவருக்கு மேற்கோள் இவரே, இவருக்கு ஆதாரம் இவரே.

தங்களைத் தாங்களே 'சுவாமி' என்றும் 'அவதாரம்' என்றும் 'கடவுள்' என்றும் பிரகடனப்படுத்துபவர்கள் ஏன் வேதங்களுக்கும், உபநிடதங்களுக்கும், யோகஞானத்திற்கும், பிரம்மசூத்திரத்திற்கும், கீதைக்கும், பைபிளுக்கும், மகா முத்திரைக்கும், குண்டலியத்திற்கும், 'குரானிற்கும்', தம்மபதத்திற்கும், புனித நூல்களுக்கும் பின்னால் பதுங்கிக் கொள்கிறார்கள்? இவர்களால் ஏன் தங்கள் சுயதரிசனத்தில் புத்தம் புதிய ஒன்றை வெளிப்படுத்த முடியவில்லை? மேற் கூறியவைகளை வெளிப்படுத்திய மகான்கள் எல்லாம் புதிதாகவே தங்கள் சுயதரிசனத்தில் வெளிப்படுத்தினார்கள். அந்த மகான்கள் எதன் பின்னாலும் மறைந்து கொள்ளவில்லை. அவர்கட்குச் சாட்சி அவர்கள்தான். அவர்கள் எந்தக் கோட்பாட்டையும், எந்த அறிவியலையும் தங்களுக்குச் சாட்சியாக இழுத்ததில்லை. சுயபிரகடனம் செய்யும் இந்த 'சுவாமிகளும்', இந்த 'அவதாரங்களும்' இந்த 'கடவுள்களும்' புராதன ஏடுகளில் கூறியவைகளைத்தான் கூறுகிறார்கள். எதையும் தங்கள் சொந்த அனுபவத்தில், சுயதரிசனத்தில் அறியவில்லை. அரைத்த மாவை அரைக்கிறார்கள், பழைய உணவை புதிய பாத்திரத்தில் வழங்குகிறார்கள். இங்குப் புதிது பாத்திரம்தான். வேறொன்றும் இல்லை. இது ஒரு ஆன்மிகத் தந்திரம். இவர்கள் ஏதாவது புதிய மாவைக் கூட அரைத்துத் தரவில்லை என்பதுதான் விந்தையிலும் விந்தை. இவர்கள் வெறும் சொற்பொழிவாளர்கள், ஆன்மிக வியாபாரிகள், ஆன்மிக தந்திரக்காரர்கள், வசூல்களையும், நன்கொடைகளையும், தங்கங்களையும் நோக்கிப் போகும் பேராசைக்காரர்கள், சுயதரிசனத்தில் எந்த அறிதலையும் காணாதவர்கள்.

இப்படியான சுவாமிகளாலும், அவதாரங்களாலும் போதிதர்மருக்குப் பல இடையூறுகள் நேர்ந்தபோதும் அவர் மிக உயரத்தில் நகர்ந்துகொண்டேயிருந்தார். இவர்களால் அவரை எட்டித் தொடவேமுடியவில்லை. இவர் கிழக்கில் உதித்து கிழக்கில் மறைந்த ஞானசூரியன். இவர் எவரெஸ்ட் சிகரத்தைச் சிறிதாக்கிய உயர் ஞானச்சிகரம். இவர் தான் ஒரு மாபெரும் மகான் என்பதை அறியாத ஒரு மாபெரும் மகான் ஆவார்.

■■

அத்தியாயம் 13

தற்காப்புக் கலையின் தந்தை

போதிதர்மர் தரைமார்க்கமாகப் பிரயாணம் செய்தபோது பல கொடிய மிருகங்களிலிருந்து தன்னைப் பாதுகாக்க வேண்டியிருந்தது. அதனால் பல மிருகங்களின் குண இயல்புகளை அவதானித்து அதற்கேற்ப மிருகங்களை எதிர்கொள்ளும்போது அதன் குண இயல்புகளுக்கு ஏற்ப தன்னைப் பாதுகாத்துத் தப்பிக்கொண்டார். அவரது கரத்தில் எப்போதும் இருக்கும் விசேடமாக வடிவமைக்கப் பட்ட அந்தத் தற்காப்புக் கோலும் அவருக்கு உதவியது.

அந்த அனுபவங்களுடன் புலி, சிறுத்தை, குரங்கு, பாம்பு, நாரை ஆகிய இந்த 5 பிராணிகளின் குண இயல்பு களையும் சேர்த்து இந்தியா வில் தான் பெற்ற வர்மக் கலை, கலரிப்பட்டு, யோகா பயிற்சி, வச்சிரமுஸ்திக் கலை, பொக்கடோர் (Bokator) போன்ற கலைகளை மையமாக வைத்து ஷோலின் குவான் தற்காப்புக்கலையை உருவாக்கினார். இக்கலை ஆரம்பத்தில் Shaolin Quan Martial Art என அழைக்கப்பட்டது. இது பிற்காலத்தில் குங்-பு (Kung Fu) ஆக மாற்றமடைந்தது. நோக்கு வர்மக்கலையையும், தற்காப்புக்கலையான ஷோலின் மார்ஷல் ஆர்ட் (Shaolin Martial Art)ஐயும் சீனாவில் அறிமுகப்படுத்தினார். உலகில் கராத்தே கலையை முதன் முதலில் அறிமுகப்படுத்தியவர் இவரே.

பொக்கடோர் (Bokator):



பொக்கடோர் வலிமை மிக்க கம்போடிய தற்காப்புக் கலையாகும் (Cambodian Martial Art). இது இற்றைக்கு 1700 வருடங்களுக்கு முந்தையது. இந்தக் கலையை 'லபோக்கடோ' (Labokkato) என உள்ளூர் மக்கள் அழைத்தனர். பொக்கடோர் (Bokator) என்றால் சிங்கத்தை அடித்தல் (Pounding a Lion) என்ற கருத்தைக் கொடுக்கிறது.. கம்போடியாவில் சிங்கத்தின் அச்சுறுத்தல் அதிகமாக இருந்தபடியால் அதிலிருந்து தப்புவதற்காக உருவான தற்காப்புக் கலையே இது. வெறும் கரங்களால் சிங்கத்தை எதிர்கொண்டு மோதி முழங்காலால் வேகமாக ஓங்கி இடித்துக் கொல்லும் கலையாகும். அங்கோர் அரசர் காலத்திலே இக்கலை மேலோங்கி இருந்தது. இக்கலை வளர்ச்சிக்கு இந்தியாவின் தற்காப்புக்கலை (Indian Martial Art) முன்னோடியாக இருந்திருக்கிறது. உலகில் தற்காப்புக்கலையின் முன்னோடி இந்தியாவே. அங்கோரை முதலாவதாக அரசாட்சி செய்தது முதலாம் நூற்றாண்டைச் சேர்ந்த இராணி சோமா என்ற பெண்ணே.

Bokator தற்காப்புக்கலையில் முழங்காலால், முழங்கையால், தலையால் வேகமாக இடித்தல், மோதுதல், அடித்தல் போன்றவைகள் பிரதான யுத்தியாகவும் மூங்கில், தடி போன்றவைகளை ஆயுதங்களாகவும் குதிரை, நாரை, கழுகு போன்ற விலங்கினங்களின் அசைவுகளையும் இணைத்தே

இக்கலை வடிவமைக்கப்பட்டுள்ளது. இதில் கிட்டத்தட்ட 10,000 வித்தியாசமான யுத்திகள் நுட்பங்கள் (Techniques and styles) உள்ளன. முற்காலத்தில் ஹமூர் போராளிகள் (Ancient Khamer warriors) இந்தத் தற்காப்புக் கலையில் சிறந்து விளங்கினர். A.D. 800 காலப்பகுதியிலிருந்து கிட்டத்தட்ட 600 வருடங்கள் தென்கிழக்கு ஆசியாவில் அங்கோர் அரசர்களது 'கை' மேலோங்கி இருந்ததற்கு அவர்களது நீண்டகாலப் பாரம்பரியமான போர்க்கலையும் தற்காப்புக் கலையும் (Cambodians' Long Martial Heritage) காரணங்களில் ஒன்றாக இருக்கலாம்.

சர்வாதிகாரி Polpot ஆட்சிக்காலத்தில் (1975-1979) பாரம்பரிய Bokator தற்காப்புக்கலை விற்பன்னர்கள் Khmer rouge படையினரால் கொல்லப்பட்டனர். அக்கலை சம்பந்தமான ஏடுகளும் அழிக்கப்பட்டன. அதனால் Bokator தற்காப்புக் கலைப் பயிற்சியாளர்கள், அக்கலை தெரிந்தவர்கள் அயல்நாடான வியட்நாமிற்குத் தப்பி ஓடினர். Khmer Rouge வீழ்ச்சியின் பின்பு வியட்நாமியர் கம்போடியாவைத் தங்கள் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்தனர். அவர்களால் இத்தற்காப்புக்கலை முற்றாகத் தடை செய்யப்பட்டது.

கம்போடியாவிலிருந்து அமெரிக்காவிற்குத் தப்பி ஓடிய San Kim Sean என்பவர் இக்கலையை Hapkido என்ற பெயரில் அங்குப் பயிற்சி வகுப்புகள் நடாத்தினர். 1992-இல் கம்போடியா திரும்பிய அவர் Bokator தற்காப்புக் கலைக்குப் புத்துயிர் கொடுத்துப் பரப்பினார். அதன்பின்பே உலகத்திற்கு இக்கலை பற்றித் தெரியவந்தது. பிரம்மாவிற்கு மரியாதை செலுத்திவிட்டே Bokator பயிற்சியைக் கம்போடியாவில் ஆரம்பிக்கிறார்கள்.

பல்லவ மன்னர்களுள் Bokator கலை நிலவியது. போதிதர்மர் அவர்கள் Bokator கலையில் தேர்ச்சி பெற்றவராக இருந்தார். இந்தக் கலையையும் உள்ளடக்கியே ஷோலிங் குவான் தற்காப்புக்கலையை வடிவமைத்து சீனாவில் பரப்பினார். இலைமறை காய் போல் அரசர்கள் கைவசம் இருந்த தற்காப்புக்கலைகளை இணைத்து வலிமைமிக்க, சக்திமிக்க, ஆற்றல்மிக்க, புதிய தற்காப்புக் கலையாக பொதுமக்களுக்காக வடிவமைத்து உலகுக்கு

அறிமுகப்படுத்தியவர் போதிதர்மர் அவர்களே. தற்காப்புக் கலையின் தந்தையும் அவரே.

ஷோலின் குவான் தற்காப்புக்கலை (Shaolin Quan Martial Art)

போதிதர்மரால் ஷோலின் குவான் (Shaolin Quan) தேவாலயத்தில் தான் முதன் முதலில் ஷோலின் குவான் தற்காப்புக்கலை (Shaolin Quan Martial Art] ஒரு வடிவம் பெற்றது. இந்த தேவாலயம் 'வெய்' (Wei) அரசபரம்பரை ஆட்சியில் (386–534 A.D.) வட சீனாவில் ஹொனான் (Honan) மாகாணத்தில் நிர்மாணிக்கப்பட்டது. இந்தத் தேவாலயம் இன்றும் பிரபல்யமானதாக உள்ளது. அங்கிருந்த துறவிகள் சிறந்த ஆன்மிகவாதிகளாக இருந்தபோதும் உடல் வலிமை குன்றியவர்களாக இருப்பதால் கொள்ளைக்காரர்களின் தாக்குதலுக்கு உள்ளாகிறார்கள் என்பதை போதிதர்மர் உணர்ந்தார். இதனால் அவர்களுக்கு முதலில் யோகாசனப் பயிற்சியையும் பின்பு தற்காப்புக்கலையையும் பயிற்றுவித்தார்.

ஒக்கினாவா (Okinawa) தீவு:

வர்த்தகம் நிமித்தம் ஜப்பானின் தெற்குப்பகுதியில் உள்ள ஒக்கினாவா தீவைச் (Okinawa) சேர்ந்தவர்கள் சீனா சென்றபோது சோலின் தேவாலயத்தில் தற்காப்புக்கலைப் பயிற்சியைக் கண்டனர். அவர்கள் ஊடாக இந்தக்கலை ஒக்கினாத் தீவைச் சென்றடைந்தது. இத்தீவில் உள்ள மக்கள் ஜப்பானில் உள்ள சமூக அடக்கு முறைகளில் இருந்து தங்களைப் பாதுகாத்துக்கொள்ள இக்கலையைத் தங்களுக்குள் வளர்த்தனர் அப்போது ஜப்பானில் ஆயுத பாவனைகளுக்குத் தடை இருந்தது. சமுராய் வீரர்கள் (Samurai Warriors) மாத்திரம் ஆயுதம் பாவிக்கலாம், மற்றவர்கள் ஆயுதம் பாவிக்கக்கூடாது என்ற தடையினால் ஒக்கினா தீவு மக்கள் தங்களைப் பாதுகாக்க தற்காப்புக்கலையில் மிகுந்த ஆர்வம் காட்டினார்கள். சமுராய் வீரர்களால் ஒக்கினாவா மக்கள்

அடக்கப்பட்டார்கள். சமுராய் மக்களை எதிர்ப்பதற்கும் தங்களைப் பாதுகாப்பதற்கும் அவர்களுக்கு ஒரு மாற்று வழி தேவைப்பட்டது. சோலின் தேவாலய தற்காப்புக் கலையை மையமாக வைத்து தங்களுக்கு ஒரு தற்பாதுகாப்பை வடிவமைத்தார்கள். ஒக்கினா தீவிலுள்ள குக்கிராமங்கள், வீடுகள் தோறும் பயிற்சிகள் ஆரம்பித்தார்கள். அங்குள்ள ஒவ்வொரு கிராம மக்களும் தங்களது கிராமப் பெயரால் தங்களது தற்காப்புக் கலைக்குப் பெயரிட்டார்கள்.

சீனாவில் நீண்ட காலம் வசித்த ஜப்பானைச் சேர்ந்த சென்சிஹிகசியோணா (Sensei-Higashionna / Kanryo Higashionna) *1800* காலப் பகுதியில் தன் சொந்த இடமான ஒக்கினா தீவுக்குத் திரும்பினார். இவர் சீனாவில் இருந்தபோது தற்காப்புக் கலைப் பயிற்சியைப் பழகியிருந்தார் அவரது கிராமமான நாகா (Naha)வின் பெயரைச் சேர்த்தும் தங்கள் மொழியில் 'கைகளை'க் குறிக்கும் சொல்லான 'தே' ஐயும் சேர்த்து நாக-தே (Naha-Te) என்று தான் வடிவமைத்த தற்காப்புக் கலைக்குப் பெயரிட்டார். இது காலப்போக்கில் கோஜு-றியு (Goju-Ryu) தோன்றுவதற்கு அடித்தளமானது. *20*-ஆம் நூற்றாண்டு ஆரம்பத்தில் ஒக்கினா தீவும் ஜப்பானுடன் இணைக்கப்பட்டு அது ஒரு மாகாணமாகிவிட்டது.

Higashionna Kanryu Sensei

தற்போது ஜப்பான் பூராவும் பலவிதமான 'Te' இருப்பதால் தற்காப்புக்கலை சீனாவிலிருந்து வந்ததைக் குறிக்கும் சொல்லான 'கரா' (Kara) என்பதையும் சேர்த்து 'கராத்தே' (Kara-Te) என்ற பெயரைக் கொடுத்தார்கள். உலகம் பூராவும் தற்காப்புக்கலை பலவித மாற்றம் அடைந்து நவீனமயப் மான பெயர்களில்

படுத்தப்பட்டாலும் தற்காப்புக் கலையின் பிதாமகன் போதிதர்மர் அவர்களே!

Higashionna Kanryu Lineage



ஒக்கினாவா தீவு தற்காப்புக்கலையில் இன்றும் சிறந்து விளங்குகிறது. மகாபாரதக் கதையில் எப்படி துரோணாச்சாரியாரின் சிலைக்குமுன் அவரை மானசீகக் குருவாக ஏற்று ஏகலைவன் வில்வித்தை பழகினாரோ அதேபோல போதிதர்மரின் உருவச்சிலைக்குமுன் வணங்கி அவரை மானசீகக்குருவாக ஏற்று ஒக்கினா தீவில் அம்மக்கள் தற்காப்புக்கலையைப் பழகினார்கள், கோயில் அமைத்தும் வழிபடுகிறார்கள். அங்கு இவரை தருமா (Daruma) என்றும், தருமதேசி (Darumadeshi) என்றும் அழைக்கிறார்கள். இவர் அங்குதான் இறந்ததாக அந்த மக்கள் மத்தியில் இன்றும் ஒரு ஐதீகம் உண்டு.

■■

அத்தியாயம் 14

இலங்காவத்திர சூத்திர ஞானத்தைச் சீனாவில் விதைத்தார்

மகாயன பௌத்தத்தின் (Mahayana Buddhism) போதிசத்வாஸ் (Bodhisattvas) சூத்திரம் போலல்லாது இலங்காவத்திர சூத்திர (Lankavatras sutra) மிகவும் சிக்கலானது என்பர்

இந்த 'சூத்திரம்' சொற்பிரயோகத்தில் அல்லது சொற்களால் விளங்கப்படுத்தலில் அக்கறை கொள்ளாது உள்ளுணர்தலில் நம்பிக்கை கொள்கிறது. 'உண்மையை' உணர்தல் தன்னைத்தானே அறியும் மார்க்கமாகும் என்கிறது. செயற்படுங்கள், முயற்சியில்லாமல் செயற்படுங்கள் எனக் கூறுகிறது. அதாவது இயல்புத் தன்மையை வலியுறுத்துகிறது.



தனது பிரதான சீடனான ஹியூக்கிடம் (Huike) போதிதர்மர் கூறினாராம் "தான் சீனாவைக் கவனித்தபோது 'இலங்காவத்திர சூத்திரம்' இந்த நாட்டுக்குப் பொருத்தமானது, இதன் உட் பொருளை சீனமக்கள் விளங்கிக் கடைப்பிடித்தால் உலகைத் தாண்டிவிடுவார்கள். சீனாவிற்கு மிகப் பொருத்தமானது இந்த சூத்திரமே." போதிதர்மர் அவர்கள் ஹியூக்கிடம் இவ்வாறு கூறியதாக ஹியூக்கைப் பற்றிக் கூறும் ஏடுகளில் காணப்படுகிறது.

இலங்காவத்திர சூத்திரம் சொற்களில் அக்கறை கொள்ளாது செயல்களில் மாத்திரம் அக்கறை கொள்கிறது. அதாவது இயல்புத்தன்மையையும், இயல்பான செயலையும் வலியுறுத்துகிறது. தியானத்தைப் பற்றிய 'வழிகள் இரண்டு, செயல்கள் நான்கு' (Two entrances and four acts) என்ற நூலில் போதிதர்மரின் "கண் இமை மூடாமல் சுவரை உற்று நோக்கும் தியான முறையை (Wall-Gazing Meditation) மகாஜன பௌத்தத்தின் உயர் தியானமுறை எனக் குறிப்பிடப் படுகிறது. இவ்வாறு போதிதர்மர் அவர்களைப்பற்றிய குறிப்புகள் இங்கொன்றும் அங்கொன்றுமாகப் பரவலாகச் சிதறிக் காணப்படுகின்றன.

அமர்ந்து இருந்து தியானித்தலைச் (Sitting meditation) **சீனாவில் 'சாசன்'** (Zazen) **என ஆரம்பத்தில் அழைத்து காலப்போக்கில் இது** 'Chan' **எனவும் பின்பு சென்** (Zen) **ஆகவும் மருவிவிட்டது.** இது சென் பௌத்தமதம் ஆகி விட்டது. இதன் பிரதான குரு போதிதர்மரே. தியானத்தைக் கற்றுக் கொடுக்கும் பாடசாலைகள் 'சான்' பாடசாலை என்றும் 'இலங்காவத்திர பாடசாலை' என்றும் சீனாவில் அழைக்கப் படுகின்றன. போதிதர்மர் அவர்கள் ஒன்பது வருடம் உட்கார்ந்து இருந்து தியானம் செய்தபடியால் இவர் கால்கள் இல்லாதவர் என்று பலர் நினைத்து விட்டனர். இவரைப் பற்றிய ஓவியங்கள் கால்கள் இல்லாமல் அகண்ட கண்களுடன் இன்றும் வரையப்படுகின்றன. இவர் தியானத்திலிருப்பது போல முட்டை வடிவத்திலான சிறு 'தாமோ-பொம்மைகள்' (Ta-Mo Doll) கால்கள் இல்லாமல் ஜப்பானில் இன்றும் விற்பனை யாகின்றன. இதைப் பந்து போல ஆகாயத்தில் எறிய அது எறிந்தவரையே நோக்கித் திரும்பி வரக்கூடியது.

சிறுவர்களுக்கு மகிழ்வு ஊட்டும் விளையாட்டுப் பொம்மையாக இது உள்ளது. முட்டையின் அளவில் முட்டை வடிவமாக உள்ள இந்தச் சிறு பொம்மையை அசைத்துவிட்டால் தஞ்சாவூர்ப் பொம்மை போல ஆடிக் கொண்டேயிருக்கும். போதி தர்மருடைய அகண்ட விரிந்த கண்கள், கோரமான பார்வை கொண்ட முகஅமைப்பைக் கொண்டதுதான் அந்தத் 'தாமோ'ப் பொம்மைகள். அவை விரிந்த கண்களுடன் சுவரை உற்று நோக்கும் இவரது தியானநிலையை பிரதிபலிக்கின்றன.

■■

அத்தியாயம் 15

கௌதம புத்தரின் பாதையில் பயணித்தார் போதிதர்மர்

புத்தர் தனது 29-ஆவது வயதில் அரச மாளிகையை விட்டு வெளியேறினார். சிறந்த ஆன்மிக ஆசிரியர்களைச் சந்தித்தார். தன் சந்தேகங்களைத் தீர்ப்பதற்கு அவர்களை நாடினார். அவர்கள் கூறிய வழிமுறைகளை, போதனைகளைப் பின்பற்றினார். தனது ஆன்மிக ஆசிரியர்களை விட திறம்பட அவற்றை வாழ்வில் கடைப்பிடித்தார். அவரது ஆசிரியர்கள் கூட அந்தளவுக்கு இதயசுத்தியுடன் ஈடுபட்டிருக்க மாட்டார்கள். அந்தளவுக்கு புத்தர் தன்னை அர்ப்பணித்து 'உண்மை'யை அனுபவிக்க, உணரத் தலைப்பட்டார். தனது ஆன்மிக வழிகாட்டிகள், வேத, உபநிடதப் பண்டிதர்கள் எல்லோரும் கூறியபடி ஒழுகியும் எதுவும் நடைபெறவில்லை. ''நான் ஆரம்பத்தில் எப்படி ஒன்றுமே தெரியாத அறிவிலியாக இருந்தேனோ அதேபோலவே இப்போதும் இருக்கிறேன். கற்றுக்கொண்ட வழிமுறைகள் மூலம் என் 'இருப்பை', 'நான் யார் என்பதை', 'உண்மையை' உணரவும் முடியவில்லை, அதே நேரத்தில் விழிப்புணர்வையும் தரவில்லை'' என்றார் புத்தர்.

புத்தர் சந்தித்த ஆசிரியர்கள் :

இவரது தேடலைப் பார்த்த இவரது ஆசிரியர்கள், தங்கள் அறியாமையை நினைத்து வெட்கப்பட்டனர். ஏனெனில் அவர்கள் தாங்கள் அப்படியான ஒரு தேடலை நினைக்காதவர்கள். அவர்கள் தாங்கள் படித்து, வாசித்து, மனனம் செய்து கொண்டவற்றிலிருந்து பிரசங்கங்களும், சொற்பொழிவுகளும், போதனைகளும் செய்தனரேயொழிய எதையும் அனுபவ ரீதியாக உணர்ந்தவர்கள் அல்லர். புத்தர் அனுபவ ரீதியாக உணரத் தன் தேடலில் இறங்கினார். இப்படியான ஒரு மாணவனை அவர்கள் எதிர்பார்க்கவில்லை. முடிந்தவரையில் புத்தரின் கேள்விகளுக்கு அவர்கள் பதில்கூற முடியாமல் மழுப்பியே வந்தனர். ஆறு வருடங்களாக ஒரு ஆசிரியரிடமிருந்து வேறொரு ஆசிரியரிடம், பின்பு பிறிதொரு ஆசிரியரிடம் இவ்வாறே ஆசிரியர் தேடல் தொடர்ந்து கொண்டேயிருந்தது.

அவர் சந்தித்த ஆசான்களில் சிலர் உடலை வருத்துவதாலும் (Torturing the body), உணவை ஒறுத்தலாலும் (abstainig from food) ஞானமடையலாம் என்றார்கள். தீமிதித்தல் (Fire walking), நீரின்மீது சப்பாணிகொட்டிக் கொண்டு மிதந்தபடியே தியானித்தல் (Floating on water with crossed legs), ஒற்றைக்கால் தியானம் (Standing on one leg), தலைகீழாக நிற்றல் (Standing on Head), நித்திரை விழித்திருத்தல் (Vigilance without sleeping), மந்திரம் ஓதுதல் (Chanting of mantras), போன்றவைகளை ஆசான்களின் வழிநடத்தலில் இதய சுத்தியுடன் திறம்படச்செய்தார். ஆசான்கள் திகைப்புற்றனர். சித்தார்த்தர் தேடும் 'உண்மையை' அவர்களால் புரிந்துகொள்ள முடியவில்லை. 'உண்மையை' உணர அது மார்க்கமில்லை என்பதை விரைவிலேயே உணர்ந்துகொண்டார்.

பிறிதொரு ஆசானிடம் சென்றார். 'எண்ணங்களை நிறுத்துதல் (stopping Thoughts) மூலம் மனதில் பீடித்துள்ள கவலை, துன்பம், துக்கம் போன்றவைகள் நீங்க அதியுயர் அமைதி அடையலாம் (Supreme joy of tranquillity) என்றார். இது எதுவுமே சிந்திக்காமல் இருப்பதற்கான (Mediation to think nothing) தியானம் என்றார் ஆசான். வேறொரு ஆசான்

'விவாதத்தில் (Debating skills) வெற்றி அடைவதன் மூலம் ஞானம் அடையலாம்' என்றார். எதுவுமே இவர் தேடும் 'உண்மையை' அறியும் பாதையைக் காட்டவில்லை.

புத்தர் காலத்திலிருந்த மகா ரிஷிகளான அலரா-கலமா (Alara Kalama) ஒன்றுமற்ற நிலையில் (meditation in the state of nothingness) தியானம் செய்யக் கற்றுக்கொடுத்தார், உத்றகா-இராமபுத்திரா (Udraka -Ramaputra) மனதில் எண்ணங்கள் எழாமல் எண்ணங்கள் வீழ்ச்சியடையும் தியானத்தைக் கற்றுக் கொடுத்தார். இத் தியானங்களினால் மன அமைதியடைந்தார். ஆனால் இவை ஒரு மனநிலை (state of mind) என்பதால், அவ் ஆசான்களிடமிருந்து வெளியேறி உண்மையை அனுபவித்து உணரத் தலைப்பட்டார். புத்தருடைய தேடலே அதுதானே!

புத்தர் காலத்திலிருந்த மிகப் பெரும் ஆன்மிகக் குருவை சந்தித்தார். அவர் புத்தருக்குக் கூறினார் ''நீ உன் நேரத்தை வீணாக்குகிறாய், எந்த ஆசிரியராலும் உன் கேள்விகளுக்குப் பதில் கூற முடியாது. நீயாக அனுபவித்து அறிந்துகொள்ள வேண்டும், உன் மனதை நீ கவனி, அதைத் தவிர வேறு எந்த பாடமோ போதனைகளோ, வழிகாட்டலோ என்னிடம் இல்லை'' என்றார்.

கோட்பாடு, வழிபாடு, விரதம், கட்டுப்பாடு, அனுட்டானம், விதிமுறைகள் அனைத்தையும், கடந்த 6 வருடங்களாகப் பின்பற்றி எதையும் அறியவோ உணரவோ முடியாமல் ஒரு தேக்க நிலையில் காலம் கடந்துவிட்டது. இறுதியாகச் சந்தித்த ஆன்மிகக் குரு கூறியதை மீண்டும், மீண்டும் நினைவுபடுத்திக்கொண்டார் அந்த வாலிபரான சித்தார்த்தர். (இவர் ஞானமடைந்தபின் கௌதமபுத்தர் என அழைக்கப்பட்டார்.) அந்த ஆன்மிகக் குரு இவரது உள்ளார்ந்தத்தையும், பக்குவ நிலையையும் உணர்ந்து இவரை மாணவராகச் சேர்த்துக்கொள்ள மறுத்துவிட்டார். ''உன் மனதை உன்னால்தான் கவனிக்க முடியும், இதற்கு அனுஷ்டானம், சடங்கு, சம்பிரதாயம், நெறிகள், விதிமுறை, கோட்பாடு என்று எதுவும் தேவையில்லை. இவைகள் எல்லாம் கோட்பாடுகளை நாடும் மனம் உடையவர்களுக்குத்தான், உனக்கில்லை, உன் மனதைக் கண்காணித்து உன்னையே நீ

அறிந்து கொள். மனதைக் கடந்து மனமற்ற வெறுமைக்குள் பிரவேசிக்க உன்னால்தான் முடியும். நீ ஞானம் அடையும்போது உன் கேள்விகளுக்கான பதில்கள் உனக்குக் கிடைத்துவிடும், ஞானமடைய எந்த விதிகளும், முறைகளும், கோட்பாடுகளும், பயிற்சிகளும், வழிமுறைகளும் இல்லை'' என்று கூறினார்.

நீ எந்த மத நம்பிக்கையையும் சாராதே!
நீ எந்தக் கோட்பாட்டையும் தழுவாதே!
நீ எந்த ஏட்டையும் நாடாதே!
நீ 'உண்மையாக' இருப்பதே உன் உண்மையான 'உண்மை'!





பீகாரிலுள்ள நிரஞ்சனா ஆற்றங்கரையில் உள்ள போதிமரத்துக்குக் கீழ் நீண்ட காலமாக அமர்ந்திருந்தார். தன் மனதைக் கண்காணித்து தன்னை உணர ஆரம்பித்தார். அங்கே மரங்களை வணங்கும் வழக்கம் இருந்தது. சுஜாதா என்ற பெண்மணி தான் கருவுற்றதும் அந்த மரத்திற்கு உணவு படைப்பதாக ஒரு நேர்த்தியை வைத்திருந்தாள். தான் கருவுற்றதால் உணவுடன் போதிமரத் தடிக்குச் சென்றார். இது ஒரு பௌர்ணமி தினம், நிலா ஒளி பிரகாசமாக இருந்தது. அந்த மரத்துக்கு கீழ் ஒருவர் அமர்ந்திருப் பதைக் கண்டார். நிலா ஒளியில் தகதகவென்று ஜொலித்துக்கொண்டிருந்தார். தான் வணங்கும் மரத்தின் கடவுள் இவர்தான், கடவுள் தன் நேர்த்திக்கடனை ஏற்க வந்திருக்கிறார் என நினைத்து மகிழ்ந்தார், வீழ்ந்து வணங்கினார்.

சித்தார்த்தர் ஏற்கனவே விரதம் மேற்கொண்டிருந்தபடியால் சற்றுப் பசியுடன் பலவீனமானவராகவும் இருந்தார். அந்த ஆறு வருடத்தில் அன்றுதான் ஒரு பூரண உணவு உட்கொண்டார். துறவிகள் இரவில் உண்பதில்லை, ஆனால் இவர் அன்று உண்டார். ஆன்மிக ஆசிரியர் நீ "உன் மனதைக் கண்காணி'' என்று கூறியிருந்தார். அன்றிலிருந்து விரதம், அனுஷ்டானம், விதிமுறைகள் எல்லாவற்றையும் படிப்படியாகத் துறந்துகொண்டிருந்தார். அத்துடன் துறவறத்தையும் துறக்கத் தொடங்கியிருந்தார். அன்று உணவு உட்கொண்டு ஓய்வு நிலையில் இருந்தார், நிம்மதியாகத் தூங்கினார். ஆழந்த தூக்கத்திலும் தன்மனதை அவதானித்தார், உடல் உறக்கத்தில், மனம் கடந்து, அதற்கும் அப்பால் சென்றார். தன் இருப்பை (Authentic being) அறிந்தார். அவர் ஞானமடைவதற்கு முன்பு பிராமணர்கள் இவரைப் பின்பற்றுபவர்களாக இருந்தார்கள். தீண்டாமை (untochables) பெண்ணான சுஜாதா கொடுத்த உணவை இவர் உட்கொண்டதால் சித்தார்த்தரை விட்டு விலகிச் சென்றார்கள்.

பொதுவாக மார்க்கவாதிகள் ''சித்தார்த்தர் 6 வருடங்கள் கடும் தவம் இருந்ததால் படிப்படியாக ஞானம் அடைந்தார்'' என்று கூறுகிறார்கள் – ஆனால் போதிதர்மர் ''ஞானம் திடீரென்று ஏற்படும், ஞானத்திற்கு காரணம் இல்லை, அதற்கு பயிற்சி எதுவும் தேவையில்லை, ஞானம் எந்த நேரமும், எந்த சூழலிலும் திடீரென்று ஏற்படும்'' என்கிறார்.

போதிதர்மரும் புத்தர் போன்று தனது இளவரசர் அந்தஸ்தைத் துறந்தவர். தன் கேள்விகளுடன் பல ஆசான்களை அணுகியபோதும் பிரக்ஞதாராதான் நீ தியானம் மூலம் மனதைக் கடந்து செல்ல உன் கேள்விக்குப் பதில் கிடைக்கும் என்று வழிகாட்டியவர். நீயே நேரடியாக அனுபவிக்கலாம் என்றார். பல காலம் துறவியாக இருந்தாலும் போதிதர்மா திடீரென்று ஞானம் அடைந்தவர்தான். Zen மத ஸ்தாபகர் காசியப்பா திடீரென்று ஞானம் அடைந்தவர்தான்.

இயேசுகிறிஸ்து காலத்தில்தான் பௌத்தம் சீனாவை அடைந்தது. கௌதம புத்தரின் முன்னிலையில் ஞானமடைந்த முதல் ஞானி காசியப்பா சீனா சென்றாலும் அவர் மக்கள்

முன் செல்லவில்லை, அவர் மக்களை நாடவில்லை. அதனால் அவரால் அங்குப் பௌத்தம் பரப்ப முடியவில்லை.

கௌதம புத்தர் உடலை நீக்கி 1000 வருடங்களின் பின் சீனாவிற்குச் சென்று ஞானமடைந்த முதல் ஞானியாகப் போதிதர்மா அவர்கள் கருதப்படுகிறார். அதற்கு முதல் சென்றவர்கள் மதப் பிரச்சாரர்களும், தத்துவப் பேச்சாளர்களும் தான். அதனால் போதிதர்மரது விஜயம் சீனாவில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தியது. சீனாவிற்கு ஞானம் அடைந்தவர் செல்ல வேண்டும் என பிரக்ஜதரா (Pragyatara) எண்ணினார். அந்த மண்ணிற்குத் தேவை ஞானமடைந்தவரே. அந்த மண் ஞானத்தைப் பருகத் தயாராகியிருந்தது.

சீனா கொன்பியூசியசின் கருத்துக்களிலிருந்து விலகி கௌதமபுத்தரை நோக்கி நகர்ந்து கொண்டிருந்தது. ஞானம் என்பது படிப்படியாகத்தான் ஏற்படக்கூடியது என்ற அபிப்பிராயம் சீனாவில் நிலவியது. கௌதமபுத்தர் பல படிகளைத் தாண்டி ஞானம் அடைந்தவர் என்றும் 6 வருடங்கள் கடும் தவத்தில் ஈடுபட்டு ஞானம் அடைந்தவர் என்றும், விரதம் இருந்து பட்டம் பதவி சௌகரியங்களை, அரசாட்சியைத் துறந்து பல விதிமுறைகளை, ஒழுக்கங்களைக் கடைப்பிடித்துதான் ஞானம் அடைந்தவர் என்ற அபிப்பிராயம்தான் இன்றும் உலகத்தில் நிலவுகிறது. சீனாவிலும் அதே கருத்து நிலவியதில் ஆச்சரியமில்லை. அவர் அரண்மனையையும் சகல சௌகரியங்களையும் துறந்தது உண்மைதான், 6 வருடங்கள் கடும் தவமிருந்தது சரிதான், உணவு - உறக்கம் எல்லாம் துறந்தது, தன்னை ஒடுக்கியது எல்லாம் நிகழ்ந்தவைதான், ஆனால் அந்த 6 வருட பரிசோதனையைத் துறந்ததும் திடீரென்று ஞானமடைந்தார்.

புத்தர் ஞானத்தைப் படிப்படியாக அடையவில்லை 'திடீரென' அடைந்தார். அந்த 6 வருட கடும் தவத்தின் பலனாகத்தான் ஞானம் அடைந்தார் என்று கூறுவது விவாதமாகாது. அந்த 6 வருடங்களை அவர் வீணாக்கி விட்டார். பண்டிதர்களும், தத்துவ மேதைகளும், சாஸ்திரிகளும் (புத்தருக்கு) கூறியவை அனைத்தும் அவர்களது சொந்த அனுபவங்கள் அல்ல. தாங்கள் வாசித்து அறிந்தவைகள். ஆனால் சித்தார்த்தர் (புத்தர்) கோட்பாடுகளை

வாசித்து அறியவோ அல்லது அவற்றைக் கேட்டு மனனம் செய்யவோ விரும்பவில்லை. தனது சொந்த அனுபவத்தில் உணர முற்பட்டார். அவர் நாடிய அனைவரும் ஆன்மிக வழிகாட்டிகளும், ஆசிரியர்களும் ஞானம் அடைந்தவர்கள் அல்ல, சொந்த அனுபவத்தில் போதனை செய்யவில்லை. புத்தர் தன் முயற்சிகளைக் கைவிட்டு முயற்சியற்ற முயற்சியாக, இயல்பாக, தளர்வாக, இயற்கையாக இருந்தபோது ஞானம் அடைந்தார். திடீரென ஏற்பட்ட ஞானம்தான் இது. படிப்படியாகத்தான் ஞானம் அடைய முடியும் என்று சீனாவில் உள்ள பௌத்த போதனை கற்பிக்கும் பாடசாலைகள் கூறிக்கொண்டு இருந்தன. போதிதர்மர் அவர்கள் 'ஞானம்' திடீரென ஏற்படக்கூடியது என்றார்.

ஆன்மிகம் என்பது விரதம் கடைப்பிடித்தலில், தூங்காமல் விழித்திருத்தலில், எளிய ஆடைகள் அணிதலில், மதக்கிரிகைகள் செய்வதில் இல்லை. இவைகள் ஆன்மிகம் என்றால் இயற்கையாகவே எளிமையாக வாழும் ஏழைகள் 'ஞானம்' அடைந்தவர்களாக அல்லவா இருக்கவேண்டும். பிறர் தாங்கள் சில தினங்கள் உணவைத் தவிர்த்து விரதம் கடைப்பிடித்து எளிமையாக வாழ அதற்காக நடிக்கிறார்கள். இதன்படி பார்த்தால் இயற்கையாகவே அப்படி வாழும் உலகில் உள்ள அனைத்து ஏழைகள் அல்லவா சிறந்த மதவாதிகளாகவும், ஆன்மிகவாதிகளாகவும், ஞானிகளாகவும் இருக்கவேண்டும். உணவில், உடையில், ஆன்மிகம் தங்கவில்லை என்பதே இந்நூலாசிரியரின் அபிப்பிராயம்.

போதிதர்மர் கூறுகிறார் 'ஞானம்' உணவிலோ, உடையிலோ இல்லை. அதற்காகப் பயிற்சியும் செய்யமுடியாது. உங்கள் மனதைக் கண்காணியுங்கள், விபரீதமான எண்ணங்களுக்கு இடம் கொடாதீர்கள். அத்தகைய எண்ணங்கள் தோன்றும்போது அந்த எண்ணங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்காது விடுங்கள். அந்த எண்ணங்கள் தாங்களாகவே அழிந்துவிடும். மனதைக் கண்காணித்துவர மனதைக் கடந்து அப்பால் சென்றுவிடுவீர்கள். 'வெறுமை'யாகி விடுவீர்கள் என்கிறார். விரதங்களுடனோ, விதிமுறைகளுடனோ, கட்டுப்பாடுகளுடனோ, கோட்பாடுகளுடனோ, மதச் சடங்குகளுடனோ, கிரிகைகளுடனோ ஞானம் சம்பந்தப்பட்டதல்ல. 'விழிப்புணர்வுடன்', 'விழிப்புணர்வான செயல்களுடன்'

சம்பந்தப்பட்டது. 'பயிற்சிகளுக்கு' உட்பட்டதல்ல. வரையறைகள், முறைகள், விதிமுறைகள், வழிபாடுகளுடன் தொடர்புடையதல்ல. உங்கள் தனித்துவத் தன்மையை அழிக்காமல் உங்களுக்குள் ஊடுருவி உள்ளே செல்லுங்கள். உங்களை உணர்வீர்கள், உங்கள் இருப்பை அறிவீர்கள். நீங்கள் யார்? என்பதற்கு விடை கிடைத்துவிடும். உண்மையை அடைந்துவிடுவீர்கள். அந்த 'உண்மை' எதனுடனும் இணக்கம் காணமுடியாதது. அந்த 'உண்மை' எதனுடனும் ஒப்பீடு செய்யமுடியாதது. அந்த உண்மையை உணரத்தான் முடியும். அந்த ''உண்மையை'' உணரும் அனுபவத்தைச் சொற்களில் அடக்கமுடியாது. அந்த 'உண்மையை' விளக்க எடுக்கும் எந்தவிதமான முயற்சியும் அந்த 'உண்மை'யுடனான உயிரோட்டத்தை இழக்கச் செய்துவிடும்.

போதிதர்மர் சீனாவில் புத்தபகவானின் செய்திகளை நன்கு விதைத்துவிட்டார். அவர் ஊடாகப் புத்த பகவானைப் பார்த்தனர். போதிதர்மர் புத்த பகவானின் செய்திகளை சீனாவில் மாத்திரமல்ல தாய்வான், கொரியா, வியட்னாம், ஜப்பான் போன்ற நாடுகளிலும் வேரூன்றச் செய்தார். புத்தர் ஞானமடைய முன்பு சித்தார்த்தராகச் சொன்ன செய்திகள், சித்தார்த்தர் ஞான மடைந்த பின்பு புத்தராகச் சொன்ன செய்திகள், அந்த இரண்டு செய்திகளும் புத்தருடைய கூற்றுத்தான். ஆனால் ஞான மடைந்த பின்பு கூறியவற்றுக்குத்தான் நாம் முக்கியத்துவம் கொடுத்துக்கொள்ள வேண்டும்.



ததகத்தா அல்லது ததகற்றா (Tatha gata)

கௌதம புத்தர் இதைக் கூறும்போது அதற்கு இரண்டு கருத்துக்களைக் கொடுக்கிறது.

1. ஆனந்தமோ, துன்பமோ எது நடந்தாலும் ஆனந்தத்தில் குதூகலிக்காமலும் துன்பத்தில் துவண்டு போகாமலும் எல்லாமே அப்படி அப்படித்தான் (Suchness) என்று அவைகளைச் சாதாரணமாக எடுத்துக்கொள்ளல்.

2. எப்படி வந்ததோ அப்படிப் போய்விட்டது (Thus came, thus gone) எது எதோ அதன்படியே நடக்கின்றன. ஏற்றுக்கொள்ளுங்கள்.

மேற்கூறிய இரண்டு வசன அமைப்பும் வித்தியாசமாக இருந்தாலும் அந்த இரண்டும் ஒரே விதமான அனுபவத்தைக் கொடுக்கிறது. அதுபோல அப்படி வாழந்தவர்கள் எமக்கு விட்டுச்சென்ற அனுபவம் 'பொறுமை' (Coolness) 'அமைதி' (Calmness), 'சாந்தம்' (Tranquillity), 'நிசப்தம்' (Silence) போன்றவையாகும்

இந்த உலகத்தில் நாம் எல்லோரும் தெரிந்துகொள்ள வேண்டிய மிகப் பெரும் செல்வம் 'நிசப்தம்' ஆக இருப்பதே!

ஒருவர் ஒரு மதப்பிரிவைச் சார்ந்தவராக இருந்தால் அல்லது ஒரு கோட்பாட்டைச் சார்ந்தவராக இருந்தால் அல்லது ஒரு மரபைச் சார்ந்தவராக இருந்தால், அவர்களால் தாங்கள் சார்ந்ததற்கு மாறாகத் தங்கள் கோட்பாடுகளுக்கு எதிராக தங்கள் மரபை மீறி எதுவும் சொல்லவும் முடியாது, செயற்படவும் முடியாது. அவர்கள் தங்களை அந்த வட்டத்தின் ஊடாகத்தான் பார்ப்பார்கள். இத்தகைய பார்வைதான் இன்று உலகில் நடைபெறும் மதப்போர்களுக்கும் இரத்தக்களரிக்கும் காரணமாகிற்து.

புத்தரும் போதிதர்மரும் கூறுகிறார்கள்:

எதைப் பயிற்சி செய்தாலும் அது மனதின் ஊடாகத்தான் செல்ல வேண்டும். பயிற்சி மூலம் அடையக்கூடியதெல்லாம்

அவை மனதின் உற்பத்திதான். பயிற்சியினால் அடைய முடியாதது 'ஞானம்.' மனம் மறைய ஞானம் ஏற்படும். மனதினால் ஏற்படும் எதுவும் மறக்கக்கூடியது, மனதினால் ஏற்படும் எதுவும் காலப்போக்கில் ஆற்றலை இழக்கலாம். மனம் மறைந்து மனதைக் கடந்து மனதிற்கு அப்பால் ஏற்படுவது ஞானம். மனதிற்கு அப்பால் ஏற்படுவதால் ஞானநிலை தொடர்கிறது. மனதிலிருந்து தோன்ற முடியாதது ஞானம். மனம் மறைய ஞானம் ஒளிர்விடும். ஞானம் – ஒளியாகவும், மனம் – அறியாமையாகவும், ஞானம் – அறிவாகவும், மனம் – இருட்டாகவும் (Darkness) மாறுகிறது.

மனைவி, பிள்ளை பெற்றோர்கள், சகோதரர்களைத் துறந்து, குடும்பத்தைத் துறந்து, உறவைத் துறந்து, சௌகரியங்களைத் துறந்து, சொத்துக்களைத் துறந்து, இருப்பிடங்களைத் துறந்து, உணவைத் துறந்து, உடையைத் துறந்து, உலகத்தைத் துறந்து, அனைத்தையும் கைவிட்டு ஒதுங்கினாலும் துறக்கப்பட்ட அனைத்தும், கைவிடப்பட்ட அனைத்தும் கண்ணுக்குள் இருக்கும். குகைக்குள் போகலாம், மலைச் சிகரத்துக்குப் போகலாம், வனாந்தரத்துக்குப் போகலாம், மனித நடமாட்டமற்ற தனித் தீவுக்குப் போகலாம். பார்வை உலகம் (Visual World), எங்குச் சென்றாலும் அங்கேயிருக்கும். ஒளி கசியாத இருட்டுக்குள் இருந்தாலும் அந்த இருட்டு ஊடகமாக மாறிப் பார்வையாகிவிடும். கண்ணை மூடிக் கொண்டிருந்தாலும் மனஉலகம் தன் வேலையை செய்து கொண்டிருக்கும். அறம், அருள், ஆன்மிகம் என்பன எதிர்பார்ப்பு எதுவுமற்ற நிபந்தனையற்ற, தன்னையே அறியாத ஒரு 'பகிர்தல்' ஆகும். எது இருக்கிறதோ அந்த இருப்பைப் பகிர்தல் வேண்டும். எதுவுமேயில்லையென்றால் இல்லாமலிருப்பதில் ஏதாவதொன்று இருக்கும். அதைப் பகிர்ந்துகொள்ளுங்கள். பகிர்தல் (Sharing) அழகானது. பொதுச் சேவை என்பது ஒரு பகிர்தல்தான், அதாவது நேரத்தை, ஆற்றலை, அறிவை, பொறுமையை, அர்ப்பணிப்பை எல்லாம் சேவை ஊடாகப் பகிர்ந்து கொள்ளுதல்தான். Charity என்பதும் ஒரு பகிர்தல் ஆகும்.

அறியாமை எங்கிருந்து வருகிறது எனப் புத்தரைக் கேட்டார்கள். 'இருட்டு' எப்படியிருக்கிறதோ அதுபோல

அறியாமையும் இருக்கிறது. வெளிச்சம் ஏற்ற இருட்டு மறைகிறது. வெளிச்சம் மறைய இருட்டு அங்கே காணப்படுகிறது. இருட்டு எப்படி இருக்கிறதோ அதுபோலத்தான் அறியாமையும் இருக்கிறது என்றார். 'அவை', 'அவை' அவ்வாறே (Suchness) என்ற கருத்துப்படக் கூறுகிறார். ஏனெனில் இருட்டு எப்போதும் அப்படியே இருக்கிறது. வெளிச்சம்தான் வருகிறது, போகிறது. அதே கேள்வியைப் போதிதர்மரிடம் சீனாவில் கேட்டார்கள். போதிதர்மர் இக்கேள்விக்கு உடனடியாகப் பதில் சொல்லவில்லை. தன் சீடர்களையோ அல்லது சீன மக்களையோ குழப்பத்தில் ஆழ்த்த விரும்பாமல் இருக்கலாம். அதே நேரத்தில் புத்தரின் பதிலையும் இவர் கூறவில்லை. அவர்கள் அதற்கான பதிலைப் பெறப் பக்குவமாகும்போது கூற விரும்பியிருக்கலாம், அதனால்தானோ என்னவோ காலப்போக்கில் பதில் அளித்து இருந்தார். (இதன் பதில் அத்தியாயம் 19-இல் உள்ளது.) **ஞானம் அடைந்தவர்களுக்கு எல்லாம் தெரியும் என்ற எதிர்பார்ப்பு பொதுவாக மக்களிடம் இருக்கிறது. ஞானம் என்பது தன்னைத் தான் அறிவது. ஞானம் அடைந்தவர் 'தன்னைத்தான் அறிவார். ஞானம் என்பது எல்லாம் தெரியும் என்பதல்ல'.**



போதிதர்மர் சீனாவில் தீபம்காரா (Dipamkara) வைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளார். புத்தர் சிறு பையனாக இருக்கும்போது வாழ்ந்த ஞானி அவர். ஞானம் அடைந்த ஞானியான அவரைச் சிறுவன் சித்தார்த்தர் (புத்தர்) பார்த்தார். இந்த ஞானிக்கு முன் அமைதியாக உட்கார்ந்து இருப்பவர்களுக்கு அவரிலிருந்து வெளிவரும் ஒளி ஊடுருவுகிறது (எரியும் மெழுகுத்திரியில் இருந்து அடுத்த மெழுகுதிரிக்கு ஒளியேற்றுவது போல இந்த ஒளியைப் பெற்றார்கள்). ஒளி ஊடுருவப் பெற்றவர்கள் மாற்றம் அடைந்தவர்களானார்கள். அந்த ஒளி அவர்களில் இருந்த இருளை நீக்கியது என்றார். Dorjechang டோர்ஜிசாங், தீபம்காரா காலத்தில் வாழ்ந்த பிறிதொரு ஞானம் அடைந்த ஞானி. இவரும் கௌதம புத்தருக்கு முந்தியவரே.

விகாரைகள் நிர்மாணித்தல், உணவு அளித்தல், வாசனை ஊதுபத்திகள் எரித்தல், மலர் எறிதல், விரதம் கடைப்பிடித்தல், ஸ்தூபியைச் சுற்றிச் சுற்றி வலம் வருதல், காலை மாலை நடுநிசி என வணங்குதல் போன்ற முறைகள் ஞானம் அடைய உதவும் என்ற கருத்து நிலவுகிறது. புத்தரோ, போதிதர்மரோ எந்த ஞானமடைந்த மகான்களோ தாங்கள் ஞானமடைவதற்கு உதவியாக அன்னதானம் வழங்கவில்லை, ஆலயங்கள் நிர்மாணிக்கவில்லை, வாசனைப் பத்திகள் எரிக்கவில்லை, விரதம் அனுஷ்டிக்கவில்லை, எந்த தூபியையும் சுற்றிச் சுற்றி வலம் வரவில்லை.

சீனாவில் தனது இறுதி நாளன்று போதிதர்மா தன்னை வணங்கவேண்டாம் தான் 'எதுவும் இல்லை' என்றார். புத்தர் இறக்கும்போது "தனக்குச் சிலை அமைக்க வேண்டாம்", "தன்னை வணங்க வேண்டாம்", "தான் கடவுள் இல்லை" என்று கூறியிருந்தார். புத்தரின் வேண்டுகோள் புறக்கணிக்கப் பட்டு புத்தருக்குச் சிலை அமைத்து வணங்கி கடவுளாக்கப் பட்டுவிட்டார். வேதங்களைக் குப்பை என்றார் புத்தர். அப்படிக் கூறுவதற்கு மிகப் பெரும் துணிச்சலும், தெளிவும் இருக்கவேண்டும். 'அவதாரம்', 'கடவுள் மனிதாராகப் பிறத்தல்' போன்ற கருத்துக்களை முற்றாக நிராகரித்தார்.

'ஆலயங்கள், சிலைகள், கடவுளர் கதைகள் எல்லாம் தந்திரமான மனதினால் உருவாக்கப்பட்டவை' என்கிறார் புத்தர். 'வழிபாடு, ஆலய நிர்மாணங்கள் மனிதர்களை எங்கேயும் இட்டுச் செல்லாது' என்றார் போதிதர்மர். ஆனால் இன்று புத்தரின் வேண்டுகோளுக்கு மாறாகவே சில விகாரைகள், வழிபாடுகள் எல்லாம் புத்தரின் பேரால் நடைபெறுகின்றன. 'தனக்குச் சிலை, கோயில், தன்னை வழிபடுதல் வேண்டாம்' என்றார். வழிபடுதல் உங்களை எங்கும் இட்டுச்செல்லாது என்றார். கௌதம புத்தரும் போதிதர்மரான புத்தரும் அதையே கூறினார்கள். போதிதர்மரை சீனாவிலும் ஒக்கினாவா தீவிலும் (ஜப்பானில்) வழிபடுகிறார்கள். கௌதம புத்தர் 'Organized Religion' ஒழுங்காற்றப்பட்ட மதம், ஸ்தாபன ரீதியான செயல்பாடு, அதற்கான கட்டமைப்புகள் ஏற்படக்கூடாது என்பதற்காகத் தனக்குச் சிலை அமையாதீர்கள், தன்னை வணங்காதீர்கள், தான் 'கடவுள்' இல்லை என்றார். மதம் வியாபாரமாகக்

கூடாது, மதம் அரசியலாகக் கூடாது, மதம் மதங்கொள்ளக் கூடாது என்பதற்காகத் தனது பிரசங்கங்களில் மனதிற்கு அப்பால் சென்று ஒருவர் தன்னை அறியும் தியானத்தைப் பற்றியே புத்தரும் போதிதர்மரும் கூறினார்கள்.

ஸ்தாபன ரீதியாக ஒழுங்காற்றப்பட்ட மதம் (Organized Religion) எப்போதும் நீங்கள் துன்பத்தில் விழுவீர்கள் என்று பயம் காட்டிக்கொண்டே இருக்கும், அவற்றிலிருந்து மீட்சி பெற, காப்பாற்றப்படப் பரிகாரம் கூறும். மதம் வியாபாரமாகிவிடக்கூடாது, மதம் மக்களைச் சுரண்டக்கூடாது என்பதற்காகவே புத்தர் கட்டமைப்புகள் ஊடாக மதம் வளரக்கூடாது எனக் கூறி வந்தார்

'நன்கொடைகள் உங்களைக் காப்பாற்றும்' என்பதே இப்போது தாரக மந்திரமாகிவிட்டது. போதிதர்மா காலத்தில் மதம் கட்டமைப்புடன், ஒழுங்காற்றப்பட்ட மதமாக (Organized Religion) 'பௌத்தமும்', 'சென்'னும் படிப்படியாக மாறாது தடுக்க முடியவில்லை. காலப்போக்கில் Spiritual ஆக இல்லாமல் Scriptural ஆக மாறிப் பின்பு மதம் அரசியலாகவே (political religion) மாறிவிட்டது.

குழந்தை பிறந்த திகதியிலிருந்து திருமண வைபவம், பின்பு மரணம் வரை, அதன் பின்பு அதற்காப்பாலுள்ள கிரிகைகள் இப்படி பூசாரிகளின் பிடியிலிருந்து விடுபட முடியாமல் இருந்த மக்களைப் புத்தர் மீட்டெடுத்தார். புத்தர் இறக்க, பூசாரிகள் ஆதிக்கம் தலைதூக்கி மக்கள் மீண்டும் பூசாரிகளின் பிடிக்குள் நழுவி விழுந்தார்கள்.

புத்தமதம் இந்திய மண்ணிலிருந்து விரட்டப்பட்டது. பௌத்தர்கள் தாக்கப்பட்டனர், வெளியேற்றப்பட்டனர், கொல்லப்பட்டனர். புத்தர் ஞானம் அடைந்த நினைவாக அமைக்கப்பட்ட போதி காயாவை பராமரிக்கக்கூட ஆள் இல்லாதபடி விரட்டப்பட்டனர். ஒரு இந்து பிராமணக் குடும்பமே 2500 வருடங்களுக்கு மேலாகப் பரம்பரை பரம்பரையாக அந்த நினைவாலயத்தைப் பராமரித்துவருகிறது. அவர்கள்தான் அதன் உரிமையாளர்கள். ஆனால் அவர்களுக்கு புத்தமதத்திலோ, புத்தரிலோ நம்பிக்கையில்லை. உலகத்தின் பல பாகங்களிலிருந்து நிறைய பௌத்தமதத்தினர்கள், சுற்றுலாக்காரர்கள் அங்குத் தினமும் செல்கிறார்கள்.

இந்தியாவிலிருந்து வெளியேறிய வெளியேற்றப்பட்ட பௌத்தர்கள் சீனா, திபெத் போன்ற நாடுகளைச் சென்றடைந்து தாங்கள் வாழும் நாட்டில், அந்த நாட்டின் மரபுகள், சம்பிரதாயங்களுடன் ஒத்துப்போனார்கள். இணக்கம் கண்டனர், உடன்பாடு கண்டனர். அதனால் புத்தபோதனைகள் நாட்டுக்கு நாடு சற்று வித்தியாசமாக உள்ளன. சீனா, திபெத், பர்மா, ஜப்பான், வியட்னாம், இலங்கை போன்ற நாடுகளில் புனித ஏடுகளில் 'சூத்திரங்கள்' வித்தியாசப்படுகின்றன. அந்தந்த நாடுகளுக்கேற்ப அவைகள் சில மாற்றங்கள் கண்டுவிட்டன. புத்தமதம் முரண்படாமல் அந்த அந்த நாடுகளுடன் ஒத்துப்போய் இணக்கம் கண்டதால் பௌத்தம் நிலைத்துவிட்டது. இந்தியாவில் பௌத்தம் முரண்படாமல் இணக்கம் கண்டிருந்தால் நிலைத்திருக்கலாம். இதுபோன்றே போதிதர்மரது உபதேசங்கள், மற்றும் சென் ஞானிகளது உபதேசங்கள் எல்லாம் நாட்டுக்கு நாடு ஏற்றாற்போல் சிறு மாற்றங்களுடன் சென் புனித நூலான கோன்களில் சேர்க்கப்பட்டுள்ளன.

வேதம், உபநிடதம், பைபிள், குரான், தம்மபதம், திரிபீட, கோன், கிறான்த், அக்ஸ்ரா யூதமதத்தின் புனிதநூலான ரல்மட் (Talmud) இவைகள் எல்லாம் அந்த நூல்கள் எழுதப்பட்ட காலத்துக்கு பொருத்தமானதாக இருந்திருக்கலாம். இக்காலத் திற்கு ஏற்ப இவைகளில் சில மாற்றங்கள் செய்யப்பட வேண்டும். பூமி உருண்டை என்கிறது விஞ்ஞானம். புனிதநூல் ஒன்று கூறுகிறது பூமி தட்டையானது என்று, இன்னொரு புனித நூல் சூரியன் பூமியைச் சுற்றுகிறது என்று கூறுகிறது. பூமி தன்னையும் சுற்றிச் சூரியனையும் சுற்றுகிறதென்று விஞ்ஞானம் நிரூபித்த பின்பும் பழைய நிலைப்பாடு மாற்றப்படவில்லை. விஞ்ஞானத்தோடு சேர்ந்து மதக் கருத்துக்கள் செல்லவேண்டும்.

சீனாவில் புத்தரது போதனைகளை விளங்கிக் கொண்டதில் சில குழப்பங்கள் இருப்பதை போதிதர்மர் அவதானித்தார். புத்தரது உபதேசங்களின் 'சூத்திரங்கள்' மாற்றமடைந்திருப்பதையும் போதிதர்மர் அறியாமல் இருக்க முடியாது. போதிதர்மர் தான் அறிந்திருந்த பௌத்தத்தை, மக்கள் வித்தியாசமாக விளங்கியிருப்பதைப் பார்த்து

ஆச்சரியப்பட்டிருப்பார். போதிதர்மர் சீனாவில் உள்ள பௌத்தர்களுடனும், போதனையாளர்களுடனும் ஆசிரியர்களுடனும், மன்னர்களுடனும் முரண்பட்டேயிருந்தார். 'உண்மை'யை உணர்த்த முயன்றார். துணிச்சலாக ஏராளமானவற்றை மறுத்துரைத்தார். அவரை முரடனாகவே சீனாவில் பார்த்தனர். 'உண்மை'க்கு விரோதமாக இவரால் செயல்பட முடியவில்லை. இணக்கம் காண மறுத்தார். ஒத்துப்போகாமல் உடன்படாமல் இருந்தார். இவரது செயற்பாட்டில், நடைமுறையில் மோடனாகவும், முரடனாகவும், கிறுக்குப் பிடித்தவனாகவும் பிறர் கண்களுக்குத் தெரிந்தது. உண்மையாக இருப்பதே உண்மையான உண்மை!

உலகிலேயே முதன்முதலாகச் சமயப் பிரச்சாரத்தை செயற்படுத்தியவர் புத்தரே. ஏன், மதமாற்றம் என்ற கருத்தை உருவாக்கியவரே புத்தர் என்கிறார் சுவாமி விவேகானந்தர்.

இந்தியாவிலிருந்து முதன்முதல் வெளிநாடுகள் சென்று மதப்பிரச்சாரம் செய்தவர் போதிதர்மரே! என்பதும், உலகில் தோன்றிய முதல் சமூகப் புரட்சியாளர் (Social Revolutionist) புத்தரே! என்பதும் இந்நூலாசிரியரின் அபிப்பிராயம் ஆகும்.

■■

அத்தியாயம் 16

போதனைகளில் மொழிப்பிரச்சினை

ஞான நூல்களில் கருத்துச் சிதைவு :

ஞானம் அடைந்த ஞானிகள் நூல்கள் எழுதியதில்லை. ஞானிகளின் போதனைகளைச் சில சீடர்கள் குறிப்பெடுத்துக் கொள்ளும் வளக்கம் உள்ளவர்கள். ஞானிகள் எழுதியதாகக் கூறப்படும் அனைத்து நூல்களும் அவர்களது போதனைகளி லிருந்து சீடர்கள் எடுத்த குறிப்புக்களே. அவைகள் தங்கள் குருவின் கருத்து என்பதால் ஞான நூல்களில் தங்கள் குருவின் பெயர்களைப் பாவித்ததால் ஞான நூல்களை ஞானிகள் எழுதியதாக ஒரு மாயை உருவாகிவிட்டது என்பதே இந்நூலாசிரியரின் கருத்தாகும். ஞானியின் கருத்து ஏதோ ஒன்றாக இருக்க அதை எழுதிய சீடர்கள் தங்கள் விளக்கத்திற்கு ஏற்ப பிறிதொரு கருத்தில் எழுதியதால் ஞான நூல்களில் ஒன்றுக்கொன்று முரண்பாடுகள் காணப்படுகின்றன. அதே கருத்துக்கள் மூலம் ஞானிகளைப் பார்ப்பவர்கள் குழம்பிவிடுகிறார்கள். குழப்பத்திற்குக் காரணம் ஞானிகள் அல்ல. ஞானிகள் சொல்லாத கருத்துக்கள், ஞானிகள் சொல்லாத போதனைகள்தான் காரணம்.

சீடர்கள் தங்கள் குரு மீது அன்பும், மரியாதையும் கொண்டவர்கள். ஆனால் சில வேளைகளில் அவர்களால் தங்கள் குருவைத், தங்கள் ஆசானை, தங்கள் வழிகாட்டியைப் புரிந்துகொள்ள முடிவதில்லை. சீடர்கள் தங்கள் விளக்கத்திற்கு ஏற்ப எழுதியவை மொழிபெயர்க்கப்படும்போது மொழி பெயர்ப்பாளர்கள் தங்கள் விளக்கத்திற்கேற்ப மொழிபெயர்த்து எழுதியபடியால் பல இடங்களில் மகான்களின், ஞானிகளின்

கருத்துக்கள் சிதைவடைந்து விட்டன. அவர்களின் போதனைகள் சிதைவடைந்த போதனைகள் அவைகள் போதனைகளாக வெளிவந்த நூல்களும் ஞான நூல்களாக உள்ளன என்பது என் அபிப்பிராயம்.

'புத்த பெருமானை அவரது சீடர்கள் சரியாகப் புரிந்து கொள்ளவில்லை. இயேசுநாதர் விடயத்திலும் பழைய மக்களாகிய யூதர்கள் அவரைப் புரிந்துகொள்ளவில்லை. புத்தர் விசயத்தில் அவரைப் பின்பற்றியவர்களே அவரது உபதேசங்களின் கருத்தை உணரவில்லை' என்கிறார் சுவாமி விவேகானந்தர்.

சீன மொழியில் போதனை:

போதிதர்மர் விசயத்திலும் இவ்வாறுதான் நடந்து விட்டன. இவர் சீனமொழியில் சீனாவில் போதனை செய்தார். இவர் இந்தியாவில் தமிழ் நாட்டிலுள்ள காஞ்சியில் பிறந்து வளர்ந்தவர். தமிழைத் தாய்மொழியாகக் கொண்டவர். சீன, ஜப்பானிய, கொரிய மொழிகள் சித்திர வடிவமானவை (Pictorial Language). இவைகள் சிக்கலான மொழிகள், ஏனெனில் பேசும்போதோ எழுதும்போதோ ஒவ்வொன்றுக்கும் உருவப்படங்களை ஞாபகப்படுத்திக்கொள்ள வேண்டும். அதனால் இந்த மொழிகள் பேசுவதோ எழுதுவதோ பிற நாட்டவர்களுக்குச் சிரமமானது. போதிதர்மர் சீனா சென்றடைய 3 வருடங்கள் எடுத்தன. அக்காலத்தில் அந்த மொழியை அறிந்துகொண்டார். சியாம், மலேசியா, தாய்லாந்து, வியட்னாம் ஆகிய நாடுகளில் பல மாதங்கள் தங்கிப் பிரயாணம் செய்ததால் சீனமொழியை அறிந்திருந்தார். சீன மொழியை வேகமாகக் கிரகித்துக்கொண்டார்.

போதிதர்மர் தனது அனுபவத்தைத் தமிழில் சிந்தித்து, சீன மொழியில் மாற்றம்செய்து கூறும்போது அவரின் அடிப்படை அனுபவ உண்மை மொழியால் மாற்றமடைகிறது. அவைகள் பிறமொழிகளில் மொழிபெயர்க்கப்படும்போது சில சொற்களுக்குச் சில மொழிகளில் நேரடிச் சொல்லே கிடையாது. அந்த இடங்களில் மொழிபெயர்ப்பு பிறிதொரு கருத்தைக் கொடுக்கிறது.

ஆங்கில மொழிபெயர்ப்பு:

Mind என்ற ஆங்கிலச்சொல்லிற்குப் பிறிதொரு கருத்தாகச் சிந்தனையை, எண்ணங்களை, சிந்தித்தலை உள்ளடக்குகிறது. மனமற்ற எனும்போது Beyond thinking process, Beyond mind என்றும் ஆங்கிலத்தில் பொதுவாக உபயோகப்படுத்தப்படுகிறது. போதிதர்மரோ, கௌதம புத்தரோ, இந்துமத ரிசிகளோ எப்போதும் No-Mind (absence of mind, void, nothingness, emptiness, absence of self) அதாவது மனமற்ற வெற்றிட நிலையைப்பற்றித்தான் பேசுகிறார்கள். ஆங்கிலேயர்கள் அல்லது பிற மதங்களைச் சார்ந்தவர்கள் ஆங்கிலத்தில் மொழிபெயர்ப்பு செய்யும்போது அந்த No-Mind என்பதற்குப் பதிலாக 'Mind' மனம் என்ற வார்த்தை பாவிக்கப்படுகிறது. ஆங்கில இலக்கியங்களோ, அநேகமான மதங்களோ No-mind என்ற நிலையை துல்லியமாகக் கூறாததால் மனதுக்கு அப்பால் 'மனம் அற்ற நிலை' அதாவது No-mind என்பது விளக்கக் குறைவாகிறது. எனவே No-Mind என்று வரவேண்டிய இடங்களில் Mind என்றே நேரடியாகப் பாவிக்கப்படுவது பொதுவாக மொழிபெயர்ப்புகளில் காணப்படுகிறது. அதனால் மூலக்கருத்திலிருந்து வேறுபட்டு கருத்துச்சிதைவு ஏற்படுகிறது.

மொழி முரண்பாட்டால் மோதல்:

போதனைகளில் புத்தர், மகாவீரர் இருவரும் சொல்லும் விதத்தில் முரண்படுகிறார்கள். மகாவீரர் 'ஒருவர் தான் யார் என்பதை அறிதல் இறுதியான அறிவு' என்றார். புத்தர் '' 'தான்' என்பதன் மீது நம்பிக்கை வைத்தல் அறியாமை'' என்கிறார். இங்கு மொழி முரண்படுகிறது, ஆனால் அவை உணர்த்தும் பொருள் இரண்டும் ஒன்றே! மொழி முரண்பாட்டின் அடிப்படையில் ஏற்பட்ட விரோதத்தினால் சமணரும், புத்தரும் நூற்றாண்டுகளாய்ச் சண்டையிட்டுக் கொண்டிருக்கிறார்கள். உபநிடதங்கள் 'இறுதி சாத்தியம்வரை மேல்நோக்கிச் செல்லுங்கள், மறைந்துள்ள உண்மையான இறுதியை அடையுங்கள், மறைந்துள்ள முற்றிலுமான உண்மையை உணருங்கள்' என்று கூறுகின்றன. தொடக்கம் மற்றும் முடிவு என்ற இரண்டும் தனித்தனியான கூறுகள் கிடையாது. உண்மையில் எந்த ஒரு முடிவும் முடிவாகாது. ஏனெனில் ஒவ்வொரு முடிவினையும் அடையும் போது

மீண்டும் அது தொடக்கமாகிறது. ஒரு தொடக்கம் என்பது ஒரு முடிவின் முடிவிலிருந்து மட்டுமே தொடங்குகிறது.

உபநிடதங்களில் 'முடிவானது' என்ற வார்த்தையைத் தெய்விகம் என்பதற்காகப் பயன்படுத்தப்படுத்துகிறது. பௌத்தர்கள் இதே நிலையைக் குறிப்பிட 'இல்லாமை' என்ற வார்த்தையைப் பயன்படுத்துகிறார்கள். வார்த்தைகளைப் பொறுத்தவரை எதிர்ப்பதமாய் இருக்கிறது. உணர்தலைப் பொறுத்தவரை ஒரே அர்த்தத்தையே கொண்டுள்ளன. 'முடிவானது', 'இல்லாமை' இரண்டும் எல்லையைக் குறிக் கின்றன.

கபிலர், புத்தர், இயேசு, போதிதர்மர், நபிகள்நாயகம், யரதுஸ்டிரர், லா-சூ எல்லோரும் சுருக்கத்தின் தன்மையில் பேசியிருக்கிறார்கள். அவர்களின் வார்த்தைகள் சுருக்கமாய் இருப்பினும் அவை அவர்களின் தனித்தன்மை சொல்லும் விதம் ஆகியவற்றைக் காண்பிக்கின்றன. உபநிடதங்கள் எப்போதும் 'மேலாக' பற்றியே சொல்கிறது. அதன் அடையாளம் 'தீ' ஆகும். தீ மேல்நோக்கி வானில் அடக்கம். (Lazo) லா-சூ தோன்றுவித்த 'தாவோ' (Taoism) மதத்தின் அடையாளம் 'நீர்'. நீர் கீழ்நோக்கி சமுத்திரத்தில் அடக்கம்.

Taoism-இன் 'கீழாக' உபநிடதங்களில் 'மேலாக' இரண்டும் ஒரே அர்த்தத்தையே குறிப்பிடுகின்றன. வார்த்தைகளில் மட்டும் வேறுபடுகின்றன. எல்லா மதங்களினதும் போதனை களில் வார்த்தைப் பிரயோகம் மாறுபடுகிறது, ஆனால் உணர்த்தும் விசயம் ஒன்றாகிறது.

சொற்களுக்குப் பதிலாகக் குறியீடுகள்:

ஒரு சொல்லுக்குப் பல கருத்துக்கள் உள்ள மொழியில் என்ன அடிப்படைக் கருத்தில் சொல்லப்பட்டது என்பது சில வேளைகளில் விளங்கிக்கொள்வதில் சிரமமாகிவிடும். அறிவியலுக்குத் திட்டவட்டமான, தெளிவான துல்லியமான மொழி அமைப்பு தேவை. விஞ்ஞான வளர்ச்சி படிப்படியாக சொற்களைக் கைவிட்டு கணித சூத்திரங்கள் போன்ற குறியீடுகளால் கருத்தை விளக்குகிறது, தொழில்நுட்பவியலும் (Technology) அதன்மூலம் தன்னை வெளிப்படுத்துகிறது. சொற்களைவிட இந்த அடையாளங்கள் வலிமை

வாய்ந்தவையாக இருக்கின்றன. எதிர்காலத்தில் அறிவியலுக்கு மொழியை விட, சொற்றொடர்களைவிட குறியீடுகளும், அடையாளங்களும், சின்னங்களுமே உபயோகப்படுத்தப்படும் என்பது என் அபிப்பிராயம். காலப்போக்கில் மொழியின் பாவனை குறைந்து அவற்றிற்குப் பதிலாக குறியீடுகளால், அடையாளங்களால், சைகைகளால் உணர்த்தும் கலையே மேலோங்கும். அவைகள் நேரத்தையும் மிச்சம் பிடித்துக் கொடுக்கும். 'சைகைகள்' (Sign Languages) சொற்களின் வேலையைச் செய்யும். சைகைகளும், முகபாவனைகளும் (Facial expressions) நிறைந்த எதிர்காலமாக அமையப்போகிறது. பேச்சுக் குறைந்து செயல்கள் அதிகரிக்கும் எதிர்காலமாக அமைந்துகொண்டு வருகிறது. வருங்கால அறிவியலில் சொற்களைவிட குறியீடுகளும் (Symbols), அடையாளங்களும், சின்னங்களும், சைகைகளும்தான் அதிகமாக இருக்கும். அவைகள் சொற்களால் ஏற்படக்கூடிய நேர விரயத்தையும் குறைத்துச் செயல்களை இலகுவாக்கிவிடும். அப்போது மொழிகளை மையப்படுத்தும் அரசியலும் தானாகவே மறைந்துவிடும்.

உலகப் பொது மொழியானது 'சைகைகள்'தான். உலகம் முழுவதும் முற்காலத்தில் அறிவியலுக்கு ஒரே மொழி வடிவம்தான் இருந்தது. அதுதான் 'கவிதை' வடிவம். பழைய மருத்துவ நூல்கள்கூட கவிதை நடையில்தான் இருந்தன. முன்பு தலைமுறை தலைமுறையாக 'அறிவியல்' கவிதை முறையில் புகட்டப்பட்டு வந்ததன் காரணம் நினைவாற்றலுக்குக் கவிதை வசதியானது. உரைநடை மனதில் நிற்பது சிரமம். எழுதுவது பிற்காலத்தில்தான் தோன்றியது. அதனால்தான் வேதங்கள், உபநிடதங்கள், கீதை, குரான், ஆதிகால மருத்துவ நூல்கள், அறிவியல் நூல்கள் எல்லாம் கவிதை வடிவில் எழுதப்பட்டன. அவை நேரத்தையும் வீண்விரயம் செய்யவில்லை.

திருக்குறள் இரண்டு அடிகளில் அமைந்து நேரத்தின் பெறுமதியை உணர்த்துகிறது. ஆனால் திருவள்ளுவரைப் பற்றிய சொற்பொழிவாளர்கள் இரண்டு அடிகளில் சொன்ன திருக்குறளை இரண்டு மணித்தியாலம் பேசி நேரத்தை விரயம் செய்வது நாகரிகமாகிவிட்டது. திருவள்ளுவர் மிகக் குறுகிய சொற்களைக் கையாண்டு நேரத்தின் பெறுமதியை

வெளிக்காட்டியிருக்கிறார். ஆங்கிலக் கவிகளான ஷேக்ஸ்பியர், மில்ரன் போன்றோர்களும் சொற்களை அவ்வாறே கையாண்டு இருக்கிறார்கள்.

முன்பு புனித நூல்களை எழுத்தில் இல்லாமல் வாய்வழி மூலம் தெரிவிக்கும் மரபு இருந்ததனால் காலப்போக்கில்; சொற்பொருளில் பல குழப்பங்களும் பல இடைச் சேர்க்கைகளும் சேர்ந்துவிட்டன. 'உண்மை' படிப்படியாக மறையத் தொடங்கிவிட்டது. ஒவ்வொருவரும் தம் மனப்போக்கின்படி விளக்கம் சொல்ல ஆரம்பித்து விட்டார்கள். பல விஷயங்களை எதிர்காலம் எடை போடட்டும் என்று வருங்காலத் தலைமுறையினரின் தலையில் சுமத்திவிடக்கூடாது. சரியா, தப்பா என்று கூறுவதை பின்போடக்கூடாது. ஆன்மிகம் ஒரு பூரண வாழ்வியல் விஞ்ஞானம். மெய்ஞானத்திற்கும் வணக்க ஸ்தலங்களுக்கும் கடவுளுக்கும் தொடர்பு இல்லை. போலிச் சமாச்சாரங்களும், போலிக் கொண்டாட்டங்களும், உபகதைகளும் 'உண்மையை' மறைக்கின்றன. தேடல் உள்ளவர்களுக்கு என்றும் உண்மைத்தன்மை வெளிச்சம். இந்த உண்மை இயல்பாகத் தெரியவேண்டியது. தேடிக் கண்டுபிடிக்க வேண்டியதாக வாழ்வில் அமையக்கூடாது.

மகான்களும் இயற்கைக்கு விதிவிலக்கில்லை:

இயற்கையான வாழ்வின் தன்மைக்கு யோகியும் விலக்கல்ல. இளமை, முதுமை, நோய், மரணம் எல்லாம் தவிர்க்க முடியாதது. முதுமை என்பது என்ன? உடலின் சிதைவுதானே! யோகிக்கும், ஞானிக்கும், மகானுக்கும் நோய் ஏற்படும். இவற்றைச் சீடர்கள் ஏற்காததால் அவர்களின் நோயை, மரணத்தை மறைத்து ஏகப்பட்ட கதைகளைப் புனைந்துவிடுவார்கள். மகாவீரர் வயிற்றுப்போக்கினால் மரணமானார். நோய் வந்தாலும் சரி, சுகதேகியாக இருந்தாலும் சரி, ஒரு யோகி யோகிதான். மகாவீரரின் மரணம் சீடர்களைக் குழப்பிவிட்டது. கௌசல்கர் என்பவர் மகாவீரருக்குப் பில்லி சூனியம் வைத்தும் அதைக் கருணையுடன் ஏற்றுக்கொண்டார் என சமணக் கதைகளில் காணப்படுகிறது. புத்தரை ஏற்றுக்கொள்ளாத ஒருவர் புத்தருக்கு பழைய காளானை சமைத்துக் கொடுத்ததால், அந்த

உணவு நஞ்சாகி இருந்ததை அறிந்திருந்தும் அதை உட்கொண்டு தன் உடலுக்கு மரணத்தைக் கொடுத்தார் என்ற கதைகளும் உண்டு. இப்படிப்பட்ட கதைகள் ஏராளம். ஞானிகள், மகான்கள் கருணையால் தங்கள் சீடர்களின் நோய்நொடிகளை ஏற்றுக்கொண்டதாகவும் நிறையக் கதைகள் உண்டு. இப்படிப்பட்ட கதைகள் காலம்காலமாக மக்களை நம்பவைத்துள்ளன.

பிறந்தவர் இறக்கத்தான் வேண்டும். மரணமாகப்போகும் பெற்றோருக்குப் பிறக்கும் குழந்தை மரணத்திலிருந்து விடுபட வழியில்லை. உடல்கள் இயற்கையின் விதிகளுக்குக் கட்டுப்பட்டது. இயற்கை மரணத்தைப் பிறப்பிலிருந்து பிரித்து வைக்கவில்லை. பிறப்பைக் குறிப்பிட அவதரித்தல், தோன்றுதல் என்றும் இறப்பைக் குறிப்பிட சமாதி எய்தல், இறைவனடி சேர்தல், ஜோதிப்பிழம்பாகல் என்றும் சொற்பிரயோகம் செய்யலாம். ஆனால் நிகழ்வுகள் ஒன்றேதான். இங்கு சொற்பிரயோகம் மாத்திரம் வேறுபடுகிறதேயொழிய பிறப்பும் இறப்பும் சகலருக்கும் பொதுவானவை.

மொழி அமைப்பு:

கொறியா, வியட்னாம், ஜப்பான், சீனா, மியன்மார் ஆகிய நாடுகளில் உள்ள வித்தியாசமான மொழியமைப்பினால் புத்தர், போதிதர்மர் இந்த நாடுகளில் முக்கியத்துவம் பெற்றார்கள் எனலாம். புத்தரினதும், போதிதர்மரினதும்; போதனைகளுக்குப் பொருந்துகிற மொழியாக அத்தேச மொழிகள் இருந்தன. இம்மொழிகள் கருத்துக்களை இரண்டாகப் பிரிக்கவில்லை. ஆனால் ஆங்கிலம், ஜெர்மன், பிரெஞ்சு, இலத்தின், கிரேக்கம், இந்திய மொழிகள், சமஸ்கிருதம், ஐரோப்பிய மொழிகள், சில கீழத்தேய நாட்டு மொழிகள், ஆபிரிக்காவில் உள்ள மொழிகள் போன்றவை களின் அமைப்பைவிட மாறுபட்ட மொழியமைப்பை உடையவையாக இருப்பவைதான் சீன, கொரிய, ஜப்பான் பர்மிய மொழிகள் எனலாம்.

புத்தர் பர்மிய, சீனா, ஜப்பான், கொரிய மனங்களில் உடனடியாக ஊடுருவிவிட்டார். அதனால் போதிதர்மரையும்;

புரிந்துகொண்டார்கள். அந்த மக்களது மொழியின் அமைப்பே அதை சாத்தியம் ஆக்கிவிட்டது. அவர்களால் புத்தரை, போதிதர்மரை எளிதாக புரிந்துகொள்ள முடிந்தது. சீன, ஜப்பான், கொரிய பர்மிய மொழிகள் சித்திர மொழிகள் (Pictorial language) சீனமொழி எதையும் இரண்டாகப் பிரிக்கவில்லை.

மொழியின் ஊடாக மதம் :

(அ) மியன்மார் மொழி

பைபிளை (Bible) பர்மிய மொழியில் (மியன்மார்) முதன் முதல் மொழிபெயர்த்தபோது மிகவும் கடினமாக இருந்ததால் சில வாக்கியங்களைக் கூட பர்மிய மொழியில் மொழி பெயர்க்க முடியாதநிலை ஏற்பட்டதாம். மொழிபெயர்த்த கணத்திலேயே முழுப்பொருளும் காணாமல் போய் விட்டதாம். உதாரணம் 'கடவுள் இருக்கிறார்' என்று பர்மீய மொழியில் மொழிபெயர்த்தால் 'கடவுள் ஆகிறார்' என்று பொருள் வருகிறதாம். 'இருக்கிறார்' என்ற சொல் பர்மீய மொழியில் வளர்ச்சியற்று இயங்காமல் தேங்கிய நிலையாக இருக்கும் தன்மையைக் குறிக்கிறதாம். 'மரம் இருக்கிறது' என்றால் பர்மீய மொழியில் 'மரம் ஆகிறது' என்றுதான் கருத்து கொடுக்கும். மரம் இருக்கிறது எனும்போது பொருள் முற்றிலும் வேறுபடுகிறது. ஆகிக்கொண்டிருக்கிறது என்றால் பர்மீய மொழியில் அது வளர்ச்சி நிலையைக் காட்டுகிறது. எனவே 'மரம் ஆகிறது' என்றுதான் சொல்லமுடியும் அல்லது 'மரம் ஆகிக்கொண்டு' எனலாம். 'இருக்கிறது' என்ற சொல் மியன்மார் (பர்மீய) மொழியில் அது வளர்ச்சியற்ற அர்த்தத்தைக் கொடுக்கிறது..

'ஆறு இருக்கிறது' என்பதை 'ஆறு இயங்குகிறது' என்றுதான் சொல்லலாம். அல்லது 'ஆறு இயங்கிக்கொண்டு' என்பது சரியான பிரயோகம் ஆகிறது.

கடவுள் இருக்கிறார் என்பதைக் 'கடவுள் ஆகிக்கொண்டு' என்று சொல்ல முடியாதல்லவா. கடவுள் ஒரு வளர்ச்சிப்படி அன்று. கடவுளுக்கு வளர்ச்சி என்றும் சாத்தியமே இல்லை. காரணம் அவர் ஏற்கனவே முற்றிலும் எல்லாம் அடைந்தவர்,

முழுமையானவர். 'ஆகுதல்' மூலம் முழுமையற்றவராகி விடுவார். முழுமையற்றவருக்குத்தான் 'ஆகுதல்' சாத்தியமாகும்.

கடவுள் இருக்கிறார் என்றால் கடவுள் தேக்க நிலையானவர் என்ற பொருளைக் கொடுத்துவிடும். கடவுள் ஆகிறார் என்றால் கடவுளை வளர்ச்சி நிலைகளாகக் காண்பித்து கருத்துப்பிழைக்கிறது. இதனால் பர்மீய மொழியில் மொழிபெயர்ப்பதில் சிக்கல் ஏற்பட்டதாம்.

வாழ்க்கை என்பது நிகழ்ச்சிகள் அடங்கியது என்கிறார் புத்தர். 'வாழ்க்கை' என்றால் 'வாழ்தல்', வாழ்தலில் ஒவ்வொன்றும் வினைச்சொல்தான் அங்கு எதுவும் தேங்கிய நிலையில் நிலையாக இல்லை.

ஓய்வே ஓய்வாக இல்லையே!

ஓய்வு என்ற சொல் தவறானதாகும், காரணம் 'ஓய்வு' ஒருபோதும் 'ஓய்வாக' இல்லை. ஓய்வாக இருக்கும்போது கூட அது ஓய்வு அல்ல. ஏதோ ஒன்று நிகழ்கிறது. அதாவது சிந்திக்கிறீர்கள், பார்க்கிறீர்கள், காதால் ஏதோ கேட்டுக் கொண்டு இருக்கிறீர்கள்.... படுத்திருத்தல், தளர்வாயிருத்தல் போன்றவை ஓய்வு அன்று. அங்கு மனம் இயங்கிக் கொண்டிருக்கின்றது, பல விஷயங்கள் நடந்துகொண்டிருக் கின்றன.

இறந்திருக்கும்போது கூட உடல் தன் வளர்ச்சிப் படிகளைத் தொடர்கிறது. சில சமயம் தாடி வளர்வதையும், தலைமுடி வளர்வதையும், நகங்கள் வளர்ந்திருப்பதையும், உடல் வியர்த்து இருப்பதையும் செய்திகளாக, தகவல்களாக கேள்விப்பட்டிருக்கிறோம். இறந்துவிட்டார் இருந்தாலும் இவை நிகழ்கின்றன. இறந்தாலும் உடல் வள்ச்சிப்படிகளைத் தொடர்கிறது. உடலில் இருந்து வெளியேறிய சுயம் (self), பிரக்ஞை (Consciousness) மறுபிறப்பு எடுக்கிறது, வாழ்க்கை தொடர்கிறது. பிறப்புக்குள் இறப்பும், இறப்புக்குள் பிறப்பும் மறைந்து உள்ளன.

(ஆ) ஜப்பான் மொழி

ஜப்பான் மொழியின் அமைப்பே சென் (Zen) மதக்கருத்துக்களுக்கு ஏற்றாற்போல அமைந்துவிட்டது.

அதனாலே அவர்கள் பௌத்தத்தையோ, சென் பௌத்தத்தையோ விளங்கிக்கொள்வது சுலபமாக இருந்தது. அந்த மொழியின் அமைப்பே 'சென்' கருத்துக்களை இலகுவாக உள்வாங்கிவிட்டது. ஆங்கிலத்தில் 'I' [நான்] போன்ற personal pronoun அதிகம் பாவிக்கப்படுகிறது. ஜப்பான் மொழியில் அந்த personal pronoun பாவிக்காமலே கருத்தை வெளிப்படுத்தக்கூடிய மாதிரி அந்த மொழியின் இலக்கணம் அமைந்துள்ளது. அவர்களின் மொழி அமைப்பு அவர்களது வாழ்க்கை முறைகளிலும் பிரதிபலிக்கிறது. அதாவது அவர்களது வாழ்க்கை முறைகளில் உள்ள 'modesty' 'self-effacement' போன்றவைகளையே சென் (zen) மத உபதேசம் அதிகம் மையப்படுத்துகிறது.

பசி எடுக்கிறது என உணர்கிறோம், சாப்பிடுகிறோம். 'சாப்பிடுதல்' அங்கு உள்ளது. 'பசி' திருப்தி செய்யப்படுகிறது. அப்புறம் நிறைவு கிடைக்கிறது. அதாவது 'திருப்தி' அங்கு உள்ளது. பசி திருப்தி செய்யப்படுகிறது. சாப்பிடும் ஒருவரை நன்றாகக் கவனியுங்கள், அங்குச் சாப்பிடுபவர் இல்லை. பொதுவாக personal pronouns-I, you, he, she, it, we, they எல்லாம் மறைகிறது ஆனால் சாப்பிடுதல் தானாகவே நிகழ்கிறது.

உங்களுக்குப் பசிக்கும்போது 'நான் பசியாக இருக்கிறேன்' என்று சொல்கிறீர்கள். மொழிதான் 'நான்' என்னும் கருத்தை உருவாக்குகிறது. 'பசி' என்றுதானே சொல்லி இருக்கவேண்டும். 'பசி' ஒரு உணர்வு. அப்படியானால் பசித்தவர் யார்? ஆனால் அங்கே இருப்பது 'பசி' மட்டும்தான். மொழியின் அமைப்புத்தான் இரண்டாகப் பிரித்து உரைக்கிறது.

மொழியின் ஊடாகவே போதிதர்மரின் போதனைகள் செல்லுகின்றன. கோட்பாடுகள், கருத்துக்கள், தத்துவங்கள் ஆகியவை ஓரளவு மொழியமைப்பின் அடிப்படைகளையும் கொண்டுள்ளன.

இந்துமதப் புனித நூல்கள் உபநிடதம், வேதம் உட்பட இந்து ஞானிகள் அநேகமாக பேசியது எல்லாம் சமஸ்கிருதத்தில் (Sanskrit). சமண புனித நூல்கள் உட்பட மகாவீரர் பேசியது எல்லாம் பிரக்கிரிட் (Prakrit) மொழியில்.

பௌத்த நூல்களும் கௌதமபுத்தர் பேசியது பாலி (Pali) மொழியில். இயேசுகிறிஸ்து நாதர் பேசியது அரமிக் (Aramic) மொழி. யூதரின் புனித நூல் ரால்மட் (Talmud) ஹீப்புறு (Hebrew) மொழியில் உள்ளது. நபிகள் பேசியது அரபிக் மொழி, ஸரதுஸ்ர்றா பேசியது பக்லவி (Pahlavi) மொழியில். அவர்கள் எல்லோரும் தங்களது அனுபவங்களைத் தாங்கள் கண்ட உண்மைகளை, எடுத்து உரைக்கக்கூடிய அளவிற்கு அந்த மொழிகளில் சரியான வார்த்தைகளும் சொல்வளமும் இருந்துள்ளன.

புனித நூல்கள் வேறு மொழிகளில் மொழி பெயர்க்கப் படும்போது நாம் மொழிபெயர்ப்பைத்தான் நம்புகிறோம். கூடுமானவரை மூலக்கருத்தைக் கூற முயன்றாலும் சொற்செல்வத்திலும், இலக்கண அமைப்பிலும் பொருள் தங்கியுள்ளன, வேதம், உபநிடதம் போன்றவைகளில் நாம் பார்ப்பதெல்லாம் மொழிபெயர்ப்பே! போதிதர்மர் விசயத்திலும் நாம் பார்ப்பது மொழிபெயர்ப்பே!

சமஸ்கிருதத்தில் 'ஆசிரியர்' என்ற சொல்லை நாலு பிரிவுகளாகப் பிரித்து உரைதுள்ளார்கள்.

சிக்சாக் (Sikshak): தகவலைத் தெரிவிப்பவர், அந்தத் தகவல் சரியானதா, தவறானதா என்பது அவருக்குத் தெரியாது. தகவலை எவ்விதப் பிழையுமில்லாமல் கருத்து சிதைவடையாமல் உள்ளவாறு உள்ளபடி தெரிவிப்பவர்.

அத்தியாபக் (Adhyapak): இவர் சிறிதளவு அனுபவத்தினுள் சென்றவர். வெறும் தகவல்கள் சொல்லுபவர் இல்லை. இவர் சொல்வதில் சிறிதளவு அனுபவத்தின் அடிப்படையில் உரைப்பவர்.

உபாத்தியாய (Upadhyay): இவர் ஓரளவு அனுபவத்தினுள் சென்றவர். மேலே கூறிய அந்த இருவரையும் விட தெளிவாக உள்ளவர்.

ஆச்சாரிய (Acharya): இவர் உண்மையை அறிந்தவர். தன் சொந்த அனுபவத்தினைக் கூறுபவர், தான் கூறும் விசயங்களுக்கு அவரே சாட்சியானவர்.

ஆங்கிலத்தில் பொதுவாக Teacher, Master, instructor போன்ற சொற்கள்தான் மேலே குறிப்பிட்டவர்களுக்குப் பாவிக்கப்படுகிறது. அதில் துல்லியமாகப் பிரித்துச் சொல்ல முடியாத நிலை நிலவுகிறது.

மொழிபெயர்ப்பில் ஏற்பட்ட குழப்பம்:

இரவீந்திரநாத்தாகூரின் 'கீதாஞ்சலி'



இரவீந்திரநாத்தாகூர் உலகப்புகழ் பெற்ற கவிஞர். தனது தாய்மொழியான வங்காள மொழியில் 'கீதாஞ்சலி' கவிதைத் தொகுதியைப் படைத்தார், இவர் இங்கிலாந்தில் படித்தவர். வங்காளத்தில் மிகப் பெரிய செல்வந்த குடும்பத்தைச் சேர்ந்தவர். British சாம்ராச்சியம் இவரது தாத்தாவுக்கு ராஜா (King) என்ற கௌரவ அந்தஸ்தை வழங்கியிருந்தது. இவரது நண்பர்கள் கீதாஞ்சலியை ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கும்படி வற்புறுத்தினார்கள். இக்கவிதைக்கு நோபல் பரிசு கிடைக்கலாம் என்றனர். இக்கவிதையின் உயிரோட்டத்தை விளங்கியவர் இரவீந்திரநாத்தாகூர் அவர்கள்தான். அவர் தனது கவிதையை மொழிபெயர்த்தார். அந்த மொழிபெயர்ப்பை ஒரு ஆங்கிலேயரிடம் காட்டும்படி ஆலோசனை வழங்கப்பட்டது. இரவீந்திரநாத்தாகூர் அவர்கட்கும் அடிமனதில் ஒரு தயக்கம் இருந்தபடியால் அந்த ஆலோசனையை ஏற்றுக்கொண்டார்.

சி.எவ். அண்ட்ரு (C.F. Andrew) என்ற ஆங்கிலேயர் அப்போது கல்கத்தாவில் கிறிஸ்தவ மிசனரியாகப் பணிபுரிந்து கொண்டிருந்தார். அவர் தாகூரின் நண்பரும் கூட. அவருக்கு வங்காள மொழியும் தெரியும். இந்த மொழிபெயர்ப்பைச் சரி, பிழை பார்க்க அவர்தான் பொருத்தமானவர் என முடிவு செய்தனர். அவர் ஆங்கில மொழிபெயர்ப்பையும் வங்காள

மொழியிலுள்ள கவிதையையும் பார்வையிட்டார். அவர் தாகூரின் மொழிபெயர்ப்பில் நாலு இடத்தில் மாற்றம் செய்தார்.

ஆங்கிலக் கவிஞர் கீட்ஸ் (Keats) இலண்டன் மாநகரில் 25 ஆங்கிலக் கவிஞர்களை வீட்டிற்கு வரவழைத்து இரவீந்திரநாத் தாகூர் அவர்களை அறிமுகப்படுத்தினார். தாகூர் தனது ஆங்கில மொழிபெயர்ப்பைக் கவிதை நயத்துடன் இசைத்தார். நோபல்பரிசு தெரிவுக்கு அனுப்பப்படக்கூடிய சிறந்த கவிதை எனச் சிபாரிசு செய்தனர். ஆனால் கீட்ஸ் 'இந்தக் கவிதையில் நான்கு இடத்தில் கவிதையின் ஓட்டம் தடைப்படுகிறது' எனத் தெளிவாகக் கூறினார். தாகூர் அவர்கள் ஆச்சரியப்பட்டார்.

C.F.Andrew மாற்றிய அதே நான்கு இடங்களைத்தான் கீட்சும் சுட்டிக் காட்டினார். "அவை இலக்கண ரீதியாகச் சரி. ஆனால், கவிதை ஓட்டத்துக்கு அவை தடைக்கல்லாக உள்ளன. அந்த நாலு சொற்களையும் தாகூர் அவர்கள் கவிதைக்கு ஏற்றமாதிரி மாற்றினால் நல்லது" என்றார். தாகூர் கூறினார் "நீங்கள் சொல்வது சரி, அந்த நாலு இடமும் C.F. Andrew திருத்திய இடங்கள்" என்று கூறி அவற்றை மாற்றி விட்டார்.

நோபல் பரிசு குழுவுக்குக் 'கீதாஞ்சலி' அனுப்பப்பட்டது. அங்கு ஏகமனதாக அக்கவிதை ஏற்கப்பட்டு நோபல்பரிசு வழங்கப்பட்டது.

இதைத் தொடர்ந்து கல்கத்தா பல்கலைக்கழகம் தாகூருக்குக் கௌரவ கலாநிதிப் பட்டம் வழங்க அறிவித்தது.

"நீங்கள் வழங்கவுள்ள கௌரவம் எனது கவிதைக்கு அல்ல, நான் பெற்ற நோபிள் (Nobel) பரிசுக்குத்தான் வழங்குகிறீர்கள். எனது கீதாஞ்சலி கவிதைத் தொகுதி நூல் எனது தாய்மொழியில் உங்கள் பல்கலைக்கழக நூல் நிலையத்தில் எவ்வித அங்கீகாரமும் இல்லாமல் பலகாலமாக இருக்கிறது. பல்கலைக்கழகத்துக்கு அண்மையில்தான் நானும் பல காலமாக வாழ்ந்துகொண்டிருக்கிறேன்" என அறிவித்து தாகூர் பட்டமேற்க மறுத்தேவிட்டார்.

பொதுவாக மொழிபெயர்ப்புக்குள்ளான எந்த நூல்களானாலும் சரி, எந்தப் போதனை நூல்களானாலும் சரி, எந்தப் புனித நூல்களானாலும் சரி கருத்துக்களில் தவறுகள் ஏற்பட சாத்தியக் கூறுகள் உள்ளன. எந்த மொழியின் மொழிபெயர்ப்பானாலும் பல குழறுபடிகள் ஏற்படலாம். உபதேசங்கள் செவிவழி மூலம் பரவும்போது ஒவ்வொருவரும் தங்கள் விளக்கத்துக்கேற்ப கருச்சிதைவாகவும் பரப்பியிருக்க சந்தர்ப்பம் உண்டு. அவைகள் மொழிபெயர்ப்பு நூல்களாக வெளிவரும்போதும் 'கருச்' சிதைவடைந்துவிட வாய்ப்புக்கள் உண்டு, அதனால்தான் சில புனித நூல்களின் கருத்துக்கள் முரண்பாடுகளாக அமைகின்றன. அதனால் விமர்சனத்துக்கும் உள்ளாகின்றன.

புத்தர் மக்கள் மொழியிலே பேசினார்: மொழிபெயர்ப்பை ஏற்கவில்லை

சுவாமி விவேகானந்தர் 26.09.1893 அன்று சிக்காகோ சர்வசமயப் பேரவையில் புத்தமதம் இந்து மதத்தின் நிறைவு என்ற தலைப்பில் பேருரை ஆற்றும்போது 'புத்தர் உபதேசம் செய்த காலத்தில் சமஸ்கிருதம் பேச்சு மொழியாக இல்லை. புத்தரின் சீடர்களில் சிலர் அவரது உபதேசங்களை சமஸ்கிருதத்தில் மொழி பெயர்க்க விரும்பினார்கள். அதற்கு புத்தர் தான் மக்களின் மொழியிலே பேசுவதாகக் கூறி மொழிபெயர்ப்பு ஆலோசனையை ஏற்றுக்கொள்ளவில்லை' என்று குறிப்பிட்டிருந்தார்.

■■

அத்தியாயம் 17

பேரரசர் வெய் (Wei) தன் உட்குரலைக் கேட்டார்

Emperor Wei

பேரரசர் வூ (Wu) வுடன் முரண்பட்டு பலதடைகளைத் தாண்டி தென்சீனாவை விட்டு வெளியேறி வடசீனா வந்தடைந்தார் போதிதர்மர். அங்கு வட 'வெய்' (Wei) வம்ச ஆட்சியைச் (Northern Wei Dynasty) சேர்ந்த அரசர் 'வெய்' (Wei) ஆட்சி புரிந்துகொண்டிருந்தார். புத்தர் வாழ்ந்த பூமியிலிருந்து ஞானமடைந்த ஞானி ஒருவர் தன் இராச்சியத்திற்குள் வந்திருப்பதை அறிந்தார் அரசர் வெய். அதுவரை ஞானமடைந்த ஞானி அங்கு சென்றதில்லை. விகாரைகள், மடாலயங்கள் நிர்மாணித்தல் இந்த மன்னரது பணிப்பில் நடைபெற்றுக் கொண்டிருந்தன. புத்த போதனைகள் சீனமொழிக்கு மாற்றம் செய்யப்பட்டிருந்தன. சமஸ்கிருத, பாலிமொழிப் பண்டிதர்கள், மொழிபெயர்ப்பாளர்கள் புத்தபோதனை, உபந்நியாசகர்கள், பிரசங்கிகள், துறவிகள் ஏற்கெனவே இந்தியாவிலிருந்து அங்குச் சென்று குடியேறியிருந்தனர். இவர்கள் யாரும் தங்கள் தரிசனத்தில் 'உண்மையை' உணர்ந்தவர்கள் அல்ல. தங்கள் சொந்த அனு பவங்களை அங்கு கூறவில்லை. அவர்கள் தாங்கள் படித்தறிந்த இரவல் அறிவைப் பிரயோகித்துக் கொண்டு இருந்தனர். அவர்கள் கூறிய வழிமுறைகள், விதிகள், பிரமாணங்களின்படி இந்த அரசர் வாழ்ந்துவந்தார்.

ஞானமடைந்த ஞானி போதிதர்மர் வருகை தந்ததையிட்டு மகிழ்ந்து அவரது இருப்பிடம் சென்று சந்தித்தார்.

அரசர் வெய் (Wei) : "நான் வாழ்வில் உன்னதம் அடைய வழிமுறைகள் ஏதும் கூறுங்கள்" என்றார்.

போதிதர்மர் : ஒன்றுமில்லை! எதுவுமே கிடையாது!

அரசர் வெய் : நான் எதுவும் தப்பாகச் செய்யவில்லை, புத்த துறவிகளைக் கேட்டுத்தான்; எல்லாம் செய் கிறேன். அவர்கள் கூறுவதுபோல் அனைத்தை யும் முறைப்படி செய்கிறேன்.

போதிதர்மர் : உன் உள்ளே ஒலிக்கும் குரலை (inner voice) கேட்டாலன்றி உனக்கு யாரும் உதவ முடியாது. அதுபௌத்தரோ அல்லது பௌத்தர் அல்லாதவராகவும் இருக்கலாம். உன் உட்குரலை நீ இன்னும் கேட்கவில்லை, அப்படிக் கேட்டிருந்தால் நீ இப்படி ஒரு முட்டாள்தனமான காரியங்களை இதுவரை செய்திருக்கமாட்டாய். புண்ணியம் என்பது பேராசை, அதுமனதின் கண்டுபிடிப்பு. புண்ணியம் கிடைக்க வேண்டும் என்ற ஆசை எங்கிருந்து வந்தது? பேராசை கொண்ட மனதில் இருந்துதானே அது தோன்றியது. புத்தரின் பாதையில் 'புண்ணியம்' என்பதில்லை.

மடாலயங்கள், விகாரைகள் நிர்மாணிப்பது, அன்னதானம் போன்றதெல்லாம் உன் மனதில் ஓர் ஆசையை மறைத்து வைத்துக் கொண்டு செய்கிறாய். அதை நீ சரிவர உணரவில்லை என்றால் பெரும் இழப்பை நீ சந்திக்கவேண்டி வந்துவிடும். இவற்றை உணர்ந்தால் உனக்கு எல்லாமே புரிந்துவிடும்.

அரசர் : என் மனதில் குழப்பமான எண்ணங்கள் தோன்றுகின்றன. நான் சில சமயம்

பாதிப்படைகிறேன். எனக்குக் கவலை, துக்கம், கஷ்டம் அதிகமாக ஏற்படுகிறது. உட்குரலைப் பற்றிக் கூறுகிறீர்கள். எனக்கு இது புதிதாக இருக்கிறது. எனக்கு இதைப் பற்றி எதுவும் தெரியாது.

போதிதர்மர் : அப்படியானால் நாளை காலை 4.00 மணிக்கு மெய்க்காப்பாளர்களோ, பரிவாரங்களோ எவரும் இல்லாமல் தனியாக வந்து என்னைச் சந்திக்கவும். அப்போது உங்கள் கவலை, துக்கம், துன்பம், பிரச்சினைகள், தொல்லைகள் எல்லாம் கொண்டு வாருங்கள். நான் மலையடிவாரத்தில் அமைந்துள்ள அந்தக் கோயிலில் தங்கியிருப்பேன். உன் மனதை அமைதியாக்கி, அதை இந்த கோலால் ஒருவழிப்படுத்தி உட்குரலை கேட்க வைக்கிறேன் என்றார்.

அரசர் : அரண்மனை திரும்பினார். நான் பல துறவிகளைப் பார்த்திருக்கிறேன். என் அரண்மனைக்கு துறவிகள் தினமும் வந்து போகிறார்கள். அவர்களது அடக்கம், பணிவு இந்த ஆளிடம் இல்லை. இந்த ஆள் மோடனாக, முரடனாக, ஆபத்தான ஆளாகவும் இருப்பார் போல தெரிகிறது. சில வேளைகளில் வேடிக்கையானவராகவும் தெரிகிறார். தன் கையில் வைத்திருக்கிற கோலால் எப்படி எனக்கு உதவமுடியும்? அரசரால் தூங்க முடியவில்லை! போவதா? வேண்டாமா? எனச் சிந்தித்தார். அந்த மனிதர் போலியானவராகத் தெரியவில்லை. சலுகைகள், வசதிகள் பெறுவதற்காக பேசவில்லை. இவர் ஒரு வித்தியாசமானவர். நான் ஒரு பேரரசன் என்பதைக்கூடக் கணக்கில் எடுகக்காதவர். அந்த மனிதர் முன்னிலையில் நான் ஒரு பிச்சைக்காரன் போல் நின்றேன்.

இந்தியாவிலிருந்து பல துறவிகள் வந்திருக்கிறார்கள், அவர்கள் எல்லாம் சிலவழி முறைகளைச் சொன்னார்கள். பலவாறாகச் சிந்தித்தார். தனது ஆலோசகர்களுடனும் உரையாடி ஒரு முடிவுக்கு வந்தார். போதிதர்மர் தன்னை வைகறைப்பொழுதில் சந்திக்கச் சொன்ன இடத்துக்குச் சென்றார். அங்குப் போதிதர்மர் தன் கோலுடன் நிற்பதைக் கண்டார்.

போதிதர்மர் : நீ பெரும் சிந்தனைக்கும், ஆலோசனைக்கும் பின்பு, போவதா? விடுவதா? என்ற குழப்பத்துடன் இங்கு வருவாய் என்பது எனக்குத் தெரியும். உன் பிரச்சினைகள், தொந்தரவுகள், துன்பங்கள் அவைகளையும் கூட்டி வந்தாயா?

அரசர் : அவைகள் வெளிப்படையான ஆட்கள் இல்லை.

போதிதர்மர் : நீங்கள் எங்கேயிருந்தாலும் அவர்கள் உங்களுக்கு முக்கியமானவர்கள்தானே! இங்கு எவருமே இல்லை, அமைதியான சூழல், உங்கள் கண்களை மூடுங்கள். உங்கள் முன்னிலையில் நானும் இந்தக் கோலுடன் உட்கார்ந்து இருப்பேன். நீங்கள் செய்யவேண்டியது ஒரேயொரு வேலை. அமைதியாக உள்நோக்கி உங்களுக்குள் நீங்கள் பிரயாணம் செய்யுங்கள். உங்கள் மனதைக் குழப்பும் அவர்களைக் கண்டு பிடித்ததும் எனக்கு உடனே சொல்லுங்கள். நான் இந்தக் கோலால் மிச்ச வேலையைப் பார்க்கிறேன். உட்கார்ந்திருந்து கண்களை மூடுங்கள் என்றார்.

அரசர் : பௌவியமாக போதிதர்மர் முன்னிலையில் உட்கார்ந்தார். கண்களை மூடியபடி வேறு எதுவித யோசனையுமில்லாமல் அமைதியாகத்

தனது 'அக'ப் பிரயாணத்தை தொடங்கினார். மனம் அரச பதவியிலிருந்து பின்னோக்கி ஒவ்வொரு பருவமாகப் போய் கொண்டிருந்தது. சிறுபிராயம் வரை வந்தார். சிறு பிராயத்தையும் கடந்து சென்றார். மனதிற்கு அப்பால் சென்று மனமற்ற (No-mind) நிலையானார். எதுவுமே இல்லாத வெறுமையானார். காலை சூரிய உதயமாகும் நேரம் அரசரின் முகம் மலரத் தொடங்கியது.

போதிதர்மர் : அரசனின் மாற்றத்தை அவதானித்தார். சாந்தமாகவும், அமைதியாகவும் முகம் பிரகாசித்தது. அரசரைத் தன் கைகளால் மெதுவாகத் தட்டியபடி "கண்டுபிடித்தீர்களா?" என்று கேட்டார்.

அரசர் வெய் : கண்களை மெதுவாகத் திறந்தார். போதிதர்மரை வணங்கினார். எனக்குள் சாந்தம், அமைதியை உணர்ந்தேன். என் உட்குரலைக் (Inner voice) கேட்டேன். எனக்குள் உள்மாற்றத்தை ஏற்படுத்தி விட்டீர்கள். எங்கள் மனம்தான் எல்லாவற்றுக்கும் காரணம். நான் 'உள்ளே' இல்லாதபோது 'எல்லாம்' உள்ளே இருந்தன. நான் 'உள்ளே' நுழைந்ததும் எல்லாம் வெளியேறிவிட்டன. நீங்கள் பெரிய அற்புதத்தை செய்துவிட்டீர்கள். எங்களுக்கு வெளியில் எதுவும் இல்லை. வெளியில் எதையும் தேடமுடியாது. மனதைக் கடக்க வேண்டும் மனதால் எதையும் பார்க்கக் கூடாது. நான் மாறிவிட்டேன் என்னை மாற்றிவிட்டீர்கள் என்று பணிவுடன் கூறினார்.

போதிதர்மர் : உரக்கச் சிரித்தார். உங்களை நான் மாற்றவில்லை, எப்படியாக மாற விரும்பினீர்களோ, அது ஏற்கெனவே உங்களுக்குள் இருந்தது.

உள்ளேயிருக்கும் ஒன்றாக எப்படி மீண்டும் மாறமுடியும்? இல்லாத ஒன்றாக நீங்கள் மாற முயற்சி செய்தால் நீங்கள் தோற்று விடுவீர்கள். ஏற்கெனவே இருக்கின்ற ஒன்றாக மீண்டும் மாற முடியாது என்று சொல்லிச் சிரித்தார். அந்தச் சிரிப்பு சிங்க கர்ஜனை போல் இருந்தது. எதுவாகவும் மாறத் தேவையில்லை. நமது உண்மை இயல்பை உணர்ந்தால் நமக்குள் மறைந்திருப்பதை உணரமுடியும். நீங்கள் ஒரு வித்தியாசமானவர், உங்களை எனக்கு நன்றாக விளங்குகிறது. ஓர் அமர்வில் நீங்கள் உங்களை அறிந்துகொண்டீர்கள்.

அரசர் : என் அரண்மனைக்கு வாருங்கள் என்று பணிவாகவும் மிக்க மரியாதையுடனும் கேட்டார்.

போதிதர்மர் : நான் வரப்போவதில்லை. நான் பைத்தியக் காரன். நிமிடத்துக்கு நிமிடம் எப்படி யிருப்பேன் என்பது எனக்குத் தெரியாது. நிமிடத்துக்கு நிமிடம் புதிதாக வாழ்பவன் நான். உனக்குத் தொந்தரவு செய்துவிடுவேன். நான் என் வழியில் பைத்தியக்காரனாக வாழ்பவன். (போதிதர்மரின் செயல்கள் அனைத்தும் தனித்துவமானது, வித்தியாச மானது, அவ்வப்போது எது தோன்றுகிறதோ அதுவே அவரது வழிமுறைகள். திடமான வழிமுறைகள், அதாவது இதுதான் வழிமுறை என்று எதுவுமில்லாதவர். அவர் எதையும் ஏற்கெனவே தயார் செய்து வைத்திருப்ப தில்லை.) அரசர் வெய் அவர்களை அரண்மனைக்கு அனுப்பிவிட்டு மலைச் சாரலில் உள்ள குகை ஒன்றினுள் உட்கார்ந்து சுவரை உற்றுப் பார்க்கத் தொடங்கினார். படிப்படியாக அவரது பார்வை கூர்மையாகி சுவரில் ஒரு புள்ளியாகியது. அவரது மனம்

சுவரைப் போன்று வெறுமையாகியது. உற்று நோக்கிய இடத்தில் சுவரில் துவாரம் ஏற்பட்டது. அவரது பார்வை ஊடுருவிச் சென்றது. "யாராவது என்னுடைய சீடர்களாக இருக்க விரும்பினால் எனக்கு முன்னால் உட்காராமல் எனக்குப் பின்னால் உட்காருங்கள்" நான் ஆட்களைப் பார்க்க மாட்டேன். எதிரில் உட்கார்பவர்களை யாரென்று கண்ணால் பார்த்துத் தெரிவு செய்யவேண்டியிருக்கும். எனக்குப் பின்னால் உட்கார்பவர்களை யாரென்று பார்க்காமல் தெரிவு செய்யலாம் என்றார். மக்கள் கூட்டம் இருந்தாலென்ன, இல்லாமல் விட்டாலென்ன, சுவரைப் பார்த்து தொடர்ந்து சொற்பொழிவாற்றிக்கொண்டே யிருப்பார்.

■■

அத்தியாயம் 18

போதிதர்மர் ஒரு மருத்துவ விஞ்ஞானி: அக்கியூபங்சர் (Acupuncture) மருத்துவத்தின் தந்தையா?

போதிதர்மர் அவர்கள் மருத்துவம் தொடர்பாக கூறிய குறிப்புகளைச் சீடர்கள் தொகுத்து எழுதியபின், இவைகள் தங்கள் குருவுக்கு உரியவை என்று சிந்தித்து, போதிதர்மர் அவர்களே எழுதியதாகவும் அவரின் பெயரைப் பாவித்துள்ள தாகவும் ஏடுகள் கூறுகின்றன. சீடர்களால் இத்தகைய மரியாதை ஆயிரக்கணக்கான வருடங்களாகப் பேணப்பட்டு இருக்கிறது. அக்கருத்து சரியானதாக இருக்கலாம், காரணம் ஞானிகள் பெரும்பாலும் நூல்கள் எழுதுவதில் நாட்டமில்லாத வர்களே! ஞான நூல்களையும் மகான்கள் எழுதி வைக்க வில்லை.

பகவத் கீதையை பகவான் கிருஷ்ணர் எழுதிவைக்க வில்லை.

திரிபீடம் அல்லது தம்மபதத்தை கௌதமபுத்தர் எழுதி வைக்கவில்லை.

குரானை நபிகள்நாயகம் எழுதிவைக்கவில்லை.

ஷாஹிப்ஹிராந்த் புனித நூலை ஞானி குருநானக் எழுதி வைக்கவில்லை.

பைபிளை இயேசுபிரான் எழுதிவைக்கவில்லை.

கல்ப சூத்திராவை ஞானி மகாவீரர் எழுதிவைக்கவில்லை.

கோன்களை போதிதர்மர் எழுதி வைக்கவில்லை.

இன்று உலகில் தத்துவக் கருத்துக்களுக்கும், தர்க்கவியலுக்கும் சோக்கிரடீஸின் கருத்துக்களே மேற்கோள் காட்டப்படுகிறது. ஆனால் சோக்கிரடீஸ் எந்த நூல்களையும் எழுதவில்லை. அவர்கள் சீடர்கள்தான் அவரது கருத்துக்களை நூலாக்கியவர்கள். பெரும் ஞானிகள், பெரும் மகான்கள் கூறியவைகளை அவர்களது சீடர்கள்தான் எழுதிப் பாதுகாத்தனர். அனேகமான சீடர்கள் அந்நூல்களின் கருத்துக்கள் ஞானிகளின் கருத்துக்களாக இருப்பதால், தங்களுக்குரியவையில்லை என்பதால், தங்கள் 'குரு'வின் பெயரையே பாவித்தனர். இதனால்தான் 'ஞானிகள்', 'மகான்கள்' நூல்களை எழுதியதாகக் கருதப்பட்டு வருகின்றன.



போதிதர்மர் அவர்களின் மருத்துவ ஏடாகக் கருதப்படும் XI SUI JING காணாமல் போய்விட்டது. தசை, ரிசு (Flesh and Tissue) மாற்றத்தைப் பற்றிய ஏடான YI JIN JING இன்றுவரை பாதுகாக்கப்பட்டு வருகிறது. இவரது மருத்துவ நூலான XI SUI JING எலும்பு மச்சை (Marrow) மாற்றத்தைப்பற்றி குறிப்பிடுகிறது, இந்நூலை போதிதர்மரது பிரதம சீடரான ஹியூக் (Huike) சோலிங் ஆலயத்திலிருந்து எடுத்துச் சென்றுவிட்டார். அதன் பின்பு அந்நூலை யாரும் பார்க்க முடியவில்லை. போதிதர்மர் அவர்கள் சோலிங் (Shaolin Temple) தேவாலயத்தில் பாவித்த பெட்டகத்திலே அவரது இரு ஏடுகளும் இருந்தன என நம்பப்படுகிறது.

நூல்கள் இயற்றினாரா?

போதிதர்மர் ஒரு செயல்வீரன். பேச்சில் அக்கறையில்லாதவர், செயலில் அக்கறையுள்ளவர். மூன்று நூல்கள் எழுதியதாகக் கூறப்படுகிறது. நூல்கள் எழுதச் சந்தர்ப்பமில்லை. தன் எந்தவித அடையாளங்களும் இருக்கக்கூடாது என்பவர் நூல்கள் எழுதி அதனை விட்டுச் செல்லமாட்டார். அந்த நூல்கள் அவரது ஞாபகச் சின்னமாகிவிடும், வணக்கத்துக்குரியதாகிவிடும் அல்லவா! அந்த நூல்களும் பல

நூற்றாண்டுகளாகப் போதிதர்மர் எழுதியவை என்றே கூறப்பட்டுவருகிறது.

"போதனைகள் கூடுதலாக செவிவழி மூலம்தான் பரவியுள்ளன. பின்பு அவைகள் நூல்களாகியிருக்கின்றன. பிரதம சீடர்கள் எழுதினால் தாங்கள் எழுதியதாக தங்கள் பெயர்களைக் குறிப்பிடுவதில்லை. ஏனெனில் அக்கருத்துக்கள் அவர்களுக்குரியதல்ல. அது அவர்கள் குருவுக்கு உரியவை. அதனால் தங்கள் 'குரு'வின் பெயரைப் பாவித்திருக்கிறார்கள். போதிதர்மர் விடயத்திலும் இப்படித்தான் நடந்திருக்கும். புத்தக உள் விடயங்கள் அவருக்கு உரியவை என்றபடியால் சீடர்கள் போதிதர்மரின் பெயரைப் பாவித்திருக்கலாம்;' என்கிறார் ஓசோ (Osho).

மருத்துவக் கண்டுபிடிப்பு:
அக்கியூபங்சர் சிகிச்சை (Acupuncture)





தகவல்கள் முரண்படுகின்றமையால் இதை யார் அறிமுகப்படுத்தியது என்பதை உறுதி செய்ய முடியவில்லை. சில ஏடுகள் 'போதி' என்று பொதுவாகக் கூறுவதால்தான் இந்தக் குழப்பம் உருவாகிறது. அக்காலத்தில் போதி என்ற பெயருடன் ஆரம்பிக்கும் பல ஞானிகள் இருந்தார்கள். அதே காலத்திலிருந்த போதிரூசி (Bodhiruci) என்ற ஞானி போதிதர்மரின் குணஇயல்பைக் கொண்டவர். ஆனால் மருத்துவ ஈடுபாடு இல்லாதவர். போதி என்று ஆரம்பிக்கும் பெயர் கொண்ட எல்லோரையும், போதிதர்மர் உட்பட, போதி என்று அழைக்கப்பட்டனர். போதிதர்மர் அவர்கள் போதி என்று மட்டுமல்ல 'தாமு' என்றும் அழைக்கப்பட்டார். பலர்

இவரது இப்பெயர்களைப் பாவியாது 'மோடன்', 'பைத்தியக்காரன்', 'நீலக்கண்காரன்', 'அகண்ட கண்காரன்' என இவரைக் குறிப்பிட்டுள்ளார்கள்.

இவருக்கு மருத்துவத்தில் ஞானம் இருப்பதால் அக்கியூபங்சர் சிகிச்சை முறையை இவர் அறிமுகப்படுத்தி இருக்கலாம் என்பதே என் அபிப்பிராயம். போதிதர்மர் ஒரு மாபெரும் சித்தர். மருத்துவத்தில் கைதேர்ந்தவர்களும் மருத்துவ ஆராய்ச்சியில் ஈடுபட்டு புதுக்கண்டுபிடிப்புகள் செய்துகொண்டே இருப்பவர்களும் சித்தர்களே.

இன்று மருத்துவத்துறையில் சிறந்த சிகிச்சை முறையான அக்கியூபஞ்சர் (Acupuncture) போதிதர்மரால் சீனாவில் அறிமுகப்படுத்தப்பட்டு படிப்படியாக உலகம் பூராவும் பரவி உள்ளதாக ஊகிக்கப்படுகிறது.



மனிதர்களுக்கு ஆறு புலன்கள் என மருத்துவ விஞ்ஞான அறிவிப்பு:

மனிதர்களுக்கு மெய் (ஸ்பரிசம்) வாய் (ருசித்தல்) கண் (பார்த்தல்) மூக்கு (முகர்தல்) செவி (கேட்டல்) என ஐம்புலன்கள (Five Senses) மாத்திரமே உண்டு எனக் காலம் காலமாக உலகம் பூராவும் கருதப்பட்டுவந்தது. மருத்துவமும் ஐம்புலன்கள்தான் என்ற கருத்தையே வலியுறுத்தியிருந்தது.

போதிதர்மர் அவர்கள் மனிதர்களுக்கு ஐம்புலன்கள் அல்ல ஆறு புலன்கள் (Six Senses) என அறிவித்தார். அந்த ஆறாவது புலன் காதுக்குள்ளே உள்ள நத்தை சுருளுக்குள் (Cochlea) உள்ள திரவம் ஆகும். அதுதான் உடலைச் சமநிலைப் படுத்தும் புலன் (Sense of Balance) என விளக்குகிறார்.



போதிதர்மர் ஐந்தாம் நூற்றாண்டிலேயே மனிதர்களுக்கு ஆறு புலன்கள் உண்டு என்று கூறிவிட்டார். இதைப் பல நூற்றாண்டுகளுக்குப் பின்பே மருத்துவ விஞ்ஞானம் விரிவான ஆராய்ச்சி, பரிசோதனைகளுக்குப் பின்பு இம் முடிவுக்கு வந்துள்ளது. போதிதர்மர் அவர்கள் சர்வ சாதாரணமாக அன்றே அதைப்பற்றிக் கூறியிருப்பது வியப்பாக உள்ளது.

நோக்கு வர்மம்:

'உற்றுநோக்குதல்' நோக்குவர்மக் கலையாக மாறியது. Hypnotism மூலம் மனக் குழப்பமானவர்களுக்கு இன்று

அறிதுயில் (Hypnosis) ஊடாகச் சிகிச்சை வழங்கப்படுகிறது. சித்தர்கள் இதில் கைதேர்ந்தவர்களாக இருந்திருக்கிறார்கள்.

மூலிகைத் தேயிலை (Herbal Tea):



இவர் (Tai) ராய் மலைச்சாரலில் மூலிகைத் தேயிலைச் செடியை பயிரிட்டார். அத்தேயிலையை Tai என்றே அழைத்தனர். ராய் என்பது Tea என ஆங்கிலத்தில் மாறி இந்த Tai பின்பு Chai சாய் என இந்தியில் மாறியது. வேறு சில மொழிகளில் 'சா' cha என அழைக்கப்படுகிறது. இவர் சோம்பலை நீக்க தேனீரைக் கண்டுபிடித்தார். இன்றும் உலகம் பூராகவும் உள்ள 'சென்' zen புத்த துறவிகள் நிறைய தேனீர் குடிக்கும் பழக்கமுடையவர்களாக இருக்கிறார்கள். போதிதர்மர் தேனீர் அருந்தும் பழக்க முடையவர். மூலிகைத் தேயிலையை இவரே முதன்முதலில் அறிமுகப்படுத்தினார்.

போதிதர்மரது வரலாற்றில் உறுதிப் படுத்த முடியாத பல விவரங்கள் இருப்பதாக இக்காலச் சரித்திர ஆய்வாளர்கள் குறிப்பிடுகிறார்கள். *1904 -1907* காலப்பகுதியில் வெளிவந்த The travels of Laot's என்ற நாவல்தான் போதிதர்மரது தற்காப்புக் கலையைப் பற்றியும் அவரைப் பற்றியும் வெளி உலகுக்கு முதன்முதலில் தெரியப் படுத்திய நூலாகும்.

■■

அத்தியாயம் 19

மேற்கே அறிவியலுக்கு சோக்கிரட்டீஸ்! கிழக்கே போதிதர்மர்!





போதிதர்மர் அவர்கள் இந்தியாவில் பிறந்து வாழ்ந்தவர். ஞானமடைந்தது இந்தியாவில். சகல கலைகளையும் இந்தியாவிலே கற்றுக்கொண்டவர். மிகப்பெரிய ஞானியானது இந்தியாவில். தன்னை முழுமையாக வெளிப்படுத்தியது சீனாவில். தன் அனுபவங்களைக் கூறியது, தன் மகா சக்தியை அர்ப்பணித்தது எல்லாம் சீனாவில்தான். ஞானப் போதனைகளைக் கடந்து உடல் வலிமையைக் கடந்து, மனதைக் கடந்து, மருத்துவம், தத்துவம், ஆரோக்கியம், தியானம், தற்காப்புக்கலை, ஞான நிலை, அறிவியல், இவைகள் அனைத்தையும் கடந்து உலகில் உயர்ந்து நின்ற ஒரே ஒருவர் போதிதர்மர்தான். மேற்கில் சோக்கிரட்டிசை அறிவியலுக்கு மேற்கோள் காட்டப்படுகிறார். அவரை விட அறிவியலில் விஞ்சியவராக கிழக்கே போதிதர்மர் காணப்பட்டார். ஆனால் கிழக்கு போதிதர்மரைக் கண்டு கொள்ளவே இல்லை. **போதிதர்மரை உலகம் முழுக்க எடுத்துச் செல்லும் பொறுப்பு இந்தியாவுக்கும் சீனாவுக்கும் கூட்டாக உண்டு.**

வாழ்க்கையின் புரியாத புதிரைத் திறப்பதற்குத் திறவுகோல் போதிதர்மரிடம் இருந்தது. இவர் அருளிய அனைத்தும் அவரது தூய்மையான சொந்த அனுபவத்தில் இருந்து வந்தவையாகும். ஆயிரக்கணக்கான புத்த துறவிகள் அவரைச் சூழ்ந்தனர். போதிதர்மரின் போதனைகளை மனனம் செய்தனரே தவிர அதன் உள் அர்த்தங்களை தவற விட்டுவிட்டனர். அவர்களே போதிதர்மரின் போதனைகளை நூலாக்கினர். மகான்களும் ஞானிகளதும் போதனைகளைச் சீடர்களும் சீடர்களின் சீடர்களும்தான் குரு கூறியதாக எழுதியுள்ளார்கள். அதனால்தான் பல குழப்பங்களும் தடுமாற்றங்களும் நூல்களில் உள்ளன. ஒவ்வொருவரும் தங்கள் விளக்கங்களுக்கு ஏற்ப செவிவழியாகக் கேட்டதைக் கூறியதால் எவ்வளவு கலப்படமில்லாமலும் தூய்மையாகவும் இருந்தனவோ தெரியாது. இந்த நூல்கள் மொழி பெயர்க்கப்பட்டு வெளிவரும்போது அடுத்த சிக்கல் மொழிபெயர்ப்பில் ஏற்படுகிறது. இரவீந்திரநாத்தாகூரின் நோபல் பரிசு பெற்ற கீதாஞ்சலிக்கு என்ன நடந்தது என்பதை ஏற்கெனவே பிறிதொரு அத்தியாயத்தில் சுட்டிக்காட்டி யுள்ளேன்.

கௌதம புத்தரின் போதனைகள் அவர் இறந்த பின்பே எழுதப்பட்டன. அப்பொழுது சீடர்களுக்கிடையில் குழப்பம் ஏற்பட்டது. புத்தர் இறந்த பின்பு பௌத்தமதத்தை விளக்கும் முப்பத்துமூன்று (33) பாடசாலைகளுக்கு இடையில் முரண்பாடுகள் நிலவின. புத்தர் இவ்வாறு கூறினார், அவர் இவ்வாறு கூறவில்லை. இதைத்தான் தெரிவித்தார், இதை அவர் தெரிவிக்கவில்லை, இப்படித்தான் பொருள், இப்படி அதன் பொருள் இல்லை, இந்த அர்த்தத்தில்தான் கூறினார், இந்த அர்த்தத்தில் கூறவில்லை என 33 பாடசாலைகளும் ஒன்றுக்கொன்று வித்தியாசமான வியாக்கியானம் கொடுத்து ஒன்றுக்கொன்று முரண்பட்டுக்கொண்டன என ஏற்கெனவே பிறிதொரு அத்தியாயத்தில் கூறியுள்ளேன். மனதின் ஊடாகப் பேசாதவர் புத்தர். மனதின் ஊடாகப் பாராதவர் புத்தர். மனமற்ற (No-mind, absence of mind) நிலையின் ஊடாகவே மனதைக் கடந்து அப்பால் சென்ற நிலையிலிருந்துதான் கௌதமபுத்தரோ, போதித்தர்மரோ போதித்தார்கள். மனம் கடந்த அப்பால் நிலை தெளிவானது. 'மனம்' என்றும்

குழப்பமானது. இந்த 33 பாடசாலைகளும் 'மனம்' கடந்து அப்பால் உள்ள நிலையில் இல்லாமல் அவர்கள் 'மனதின்' ஊடாகவே பார்த்தார்கள். அவர்கள் 'ஞான'மடையாதவர்கள். அதனால்தான் அந்தத் தடுமாற்றம்.



உலகத்தில் தோன்றிய ஞானிகளில் மிகப்பெரிய ஞானி போதிதர்மர் என்பதில் சந்தேகமில்லை. அவருக்கு சீடர்களாக இருக்கக்கூடியவர்களே மிகப் பேறு பெற்றவர்கள்.

ஹை-கோவை (Huiko) தனது பிரதம சீடராகப் போதிதர்மர் நியமிக்கும்போது தனது முக்கிய போதனை என்ன என்று கேட்டார்?

ஹை-கோ எவ்விதப் பதிலும் சொல்லாமல் அவரது காலடியில் விழுந்து அழத்தொடங்கிவிட்டார்.

போதிதர்மர் அவர்கள் அவரைக் கைத்தாங்கலாகத் தூக்கி நிற்க வைத்தார். "'நீ' மௌனமாகச் சொன்ன பதிலை நான் ஏற்றுக்கொண்டேன். உன் கண்ணீர் எனக்குப் பதிலைத் தந்துவிட்டது. நீ என்னைப் புரிந்து கொண்டாய். நான் உன்னைப் புரிந்துகொண்டேன். உன் மௌனம் எனக்குப் புரிகிறது. உன் மௌனத்தின் மூலம் எனக்குப் பதில் அளித்துவிட்டாய். நீ என் ஆன்மா. நான் சீனாவை விட்டுப் போனபின்பு என்னை நீ பிரதிநிதிப் படுத்துவாய்" என்றார்.

தோத்திரங்கள் இசைப்பதால், புனித நூல்களை உபந்நியாசம் செய்வதனால், ஆலயங்கள் நிர்மாணிப்பதால், உணவு ஆகாரம் உட்கொள்ளாமல் இருப்பதால், பூசை அபிசேகம் செய்வதால், தானம் வழங்குவதால், நூற்றுக் கணக்கான 'முறைகளை' மனனம் செய்து பின்பற்றுவதால், ஞானத்தையோ விழிப்புணர்வையோ அடைய முடியாது. உங்கள் இருப்பை (Being), சுயத்தை (self nature) அறிவதன் மூலம் ஞானம் (Enlightenment) அடையலாம் என்று போதிதர்மர் கூறினார். இதையே அரசன் 'வூ' (Wu) வுக்கும் அரசன் வெய்

("Wei")க்கும் எடுத்துரைத்தார். உங்களுக்குள் இருக்கும் புத்தரை (Buddha) அறியுங்கள் என்றார்.



இந்தியா உலகுக்குக் கொடுத்த மிகப் பெரிய கொடை 'தியானம்' (Meditation) ஆகும். பாடசாலைகளில் 'தியானம்' ஒரு பாடமாக்கப்பட வேண்டும். 'தியானம்' பழக்கப்பட வேண்டும். தியானம் மனித மன வளர்ச்சிக்கு மிக முக்கியம்.

போதிதர்மரின் முக்கிய போதனையும் வழிகாட்டலும் ஒவ்வொருவரும் தங்கள் சுயத்தை (self nature) அறிய வேண்டும் என்பதே. 'சுயம்' பிரிக்கப்பட முடியாதது (undivided). சுயம் என்பது ஆணுமல்ல, பெண்ணுமல்ல, அது ஆன்மிகமானதுமல்ல, ஆன்மிக விரோதமானதுமல்ல, விருப்பு வெறுப்பு அற்றது, பாவபுண்ணியம் அறியாதது, நன்மை தீமை தெரியாதது, நரகலோகம் மேல் உலகம் தெரியாதது, 'மதம்' தெரியாதது, வேற்றுமை பாராதது, துன்பம் மகிழ்ச்சி உணராதது என விளங்கப்படுத்துகிறார். சுயத்தை (self nature) முயற்சி அற்ற முயற்சி ஊடாக அறியவேண்டும் என்கிறார்.

போதிதர்மர் தனித்துவமானவர். இவரைப்போல் பல துறைகளில் ஞானம் நிறைந்த ஒருவர் இவருக்கு முதல் இருந்ததில்லை. இவருக்குப் பின்பும் இருந்ததில்லை. இனிமேலும் இருக்க முடியாது. இவர் எட்டித் தொடமுடியாத உயரத்தில் நகர்கிறார். இவரது வாழ்வு, போதனை, செயல்கள், நடைமுறைகள், தியானம், சீடர்களைத் தேர்ந்த விதம் எதை எடுத்தாலும் எல்லாம் தனித்துவமானவை. இவரது அணுகு முறைகள் அனைத்தும் நேரடியானவை.

❖ Seeking nothing and practicing Dharma தர்மத்துடன் வாழுங்கள், தர்மம் என்றால் என்ன? தண்ணீரின் தர்மம் 'குளிர்மை', நெருப்பின் தர்மம் 'சூடு'. மனிதனின் தர்மம் அவனது "இயற்கைத்தன்மை" (Self nature). இயற்கைத்தன்மை என்றால் என்ன? 'No-selfness'? - 'நான் இல்லை' என்றதில் 'தான்' இல்லை என்ற நிலை. தேடல் எனும்போது நீங்கள் உங்களை உங்களிடமிருந்து விலக்குகிறீர்கள் Non-seeking. இதுதான் போதிதர்மரின் முக்கிய போதனை. உங்களுக்குள்

செல்லுங்கள், உங்கள் தர்மம் (Dharma) என்ன என்பதை நீங்கள் அறிவீர்கள். உங்கள் (self Nature) இயற்கைத் தன்மையையும் அறிவீர்கள். நீங்கள் எதுவுமே "இல்லை" என்பது போலச் செயற்பட்டுக்கொள்வீர்கள். (Then act as if you were no body).

- வெற்றி, தோல்வி சந்தோசம், துக்கம் இவைகள் எல்லாம் கனவுகள் போல வந்து போகும். இவைகள் மனதின் தந்திரங்கள். எண்ணங்களை நீங்கள் கண்காணிக்க வேண்டும். சுயத்தை அறியுங்கள். மகிழ்ச்சியிலும் துன்பத்திலும் அடிபட்டுப்போகாமல் இருப்பவர்கள் இயல்பாகவும், இயற்கையாகவும் பாதையைத் தொடர்வார்கள்.

- All phenomena are empty. வாழ்வில் உங்களுக்கு வெளியே சம்பவிக்கும் எதுவாயினும் எல்லாம் வெற்றுக் காலியானவையே.

- இயற்கை தூய்மையானது, இந்த உண்மையினால் தோற்றம் பொய்யாகிறது. மாசு, கறை, அசுத்தம், பிரிவு, பரிவு, கடமை, கருமம் என்று எதுவும் இல்லை. All natures are pure, by this truth all appearances are empty. Defilement and attachment, subject and object don't exist.

- Whatever you are practicing is nothing. நீங்கள் செய்யும் எதுவும் ஒன்றுமே இல்லை.

- To seek is to suffer, to seek nothing is bliss. தேடல் துன்பத்தைத் தரவல்லது. எதையும் தேடாமல் இருப்பதே பேரானந்தமாகும்.

- You are unaware that your own mind is the Buddha. You won't look for a budha outside your mind. உன் மனதே ஞானத்துக்கு உரியது. வெளியே ஞானத்தைத் தேடாதே. நீயே புத்தன் என்பதை நீ அறியவில்லை. உனக்கு வெளியில் புத்தரைத் தேடாதே.

- புத்தர் புத்தர்களை பாதுகாப்பது இல்லை. புத்தர் மூலம் ஒரு புத்தரை வணங்காதீர்கள். ஒவ்வொருவருக்குள்ளும்

புத்தர் இருக்கிறார். எனவே ஒரு புத்தர் இன்னொரு புத்தரை வணங்கத் தேவையில்லை. "Buddhas don't save Buddhas. Don't use a Buddha to worship a Buddha" ('தன்னை வழிபடாதீர்கள்" என போதிதர்மர் தனது போதனையில் வலியுறுத்துகிறார். "புத்தரை மனது கொண்டு பாராதீர்கள். புத்தர் சூத்திரங்கள் ஓத மாட்டார்கள், விதிமுறைகளை கைக்கொள்ள மாட்டார்கள், எதையும் கடைப்பிடிக்கவோ, மீறவோ மாட்டார்கள், நல்ல செயல், தீய செயல் என்று எதுவும் செய்ய மாட்டார்கள், கோட்பாடுகள் இல்லை. கோட்பாடுகள், முறைகள் எதையும் பின்பற்ற மாட்டார்கள். விழிப்புணர்வைப் பின்பற்றுவார்கள்).

- Your nature is the Buddha and the Buddha is the person who is free, free of plans, free of cares. If you don't see your nature and run around all day looking some where else you will never find enlightenment. உன் இயல்புத் தன்மையே புத்த தன்மையாகும். புத்தர் என்பவர் இயற்கையானவர், இலகுவானவர், செயற்கைத் தன்மைக்கு அப்பாற்பட்டவர். ஞானத்தை வேறு எங்கும் தேடாதீர்கள் உங்களுக்குள் கண்டுபிடியுங்கள். உங்கள் இயற்கைத் தன்மையை உணருங்கள். உங்கள் இயற்கைத் தன்மையை உணராவிட்டால் ஞானத்தை எங்குத் தேடினாலும் கண்டுபிடிக்க முடியாது.

- Even if you have mountains of jewels, and as many servants as there are grains of sand along the Ganges, you can see them when your eyes are open only. What about when your eyes are closed? All that a person can take with himself / herself is his/her awareness of his/her own nature. தங்கக்குவியல் இருந்தாலும் கூட, கங்கைக் கரையின் மணல் போல எண்ணிலடங்கா பணியாட்கள் இருந்தாலும் கூட கண் விழித்து இருக்கும்போது மட்டுமே அவைகளைப் பார்க்க முடியும். கண்கள் மூடியிருக்கும்போது பார்க்க முடியுமா? சாம்ராஜ்யமோ, செல்வமோ, புகழோ எதுவும் சேர்ந்து வராது விழிப்புணர்வைத் தவிர.

(போதிதர்மர் 'புத்தர்' எனும்போது கௌதம புத்தரைக் குறிப்பிடவில்லை. விழிப்புணர்வு (awareness) ஞானம் (Enlightenment), பரிபூரண விடுதலை (Liberation), இந்த நிலைகளைத்தான் 'புத்தர்' எனக் குறிப்பிடுகிறார். 'புத்தர்' என்பது யாருடைய பெயரும் இல்லை. இது ஒரு நிலை.) அந்த நிலையை அடைந்தவர்கள் புத்தர் என அழைக்கப் படுகின்றனர்.

❖ A Buddha does not observe precepts. புத்தர் எந்த விதிமுறைகளையும் பின்பற்றுவதில்லை. அவர் கணத்துக்கு கணம் வாழ்பவர், விழிப்புணர்வின் வழியில் செல்ப வர்கள், ஏடுகளின் குறிப்பின்படியோ, ஏற்கெனவே தயாரிக்கப் பட்ட விதிமுறைகளின்படியோ செயற்பட மாட்டார்கள். அவர்களுக்குள் இருக்கும் வெறுமை யிலிருந்து (Emptiness) கணத்துக்குக் கணம் வாழ்வார்கள். விதிமுறைகள் இல்லாது இருப்பதே அவர்களின் விதிமுறைகளாகும்.

■■

அத்தியாயம் 20

சீடர்களின் சில கேள்விகளுக்குப் போதிதர்மரின் சில பதில்கள்

❖ The Oneness of Mortal and Sage

பாவியும், துறவியும் ஒன்றே. பாவி தேவையற்ற குற்ற உணர்வால் பீடிக்கப்படுகிறார். துறவி தான் மற்றவர்களைவிட பரிசுத்தமானவர் என்ற தேவையற்ற அகங்காரத்தால் பீடிக்கப்படுகிறார்.

❖ இயல்புத் தன்மையுடன் இருங்கள். நீங்கள் இருக்கிறீர்கள், ஆனால் நீங்கள் இல்லை. நீங்கள் இல்லாதது போன்ற நிலை. Remain unmoved even by scriptures.

❖ சொற்களின் தளையிலிருந்து ஒருவர் தன்னை நீக்கிக் கொள்ளுதலே விடுதலையாகும். (Freeing oneself from words is liberation)

உலகிலிருந்து ஒதுங்குதலோ, மனைவியையோ, கணவனையோ, குடும்ப உறவுகளையோ வீட்டுக் கடமைகளையோ கைவிட்டு தூர விலகி ஒதுங்குவதோ விடுதலை அல்ல. சொற்களிலிருந்து ஒருவர் விடுதலை யாகிக் கொள்ளுதலே விடுதலையாகும். அதாவது சொற்களை மனதிலிருந்து நீக்கி வெறுமையாக்கிக் கொள்ளுதலே விடுதலை.

❖ மனத்துக்கு அப்பால் உள்ள நிலை என்னவென்று அறிந்தவர்களால்தான் மரணதுக்கு அப்பால் உள்ள நிலை என்ன என்பது தெரியும். இந்த இரண்டு நிலைகளும் ஒரே அனுபவத்தைக் கொண்டவை.

- ❖ வாழ்க்கை (Life), விழிப்புணர்வுடன் (awareness) தொடர்புடையது.
- ❖ திருமணப் பந்தத்தில் உள்ளவர் ஞானமடைய முடியுமா? எனச் சீடர் கேட்டார். "உங்கள் இயற்கையை அறியுங்கள் என்றுதான் கூறுகின்றேன். உங்கள் இயற்கையை (Nature), இருப்பை (Being) நீங்கள் அறிந்துகொண்டால் மற்ற எல்லா விசயங்களும் முக்கியத்துவத்தை இழந்துவிடும்.
- ❖ ஒருவரது அடிப்படை இருப்பு (intrinsic being) தூய்மையானது. அது மாசுபடாதது. உங்கள் இயல்புத் தன்மையை (self nature) அறிதலே 'புத்தர்' நிலை என்கிறார்.
- ❖ "நீங்கள்' இல்லாதபோது ஞானம் நிகழ்கிறது. ஞானம் படிப்படியாக ஏற்படுவதில்லை. ஞானம் திடீரென ஏற்படுகிறது. (Enlightenment is always sudden, it is never gradual).
- ❖ 'தியானம்' உங்களுக்குள், 'மனம்' உங்களுக்கு வெளியே. (Meditation opens inside, Mind opens outside).

v அறியாமையின் வேர் எது? What is the root of ignorance? அறியாமை எதிலிருந்து வருகிறது? Where does the ignorance come from? என்று போதிதர்மர் அவர்களைக் கேட்டார் சீடர்.

கௌதம புத்தர் கூறுகிறார்: 'அறியாமை'க்கு ஆரம்பம் இல்லை. ஆனால் 'முடிவு' உண்டு. 'விழிப்புணர்வுக்கு' ஆரம்பம் உண்டு, ஆனால் 'முடிவு' இல்லை. அது தொடர்ந்து கொண்டேபோகும். பிரக்ஞைக்கு (Consciousness) ஆரம்பம் உண்டு ஆனால் முடிவு இல்லை என்றார். 'அறியாமை'யின் ஆரம்பம் அறியமுடியாதது போல் 'விழிப்புணர்வின்' முடிவையும் அறிய முடியாது. இந்த ஆரம்பம் தெரியாததாகவும் இந்த முடிவு புதிராகவும் (Mystery) காலம்காலமாக இருக்கும். இந்த இரண்டும் 'இருத்தலில்' (Existence) முக்கியமானவை என்ற புத்தரின் கூற்றைப் பதிலாக விளக்கினார் என ஏடுகள் கூறுகின்றன.

அறியாமை மனம் (ignorant mind) என்பது மாயையில் (Delusion), கோபத்தில், (Anger) பேராசையில் (greed) வேர்விட்டு முளைக்கிறது என்று கூறிக்கொள்ளலாம். மாயை எங்கிருந்து வருகிறது? (Where does delusion come from?) கோபம், பேராசை எங்கிருந்து வருகிறது? (Where do anger and greed come from?) இதற்குப் பதில் அறியாமையிலிருந்து என்றுதான் கூறப்போகின்றீர்கள். எனவே மீண்டும் அதே கேள்வி "அறியாமை" எங்கிருந்து வந்தது? மனிதன் ஒரு அறிவிலி (ignorant) அவனில் இருந்து வந்தது என்றே பதில் அமைகிறது. மனிதன் அறியாமையானவனாக இருப்பதால் கோபம், பேராசை, மாயை உள்ளவனாகிறான். அறியாமை எங்கிருந்து வருகிறதென்றால் கோபம், மாயை, பேராசை என்றே ஆயிரக்கணக்கான வருடங்களாகக் கூறப்படுகிறது. இந்தப் பதில்கள் மூலம் மனிதன் தன்னைத்தானே முட்டாளாக்கிக்கொண்டேயிருக்கிறான், இயற்கையில் இருட்டு இருப்பது போலவே அறியாமையும் இருக்கிறது என்ற புத்தரின் பதிலைப் போதிதர்மர் விளக்கியதாக ஏடுகள் கூறுகின்றன.

❖ சொற்களிலோ, எழுத்துக்களிலோ, பேச்சிலோ அக்கறை கொள்ளாது உங்கள் இயல்புத் தன்மையை கண்டறிந்து அதிலிருந்து எழுங்கள்.

A special transmission outside the scriptures, Not based on words or letters, a direct pointing to the heart of reality so that you might see in to your own nature and wake up.

❖ 'தியான்' (Dyan/chan/zen) புத்தரிலிருந்து சீடர்களுக்கு நேரடியாக ஊடுருவியது. இது ஏடுகளிலோ, போதனைகளிலோ இல்லாத ஒரு செயல்முறை.

'Dyan' (Zen/Chan) has been transmitted directly by Buddha and has nothing at all to do with the scriptures and doctrines.

❖ இது குருவிலிருந்து மாணவனுக்கு மனவழியாகச் செல்கிறது.

It powers directly from masters' to students from "mind to mind"

❖ 'சென்' (தியான்) என்பது வாழ்க்கை, இது பிறிதொன்றை பாவனை செய்யவில்லை.

Zen (dyan) is Life, it does not imitate

❖ உண்மை என்பது ஒரு கருத்தல்ல, கருத்தில் தொங்கிக் கொண்டு நின்றால் உண்மையைத் தவறவிடுவோம்.

Truth is not a concept, if we cling to our concepts we lose reality.

❖ ஒருவரது இயல்புத் தன்மையைக் கண்டறியுங்கள். அந்த இயல்புத் தன்மையூடாகப் பாருங்கள்.

Seeing into one's own nature.

❖ எது, எது, எப்படி இருக்கின்றனவோ அவைகளை அதன்படி அப்படியே பாருங்கள்.

'Seeing things as they are.'

❖ நடக்கும்போது நடக்கிறீர்கள் என்ற தன் உணர்வுடன் (Mindfulness), உண்ணும்போது உண்ணுகிறீர்கள் என்ற தன்னுணர்வுடன் உட்கொள்ளுங்கள். எது செய்தாலும் தன் உணர்வுடன் செய்யுங்கள், நீங்கள் நடப்பது, ஓடுவது, சாப்பிடுவது, இருப்பது, எழுவது எதுவாக இருந்தாலும் அங்கே தன் உணர்வு இல்லை. (absence of mindfulness) உங்களை அறியாமலே செய்கிறீர்கள் (not aware of what you are doing) எண்ணங்கள், சொற்கள், செயல்கள் எல்லாம் தன் உணர்வுடனே இருக்கட்டும். 'சென்' செயல்களில் அக்கறை கொள்கிறது பேச்சில் அல்ல (In Zen, everything is in the doing, not in the contemplating) தன் உணர்வைப் பற்றியதே சென் (Zen) செயற்பாட்டின் அடிநாதமாகும். When you walk, you must be aware that you are walking, when you eat, you must be aware that you are eating, you must be aware of your actions, words, and thoughts, you must live your life in mindfulness. Mindfulness is at the base of all Zen practice, Buddhist practice.

முக்கிய குறிப்பு : இங்குக் காணப்படும் கேள்வி, பதில்கள் எல்லாம் நான் வாசித்து அறிந்த நூல்களிலிருந்து எடுக்கப்பட்டவையே. இவை என் விளக்கத்திற்கு ஏற்ப எழுதப்பட்டவையே. இவையனைத்தும் மொழிபெயர்ப்பின் மொழிபெயர்ப்புக்களே.

- ஆசிரியர்



■■

அத்தியாயம் 21

உயிர்த்தெழுந்தார் போதிதர்மர்!
இமயத்தின் மடியில் தன்னை ஒப்படைத்தார்!!

சீடர்கள் தேர்வு முறை:



மக்கள் போதிதர்மரது உபதேசங்களைக் கேட்பதற்காக அவரது இடத்துக்குச் செல்வார்கள் ஆனால் போதிதர்மர் மக்களைப் பார்க்காது சுவரைப் பார்த்தே பேசிக்கொண்டிருப்பார். மக்கள் அவர் பின்னால் உட்கார்ந்திருந்து அவர் போதனைகளைக் கேட் பார்கள். அப்போது அவர் மக்களைத் திரும்பிப் பார்க்கமாட் டார். மக்கள் அவருக்கு பாதிப்புக் களைக் கொடுப்பதால் நேரடியாகப் பார்ப்பதைத் தவிர்த்து சுவரைப் பார்த்துக்கொண்டேயிருப்பார். அது மாத்திரமல்ல மக்களின் முட்டாள் தனங்களைப் பார்க்கவும் அதே நேரத்தில் எவரையும் பார்த்துப் பேசவும் விரும்பவில்லை. சுவரைப் பார்த்துப் பேசிக்கொண்டிருப்பதால் அங்குள்ள எவரையும் பார்த்துப் பேசத் தேவையில்லாத சூழலை உருவாக்கிக் கொண்டார்.

"கேள்வி கேட்பவர்கள் என் முதுகுக்குப் பின்புறமாகவே உட்கார்ந்திருந்தே கேள்விகள் கேட்கலாம். பதில்கள் சுவரைப் பார்த்தே கூறுவேன். கேள்வி கேட்பவரை நேரடியாக நான்

பார்க்க விரும்பவில்லை. என் கேள்விகளுக்குப் பதில்கள் சொல்பவர்களது பதில்களை வைத்து அவர்கள் சீடர்களாக மாறத் தயார் நிலையில் உள்ளார்கள் என எனக்குத் தோன்றினால் மட்டுமே நான் திரும்பிப் பார்ப்பேன்'' என்றார்.

பிரதம சீடர் தெரிவு விஷமானதா?



போதிதர்மர் சீனாவை விட்டு வெளியேறத் தீர்மானித்த போது தனது நாலு சீடர் களையும் அழைத்தார். 'என் போதனைகளில் நீங்கள் விளங்கிக்கொண்டதின் சாரம் சத்தை இரத்தினச் சுருக்கமாகக் கூறுங்கள் என்றார். நாளை நான் இமயமலையை நோக்கிப் பயணமாகப் போகிறேன். அதற்கு முதல் உங்களில் ஒருவரை எனக்கு அடுத்தவராக நியமிக்கப் போகின்றேன்'' என்றார்.

டா-பியூ (Daofu): ''உங்கள் போதனை மனதைத் தாண்டி அதற்கப்பால் செல்கிறது. மனதைத் தாண்டிப் பரவெளியாகும்போது எல்லாம் தானாக இயல்பாகச் சம்பவிக்க ஆரம்பிக் கிறது. உங்கள் போதனையின் அடிப்படை இதுவே'' என்றார்.

போதிதர்மர் : ''நீ விளங்கிக்கொண்டது பிழை இல்லை ஆனால் விளங்கிக்கொள்ள இன்னும் இடமிருக்கிறது. நான் இறந்தபின் என் உடல் சருமத்தை skin நீ பெறுவாய்'' என்றார்.

டா-யூ (Daoyu) : ''நான் இல்லை என்பதை நான் அறிதல், இருக்கிறேன். ஆனால் இல்லை, என்பதையே அடிப்படையாக் கொள்கிறேன் என்றார்.

போதிதர்மர் : இது "ஓரளவு பறவாயில்லை என் எலும்பை (Bone) நீ பெறுவாய்"

தாரணி (Dharani): (பெண்துறவி) "எதுவும் சொல்லமுடியாது, சொல்வதற்கு சொல்லுக்கு வலிமையில்லை" என்றார்.

போதிதர்மர் : "நல்லது, இதுபோன்று ஏற்கெனவே கூறி யிருக்கிறாய் எனது தசையை (Flesh) நீ பெறுவாய்" என்றார்.

சீன 'சென்' (Chan/Zen) மதத்தின் முதலாவது பெண் பிக்குணி போதிதர்மரது பிரதான சீஷையான 'சோங்' (Zongh) என சென் ஏடுகள் தெரிவிக்கின்றன. தாரணியும் 'சோங்கும் ஒரே ஆளாக இருக்கலாம்' இவரது பிக்குணிப் பெயர் மயோரின் (Myoren) ஆகவும் இருக்கலாம்.

ஹியூக் (Hui-ke/Huiko) : எதுவும் சொல்லாது போதிதர்மரின் காலடியில் வீழ்ந்து தேம்பித்தேம்பி அழுது மௌனியானார்.

போதிதர்மர் : "சொற்கள் பாவியாது கூறிவிட்டாய். நீ எனது எலும்பு மச்சையை (Marrow) பெறுவாய். உன்னை எனக்கு அடுத்தவராக நியமிக்கிறேன்" என்றார்.

உயிர்த்தெழுந்தார் (Resurrected):

சீடர் தெரிவின்பின் அன்று இரவு வழமைபோல் உணவு உட்கொண்டார். போதிதர்மர் உண்ட உணவு விஷத் (food Poison) தன்மையாக இருந்ததால் அவரது உடல் இறந்தது போன்ற ஒரு நிலையை அடைந்தது, ஆனால் அது அவரது தன்னுணர்வு, பிரக்ஞை (consciousness) சார்ந்தது அல்ல, அது அவரது உடல் சார்ந்ததே ஆகும். இதேபோல்தான் கௌதம புத்தருக்கும் நடந்தது. கண்டா (Cunda) என்பவரால் புத்தருக்கு வழங்கப்பட்ட காளான் உணவு விஷத்தன்மையாக இருந்ததால் புத்தரது உடல் இதே அனுபவத்தை அடைந்தது. அதில் இருந்து மீண்டு வந்து பின்புதான் தன்னுணர்வுடன்

புத்தர் தன் உடலை விட்டுப் பிரிந்தார். போதிதர்மர் இறந்து விட்டதாக எண்ணி அவரை அடக்கம் செய்துவிட்டார்கள். புதைகுழியில் இடும்போது இவர் மயக்க நிலையில் (Comatose) இருந்தார். போதிதர்மருக்கு உயிர்த்தெழும் கலையும் அட்டமா சித்தியும், அட்டாங்க யோகமும் நன்கு தெரியும். மண் சரிவுகளில் அகப்பட்டு மண்ணினால் மூடப்பட்டால் மண்டூபம் தவளை போல் மண்ணுக்கு அடியில் இருந்து மண்ணைத் துளைத்துக் கொண்டு வெளியில் வரும் கலையும் தெரிந்தவர். அவர் சீனா செல்லும்போது மண் சரிவுகளில் அகப்பட்டு ஏற்கெனவே இந்த அனுபவத்தை அவர் பெற்றிருந்தார். அவரது மயக்கநிலை தெளிந்து அவர் உயிர்த்தெழுந்தது போல் (Resurrected) புதை குழிக்குள்ளிருந்து வெளியே வந்தார். தான் அங்கிருந்து வெளியேறியதன் அடையாளமாக அங்கு தனது ஒரு பாதணியை விட்டுச் சென்றார். இயேசு கிறிஸ்து நாதருக்குப் பின்பே இந்த உயிர்த்தெழல் நிகழ்ந்ததால் இந்த நிகழ்வு உலகில் முக்கியத்துவம் அடையவில்லை.

உலகில் பல மகான்கள் மரணத்துக்கு அப்பால் சென்று அந்த அனுபவத்தைப் பெற்று மீண்டும் உயிர்த்தெழுந் துள்ளனர். இதைப்பற்றிய பல விவரங்கள் 'மறுபிறப்பு பற்றிய ஆச்சரியமான தகவல்கள்' என்ற எனது நூலில் குறிப் பிட்டுள்ளேன்.

மூன்று வருடத்தின் பின், அவர் சீன எல்லையைத் தாண்டும்போது சீன எல்லையில் பேரரசர் 'வெய்' (Northern Wei) யின் அரச எல்லை அதிகாரி சோங்யுன் Songyun இவரைக் கண்டார்.

அதிகாரி : நீங்கள் எங்கே செல்கிறீர்கள்?

போதிதர்மர் : நான் இமயமலைக்குச் சென்று என் உடலை நீக்கப் போகின்றேன்.

அதிகாரி : நீங்கள் கோலில் ஒரு பாதணியைக் கொழுவிக் கொண்டு போகின்றீர்கள், அதன் அர்த்தம் என்ன?"

போதிதர்மர் : உனக்கு விரைவில் பதில் கிடைக்கும். என்னைக் கண்டதாகக் கூறி வில்லங்கத்தில் மாட்டிக்கொள்ளாதே.

இந்த அதிகாரி போதிதர்மர் இருந்த ஆலயத்திற்குச் சென்று தான் கண்ட நிகழ்வைக் கூறினார். இச்செய்தியை பேரரசர் 'வெய்'யுக்கும் சென்று தெரிவித்தார். போதிதர்மர் மூர்க்கத்தனமானவராகவும், ஆக்ரோஷமானவராகவும், பயங்கரக் கண்கள் உடையவராகவும், வலிமையானவராகவும், கூர்மையாக உற்று நோக்குபவராகவும், எப்படி இருந்தாரோ அதேபோல் காணப்பட்டார் எனவும் கூறினார். இவர் பொய் வதந்தி பரப்புவதாக அரசர் எச்சரித்து இவரைச் சிறையில் அடைத்துவிட்டார்.

புதைகுழியில் உடல் காணப்படவில்லை:

சீடர்கள் உடனடியாக பாமிர் மலைச்சாரலில் (Pamir Mountain) உள்ள அவரது புதைகுழியைத் தோண்டினார்கள். அங்கு போதிதர்மரின் உடல் காணப்படவில்லை, அவரது ஒரு பாதணி மாத்திரம் இருந்தது. அந்த அரச அதிகாரிக்கு ஒரு பாதணிக்குப் பதில் விரைவில் கிடைக்கும் என்று போதிதர்மர் கூறியிருந்தார். அவருக்கு அதற்கான பதில் கிடைத்துவிட்டது. அரசர் அவரை விடுதலை செய்தார். அவருக்கு ஏற்பட்ட வில்லங்கத்திலிருந்து அவருக்கு விடுதலையும் கிடைத்து விட்டது.

போதிதர்மர் அணிந்திருந்த அதே மாதிரி பாதணியைத்தான் வடிவமைத்து உலகம் முழுவதும் உள்ள சென் zen மதத்துறவிகள் இன்றும் அணிகின்றனர்.

சென் பௌத்தம் பரவியுள்ள நாடுகளில் உள்ள வீடுகளின், வியாபார ஸ்தாபனங்களின் வாசலில் சப்பலை, செருப்பை, பாதணியை தொங்கவிடும் சம்பிரதாய வழக்கம் இன்றும் இருக்கிறது. அதைப் புனிதமாகவே கருதுகிறார்கள். இந்த வழக்கம் போதிதர்மரது நடைமுறையில் இருந்து ஏற்பட்டு இருக்கலாம் என்பது இந்நூல் ஆசிரியரது அபிப்பிராயமாகும்

ஊர்ஜிதம் செய்யப்படாத இவரது இறப்பைப் பற்றிய தகவல்கள்:

அ) வட சீனாவில் 150 வயதுவரை ஆரோக்கியமாகவும் சுறுசுறுப்பாகவும் வாழ்ந்து இறந்து ஹியோங்க் மலைச்சாரலில் (Mount xiong) சீடர்களால் அடக்கம் செய்யப்பட்டார்.

ஆ) பாமிர் (Pamir Mountain) மலைச்சாரலில் அடக்கம் செய்யப்பட்டார்.

இ) லாவூ ஆற்றங்கரையில் (Lau River Beach) உள்ள குகை ஒன்றினுள் சீடன் ஹியூக் (Huike) அடக்கம் செய்தார் எனச் சீன ஆய்வாளர் ரான்லிங் (Tanlin) டாவோசுவான் Daoxuan போன்றோர் குறிப்பிட்டுள்ளார்கள். அன்றைய அரசனின் வீழ்ச்சியின்போது ஏற்பட்ட பெரும் கலவரத்தில் இவர் சிக்குண்டு மரணமானதாக நம்பப்படுகிறது.

ஈ) இவர் தியானத்திலிருந்தபோது அதே நிலையில் மேலே பறந்து ஆகாயத்தில் மறைந்துவிட்டார் எனச் சில ஏடுகள் தெரிவிக்கின்றன.

உ) இமயமலை நோக்கிப் போவதை அரச பிரதிநிதிகள் சீன எல்லையில் கண்டதாகவும் தான் இமயமலையில் போய் இறக்கப்போவதாக கூறியதாகவும் ஒரு பதிவு உண்டு.

இவர் இமயமலைச் சாரலில் தன் உடலைத் துறந்து இருப்பார் என்பது இந்நூல் ஆசிரியரின் அபிப்பிராயம்.

மரணத்தைத் தன் கட்டுப்பாட்டில் வைத்திருந்து தங்கள் விருப்பாற்றலில் உடலைவிட்டுப் பிரியும் அனுபவத்தைப் பல ஞானிகள் மேற்கொண்டவர்கள். போதிதர்மரும் அத்தகையவரே.

ஊ) சீனாவிலிருந்து புறப்பட்டு ஜப்பானிலுள்ள ஒக்கினாவா தீவில் (Okinawa) இறந்ததாக அத்தீவில் கருத்து நிலவுகிறது. அங்கு போதிதர்மரை 'தருமா' (Daruma) என்று அழைக்கின்றனர்.

ஜப்பானை அடைந்தபோது அவரை இளவரசர் Shotoku Taishi A.D. 574 - 622 சந்தித்ததாகவும் அந்த இளவரசர் போதிதர்மரைச் சந்தித்த பின் சென் பௌத்தத்தைத் தழுவியதாகவும் பின்பு இளவரசர் மூலம் ஜப்பானில் சென் பௌத்தம் அறிமுகமானதாக Medieval Sect கூறுகிறது. போதிதர்மரைப் புத்தர் வரிசையில் வைத்து ஞானம் பெற்ற புத்தராக வணங்குகின்றனர். ஜப்பானில் ஞானம் அடைதலை 'Zatori' என்கின்றனர்.

இவரது வாழ்வு எவ்வளவு குழப்பமாக உள்ளதோ அதே குழப்பம் அவரது இறப்பிலும் ஏற்படுகிறது. இவரது வாழ்வைத் தோண்டத் தோண்ட எவ்வளவு அதிசயமான, ஆச்சரியமான, விஷயங்கள் வெளிவருகிறதோ அதே அளவு அதிசயமும், ஆச்சரியமுமான விஷயங்கள் இவரது மரணம் தொடர்பாகவும் வெளிவருகின்றன. எவ்வளவுக்கெவ்வளவு மர்மம் இவரது வாழ்வின் ஆரம்பத்திலிருந்து இறுதிவரை நிலவுகிறதோ அதே மர்மம் அவர் வாழ்ந்து இறந்து 1500 வருடங்களுக்குப் பின்பும் நிலவுகிறது.

குழியில் இருந்து உயிருடன் மீண்ட சில நிகழ்வுகள்:

ஒரு நிகழ்வு:

மண்குழிக்குள் முகத்தைப் புதைத்து தலைகீழாக நின்ற துறவி:

கனடாத் தொலைக்காட்சியில் T.L.C. (The Learning Channel) சனலில் கிட்டத்தட்ட 20 வருடங்களுக்கு முன் பார்த்த என் நினைவிலுள்ள ஓர் சம்பவம்:

வட இந்தியாவில் சித்தர் ஒருவர் தலைகீழாக நின்றபடி தனது முகத்தை மண்குழி ஒன்றினுள் புதைத்து வைத்திருந் தார். அவரது கழுத்துக்குச் சற்று மேல்மட்டம் வரை மண்ணால் மூடப்பட்டு இருந்தது. அவர் குழிஒன்றில் மரம் நடப்பட்டது போன்று காணப்பட்டார். அவர் அக்குழி யிலிருந்து மூச்சுத்திணறல் எதுவும் இல்லாமல் வெளியே வந்தார். அவர் 12 மணிநேரம் வரை அவ்வாறு நின்றார் எனத் தொலைக்காட்சி நிருபர் குறிப்பிட்டார். உடலில் எந்தவித மாற்றமும் இல்லாமல் காணப்பட்டார்.

மேலும் இவர் கனடாவில் ஒருநாள் கடும்குளிரில், உருகிய பனி வாவியில், சிறிது நேரம் உடல்பூராவும் அமிழ்ந்து இருந்ததையும் தொலைக்காட்சியில் காண்பித்தார்கள். இவரைப்பற்றிக் கூறிக்கொண்டிருந்த தொலைக்காட்சி நிருபர் இவர் ஒரு மருத்துவ டாக்டராக இருந்து துறவியானவர் எனக் குறிப்பிட்டார்.

ஒரு சம்பவம்:

உயிருடன் மீண்டார்:

Woman found alive in rubble 17 days after Bangladesh factory collapse

பங்களா தேசத்தில் ஆடை தைக்கும் நிறுவனமுள்ள உயர் மாடிக் கட்டடம் ஒன்று திடீரென உடைந்து, சரிந்து, விழுந்ததால் இடிபாட்டில் சிக்குண்டு மொத்தமாக 1100 பேர் மரணமானார்கள். பதினேழு நாட்களின் பின் அதாவது 10.05.2013 அன்று 40 வயதுடைய பெண் ஒருவர் உயிருடன் ஆரோக்கியமான நிலையில் மீடகப்பட்டார்.

இப்படியான அதிசயங்கள் உலகம் பூராவும் நடந்து கொண்டுதான் இருக்கின்றன. இப்பெண்மணிக்கு உயிர்க்கும் கலையோ அல்லது அட்டமாசித்திக் கலையோ எதுவும் தெரியாதவர்.

ஒரு தகவல்:

எந்தச் சூழலிலும் உயிர் வாழும் மீன்:

ஆபிரிக்காவிலுள்ள மட்ஸ்கிப்பர் (Mudskipper) மீனினம் நீரில் மாத்திரமல்ல, வறட்சியான நிலத்திலும், குழிகளிலும்,





கற்பாறைகளிலும் வாழக்கூடியது. இந்த மீன் வாழ மிகக் குறைந்த அளவு ஆக்சிஜன் போதுமானது. அதுமாத்திரமல்ல அது தன் தோலாலும் சுவாசிக்கும் தன்மையுடையது. எந்தச் சூழலிலும் உயிருடன் வாழக்கூடிய தன்மை கொண்டது.

ஒரு செய்தி:

உயிர்த்தெழுதல் இவரது பொழுதுபோக்கு:

பாகிஸ்தானின் ஆக்கிரமிப்புக்குள் உள்ள காஷ்மீர் பகுதியில் உள்ள ஒரு கிராமத்தைச் சேர்ந்த 135 வயதையுடைய தோட்டத்திலும், வயலிலும், கழனியிலும் வேலை செய்யும் ஒரு தொழிலாளியின் அனுபவத்தைப் பாருங்கள்.

1987-ஆம் ஆண்டு ஆனி மாதப் பிற்பகுதியில் இவர் மூன்றாவது தடவையாக அந்த வயதில் இறந்தார். உறவினருக்குச் சந்தேகம். ஏனெனில் இதற்கு முன்பும் இப்படி இரண்டு தடவை இறந்திருக்கிறார். மூன்று டாக்டர்கள் பரிசோதனை செய்து இறந்ததை உறுதிப்படுத்தினார்கள். மரணச் சான்றிதழ் வழங்கினார்கள். இறந்த மனிதன் கண் விழித்தார், சிரித்தார். தான் முன்பு இரண்டு தடவை தந்திரம் பண்ணியது போல் இந்த முறையும் தந்திரம் செய்ததாகக் கூறினார். அடுத்த தடவை தான் நிச்சயமாக இறப்பேன் தந்திரம் செய்யமாட்டேன் என நம்பிக்கையாகக் கூறினார்

காஷ்மீரில் மூன்று தடவையும் இறந்ததாக டாக்டர்களால் உறுதிப்படுத்தப்பட்ட இந்தப் பொழுதுபோக்காக இறப்பதும் உயிர்ப்பதுமான மனிதரைப் பத்திரிகையாளர்கள் சந்தித்தனர். நீங்கள் எப்படி இதைச் செய்தீர்கள்? எனக் கேட்டனர். அவர் கூறினார் ‘‘நான் என் உடம்பல்ல, நான் அதை நன்கு

அறிவேன், நான் எனது இருதயமல்ல நான் அதை நன்கு அறிவேன், நான் இதற்கு அப்பாற்பட்டவன். நான் மெதுவாக நகர்ந்து உடலுக்கு அப்பால் செல்கிறேன் அப்போது இருதயம் செயல் இழக்கிறது, நாடி நிற்கிறது, சுவாசம் மறைகிறது. சிறிது நேரத்தில் நான் மீண்டும் நழுவி, போன பாதையால் என் உடலுக்குள் பிரவேசிக்கிறேன். இரத்தம் உடலுக்குள் ஓடத் தொடங்குகிறது. நாடி துடிக்கத் தொடங்குகிறது, இருதயம் அடிக்கத் தொடங்குகிறது' என்றார். இவர் ஒரு யோகி இல்லை. இவர் ஒரு சாதாரண விவசாயி. இவர் எந்தவித ஆன்மிகப் பயற்சிகளையும் அறியாதவர்.

இவர் ஏழுவயதுச் சிறுவனாக இருந்தபோது இவர் தற்செயலாக ஒரு சூஃபி (Sufi) ஞானியைப் பார்த்தார். அந்த ஞானி இவருக்குக் கூறினார் ''மரணம் என்று ஒன்று இல்லை, அது ஒரு பொய்த் தோற்றம்.'' அப்போது சூது, வாது, பொய் எதுவும் தெரியாத பாலகனான இவர் அதை முழுமையாக நம்பினார். சூஃபி ஞானி அந்தப் பாலகனுக்குக் கூறினார் ''உடம்பிலிருந்து நழுவிச் செல்வதற்கு வழி முறைகள் இருக்கின்றன. உடம்புக்குள் உள்நோக்கிச் சென்று உன் உடலைப் பார், உனக்கும் உன் உடலுக்குமிடையில் 'வெற்றிடம்' ஏற்படும். அந்த வெற்றிடம் அதிகரித்துக் கொண்டே போகும். அப்போது நீ உன் உடலில் இருந்து வெளியேறிவிட்டாய். அதே பாதையால் மீண்டும் பிரவேசி. நான்தான் உடல், நான்தான் மனம், நான்தான் சுவாசம், நான்தான் இதயத் துடிப்பு என்று கூறு. அந்த வெற்றிடம், அந்த இடைவெளி மறைந்துவிடும், நீ உடலாகிவிடுவாய், மரணம் என்பது பொய்'' என்று விளக்கினார் அந்த ஞானி. சிறுவன் அதைக் குழந்தைப் பிள்ளைத்தனமாக அப்படியே முழுமையாக நம்பினான். அவன் மனது அதைத் தர்க்க விவாதமாக்கவில்லை, அதை அவன் மனம் ஏற்றுக் கொண்டது.

ஒரு நிகழ்வு:

இறுதி நிலையைத் தன் கட்டுப்பாட்டில் வைத்திருந்தார் மார்பா (Marba)

இவர் திபெத்திய நாட்டில் 11-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த ஒரு 'தந்திரா' ஞானி (Tantric Sage). 'தந்திரா' (Tantra)

மதங்களுக்கு அப்பாற்பட்ட நிலையில் உள்ளது. திபெத்திற்கு பௌத்தத்தை இந்தியாவிலிருந்து எடுத்துச் சென்றவர்களில் ஒருவரான இவர் அங்கு 'மகாமுத்திராவை' அறிமுகப் படுத்தினார்.

ஞானி மார்பா மரணத்தைத் தன் கட்டுப்பாட்டில் வைத்திருந்தார். தன் உடல் இறக்கப்போவதாகத் தன் சீடர்களுக்குக் கூறினார். சீடர்கள் கூடிவிட்னர். அவரது உடல் இறந்துகொண்டிருக்கையில் சீடர்கள் அழுதனர், அதைக் கண்டதும் தன் மரணத்தை மார்பா உடனே நிறுத்தினார். மார்பா எழுந்து உரக்கக் கூறினார் ''அழுகையை நிறுத்துங்கள்! கொண்டாட்டத்துக்குரிய இந்தத் தருணத்தில் ஏன் அழுது புலம்புகிறீர்கள்?''

தன்னுணர்வுடனே (Self-Conscious) மரணத்தை வரவேற்று, தழுவி உபசரித்தவர் ஞானி மார்பா அவர்கள். அவர் இறக்கவில்லை, தங்களுக்குள் வாழ்வதாகவே திபெத்திய மக்கள் நம்புகிறார்கள். நம்பிக்கையின் அடையாளமாக மார்பாவை திபெத்திய மக்கள் பார்க்கிறார்கள். 'நம்பிக்கையுள்ள மார்பா' என்றே அழைக்கப்படுகின்றார்.

ஒரு நிகழ்வு :

மரணத்திலிருந்து மரணமற்ற நிலையை அடைந்தவர் பொகூயூ (Bokuju)

ஜப்பானைச் சேர்ந்த சென் (Zen) ஞானியான பொகூயூ (Bokoju) தன் சீடர்கள் அனைவரையும் வருமாறு அழைத்தார். அவர்களைப் பார்த்து "என் உடலுக்கு இன்று மரணம் கொடுக்க உள்ளேன். உடலை விட்டு நான் பிரியப் போகிறேன். என் உடலுக்கு ஒரு தனித்துவமான மரணத்தைக் கொடுக்க வேண்டும். தனித்துவமான முறை ஒன்றைக் கூறுங்கள்" என்றார்.

ஒரு சீடன் ''நீங்கள் தாமரைப் பூ வடிவம் போன்று உட்கார்ந்திருந்து மரணமாகலாம்'' என்றார். இன்னொரு சீடன் குறுக்கிட்டார் ''பல ஞானிகள் அந்த முறையில்தான் தங்கள் உடலைவிட்டுப் பிரிந்துள்ளார்கள்'' என்றார்.

தொடர்ந்து வேறொரு சீடன் ''நீங்கள் நிலத்தில் நின்று உடலை விட்டுப் பிரியுங்கள்'' என்றார். பிறிதொரு சீடன் ''ஏற்கனவே ஒரு ஞானி அப்படித்தான் பிரிந்தார் என்றார், அடுத்தவர் தான் ஒரு வித்தியாசமான முறையைச் சொல்கிறேன் என்றார். எல்லோரும் ஆவலாக அவர் சொல்லப் போகும் முறைக்காக காத்திருந்தனர். ''தலைகீழாக நின்று இறப்பீர்களா? இது தனித்துவமானதாக இருக்கும்'' என்றார். அதற்கு ஞானி இணங்கினார். சீடர்கள் முன்னிலையில் தலைகீழாக நின்று தன் உடலுக்குத் தன்னுணர்வுடன் இறப்பைக் கொடுத்தார்.

இந்தத் தனித்துவமான மரணத்துக்கு எப்படி தனித்துவமான இறுதி மரியாதை கொடுப்பது என்று தெரியாமல் சீடர்கள் விழித்தனர். சீடர்கள் ஒரு முடிவுக்கு வந்தனர். ஞானி பொகூயூ அவர்களின் அக்கா ஒரு ஞானி. அவரிடம் ஆலோசனை கேட்போம் என்று அவர்கள் புறப்பட்டு அருகாமையில் இருந்த அவரது ஆசிரமத்துக்குச் சென்று அவரிடம் கேட்டனர். "நாங்கள் எங்கள் குருவுக்கு மிக உயர்ந்த தனித்துவமான இறுதி மரியாதையை கொடுக்க வேண்டும், நாங்கள் உங்கள் ஆலோசனையைப் பெற வந்துள்ளோம்" என்றனர். இதைக் கேட்டதும் தன் தம்பியினது உடல் இருந்த இடத்திற்கு அக்கா விரைந்தார். அவரது உடலுக்கு முன் நின்று உரத்த குரலில் கூறினார் ''நீ உன் வாழ்நாள் முழுக்க முட்டாள்தனமாக நடந்துகொண்டாய், உன் இறுதி நாளிலும் கூட இதுவரை நீ செய்யாத முட்டாள் தனங்களையும் விட ஒரு மிகப் பெரிய முட்டாள் தனமான இறப்பை உன் உடலுக்குக் கொடுத்துள்ளாய். நீ ஞானம் அடைந்திருந்தாலும் உன் முட்டாள் வேலைகள் உன்னை விட்டுப் போகவில்லை. இந்த முட்டாள்தனத்தைக் கைவிட்டு வெளியே வா! பிறர் எதிர்பார்ப்பது போல் இறவாதே!! பிறரின் எதிர்பார்ப்புக்கேற்ப செயற்படாதே!! நீ படுத்திருந்து சாதாரண நிலையில் உன் உடலை விட்டுப் பிரி, பொகூயூ. நீ உயிர்த்தெழு'' என்று உரக்கக் கூறினார். சுவாசம் நின்றிருந்த அவரது உடல், இருதயம் நின்றிருந்த அவரது உடல் மீண்டும் இயங்கத் தொடங்கியது. தலைகீழாக நின்று மரணமான அந்த ஞானி எழுந்து நிலத்தில் நின்றார். பின்னர் ''உலகின் பொது மரணமான படுத்திருந்து இறப்பது'' என்ற அந்த நிலையை

அவர் ஏற்று, அதனையே தன்னுடலுக்கு அனுமதித்து இவ்வுடலைவிட்டுப் பிரிகிறேன் என்றார். அப்படியே உடலை விட்டுப் பிரிந்தார். பழையபடி அவரது சுவாசம் நின்றது, இதயத்துடிப்பு நின்றது, சீடர்கள் இறுதி மரியாதை செலுத்தினர்.

இந்த ஞானி முதலில் ஏற்பட்ட மரண நிலையில் இருந்து தன் சீடர்களுக்கு மரணத்தைப் பற்றிய ஒரு தெளிவைத் தத்துவார்த்தமாகச் செயல்முறையில் விளக்கியிருக்கிறார். அவர்கள் என்ன செய்வதென்று தெரியாமல் நின்ற திகைப்பையும் கவனித்திருக்கிறார். தன் மரணம் மூலம் சீடர்களுக்கு அழகான அனுபவத்தைக் கொடுத்து மரணத்தை ஒரு சாதாரண அழகான நிகழ்ச்சியாக மாற்றி உலகத்துக்கு வழங்கிச் சென்றுள்ளார். இவர் மரணத்திலிருந்து மரணமற்ற நிலையை (From death to deathlessness) அடைந்தவர்.

புத்தர் தனது இறுதி நிலையைத் தீர்மானித்தார்:

புத்தர் (கி.மு. 566 - 486) குஷக்ஷிநகரில் (Kushinagar) தனது இறுதிப் போதனையையும், தியானத்ததையும் முடித்துக் கொண்டு "என் உடல் பிரிந்துபோவதற்குரிய நேரம் இது தான்" எனக் கௌதம புத்தர் தன் சீடர்களுக்குக் கூறினார். எதைக் குறிப்பிடுகிறார் என்பது சீடர்களுக்குக் கொஞ்சம் குழப்பமானதாக இருந்தது. புத்தர் "நான் என் உடலைவிட்டுப் பிரிந்து செல்லப்போகின்றேன். மலைகள், ஆறுகள், மரங்கள், மனிதர்கள், விலங்கினங்கள் இவற்றுடன் வாழ்ந்துவிட்டேன்" என்றார். அங்கு உயர்ந்து நின்ற இரண்டு அரச மரங்களை Saal Tree சுட்டிக்காட்டி, "அந்த மரங்களுக்கிடையில் என்னுடலை விட்டுச் செல்லப்போகிறேன், அந்த இடம் உகந்த இடமாகத் தெரிகிறது" என்றார்.

மரணத்தை ஒரு தீர்மானம் (Decision) எடுப்பதுபோல் புத்தர் எடுத்தார். புத்தர் போன்றவர்களை மரணம் நோக்கி வருவதில்லை, இவர்கள் தங்கள் உடலை மரணத்துக்கு அர்ப்பணிக்கத் தயாராகிறார்கள். கௌதம புத்தருக்கு மரணமானது அவரது தெரிவாக அமைகிறது. அந்த Saal மரங்களுக்கிடையில் அவர் போய் அமர்ந்துகொண்டார். "நீங்கள் ஞானம் அடைந்த ஒருவரைச் சந்திப்பீர்கள்.

என்னை இனிமேல் பார்க்கமாட்டீர்கள். உடலை விட்டுப் பிரிய முதல் ஏதாவது கேள்விகள் இருந்தால் கேளுங்கள்'' என்றார். சீடர்கள் அழுதனர். "நீங்கள் 42 வருடங்களாகப் பதிலளித்துவிட்டீர்கள். எங்கள் ஐயங்களைத் தீர்த்துவிட்டீர்கள். நீங்கள் காட்டிய பாதையை நாங்கள் தொடருவோம்'' என்றனர்.

புத்தர் கண்களை மூடினார், தியானிப்பது போல் இருந்தது: புத்தர் மரணப்படிநிலைகளைச் சீடர்களுக்கு விளக்குகிறார்.

- **''முதலாவது படியை எடுக்கிறேன் – நான் இப்போது உடலாக இல்லை''**
- **''இரண்டாவது படியை எடுக்கிறேன் – ''நான் மனமாக இல்லை''**
- **''மூன்றாவது படியை எடுக்கிறேன் – ''நான் இதயமாக இல்லை''**
- **''நான்காவது படியை எடுக்கிறேன் – 'நான் எனது பிரக்ஞைக்குள்' (Consciousness) பிரவேசிக்கிறேன் – என்று கூறும்போது நிசப்தமானார்.''**

தியானமானது எப்படிப் படிப்படியாக உடலைக் கடந்து, மனதைக் கடந்து, உணர்வைக் கடந்து வெறுமைக்குள் பிரவேசிக்கிறதோ, அதே படிமுறைகளில்தான் உயிரும் உடலைவிட்டு பிரிவதைச் சீடர்கள் அவதானித்தனர். தியானமும், மரணமும் மனிதனை ஒரே நிலைக்குக் கொண்டு செல்கின்றன. இதனால்தான் ஞானிகள் மரண நிலையை அனுபவித்து மீண்டும் உயிர்பெற்றுள்ளார்கள்.

இறுதிநிலை அச்சமுள்ள நிலையாகவே கருதப்பட்டு வருகிறது. மரணம் முடிவல்ல, இது ஒரு புதிய வாழ்வின் ஆரம்பம்.

'சுயத்தை' இமயத்தின் மடியில்
காற்றோடு காற்றாகக் கலந்தார்

போதிதர்மர் இமயத்தின் (Himalaya) மடியில் தன்னை ஒப்படைத்தார். அதைத் தீர்மானம் எடுப்பது போல் எடுத்திருந்தார்.

தான் சீனாவை விட்டு வெளியேறும் திட்டத்தின்படி சீனாவைக் கடந்தார்.

இமயமலை அன்னையின் மடியில் தனது உடலை நீக்க உறுதியாக இருந்தார். தான் வணங்கப்படக்கூடாது தன் அடையாளங்களை வைத்து வணங்கக்கூடாது, தனக்குக் கோயில் அமைக்கக்கூடாது, தனக்கு சமாதி இருக்கக்கூடாது என்பதில் திடமாக இருந்தார்.

இமயமலையில் போய் இறக்கப்போவதாக உறுதியாக கூறியிருந்ததால், தன் மரணத்தைத் தன் கட்டுப்பாட்டில் வைத்திருந்து அவர் தன்னை இமயத்தின் மடியில் ஒப்படைத்து தனது 'சுயத்தை' (Self) இமயமலையில் காற்றோடு காற்றாகக் கலந்து பிரபஞ்சத்தில் ஒளியாகிவிட்டார் என்பதே இந்நூல் ஆசிரியரது அபிப்பிராயம் ஆகும். இவரது வாழ்க்கையை புரிந்துகொள்ள முடியாதது போல இவரது மரணமும் புரிந்துகொள்ள முடியாததாக அமைந்துவிட்டது.

● **வரலாற்று ஆராய்ச்சியாளர்கள் ஆய்வு செய்து இந்த மர்மத்தின் முடிச்சை அவிழ்க்க வேண்டும்.**

இந்திய ஞான ஒளியான போதிதர்மர் அவர்களது வரலாறு இந்தியாவிற்குள் மரணித்துவிட்டது. இந்திய அன்னை அவரது வரலாற்றுக்குப் பிறப்புக் கொடுக்க வேண்டும். அவரது வரலாறு உயிர்பெற்றுவிட்டால் போதிதர்மர் அவர்கள் உலக அதிசயமாகிவிடுவார்.

ஆரோக்கிய ஆன்மிகம், துணிச்சலைத் தரும் தத்துவம், மனதை இலகுவாக்கும் செயல்முறை, உளவியல், மருத்துவ விஞ்ஞானம், அக்கியூபஞ்சர், வீரியம் தரும் தற்காப்புக்கலை, நோக்கு வர்மம், புத்துயிர் கொடுக்கும் அறிவியல் உபதேசம், என உலகுக்குப் பல உண்மைகளை அளித்த உன்னத ஞானி. இவர் பல பீடங்களைக் கொண்ட ஒரு பல்கலைக்கழகம் போன்றவர்.

புத்தர் நேபாளத்திலுள்ள லும்பினி நகரில் (Lumbini) பிறந்து பின் போதிகயாவில் (இந்தியா) ஞானமடைந்தார். போதிதர்மர் பிறந்தது காஞ்சி, ஞானமடைந்தது காஞ்சி, சென் மதத்தை உலகுக்குக் கொடுத்தது காஞ்சி மாநகரமாகும்.

''மரணத்துக்கு அப்பால் வாழ்வை உணர மனதுக்கு அப்பால் செல்லவேண்டும். மனதுக்கு அப்பால் செல்பவர்களிடம் மரணம் தோற்றுவிடும்.''

– *போதிதர்மர்*

''உங்கள் இருப்பை (Being), உங்கள் சுயத்தை (Self-Nature) அந்த உண்மைகளை நீங்கள் அறியாவிட்டால் மரணம் இறுதியானது என ஏற்றுக்கொண்டு விடுவீர்கள்''

– *போதிதர்மர்*

ஒரே பார்வையில் போதிதர்மர்:

- இவர் ஒரு பௌத்த துறவி.
- இவர் தற்காப்புக்கலையின் தந்தையாவார்.
- இவர் ஒரு மருத்துவ விஞ்ஞானி. மனிதருக்கு 6 புலன்கள் உண்டு என்றும் அந்த 6ஆவது புலன் காதுக்குள் இருக்கிறது எனவும் அதுதான் உடலைச் சமநிலையில் வைத்திருக்கும் புலன் (Sense of Balance) எனவும் கூறினார்.
- அக்கியூபஞ்சர் (Acupuncture) மருத்துவச் சிகிச்சை முறையை கண்டுபிடித்ததாக உறுதிப்படுத்தமுடியாத தகவல்கள் தெரிவிக்கின்றன. அப்படியானால் அவர்தானே அதன் தந்தை!
- உடல் உறுப்புகள் வேறொருவருக்கு மாற்றுவது (Organ Transplant) பற்றி உலகில் முதன் முதல் சொன்னவர் போதிதர்மர் அவர்களே.
- எலும்பு மச்சை, ரிசு, இன்னொருவருக்கு மாற்றுவது பற்றி மருத்துவநூல் எழுதியதாக ஏடுகள் தெரிவிக்கின்றன.
- சீன Tai மலைச்சாரலில் மூலிகை தேயிலையை (Herbal tea) பயிரிட்டு அறிமுகப்படுத்தினார்.

- மூலிகை வைத்தியத்தின் (Herbal Medical treatment) தரத்தை உயர்த்தியவர்;
- சுவரை உற்றுநோக்கும் (Wall Gazing) தியானத்தை அறிமுகப்படுத்தினார்.
- நோக்குவர்மக் கலையில் (Mesmerism) கைதேர்ந்தவர்.
- இவர் ஒரு அறிவியல் மேதை. இவர் பல பீடங்களைக் கொண்ட ஒரு பல்கலைக்கழகம் போன்றவர்.
- தமிழ் நாட்டில் பிறந்து, தமிழைத் தாய்மொழியாகக் கொண்டு, தமிழ் நாட்டிலே ஞானம் அடைந்தவர்
- இவரது செயல்முறைகள், நடைமுறைகள், பேச்சுக்கள் அனைத்தும் தனித்துவமானவை.
- சென் பௌத்தத்தை தோற்றுவித்தவர். சென் புதிய மதக்கோட்பாட்டை ஆசியாவில் நிறுவியவர்.
- வெளிநாடு சென்று ஆன்மிகப் போதனை செய்த முதல் இந்திய ஞானி (தமிழ் மகன்) இந்தியாவின் ஆன்மிகத் தூதுவரும் நல்லெண்ணத் தூதுவரும் ஆவார்.
- ஒரு புரட்சிகர ஞானி (A rebellious saint).
- நெற்றிக்கண் (3rd eye) உடையவர்.
- கௌதம புத்தருக்குப் பின் உலகு கண்ட புத்தர் இவர்.

இந்தியச்சுடர் போதிதர்மர்:

இந்தியா பூராவும் போதிதர்மர் ஞாபகப்படுத்தப்பட வேண்டும். அவரைப்பற்றிய விழிப்புணர்வை மாணவர்களுக்கும் ஏனையோருக்கும் ஏற்படுத்த வேண்டும். போதிதர்மர் ஒரு இந்திய ஞானச்சுடர். இந்தச் சுடர் இந்தியா முழுவதும் பிரகாசிக்க வேண்டும். இந்திய அரசும், சகல மாநில அரசுகளும் இதில் கவனம் செலுத்தவேண்டும்.

போதிதர்மர் அவர்களைப் பற்றிய விழிப்புணர்வு இந்தியா முழுக்க ஏற்படவேண்டும். இவர் பெயரால் பரிசுகள், விருதுகள்



வழங்கப்படவேண்டும். பாடப் புத்தகங்களில் ஞானி போதிதர்மர் அவர்களது வரலாறு சேர்க்கப்படவேண்டும். அவரைப் பற்றி பாடசாலைகளில், கல்லூரிகளில் கற்பிக்கப்பட வேண்டும், இவரைப்பற்றி பல்கலைக் கழகங்களில் ஆய்வு மேற்கொள்ளப்பட வேண்டும். இவர் அனைத்து உலகத்திற்கும் பொதுவானவர்.

தமிழ்நாடு அரசு இந்தச் சுடரை ஏற்றி இந்தியா பூராகவும் தீபமாக்க வேண்டும். இந்திய அரசு இந்தத் தீபத்தை உலகத்திற்கு ஒளியாக்க வேண்டும் என்பதை இந் நூலாசிரியர் ஒரு மின்மினியாக இருந்து கேட்டுக் கொள்கிறேன்.

போதிதர்மரைப் பற்றிய வரலாற்றை தமிழ்நாடு அரசும், இந்திய மத்திய அரசும், சீன அரசும் கூட்டாக ஆய்வு மேற்கொண்டு அவரது வரலாற்றை வெளியுலகிற்குக் கொண்டுவர வேண்டும். போதிதர்மர் போல் சகல ஆற்றல்கொண்ட ஞானி, இவருக்கு முன்பும் பின்பும் இன்றுவரை தோன்றவில்லை. அறிவியலில் மேற்கில் சோக்கிரடீசை அடையாளம் காட்டினாலும் கிழக்கில் தோன்றிய போதிதர்மர் அவரையும் விஞ்சியவராக காணப் பட்டார். இருந்தும் இன்றுவரை அடையாளம் காணப் படாதவராக இருக்கிறார்.

போதிதர்மர் ஒரு புரட்சி ஆத்மா (Rebellious soul). அவரிடத்தில் ஞானமும், புரட்சியும்; ஒருங்கே சேர்ந்து இருந்தது. ஒரு ஞானி புரட்சிவாதிதான். புரட்சியை நன்றாகச் சுருக்கிப்பார்த்தால் அங்கு ஞானம் இருக்கும். ஒரு ஞானியை விரிவுபடுத்திக்கொண்டு போனால் அங்குப் புரட்சி இருக்கும். ஞானி ஒரு புரட்சிவாதியே!

போதிதர்மருடைய வாழ்க்கையைப் பார்ப்பவர்களுக்கும் கேட்பவர்களுக்கும் எப்படி அவரைப் புரிந்துகொள்ள முடியாமல் குழப்பமாகத் தெரிகிறாரோ அதேபோலத்தான் அவரது இறுதி நிலையும் அமைந்துவிட்டது.

கௌதம புத்தர் வரிசையில் தோன்றிய புத்தர்களில் இவரும் ஒருவர். கிழக்கில் தோன்றிய அறிவியல் மேதை. இவர் தமிழ்நாட்டின் தவப்புதல்வன் ஆவார்.

■■

அத்தியாயம் 22

உடலுறுப்புத் தானம் பற்றிய சிந்தனையின் முன்னோடி

உடலுறுப்புகள் பிறருக்கு வழங்கல் பற்றிய உயர் சிந்தனை போதிதர்மர் அவர்களுக்கு அப்போதே உதித்து விட்டது. இவர் உடலுறுப்புகள் மாற்றத்தைப் பற்றிய கருத்தை (organ Transplant) உலகில் முதன்முதல் கூறிய முன்னோடி யாவார். அது மாத்திரமல்ல திசு (Tissue), எலும்பு மச்சை (Bone marrow) மாற்றுவது பற்றி நூல் எழுதியதாக ஒரு கருத்தும் நிலவுகிறது.

போதிதர்மர் சீனாவில் தனது சீடர்களிடம் தான் இறந்தபின் தன் உடலுறுப்புக்களில் எதை எதை யார் யார் பெறுவார்கள் என்று கூறுகிறார். பிரதம சீடரான ஹை-ஹோவிற்கு (Hui-ko) தனது எலும்பு மச்சையும் (Bone Marrow), பிக்குனியான தாரணிக்கு (Dharani) தன் தசையும் (Flesh), டா-பியூவிற்கு (Daofu) தன் தோலும் (Skin), டா-யூவிற்கு (Daoyu) தன் எலும்பும் (Bone) கிடைக்கும் என்று கூறினார். தனது ஒவ்வொரு சீடர்களுக்குள்ளும் தான் எலும்பும் தசையும் மச்சையும், தோலுமாக கலந்திருப்பேன் என்பதே அதன் பொருளாகிறது. அதாவது தான் உடலுறுப்பாகக் கலந்து விடுவேன் என்கிறார். உடலுறுப்புகள் தானத்தைப்பற்றிய அற்புத சிந்தனையின் முன்னோடியல்லவா அவர்.

உடல் உறுப்புக்கள் பிறருக்கு வழங்கல் பற்றி உலகில் முதன்முதல் கூறியவர் கி.பி. 5/6–ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த போதிதர்மர் என்பதே இந்நூலாசிரியரின் அபிப்பிராயம். போதிதர்மரின் சிந்தனைகளை அடிப்படையாகக் கொண்ட சென், பௌத்த நாடுகள் இயல்பாக உடலுறுப்புகள் தானம்

செய்யும் நாடுகளாக மாறி போதிதர்மரின் சிந்தனையான உடல் உறுப்புகள் வழங்கலுக்கு உயிர் கொடுக்க வேண்டும்.

ஒரு மனித உடல் உறுப்புக்கள் தானம் ஒரே நேரத்தில் 1-8 உயிர்களைக் காக்க வல்லது:

இருதயத்துடிப்பு முற்றாக நின்று, மூளை முற்றாகச் செயலிழந்து (Brain Death) ஒருவர் இறந்துவிட்டார் என வைத்திய ரீதியாக உறுதிப்படுத்திய உடலிலிருந்து கண் (Corneas), இருதயம் (Heart, Valves), சுவாசப்பை (Lungs), திசு (Tissue), எலும்புமச்சை (Bone Marrow), எலும்பு (Bone), ஈரல் (Liver), தோல் (Skin), சதயம், கணையம் (Pancreas), சிறுநீரகம் (Kidneys), குடல் (Intestines) ஆகியவைகளைத் தானமாக வழங்கலாம். தன் உடல் உறுப்புகளைத் தானம் செய்ய விரும்புபவர் (Donor) தனது சம்மதத்தை உரிய இடத்தில் முற்கூட்டியே பதிவு செய்துகொண்டால் சரி.

உறுப்புக்கள் செயலிழந்து படிப்படியாக இறக்கும் மனித உயிர்களைக் காப்பாற்ற 'உடல் உறுப்புத்தானம்' உதவுகிறது. மருத்துவ தகவல்படி ஒரே நேரத்தில் ஒன்று முதல் எட்டு உயிர்களைக் காப்பாற்றவும் (1 - 8), ஒன்று முதல் எழுபத்தைந்து (1 - 75) ஆட்களுக்குப் பாதிப்பு நிகழாமல் பாதுகாக்கவும் முடியும். கொடையாளியினுடைய (Organ and Tissue Donor) இந்த மனிதநேயச் செயல் பிறரின் உயிர் காக்க உதவுகின்றது. இத்தகையவர்கள் வணக்கத்துக்கு உரியவர்கள். மனித உடல் வீணாக அழியுமுன் உடல் உறுப்புக்களைத் தானம் செய்து அந்த தானத்தைப் பெற்று உயிர் வாழும் மனிதர்கள் ஊடாக இறந்து உறுப்புகள் தானம் செய்தவர்கள் இறந்தும் இறவாநிலை எய்துகிறார்கள். உறுப்புகள் தானத்தினால் மரணத்தைத் தடுத்து நிறுத்தவதன் மூலம் மனிதனுக்கு மரணமென்பதே இல்லை!

மனித மேன்மை உணர்வு:

ஒரு மனிதன் இன்னொரு மனிதரது உயிரைக் காப்பாற்றுவது போன்ற தன்னலமற்ற செயல் உலகில் வேறு ஒன்றும் இருக்கமுடியாது. உடல் உறுப்புக்கள் தானம் செய்தவர்களுக்குத் தாங்கள் சரியான செயலொன்றைச் செய்துள்ளோம் என்ற மனநிறைவு அவர்களது வாழ்வை

முழுமைப்படுத்துகிறது. (A Positive Moral Outlook). இது ஆன்மிக உணர்வையும், மனிதமேன்மை உணர்வையும் கொடுக்கிறது (A feeling of being in the presence of Spirituality, human decency and goodness). உடலுறுப்புத் தானமானது 'காசு', 'பணம்', 'பொருள்', 'உபகாரம்', 'சலுகைகள்', ''வியாபாரம்'' எதுவுமற்ற தூய நல்லெண்ணச் (A Goodwill Act) செயலாகும்.

உறுப்புக்கள் தானமாக வழங்கப்படுவதால், பல உயிர்கள் மீண்டும் உயிர் வாழக்கூடியதாக உள்ளது. இறந்தவர்கள் பிறரை இறப்பிலிருந்து காப்பாற்றி உயிர்வாழச் செய்துள்ளார்கள். தன் 'உயிர்' இழப்பிலும் பிறருக்கு 'உயிர்' கொடுக்கும் மகிமை உறுப்புத் தானத்துக்கு உண்டு! தினமும் மாற்று உறுப்பு இல்லாமல் இறுதிவரை வாழப் போராடி ஏராளமானோர் இறக்கிறார்கள். அதே நேரத்தில் ஏராளமானோரது உடல்கள் நல்ல நிலையிலுள்ள உறுப்புக்களுடன் இறந்து அழிந்துபோகின்றன. உயிர்வாழும்போது கொடுக்கும் ஒரு சாதாரண 'சம்மதம்' (Consent) பல உயிர்களைக் காக்கும்

இயல்பாக உடல் உறுப்புக்கள் தானம் செய்யும் ஐரோப்பிய பிரஜைகள்:

பெல்ஜியம் (Belgium), போலண்ட் (Poland), போத்துக்கல் (Portugal), பிரான்ஸ் (France), பின்லண்ட் (Finland), ஆஸ்டிரியா (Austria) போன்ற நாடுகளில் உள்ளவர்கள் ஒவ்வொருவரும் உடல் உறுப்புத்தானம் செய்வதற்குச் சம்மதம் தெரிவித்தவர்களாக (Presumed Consent) அந்த நாடுகளில் கருதப்படுகிறார்கள். அந்த நாட்டுப் பிரஜைகள் ஒவ்வொருவரும் இயல்பாக உறுப்புத்தானம் செய்தவர்களாவார்கள் (Everyone is automatically an organ donor). ஒருவர் தன் இறப்புக்கு அந்த "உரிமம்" இயல்பாகக் கொடுத்துவிடுகிறார். இறந்தவுடன் அந்த உரிமம் பிறரை வாழவைக்கிறது.

இறப்பைப் போல் உறுப்புத்தானமும் இயற்கையாக வேண்டும்:

இறப்பு எப்படி இயற்கையோ அதேபோல் உடலுறுப்புக்கள் தானமும் இறப்புடன் சேர்ந்த இயற்கையாக மாறவேண்டும்.

(The organ donation needs to be thought of as a Natural part of the process of dying). அவ்வாறு உலகம் பூராவும் செயலாற்றும் தினம் உதயமாகும்போது அன்றுமுதல் மத, இன, மொழி, நிற, சமூக, ஆண் - பெண், பிரதேச வேற்றுமைகள் அற்ற சகோதரத்துவமும், சமத்துவமும், அதனுடன் சேர்ந்து மனிதநேயமும் உலகில் இயற்கையாக மலர்ந்துவிடும்.

உறுப்புக்கள் தானத்தைப் பற்றிய விழிப்புணர்வு!

நாட்டுத் தலைவர்கள், அரசியல் தலைவர்கள், மதத் தலைவர்கள், மக்கள் தலைவர்கள், பிரபலமானவர்கள், மக்கள் மத்தியில் செல்வாக்குள்ளவர்கள் (celebrities) தங்கள் மரணத்திற்குப் பின் உடல் உறுப்புக்கள் தானம் செய்து முன் உதாரணமாக நடந்துகொண்டால் அச்செயல் இயல்பாகவே பொதுமக்கள் மத்தியில் விழிப்புணர்வைக் கொடுக்கும். ஆன்மிகம், மதங்கள், சினிமாக்கள், நாடகங்கள், கதைகள், கவிதைகள், கல்விப் பாடத்திட்டங்கள், சமூக அமைப்புக்கள், பட்டிமன்றங்கள், கருத்தரங்குகள், பத்திரிகைகள், வானொலிகள், தொலைக்காட்சி, அரசியல் கட்சிகள், அரசு போன்றவை உடல் உறுப்புக்கள் தானம் பற்றிய விழிப்புணர்வை மக்கள் மத்தியில் ஏற்படுத்தவேண்டியது அவைகளின் சமுதாயப்பணி மாத்திரமல்ல அது ஒரு தார்மீகப் பொறுப்புமாகும்.

■■

அத்தியாயம் 23

சென் புனித ஏடு 'கோன்' Koan / 'குங்-ஆன்' Kung-an



சென் மதத்தின் புனித ஏடாக 'கோன்' உள்ளது என்று கூறலாம். இந்திய மஹாஜன பௌத்தத் திலிருந்து தோன்றியதே சென் பௌத்தம். இம்மதத்தை மக்களின் நடைமுறை வாழ்வுக்கு ஏற்றமாதிரி மாற்றியமைத்து அதை ஒரு வாழ்வியல் விஞ்ஞானமாக மாற்றிய வர் போதிதர்மர்.



Tran Thai Tong

சென் ஞானிகளுக்கும் சீடர் களுக்கும் இடையில் காலம் காலமாக நடந்த உரையாடல்கள் செவிவழி மூலமாகவே பரவியது. இவற்றில் 1700 உரையாடல்களைத் தொகுத்து ஜப்பானில் நூலாக்கி னர். அதாவது சென் உபதேசங் களைக் கொண்ட இப்புனித நூல் "Koan" என ஜப்பானில் அழைக்கப்படுகிறது. இதைச் சீன மொழியில் kung - an என அழைக்கப்படுகிறது. இதன் பொருள் "A Public Document/ Record" என்பதாகும்.

13-ஆம் நூற்றாண்டில் வியட்னாமில் வாழ்ந்த சென் ஆசான் Tran Thai Tong சென் உபதேசங்களைத் திரட்டி 43 கோன்களாக (Koan) வெளியிட்டார். இவர் வியட்னாமில்

பேரரசராக இருந்தபோதே சென் கோன்களை தொகுத் தெடுத்தார். தனது 41-ஆவது வயதில் தனது அரசாட்சியைத் துறந்து சென் ஆசானாகி (Zen - Master) சென் மதக் கருத்துக்களை மக்களுக்குச் சென்றடையக்கூடிய மாதிரி பொது மக்களின் மொழியில் உபதேசித்தார்.

சீன மொழியில் 'கோன்'களைப்பற்றி இலகு நடையில் விளக்கும் நூலான Mumonkan போன்றதே பேரரசர் வெளியிட்ட சென்-கோன் நூலும் என Zen keys என்ற நூல் கூறுகிறது. இந்நூல்கள் மனித நேயத்தை மையப்படுத்து கின்றன.

Kung-an (சென் புனித நூல்) "சொந்த அனுபவத்தில் அந்த உண்மையை உணரவேண்டும், அதை அடைய நிலமையை குழப்பிவிடுங்கள் (Do create a crisis) என்கிறது. ஒவ்வொரு சீடர்களது மனநிலை, உளவியல் நிலைகளுக்கேற்ப அவர்களுக்குப் பொருத்தமான சூழலில் நேரடியாக அவர்களை உட்படுத்தி தங்களது சொந்த அனுபவ மூலம் விழிப்புணர் வடைய (awakening) பாதையைக் காட்டவேண்டும்" என்கிறது.

Kung-an கருத்துக்களைவிட செயல்முறைகளிலும், நடைமுறைகளிலும் அதிக நம்பிக்கை கொள்கிறது. அந்நூல் திரட்டப்பட்டுத் தேங்கிக் கிடக்கும் அறிவு விழிப்புணர்வுக்கும் அதைத் தாண்டிச் செல்லவும் தடையாகவிருக்கிறது என்கிறது.

ஒரு நிகழ்வு : மனதிலிருந்து மனதிற்கு

ஞானி Tien Huang இன் சீடனாக Lung Tan நீண்ட காலமாகயிருந்தார். சென் 'கோன்' / 'குங்-ஆன்' (Koan / kung-an) பற்றி எதுவுமே புரியாதவராகவே இருந்தார். ஒரு நாள் தனது குருவிடம் "உங்களுடன் பல்லாண்டு காலமாக இருக்கிறேன். ஆனால் நீங்கள் என்னைக் கண்டு கொள்ளாமலே இருக்கிறீர்கள். உங்கள் கருணையை நான் வேண்டுகிறேன்" என்றார். அதற்கு ஞானி "நீங்கள் இந்த மடாலயத்திற்கு வந்த முதல்நாள் எனக்கு இரவு உணவு கொண்டு வந்து என்முன் நின்றபோது நான் எழுந்து தலைவணங்கி "நன்றி" கூறி உணவைப் பெற்றபோது 'கோன்'/ 'குங்-ஆன்' கூறும் அன்பு, கருணை, பணிவு, மனிதநேயம்

(Humility and Humanity) அவற்றை நான் என் மனதிலிருந்து உன் மனதுக்கு (Mind seal) அதாவது From mind to mind கொடுத்துவிட்டேன். நீயும் தலைவணங்கிச் சென்றபோது சென்கோன் 'உனக்குள்' வியாபித்துவிட்டது" என்றார்.

ஒரு நிகழ்வு: "இயல்புத் தன்மையைப் பார்"

சென் ஆசான் chao-chou விடம் ஒரு சீடர் கேட்டார் "போதிதர்மர் சீனா வந்ததன் நோக்கம் என்ன?" இங்கு இந்த சீடர் ஒரு கருத்தை உருவாக்க (Conceptualization) முயற்சி செய்கிறார். "ஒருவரது இயல்புத் தன்மையைப் பார் கருத்தை உருவாக்காதே" என்கிறது - 'Koan'. இதையே போதிதர்மர் ஒருவரது இயல்புத்தன்மையைப் பார் 'See in to One's own nature' என்கிறார். இந்த மாணவர் தேவையற்றதை நோக்குவதால் உண்மை விடயத்திலிருந்து தூர விலகி நிற்கிறார் என்பதையே அந்த ஞானி அவருக்கு உணர்த்து வதற்காக அவருக்குப் பதில் கூறாமல் "வெளியே தெரியும் cypress மரத்தைப் பார்" என்றார். "எது, எது எப்படியிருக் கிறதோ - அதை, அதை அப்படியே பார்" என்கிறார் புத்தர்.

(Zen teachings never attempt to describe reality, they only serve as methods to guide practitioners in the direction of reality.)

கை விரலால் நிலாவை சுட்டிக் காட்டலாம். சுட்டிக் காட்டிய விரலையும், நிலாவையும் சேர்த்துக் குழப்பம் கொள்ளாது நிலாவை மட்டும் பார். சுட்டிக்காட்டிய விரல் நிலா அல்ல. ஆனால் அந்த விரல் நிலாவை நோக்கிச் சுட்டுவதற்கு உதவியது போன்றவை 'கோன்' உபதேசங்களில் காணப்படுகிறது.

"சந்தேகப்பட்டால் முன்னால் உள்ள உலகம் மறைந்து விடும். எவ்வித சந்தேகமில்லாதபோது இந்த பரந்து விரிந்த உலகம் கண்முன் வியாபித்து வரவேற்கிறது" என்கிறது 'சென்' போதனை.

சென் ஆசான்களும் சீடர்களும் உரையாடியவைகளைத் தொகுத்து எழுதப்பட்டவையே 'கோன்' ஞான நூலாகும்.

■■

அத்தியாயம் 24

சீனாவில் போதிதர்மர் பாடசாலை

சீனாவில் 8-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் சென் பாடசாலை (Zen School) என்ற பெயர் பாவிக்கப்பட்டது. அதற்கு முன்பு Leng Chia Tsung போன்ற பல பெயர்களால் அத்தகைய பாடசாலைகள் அழைக்கப்பட்டன. இப்பாட சாலைகள் பெரும்பாலும் பௌத்த மரபுகளையும் (Buddhist Tradition) தியானத்தையும் (Sitting meditation) விளக்கிக் கூறின.

8, 9-ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்டுள்ள சென் சம்பந்தப்பட்ட ஏடுகள் சீனாவில் Kadsu பகுதியில் உள்ள Tunhuang பாலைவனப் பிரதேசத்தில் உள்ள குகை ஒன்றில் கண்டெடுக்கப்பட்டது. அதில் A.D. 700 காலப்பகுதியில் இருந்த Wu வம்சத்தைச் சேர்ந்த பேர் அரசியின் காலத்தி லிருந்தே நிகழ்வுகள் பதியப்பட்டு உள்ளன. போதிதர்மர் தனது பிரதம சீடனான Huiku(Huike) வை நியமித்த பின் அவருக்கு அங்கி (Robe) வழங்கியதாகவும், அந்த அங்கி Chia-sha ஒவ்வொரு சென் பிரதம குருவாக படிப்படியாக 4 தலைமுறையாகக் கைமாறி பின்பு அந்த அங்கியைப் பற்றிய விவரம் காணப்படவில்லை என ஏடுகள் கூறுகின்றன.

இந்தியத் துறவியான குணபத்திரா (கி. பி 394-468) லங்காவத்ர சூத்திரத்தை (Lankavtara Sutra) சீனமொழியில் மொழிபெயர்த்தார். அவரது சீடர்கள் லங்கா வத்ர பாடசாலையை (leng chia Tsung) சீனாவில் ஆரம்பித்தனர். லங்காவத்ர சூத்திரமே சென் பௌத்தத்தின் முக்கிய போதனையாகும்.

கௌதம புத்தரைப்பற்றி சென் பாடசாலைகள் கேள்வியும் பதிலுமாக இவ்வாறு கூறுகின்றன.



புத்தர் இறவாமை (immortal) உடையவர் என்றால் அவர் எப்படி குஷி நகரில் 2 saal tree மரங்களுக்கிடையில் தனது உடலை நீக்க முடியும்? இவ்வுலகில் பிறந்த அனைவரும் உடல் ரீதியான இறப்பு என்ற இயற்கை விதிக்கு உட்பட்டவராகிறார்கள். எனவே புத்தரும் அவ்விதிகளுக்கு உட்பட்டவரே. புத்தர் அற்புத சக்தி (miraculous power) கொண்டவரா? ஆம் அற்புத சக்தி கொண்டவர். அசுரர்களும் அற்புத சக்தி கொண்டவர்களே. அப்படியானால் அசுரர்களைப் புத்தர் என்று கூறலாமா? இல்லை. அவர்கள் ஞானம் அடையாததால் தங்களது சக்தியைக் கீழ்நிலைக்குப் பிரயோகிப்பவர்கள். ஞானம் அடைந்தவர்களே புத்தராவார்கள்.

புத்தரது அற்புத சக்தி அவர்,

கட்டமைப்புள்ள உலகத்தில் பிரவேசித்தபோது, அவரை எவ்வித கட்டமைப்புமில்லாமல் இருக்க அனுமதித்தது.

புத்தரது அற்புத சக்தி அவர்,

சப்தம் நிரம்பிய உலகத்தில் பிரவேசித்தபோது எதையும் கேளாது அவரை நிசப்தமாக இருக்க அனுமதித்தது.

புத்தரது அற்புத சக்தி அவர்,

வாசனை, நறுமணம் நிரம்பிய உலகில் பிரவேசித்தபோது, அவரை எதையும் முகராமல் இருக்க அனுமதித்தது.

புத்தரது அற்புத சக்தி அவர்,

சுவைகள் நிரம்பிய உலகில் அவர் பிரவேசித்தபோது அவரை எதையும் ருசிக்காமல் இருக்க அனுமதித்தது.



புத்தரது அற்புத சக்தி அவர்,

ஊகங்கள் நிரம்பி உலகில் பிரவேசித்தபோது அவரை ஊகங்களுக்கு அப்பால் இருக்க அனுமதித்தது.

புத்தரது அற்புத சக்தி அவர்,

எண்ணங்கள் நிரம்பிய உலகத்தில் பிரவேசித்தபோது அவருக்குள் எண்ணங்கள் எழாது இருக்க அனுமதித்தது.

இத்தகைய அற்புதங்களுடன் புத்தர் இப்பூமியில் நடமாடினார் என்கிறது சென் பாடசாலை.

7-ஆம் நூற்றாண்டில் Tas shin என்ற சீனத் துறவி Honan இலுள்ள Tung shan மலைப்பிரதேசத்தில் பௌத்த பாடசாலை ஆரம்பித்தார், இதனைத் தொடர்ந்து பல பாகங்களில் துறவிகளால் பௌத்த பாடசாலைகளில் பௌத்தமும் தியானமும் கற்பிக்கப்பட்டன. வடக்கே அமைந்த பாடசாலைகளில் ஒருவர் படிப்படியாகத்தான் ஞானம் பெற முடியுமென்றும் (gradual enlightenment) தென் சீனாவில் அமைந்த பாடசாலைகள் ஒருவர் திடீரென ஞானம் பெறலாம் (Sudden enlightenment) என்றும் கூறின.

Northern zen school வட சென் பாடசாலையை (Pei Tsung) ஆரம்பித்தவர் Shen Hsiu என்ற துறவியே. இப்பாடசாலையிலே சீனாவில் முதன்முதலாக zen புனித நூலான Kung - An பற்றி விளங்கப்படுத்தப்பட்டது, அத்துடன் சென் பௌத்தத்தின் போதனைகளில் ஒன்றான எழுத்துக்களோ, சொற்களோ எதுவும் பாவியாது (Doctrine of no words or letters) விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட வேண்டும் என்ற கருத்து முக்கியமாக ஆய்வு செய்யப்பட்டது.

வடசென் பாடசாலைகள் போதிதர்மரை முதலாவது சென்குரு எனவும், Huiko(Huike) 2-ஆவது எனவும், Seng Tsan (இறந்தது A.D 651) 3-ஆவது எனவும், Tao-Hsin 4-ஆவது எனவும், Hung-Jen (இறந்தது 674) 5-ஆவது எனவும், Shen-Hsiu 6-ஆவது எனவும், Pu-Chi (இறந்தது 739) 7-ஆவது

எனவும், I-Fu (இறந்தது 732) 8-ஆவது எனவும், வரிசைப் படுத்துகின்றனர். இந்த ஞானிகளில் சிலர் வேறு பெயர்களாலும் அழைக்க்படுவதால் பெயர்களில் சில வித்தியாசங்கள் காணப்படுகின்றன.

சென்பௌத்தமத பீடாதிபதிகள் (சீனா)

Bodhidharma
(The First Patriarch of China)
The Twenty-eight Indian Patriarch

HuiK'o
(The 2nd Patriarch of China)

Seng Ts'an
(The 3rd Patriarch of China)

Tao Hsin
(The 4th Patriarch of China)

Hung Jen
(The 5th Patriarch of China)



Hui Neng/Shen Hsiu
(The 6th Patriarch of China)

Shen Hui

சென் பௌத்தத்தின் வரலாற்றை எழுதிப் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதில் Shen Hui *(668-760)* என்ற துறவி கவனம் செலுத்தினார். அத்துடன் தீடீர் ஞானமடைதல் (Sudden Enlightenment) பற்றிய கோட்பாட்டில் மிக்க உறுதியாகவும் இருந்தார். போதிதர்மர் பற்றியும், அவரது போதனைகள் பற்றியும் தன்னால் முடிந்தளவுக்கு ஆவணப்படுத்தினார். போதிதர்மர் சென் பௌத்தத்தின் தந்தை என்றும், போதிதர்மரின் சீடன் Huiko சென் பௌத்தத்தின் 2-ஆவது குரு என்றும் வரிசைப்படுத்தினார். சென் பௌத்தத்தின் வரிசையில் Shen Hui 7-ஆவது குருவானவர் ஆனார். **தெற்கே உள்ள பாடசாலைகள் காலப்போக்கில் போதிதர்மா (தாமோ) பாடசாலை (Bodhidharma School) என அழைக்கப்பட்டன. இதைச் சீனமொழியில் Tamo Tsung என அழைத்தனர். போதிதர்மரைச் சீனாவில் தாமோ (Tamo) என்றே அழைத்தனர். தெற்கே உள்ள பௌத்த பாடசாலைகளும் வடக்கே உள்ள பௌத்த பாடசாலைகளும் ''ஞான' விளக்கத்தில் ஒன்றுக் கொன்று முரண்பட்டு, வடக்கும் தெற்கும் 'ஞானத்தில்' மோதிக்கொண்டன.**

வடக்கேயுள்ள பௌத்த பாடசாலைகளின் நிலைப்பாடான 'படிப்படியாகவே ஒருவர் ஞானமடையலாம்' (gradual Enlightenment) என்ற கோட்பாடு அரச வம்சத்தினரைக் கவர்ந்தது. பொதுமக்கள் மத்தியில் இக் கருத்து காலப்போக்கில் தன் வலிமையை இழந்ததது.

தெற்கே நிலவிய போதிதர்மரின் கருத்தான ஒருவர் எந்தச் சூழலிலும், எந்த நிலையிலும், எந்த நேரத்திலும் திடீரென ஞானமடையலாம் (Sudden Enlightenment) என்ற கருத்து நாடு பூராவும் பரவியது. ஒருவர் தான் செய்யும் தொழிலின் ஊடாகவும் ஞானமடையலாம் என்றார் போதிதர்மர். சுறுசுறுப்பும், முயற்சியும் செய்யும் தொழிலின் முழுமையான ஈடுபாடான தொழிற் பக்தியுமே தியானம் என்ற போதிதர்மரின் கருத்தைத் தெற்கேயுள்ள சென் பாடசாலைகளிலிருந்து வட சீனா உட்பட சீனா முழுக்க பரவிவிட்டது. வடக்கேயிருந்த

பாடசாலைகள் செயல் இழந்தன. தென் சென் பாடசாலைகள் வேகமாக வளர்ந்தன. இவ்வளர்ச்சியில் மிக முக்கியமானவர் கல்விமானும் துறவியுமான Fa-Hin (A.D. *714-792*) அவர்கள் ஆவார்கள். இக்கருத்துக்களுக்கு உயிர் ஊட்டியவர் Zen ஞானி Shen Hui என்பவரே. இவர் இறந்தபின்பு இப்பாடசாலைகள் Ho Tso என அவரின் ஊரின் பெயரால் அழைக்கப்பட்டன.

Shen Hui க்கு பின்பு தோன்றிய 5 பெரும் துறவிகள் 5 பாடசாலைகளை வெவ்வேறு பெயர்களில் ஸ்தாபித்தார்கள். இப்பாடசாலைகள் காலப்போக்கில் ஜப்பான், வியட்னாம், கொரியா போன்ற நாடுகளிலும் ஆரம்பிக்கப்பட்டன. வியட்னாமில் 8-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த சென் ஞானி Po Chang *(720-817)* காலத்தில் வியட்னாமில் சென் தத்துவம் போதிக்கும் சென் பாடசாலைகள் அதிகம் ஆரம்பமாகின. சென் தத்துவம் பரவிய அனைத்து நாடுகளும் தங்கள் நாடுகளுக்கேற்ற மாதிரி போதிதர்மரின் சில உபதேசங்களில் மிகச் சிறு மாற்றம் செய்து ஏற்றுக்கொண்டன. அதேபோல் வியட்னாமில் Po chang அவர்கள் போதிதர்மரின் போதனைகளை மையப்படுத்தி சென் துறவிகளுக்கான நெறிகளை (Zen Monastic rules) எழுதி நூலாக்கினார். சீனாவில் நிலவும் சென்மதம் அந்த நாட்டு மக்களுக்கும் அவர்களது கலாச்சாரத்திற்கும் அந்த நாட்டுக்கும் ஏற்றாற் போலத்தான் அமைந்துள்ளது.

'சென்' மதம் கடைப்பிடிக்கப்படும் நாடுகளுக்கு இடையில் சென் மதம் கடைப்பிடிக்கப்படும் விதத்தில் சிறு சிறு வித்தியாசங்கள் அந்தந்த நாடுகளுக்கேற்ற மாதிரி அமைந்திருந்தாலும் சீனாவில் கடைப்பிடிக்கப்படும் ''சென்'' மதத்தின் நடைமுறைகள் பிரதிபலிக்கின்றன. இந்திய மஹாஜன பௌத்தம்தான் சென் பௌத்தமாக்ச் சீனாவில் போதிதர்மரால் மருவியது. பின்பு அது பல ஆசிய நாடுகளுக்குள் பரவிவிட்டது. சென் மதம் எங்குப் பரவியிருந்தாலும் போதிதர்மர் காஞ்சிபுரத்திலே ஞானம் அடைந்தபடியால் சென் பௌத்தத்தின் ஊற்று தமிழ்நாட்டின் ஊற்றாகிறது எனலாம்.


Japanese Fuke
Korean Son
Obaku
Viet. LieuQuan
Viet. NguyenThieu
Chinese Rinzai
Japanese Rinzai
Sanbo Kyodan
Japanese Soto
Chinese Soto
Viet. TyNiDaLu'Chi
Viet. ThaoDuong
Chinese Fuke
Viet. VoNgonThong
Viet. TrucLam
Rinzai-Yogi
Rinzai-Oryo
Early Rinzai
Igyo
Hogen
Unmon
Northern Ox-head
Seigen Gyoshi
Nangaku Ejo
Szechwan
Patriarchal
Hinayana
Bodhidharma's arrival in China
Indian
Buddha Shakyamuni
B.C
A.D
600
400
200
1
200
400
600
800
1000
1200
1400
1600
1800
2000

அத்தியாயம் 25

திடீர் விழிப்புணர்வடைதல் (ஞானம்)
(Attaining sudden awakening/enlightenment)

''விழிப்புணர்வோ, ஞானமோ, படிப்படியாக வந்தடைவ தில்லை. எந்தச் சூழலிலும் விழிப்புணர்வும் ஞானமும் திடீரென ஏற்படலாம்.''

– *போதிதர்மர்*

''நீயே உனக்கு ஒளிவிளக்காக இரு.''

– *புத்தர்*

ஒரு நிகழ்வு:

வியட்னாமில் Hsiang yen என்ற சென் துறவி பல ஆசான்களுக்கு மாணவனாக இருந்தும் அவருக்கு ஞானம் கிட்டவில்லை. அவரது ஆசான்கள் இறந்த பின்பு புதியதொரு ஆசானைத் தேடுவதே தொடர்நிலையாகவிருந்தது.

Wei shan என்ற சென் ஆசானிடம் (Zen master) சென்று தன்னை மாணவனாகச் சேர்த்துக்கொள்ளும்படி வேண்டினார். அந்த ஆசான் இவரிடம் கேட்ட முதற்கேள்வி ''உனது பெற்றோர்கள் பிறப்பதற்கு முன் உனது முகம் எப்படியிருந்தது?'' இவர் பதில் கூற முனைந்தார். ஆனால் முடியவில்லை. நீண்டகாலமாக பதில் கண்டறிய முயற்சி செய்துகொண்டேயிருந்தார், பதில் கண்டறிய முடியவில்லை. தனது ஆசானிடம் சென்று ''என்னால் பதில் காண முடியவில்லை தயவு செய்து எனக்குரிய விடையைக் கூறுங்கள்'' என்றார். ஆசான் "நான் என் பதிலைக் கூறினால்

நீ உனக்கான பதிலை எப்படி அறியலாம்" என்று வினவினார். தனக்கு ஆசான் உதவ மாட்டார் என மனமுடைந்து துறவற வாழ்விலிருந்து ஒதுங்கி விவசாயத்தில் ஈடுபட்டடார்.

ஒரு நாள் பயிரிடுவதற்காக நிலத்தை மூங்கிலினால் கிண்டிக் கிளறி தூய்த்துக் கொண்டிருக்கும்போது ஒரு சிறு கல் அந்த மூங்கிலில் வெடிப்பை ஏற்படுத்தி விட்டது. அந்தத் துவாரத்தின் ஊடாகக் காற்று உள்ளே நுழைந்தபோது திடீரென ஏற்பட்ட இசை இவருக்குத் திடீரென விழிப்புணர்வை ஏற்படுத்தியது. உன் பெற்றோர்கள் பிறப்பதற்கு முன் உனது முகம் எப்படியிருந்தது என்ற வினாவிற் குரிய விடை மின்னல்போல் இவரது மனதில் தோன்றியது.

இவர் தனது ஆசானிடம் சென்று தான் கண்டறிந்த பதிலைக் கூறினார். ஆனால் ஆசான் இவரைச் சேர்த்துக் கொள்ளவில்லை. ஏன்? **இவர் யாரையும் சாராது தனக்குத்தானே பொறுப்பெடுத்து தனது சொந்த இயல்புத் தன்மையை (Own Nature) கண்டறிய வேண்டுமென்பதற் காகவே ஆசான் இவரைத் தூர விலக்கிப் பக்குவப்படச் செய்துள்ளார்.** இதையே புத்தர் உனக்கு நீயே ஒளிவிளக்காக இரு என்றார். ஞானி Hsiang yen எல்லோராலும் கைவிடப்பட்டு தனித்திருந்தபோதுதான் ஞானமடைந்தவர். பிற்காலத்தல் மிகப்பெரும் சென் ஆசான் ஆனார்.

"உன் இயல்புத் தன்மையைக் கண்டறி."

– போதிதர்மர்

ஒரு நிகழ்வு:

Hsiang yen தன் சீடர்களுக்குக் கூறினார்: "ஒரு நாள் ஒரு மனிதர் தனது பற்களால் மரக்கிளையொன்றில் கவ்வியபடி தொங்கிக்கொண்டிருந்தார். அவரது கைகளோ, கால்களோ எதையும் பிடித்துக்கொண்டிருக்கவில்லை. மரத்துக்குக் கீழ்நின்ற

ஒரு மாணவன் மரத்தில் தொங்கிக் கொண்டிருப்பவனைப் பார்த்துக் கேட்டார். "ஏன் போதிதர்மர் இந்தியாவிலிருந்து சீனா வந்தார்?" வாயைத் திறந்து பதில் கூறினால் நிலத்தில் வீழ்ந்து பலத்த காயத்துக்குள்ளாக வேண்டும். எனவே "மரத்தில் தொங்குபவர் எப்படியான யுக்தியில் பதிலளிக்கலாம் என்று கூறுங்கள்'' என்று ஞானி கேள்வியாக மற்ற சீடர்களிடம் கேட்டார்? Hu Tou என்ற சீடன் "மரத்தில் தொங்கிக்கொண்டிருப்பவரை விட்டு, மரத்திலிருந்து ஏற்கெனவே கீழே இறங்கியவரைப் பற்றி முதலில் கூறுங்கள்" என்று மிக்க பணிவுடன் கேட்டான்.

சென் ஞானிகளும் சீடர்களினதும் உரையாடல் பெரும்பாலும் கேள்விகளாகவே இருக்கும். பதில் காண முடியாத கேள்விகளைக் கேட்டு சிந்தனையைத் தூண்டிவிட்டு இனிமேல் சிந்திப்பதற்கு எதுவும் இல்லை என்றளவுக்கு சிந்திக்கச்செய்வதே சென் ஞானிகளின் யுக்தியாகும்.

ஒரு நிகழ்வு:

ஒரு துறவி தெருவில் நடந்து செல்லும்போது ஒரு இறைச்சி வியாபாரி தனது வாடிக்கையாளருக்கு "இந்த இறைச்சி (meat) நல்ல தரமானது" என்று கூறுவது அந்தத் துறவியின் காதில் விழுந்தது. அந்தக் கணத்திலே அவர் விழிப்புணர்வையடைந்துவிட்டார். ஆனால் அந்த வியாபாரிக்கு அங்கு என்ன நடந்தது என்பதே தெரியாது.

Kung-an கூறுகிறது "ஞானமடைவதற்கு இடம், காலம், நேரம், பயிற்சி என்று எதுவுமே இல்லை. விழிப்புணர்வும் ஞானமும் திடீரென ஏற்படக்கூடியதே!"

ஒரு நிகழ்வு:

13-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த சென்ஞானி சா-சௌ(Chao chou) விடம் ஒரு துறவி "நாய்களும் விழிப்புணர்வடையக் கூடியனவா (Nature of awakening)?" என்று கேட்டார். அதற்கு ஞானி "ஆம்'' என்றார். பிறிதொரு துறவி "நாய்களும் விழிப்புணர்வடையுமா? என்று ஆச்சரியத்துடன் கேட்டார். அந்த ஞானி "இல்லை" என்றார். இந்தத் துறவி தொடர்ந்தார். "உங்கள் பதில்கள் முரண்பாடாக இருக்கின்றனவே!" ஞானி

"கேள்வி கேட்டவர்களின் மனநிலையைப் பொறுத்துத்தான் என் பதில்கள் அமைந்தன. ஒவ்வொரு உயிரினமும் (every being) விழிப்புணர்வடையக் கூடியனவே என்பதால் அது சார்ந்ததாகவே "ஆம்" என்று பதிலளித்தேன். அப்பதிலைப் பெற்றவர் அந்தப் பாதையிலே பயணிக்கிறார் என்பது தெளிவாகிறது. "இல்லை" என்ற பதிலைப் பெற்றவர் "ஆம்" என்ற பதிலைப் பெறுவதற்கு அவரது மனமே அவருக்குத் தடையாக உள்ளது" என்றார்.

ஒரு நிகழ்வு:

ஒரு 'சென்' பெண் துறவி நீண்ட காலமாகத் துறவறமாக இருந்தார். பிரார்த்தனை, தியானம் போன்றவற்றில் ஈடுபட்டும், சென் 'கோன்களை' மனனம் செய்தும் இவருக்கு ஞானம் கிட்டவில்லை.

ஒரு நாள் பானையில் நீர் மொண்டு கொண்டு வரும்போது பானை கைதவறி நிலத்தில் வீழ்ந்து உடைந்தது. பானை உடைந்த அந்த சத்தம் நிசப்தமாக இருந்த இவரது மனதை ஊடுருவிக் கடந்தது. அந்தத் தீடீர் சத்தம் இவருக்கு விழிப்புணர்வைக் கொடுத்து ஞானமடைய ஏதுவாக அமைந்து விட்டது.

சில துறவிகள் 'கொட்டாவி' விட்டபோது விழிப் புணர்வடைந்து ஞானமடைந்துள்ளனர். சில துறவிகள் வாய்விட்டுச் 'சிரிக்கும்போது' ஞானமடைந்துள்ளனர். புத்தரது முதலாவது சீடனான மகா காசியப்பா வாய்விட்டுச் 'சிரிக்கும்போது' ஞானமடைந்தார். சில துறவிகள் 'அழும் போதும்', சில துறவிகள் சறுக்கி நிலத்தில் 'விழும்போதும்', சிலர் உணவிருந்தும்போதும் அவர்களது சாப்பாட்டுத் தட்டு நிலத்தில் வீழ்ந்த 'சத்தத்தைக்' கேட்டதும் ஞானமடைந் திருக்கிறார்கள்.

ஒருவர் படிப்படியாக (gradual) ஞானம் அடைவதில்லை என்று போதிதர்மரே முதலில் கூறினார். 'சென்' மதம், 'சென்' பௌத்தம் அதையே தனது அஸ்திவாரமாகக் கொண்டுள்ளது.

■■

அத்தியாயம் 26

ஞானிகளைப் பைத்தியக்காரர் என்கிறார்களே!... ஏன்?

ஞானியும், பைத்தியக்காரனும் மனதிற்கு அப்பால் செல்கிறார்கள். மனதிற்கு அப்பால் சென்றவர்களை பார்க்கும்போது மனதுடன் வாழ்பவர்களுக்கு வித்தியாசமாகத் தெரியும். அவர்களது செய்கையில் சாதாரணநிலை இருக்காது. மனதுக்கு உட்பட்ட செயல்களாக இருக்காது.

ஞானியின் 'மனம்' உயர்ந்து சென்று மனதுக்கு அப்பால் செல்கிறது. பைத்தியக்காரனின் 'மனம்' கீழே சென்று மனதுக்கு அப்பால் செல்கிறது. மனதுக்கு அப்பாலுள்ள நிலை 'வெறுமை' நிலை. ஒரு ஞானியின் 'நிலை' உயர்வடைகிறது. ஒரு பைத்தியக்காரனின் 'நிலை' கீழ் நிலையடைகிறது, அவர்களது செய்கைகள் பைத்தியக் காரத்தனமாகத் தெரியும். 'உயர்நிலையும்', 'கீழ்நிலையும்' நடவடிக்கைகளில் வித்தியாசம் இருந்தாலும் விருப்பு, வெறுப்பு அற்ற நிலை அங்கேயிருக்கும். எதுவாக இருந்தாலும் அவையெல்லாம் துச்சமாகத் தெரியும். அவர்களைக் கட்டுப்படுத்த அவர்கள் 'மனம்' அவர்கள் வசம் இல்லை. அதனால் ஞானியும், விசரனும் ஒன்றே.

கிழக்கத்தேய நாடுகள் மேற்கத்தேய நாடுகளை தொழில்நுட்ப, விஞ்ஞான வளர்ச்சி நாடுகளாகப் பார்க் கின்றன. அதனால் மேற்கத்தேயவர்கள் கிழக்கத்தேய நாடுகளுக்குச் சென்றால் முக்கியத்துவம் அடைகிறார்கள். தொழில்நுட்பம், விஞ்ஞானம் ஆகிய துறைகளுடன் தொடர் பற்றவராக இருந்தாலும் மேற்கத்தேயவர்கள் எவராகிலும்

கிழக்கு சென்றால் சகலகலா வல்லவனாகத்தான் பார்க்கப் படுகிறார்கள். இந்தக் கணிப்பு தவறானது. காரணம் விஞ்ஞான வளர்ச்சி நாடுகளிலிருந்து வருவதால் இது ஏற்படுகிறது.

கிழக்கத்தேய நாடுகள் மேற்கத்தேய நாடுகளிடம் விஞ்ஞான செல்வத்திற்கும், பொருட்செல்வத்திற்கும் கையேந்துகின்றன. மேற்கத்தேய நாடுகள் கிழக்கத்தேய நாடுகளிடம் 'யோக' (Yoga), 'தியானம்' (Meditation), 'ராய்–சி' (Tai-chi), 'ஷியாட்சு' (Shiatsu) போன்ற 'உள' ஆரோக்கிய செல்வத்துக்காகக் கையேந்துகின்றன. மேற்கே நேரத்துடன் போட்டிபோட்டுக்கொண்டு வாழ்வதாலும், இயந்திர மயமான வாழ்க்கை முறைகளாலும் மனஇறுக்கம், மன உளைச்சல், மனச்சிதைவு, விரக்தி இவைகளிலிருந்து மீள்வதற்காகப் பல ஆறுதல் வழிகளை நாடுகிறார்கள். உதாரணமாக இந்தியாவில் ரிஷிகேசையும், திபெத்தில் தர்மசாலாவையும், நேபாளத்தில் இமயமலைச்சாரலையும், சீனாவிலும், ஜப்பானிலும் 'சென்' மடாலயங்களையும் நாடி ஆன்மிகப் போதனைகளைக் கேட்கிறார்கள். ஆன்மிகப் பயிற்சிகளை மேற்கொள்கிறார்கள். அதனால் கிழக்கை ஆன்மிக செல்வந்த நாடுகளாக மேற்குலக நாடுகள் பார்க்கின்றன. அத்துடன் கிழக்கே இந்தியா, சீனா போன்ற நாடுகளில் பிரபல்யமாக உள்ள மூலிகை எண்ணெய் மருத்துவ (Herbal and oil treatment) சிகிச்சையையும் அக்கியூபஞ்சர் சிகிச்சையையும் மாற்று வைத்தியமாக (Alternative treatment) மேற்குலகம் பார்க்கிறது. உள்ளத்துக்கும், உடலுக்கும் ஆரோக்கிய சிகிச்சை இடமாகக் கிழக்கு உயர்ந்து நிற்கிறது. யோகாவும், தியானமும் இடம்பெறும் மையங்கள் மேற்குலகில் பிரபல்யமாகின்றன. கிழக்கத்தேய யோகா, தியான முறைகள் மேற்கே உயர உயர சென்று கொண்டேயிருக்கின்றன.

கிழக்கை ஆன்மிக நாடாகப் பார்ப்பதால் மேற்குலகத்துக்கு வரும் கிழக்கத்தேயர்களுக்கு யோகா, தியானம் போன்றவைகளில் பயிற்சியும் 'ஆன்மா, மரணத்துக்கு அப்பால் நிலை, கர்மா'வைப் பற்றிய விளக்கமும் இருக்கிறது என்ற மேற்கத்தேயக் கணிப்பும் தவறானது. மேற்குலகில் நிலவும் யோகா, தியானம் போன்றவற்றுக்கான வறுமை நிலையைக் கிழக்கத்தேய 'சுவாமிமார்கள் தங்களுக்குச் சாதகமாக

பயன்படுத்திக்கொள்கிறார்கள். கிழக்கிலிருந்து வரும் சுவாமியை ஆன்மிகமாகவே மேற்குலகத்தில் பார்க்கிறார்கள். இந்தச் சுவாமிகள் 'டாலர் மீது' தியானமாக இருக்கிறார்கள். சொகுசு ஹோட்டலில் தங்குவது, சொகுசு பிரயாணம், சொகுசு வாகனத்தில் உல்லாசம் செய்வது, நேரம் தவறாத பழரசம், சமவிகித உணவு, குளிரூட்டப்பட்ட அறையில் வாசம் செய்தல் போன்றவற்றில் கவனம் செலுத்துகிறார்கள். இந்த Corporate சுவாமிகள் உலகம் பூராவும் வருமானக் கிளைகள் திறக்கும் தொழில் அதிபர்களாகின்றனர். இவர்களின் முக்கிய போதனை 'ஆசையைத் துறவுங்கள்' என்பதாகும். இவர்கள் சொல்வது இவர்களுக்கே நியாயமானதாகத் தெரிகிறதா?

'எளிமையாக வாழுங்கள்', 'எளிய ஆடையணியுங்கள்', 'உணவை ஒறுத்துங்கள்' என ஆன்மிக ஆலோசனை வழங்குகிறார்கள். அடியார்கள், பக்தர்கள், பின்பற்றுபவர்கள் தங்களை வருத்தி உணவை நிராகரித்து, விரதம் கடைப்பிடித்து, விருப்பத்திற்கு மாறாக எளிய ஆடைகளை அணிந்து, சில தினங்கள் தூங்காமல் கண் விழித்தும் இருப்பதை ஆன்மிகமாக நினைக்கின்றனர். உணவிலும், உடையிலும், எளிமையிலும் ஆன்மிகம் தங்கியிருக்கிறதா? தெய்விகத்திற்கான பாதை இதுதான், ஆன்மிகப் பண்புக்கான வழிமுறைகள் இவைதான் என்றால் இந்த உலகத்தில் ஏழ்மையில் வாழும் மக்கள் இயல்பாக, இயற்கையாகவே அந்த வரைவிலக்கணத்திற்குள் வந்துவிடுகிறார்கள். தினமும் உண்ண உணவில்லாமல் விரதம் அனுஷ்டிக்கும் வாழ்வு, தினமும் கந்தையான எளிமை ஆடைகள், தூங்காமல் கழிக்கும் பொழுதுகள் கொண்ட இந்த மக்களுக்குத் தெய்வதரிசனம் இன்னும் ஏன் கிடைக்கவில்லை? அப்படியானால் இவர்கள் பிறக்கும்போதே ஆன்மிகவாதிகள் ஆயிற்றே! இவர்களில் போலித்தனமில்லை, அவர்கள் வேடம் போடவில்லை, உண்மையாகவே இயல்பாகவல்லவா வாழ்கிறார்கள். இந்த ஏழை மக்களிடம் சென்று யாரும் ஆன்மிக ஆசீர்வாதம் பெறுவதில்லையே! ஆனால் இந்த Corporate சுவாமிகள் தங்கள் ஆசிரம வலையை ஏழை மக்கள் வாழும் பக்கம் விரித்து அந்த மக்களைத் தங்களுக்கு மூலதனமாகப் பயன்படுத்தி, தங்கள் வங்கிக்கணக்கை உயர்த்திக்கொள்கிறார்கள்.

இந்த ஆன்மிகக் கொம்பனி சுவாமிகள் மன ஆறுதல் தேடும் மேற்கத்தேயர்களது மனதில் இடம்பெறுகிறார்கள். அவர்கள் கிழக்கத்தேய நாடுகளை ஆன்மிக செல்வந்த நாடுகளாகப் பார்ப்பதால் தங்களைச் சுவாமிகளாகப் பிரகடனப்படுத்தியவர்களது படங்களை வணங்கும் முட்டாள் தனம் மேற்கில் அரங்கேறுகிறது. இலங்கை, இந்தியா போன்ற நாடுகள் நூற்றாண்டுகளாக வெள்ளைநிறம் கொண்ட மேற்குலகத்தினரால் அடிமைப்படுத்தப்பட்டிருந்த காரணத்தால் அந்த வெள்ளைக்காரரைப் போற்றும் அடிமைமனம் சந்ததி சந்ததியாக ஒருவரிலிருந்து மற்றவருக்கு கடத்தப்பட்டுக் கொண்டே வருகிறது. இதனால் 'வெள்ளைக்காரரும்' வருகிறார்கள் என்பது முக்கிய கவர்ச்சியாக மாறுகிறது.

இனம், மொழி, நிறம், மதம், நாடு என்ற வித்தியாசங்களைக் கடந்து எல்லோருக்கும் பொதுவானது அறியாமை ஒன்றுதான். இருட்டு இருப்பது போலவே அறியாமையும் எப்பொழுதும் இருக்கும். அறியாமைக்கு ஆரம்பம் இல்லை ஆனால் முடிவு இருக்கிறது என்கிறார் கௌதமபுத்தர். உலகம் பூராவும் ஆன்மிக நோக்கம், பார்வை, எல்லாம் திசை மாறிக்கொண்டே செல்கிறது.

சோக்கிரடீஸ், கௌதமபுத்தர், மஹாவீரர், பட்டினத்தார், லா-சூ, இயேசுநாதர், திலோபா, தியோஜினிஸ், போதிதர்மர், சிரிப்புப்புத்தர், சைதன்ஜர் போன்ற மகான்கள் காலத்திலிருந்து அண்மைக்கால இராமகிருஷ்ணர், சூஃபி (sufi) ஞானி ஷீர்டிபாபா, இரமணமகரிஷி இவர்கள் அனைவரும் அவர்கள் வாழ்ந்த காலத்தில் பைத்தியக்காரர்கள் என்று மக்களால் தூற்றப்பட்டவர்கள். மிகச்சிலரே அவர்களைப் புரிந்து கொண்டனர். இவர்கள் எல்லாம் இறந்தபின் தத்துவஞானிகள் என்றும், யோகிகள் என்றும், மகான்கள் என்றும், உண்மை யான இருப்பியல்வாதிகள் என்றும், தெய்விகமானவர்கள், மெய்ஞானிகள் என்றும் போற்றப்படுகின்றனர், வணங்கப் படுகின்றனர்.

மானிடப்பிரக்ஞை வளர்ச்சியின் சகல அம்சங்களையும் சுய அனுபவத்திலிருந்து மக்களுக்குக் கூறியவர்கள் ஞானிகள். இவர்கள் இறந்தகால, எதிர்கால உலகங்களைக் கடந்து மனப்பிரபஞ்சங்களையும் தாண்டி எல்லையற்ற நிரந்தர

உலகை ஒவ்வொருவரும் தாமே அனுபவத்தில் கண்டுணர்ந்தவர்கள். இவர்கள் அந்த நிரந்தர உலகக் கதவைத் திறப்பதற்கான அனுபவசாவியை மக்களுக்கு அளித்துச் சென்றுள்ளார்கள். இவர்கள் எந்த மரபையும் சாராமல் தங்கள் சுய தரிசனத்தில் தாங்கள் கண்ட உண்மையையும் தங்கள் சுய அனுபவங்களையும் மக்களுடன் பகிர்ந்துகொண்டவர்கள்.

பட்டினத்தார் வசதிகள் எல்லாம் துறந்தார், உடலில் உள்ள ஆடைகளிலும் பெரும்பகுதியைத் துறந்தார், சாப்பாட்டு ஓட்டையும் துறந்தார், ஆடினார், பாடினார், சிரித்தார். பைத்தியக்காரன் என்ற பெயரையும் பெற்றார். சைதன்யர் ஆடினார், பாடினார், சிரித்தார். அவரையும் பைத்தியக்காரன் என்றனர். ஷீரடிபாபாவைப் பைத்தியக்காரன் என்றனர். திலோபாவைப் பைத்தியக்காரன் என்றனர். இராமகிருஷ்ணர் கைதட்டினார், சிரித்தார் ஆடினார், பாடினார் - பைத்தியக்காரன் என்றனர். சிரிப்புப் புத்தர் ஹொடாய் சிரித்தார்-பைத்தியக்காரன் என்றனர். சோக்கிரடீஸ் அறிவியல், தர்க்கவியல் சார்ந்தவராக வித்தியாசமான ஆளாக இருந்தார் - பைத்தியக்காரன் என்றனர். போதிதர்மரைப் பைத்தியக்காரன் என்றனர். சீனஞானி 'லா-சூ'வை பைத்தியக்காரன் என்றனர். அவரால் அரசுடன் ஒத்துப்போக முடியவில்லை. எருமை மாட்டில் ஏறிச் சீனாவைவிட்டு இந்தியாவுக்குத் தப்பிச் சென்றார். சோக்கிரடீஸுக்கு மரண தண்டனையாக விசம் உண்ணக் கொடுத்து கொல்லப்பட்டார், இயேசுநாதர் சிலுவையில் அறையப்பட்டார், புத்தருக்குப் பல தடவை கொலை முயற்சி நடந்தது. அவர் இருந்த காலத்திலே பெரும்பகுதி காலம் நிந்திக்கப்பட்டார், புத்தரது அபிமானிகளே புத்தரைத் தவறாகப் புரிந்துகொண்டனர்.

இஞ்ஞானிகள் எல்லாம் தாங்கள் செய்யாத குற்றங்களுக்குத் தண்டனை பெற்றார்கள், அவற்றைப் புன்முறுவலுடன் ஏற்றுக்கொண்டார்கள், நிந்திக்கப்பட்டார்கள். அவற்றையும் புன்முறுவலுடன் அமைதியாக ஏற்றுக்கொண்டார்கள், அதனால் இவர்களைத் தொடர்ந்து நிந்திக்க முடியாமல் போய்விட்டது.

சோக்கிரடீஸ், புத்தர், மஹாவீரர், இயேசுநாதர், சிரிப்புப் புத்தர், போதிதர்மர், நபிகள் நாயகம் போன்றோர்களைப்

பெற்றெடுத்த சமுதாயம் அவர்களைத் தீர்க்கதரிசிகளாக ஒப்புக்கொள்ளவில்லை, கண்டிக்கப்பட்டார்கள், அவமானப் படுத்தப்பட்டார்கள். ஆனால் அவர்கள் தாங்களாகவே இருந்தார்கள், தங்கள் பாதையில் நடந்தார்கள். எனவே அவர்கள் நடந்த பாதை மற்றவர்களுக்குப் பாதையாக மாறியது. அஞ்ஞானிகளை வழிபடத் தொடங்கிவிட்டார்கள். வாழ்க்கை பற்றிய முக்கிய வினாவை விட்டுச் சென்றுள்ளார்கள். ஒவ்வொருவரும் 'தான் யார்?' என்பதை அறியத் தங்களுக்குள் உள் பிரயாணம் செய்து தான் யார் என்பதை அறிந்துகொள்ள வேண்டும், அதை அடைய முயற்சியற்ற முயற்சியைக் காட்டியுள்ளார்கள். நீங்கள் யார்? என்பதை அறிய உங்களுக்குள் உள் பிரயாணம் செய்யுங்கள். உள்ளே செல்லச்செல்ல நீங்கள் வெறுமையாகி பிரபஞ்சமாகி விடுவீர்கள் என்றனர்.

தங்கள் சொந்தச் சுயதரிசனத்தில் கண்ட உண்மைகளை உண்மையாகச் சொன்ன ஞானிகள் இவர்கள், என்றும் உண்மையாக இருந்தவர்கள். மேற்கோள்களைத் தங்களுக்கு ஆதாரமாகக் காட்டவில்லை, காரணம் ஆதாரங்களை தேடுவது தாங்கள் கூறும் கருத்துக்களில் நம்பிக்கையின்மையைக் காட்டுகிறது. ஆட்டம் கொடுக்கும், நிலையற்ற போதனை களுக்கு நிலைநிறுத்த ஆதாரம் தேவை, காரணம் அத்தகையவர்கள் சொந்தக் குரலில் பேசவில்லை, இரவல் குரலில் பேசுகிறார்கள். ஆனால் இந்த ஞானிகள் சொந்தக் குரலில் பேசினார்கள்.

சோக்கிரடீஸ் கொல்லப்படலாம், ஆனால் மாற்ற இயலாது. இயேசுவைச் சிலுவையில் அறையலாம், ஆனால் மாற்ற இயலாது. மகாவீரரை சித்திரவதை செய்யலாம், ஆனால் மாற்ற இயலாது. புத்தருக்கு போதிதர்மருக்கு உணவு விசமாக (Food Poison) மாறலாம், ஆனால் மாற்ற இயலாது. நபிகள் நாயகத்துக்கு எதிராகப் போர் தொடுக்கலாம், ஆனால் மாற்ற இயலாது. லா-சூ அவர்களை ஏளனம் செய்யலாம், சிறையில் அடைக்கலாம், ஆனால் மாற்ற இயலாது. பட்டினத்தாருக்குக் கழுவேற்ற தண்டனை வழங்கலாம், ஆனால் மாற்ற இயலாது. இராமகிருஷ்ணர், சீரடிபாபா, இரமணமகரிஷி தாக்கப்படலாம், ஆனால் மாற்ற இயலாது. மன்சூரைக் கொடுமைப் படுத்தினார்கள், சித்திரவதை

செய்தார்கள், அவர் சிரித்துக்கொண்டே இருந்தார். ஆனால் மாற்ற முடியாது. இயேசுவைச் சிலுவையில் அறைந்தவர்களை மன்னிக்கும்படி இறைஞ்சினார். "தாங்கள் என்ன செய்கிறார்கள் என்பதை அவர்கள் அறிந்திருக்கவில்லை, இச்சிறுபிள்ளைகளை இரட்சித்து அருளும்படி" கேட்டார். இவரை மாற்ற முடியாது. இயேசு, மன்சூர், போதிதர்மா, பட்டினத்தார், புத்தர், நபிகள் நாயகம், மகாவீரர், லா-சூ, சீரடிபாபா, இராமகிருஷ்ணர், இரமணர் போன்ற ஞானிகளின் உறுதி அவர்கள் கண்ட உண்மையின் சுயசாட்சியத்திலிருந்தும், சுயதரிசனத்திலிருந்தும் ஏற்பட்டதாகும். இங்கே குறிப்பிட்டுள்ள சில மகான்கள் சில யோகிகள், சில ஞானிகள் ஒரே காலத்தில் வாழ்ந்தவர்கள். ஆனால் அவர்கள் தங்கள் சமகால மகான்களைப் பற்றி எதுவும் தங்கள் வாழ்நாட்களில் குறிப்பிடவில்லை. இவர்கள் ஒருவரை ஒருவர் ஏற்றுத் தங்கள் போதனைகளில் குறிப்பிட்டிருந்தால், இவர்களைப் பின்பற்றுபவர்களும் வெவ்வேறு பிரிவினராக இருந்தாலும் ஒருவரை ஒருவர் புரிந்துகொள்ள முயன்றிருப்பார்கள். மதப்பூசல்கள், மதச்சண்டைகள், மதப்போர்கள் அற்ற உலகமாக இருந்திருக்கும். ஞானிகள், மகான்களைப்பற்றிய நூல்களில் பிற ஞானிகளைப் பற்றியும் சேர்த்து எழுதுவது பிறமதப் புரிந்துணர்வை வளர்க்கும். மதபோதனைகளை எழுதும் நூல்களில் பிற மதபோதனைகளையும் சேர்த்து எழுதுவது ஆன்மிகப் பண்பாகும் (Religious ethical values).

சமணமதத்தின் முதல் தீர்த்தங்காரரான ரிஷிபதேவர், இந்துக்கள் போற்றும் ரிக்வேத காலத்தில் வாழ்ந்திருக்க வேண்டும். ஏனெனில் இந்துமத ரிக்வேதத்தில் சமணமத ரிஷிபதேவரைப் பற்றி புகழார்ந்த குறிப்புக்கள் இருப்பதாக ஓஷோ குறிப்பிட்டதை வாசித்த ஞாபகம் எனக்கு (இந்நூலாசிரியருக்கு) உண்டு. அதே காலத்தில் வாழ்ந்த இன்னொரு ஞானியை ஏற்று அவரைப்பற்றிக் கூறும் பண்பாட்டை அதற்கு பின்பு எக்காலத்திலும் காண முடியவில்லை.

ஞானிகளை, மகான்களை அவர்கள் வாழுங்காலத்தில் புறக்கணித்து, நூற்றாண்டுகளுக்குப் பின்பு 'உண்மையை' அறிந்து போற்றுவதை விட, அவர்கள் வாழுங் காலத்திலேயே

அவர்கள் அறியப்பட வேண்டும். அதற்கான உண்மையை உணர்ந்துகொள்ளும் தெளிவையும், விழிப்புணர்வையும் நாம் வளர்த்துக்கொள்ள வேண்டும்.

உலகில் இருக்கும் சகல மதங்களையும் உற்று நோக்கினால் அவைகள் எல்லாம் பைத்தியக்காரர்கள் போன்றவர்களால் வழிநடத்தப்பட்டுள்ளன. விஞ்ஞானிகள் Einstein, Edison, Darwin, Galileo, Copernicus, Archimedes போன்றவர்களைச் சமூகம் பைத்தியக்காரராகப் பார்த்தது. ஏதாவதொரு 'வித்தியாசம்' விஞ்ஞானத்திலோ, ஆன்மிகத்திலோ, சமூகத்திலோ, புதுக் கண்டுபிடிப்புகளிலோ, புதுமைகளிலோ எப்போதும் எங்கேயும் உணரப்பட்டிருந்தால் அவைகள் சமூகம் கூறும் பைத்தியக்காரர் போன்றவர்களாலே நிகழ்ந்திருக்கும் எனலாம். ஏனெனில் அவர்கள் போலியான வர்களில்லை.

■■

அத்தியாயம் 27

ஒளி வட்டம் (தேஜஸ்)
(Aura of Light)



ஞானிகளின் தலையைச் சுற்றி ஒளிவட்டம் (Aureole) இருப்பதாக அவர்களின் உருவப்படங்களில் வரைந்திருப்பார்கள். இந்த ஒளி வட்டத்திற்கு இப்போது விஞ்ஞான ரீதியான விளக்கம் கூறப்படுகிறது. சோவியத்யூனியனில் வசித்த தத்துவ மேதையும் விஞ்ஞானியுமான கிர்லியான் (Kirlian) ஒரு கமெரா வைக் கண்டுபிடித்தார். அதற்குப் பாவிக்கும் படச்சுருளையும் (Film) கண்டுபிடித்தார். அது எங்களது கண்களுக்குப் புலப் படாத, கண்களுக்குத் தெரி யாதவைகளையும் வெளிக் காட்டக்கூடிய சக்திமிக்க தாக இருந்தது. அவர் அந்த கமெராவால் ஆட்களை, இயற்கைக் காட்சிகளை, விலங்கினங்களை, மரம், செடி, கொடிகளை, மலர்களைத் தனது பொழுதுபோக்காக படம் பிடித்தார். என்ன ஆச்சரியம்! மனிதர்கள், விலங்கினங்கள், மரங்கள், மலர்கள் எல்லாவற்றிலும் மிகச் சிறிய ஒளிவட்டம் கண்டார்.



ஆனந்தமாக உள்ளவர்களுக்குப் பெரிதான ஒளிவட்டத்தையும், சோகமாக மன உளைச்சல் உள்ளவர்களுக்கு மிகச் சிறிதான ஒளிவட்டத்தையும் அவதானித்தார். ஒளிவட்டத்தின் (halo) அளவில் வித்தியாசம் தெரிந்தது. மரங்கள், மலர்கள், இவைகளுக்கு அருகாமையில் ஒளி காணப்பட்டது. மரணப் படுக்கையில் இருப்பவர்களுக்கு அந்த ஒளிவட்டம் மறைந்துவிடுகிறது என்பதையும் தனது கமெராவால் பரிசோதனை செய்து கண்டறிந்தார். புத்தர், மகாவீரர், இயேசு, நபிகள்நாயகம், போதிதர்மர் இவர்களைப் போன்ற பல ஞானிகளின் ஒளிவட்டம் அவர்களின் சீடர்களுக்குத் தெரிந்தது. அவர்களின் கண்கள் அந்த சக்திமிக்க கமெராவைப் போன்றிருந்தது. இவர்களின் சீடர்கள் பார்ப்பதை ஏனையோரால் பார்க்க முடியாமல் இருக்கலாம்.

புத்தர், மகாவீரர், போதிதர்மர், இயேசு, நபிகள்நாயகம், இந்துமத ரிஷிகள் போன்றோர்களின் கண்களுக்குத் தெரிவது சாதாரணமானவர்களின் கண்களுக்குத் தெரியாது. இவர்கள் எல்லாம் தங்கள் முழுமையில் இருப்பவர்கள். தங்கள் இருப்பில் (Being) முழுமையாக, ஆழமாக இருப்பவர்கள்.

தன்னை அறிந்தவர்களும், சுயவிழிப்புணர்வு உள்ளவர்களும், முழுமையாக இருப்பவர்களும், தங்களைக் கடந்தவர்களுக்கும் பெரிய ஒளிவட்டங்களும், சக்திமிக்க கண்களும் உடையவர்களாகக் காணப்பட்டனர். அத்தகைய ஒளிவட்டத்திற்குள் பிரவேசிப்பவர்களும் மாற்றமடைந்தனர். கொடிய விலங்கினங்களும் அவர்களுக்கு முன் அமைதியாகின. அவர்களது ஞான ஒளிக்குள் எல்லாம் கட்டுப்பட்டன.

■■

பாகம் 2

விதிமுறைகள் இல்லாது வாழ்வதே இந்த ஞானிகளின் விதிமுறைகள்

(Living without any precepts are the precepts of the following saints)

அத்தியாயம் 28

ஹொடாய் (Hotei) - சிரிப்பால் மக்கள் மனதை ஒருமைப்படுத்தியவர்! சிரிப்பால் விழிப்புணர்வைத் தூண்டியவர்!



இவர் ஜப்பானைச் சேர்ந்த ஒரு சென் பௌத்த ஞானி (கி.பி. 16ஆம் நூற்றாண்டு). விதிமுறைகள் இல்லாதிருப்பதே . இவரது விதிமுறையாகும். சென் மத ஞானிகள் பெரும் பாலும் சொற்கள் எதுவும் பயன்படுத்தாது முயற்சியற்ற முயற்சியால் விழிப்புணர்வை ஏற்படுத்தியவர்கள். சென் மதத் துறவிகள் தங்களுக்குள் விடை எளிதில் காணமுடியாத வினாக்களைத் தொடர்ந்து விவாதித்து மூளையைச் சுறுசுறுப்பாக இயக்கிக்கொண்டேயிருப்பார்கள். அதே நேரத்தில் உடலையும் உற்சாகமாகவும் வைத்திருப்பார்கள். இரண்டு அங்கிகள் மாத்திரம்தான் தங்கள் உடைமைகளாக கொண்டவர்கள். பணம் கையாளாதவர்கள், யாசகர்களாக வாழ்பவர்கள், யாசித்து உண்பவர்கள், விழிப்புணர்வு மிக்கவர்கள். ஒரே இடத்தில் நிலைகொள்ளாது ஊர்ஊராகச் சஞ்சரிப்பவர்கள். இன்று இந்நிலை சற்று மாறிவிட்டது.

சென் (Zen) பௌத்த மதத்தின் முழுச்செயல் முறையுமே எப்படி மனமற்ற நிலையைப் பெறுவது என்பதுதான். சிரிப்பு

அதை அடைவதற்கான மிக அழகிய பாதைகளில் ஒன்று. ஞானி ஹொடாய் இந்தப் பாதையிலே பிரயாணம் செய்தவர். அந்தப் பாதையை மக்களுக்குக் காட்டியவர்.

சென்மத ஞானிகள் சொற்கள் அல்லாத சிரித்தல், கண்கொட்டாது பார்த்தல், (Staring) உடல் அதிர்தல், (vibration) கொட்டாவி விடுதல், (yawning) செருமல், ஓவியம் வரைதல், நிலைமையைக் குழப்பிவிடுதல் போன்ற செயல்கள் மூலம் மக்களுக்குத் திடீர் விழிப்புணர்வை ஏற்படுத்தியவர்கள். ஜப்பானில் வாழ்ந்த சென்ஞானி றின்சாய் (Rinzai) நிலைமையைக் குழப்பி திடீர் விழிப்புணர்வை ஏற்படுத்தியவர்.

ஹொடாய் (Hotei) அவர்கள் மக்கள் முன் சிரித்து திடீர் விழிப்புணர்வை ஏற்படுத்திய மகான். இவரது சிரிப்பை நேருக்குநேர் பெற்றவர்கள் தங்களுக்குள் உள்மாற்றத்தை உணர்ந்தனர். சிரிப்பு மூலம் தன் சக்தியை மற்றவர்களுக்கு மாற்றியவர். சிரிப்பால் மக்கள் மனதை ஒருமைப்படுத்தி அவர்களைச் சக்திமிக்கவர்களாக்கினார். இவரின் சிரிப்பு அத்தகைய உள் மாற்றத்தை ஏற்படுத்தியது. இவர் தான் ஒரு மகான் என்பதை அறியாத மகான்.

இந்தோனேசியாவில் வாழ்ந்த இலத்திக்கான் (Lathihan) ஞானி பபக் சுடித் தன் உடல் அதிர்வால் (Vibration) சக்தியை மற்றவர்களுக்கு மாற்றுவதுண்டு. பிறப்பால் அவர் ஒரு முகம்மதியர் அவரது மார்க்கம் சுபுத் (Subud).



ஹொடாய் ஜப்பானில் வாழ்ந்த மிகப்பெரும் சென் (Zen) பௌத்த ஞானி. இவர் சீனா கொரியா போன்ற அயல் நாடு களுக்கும் பயணித்தவர். இவர் மக்களால் சிரிக்கும் புத்தர் (Laughing Buddah) எனவும் மகிழ்ச்சிப் புத்தர் (Happy Buddah) எனவும் அன்பாக அழைக்கப்பட்டார். **புத்தர் என்றால் ஞானம் அடைந்தவர் என்பதே அதன் பொருள். சித்தார்த்தர் ஞானம் அடைந்த பின்பே கௌதம புத்தர் என அழைக்கப்பட்டார். சித்தார்த்தருக்கு முன்பும் பின்பும் பல புத்தர்கள்**

இருந்திருக்கிறார்கள். அத்தகையவர்களில் ஒருவர்தான் ஹொடாய். இவர் சொற்கள் எதுவும் பயன்படுத்தாமல் தொந்தி வயிறு குலுங்கக் குலுங்கச் சிரித்துப் பிளவுபட்ட மக்கள் மனங்களைச் சிரிப்பால் 'ஒருமைப்படுத்திய' மிகப்பெரும் ஆன்மிகஞானி.

ஊர் ஊராக, கிராமம் கிராமமாக, நகரம் நகரமாக, தெருத்தெருவாக, மூலை முடுக்கு எல்லாம் திரிந்து தொந்தி உடல் குலுங்கக் குலுங்க அடிவயிற்றிலிருந்து சிரிப்பை வெளிப்படுத்தினார். இவரைக் கண்டதும் மக்கள் சிரித்தனர். இவர் சிரிக்கும் அழகைப் பார்த்து மக்களும் மெய்மறந்து சிரித்தார்கள். இவர் இருக்கும் அந்தச் சூழலே மாறிவிடும், மக்கள் எல்லோரும் தொற்றுவியாதி போலச் சிரிப்பார்கள், நாடே சிரித்தது. சொற்கள் எதுவுமில்லாமல், போதனை எதுவுமில்லாமல் தன் அங்க அசைவால் (Body language) சிரிப்பூட்டிய சிரிப்புப் புனிதர் (saint) இவர். மக்கள் இவருடன் சேர்ந்து சிரித்தனர், நடனமாடினர், குதூகலித்தனர். மக்கள் தங்களில் மாற்றத்தை உணர்ந்தனர்.

இறந்தவர்களைப் பார்த்துச் சிரித்தார். இவரது சிரிப்பிலும் ஆட்டத்திலும் ''இறந்தவர் இறக்கவில்லை, அவர் ஜெயித்து விட்டார், அது இறப்பல்ல அது ஒரு புதிய வாழ்க்கை. மரணத்தால் யாரையும் அழிக்க முடியாது, மரணத்தையே அழித்துவிடலாம், மரணத்தைப்பார்த்துச் சிரியுங்கள்'' என்ற அந்தச் செய்தி இவரது அந்தச் சிரிப்பில் மறைந்திருந்தது. ஒவ்வொருவரும் கவலை மறந்து சிரித்தனர். சிரித்து வாழுங்கள் என்பதே அவரது பொதுவான செய்தி.

எப்போதெல்லாம் 'உண்மை' பிறக்கிறதோ அப்போ தெல்லாம் 'ஆமாம்' போடும் புத்திமான்கள், கொள்கை வாதிகள், தர்க்கவியலாளர்கள் எல்லாம் ஒன்றுசேர்ந்து அந்த 'உண்மை' மீது தாவி ஏறி அதை நசுக்கிவிடுகின்றனர். அத்தகையவர்களின் முன்னிலையில், சிரிக்கும்போது அவர்கள் பார்வையில் முட்டாள்தனமாகவும், மடைத்தனமாகவும் இருக்கக்கூடும் என்று கணக்குப் பார்க்கத் தெரியாதவர் இந்தச் சிரிப்பு புத்தர். எதிர்பார்ப்புக்கள், அபிப்பிராயங்கள், எண்ணங்கள், கருத்தியல்கள், கோட்பாடுகள், தத்துவம்,

வழிமுறைகள் என இவைகளைச் சுமந்துகொண்டு பார்ப்பவர்களுக்குக் ஹொடாய் ஒரு புரியாத புதிர்.



வாழ்வென்றால் என்ன? மரணம் என்றால் என்ன? அப்பால் நிகழ்வது என்ன? என்ற கேள்வியைத் தனக்குத் தானே கேட்டார், பதில் கிடைக்கவில்லை. சிந்தித்தார், பதில் கிடைக்கவில்லை அந்தக் கேள்வியுடனே வாழ்ந்தார். ஒரு நாள் தனது கேள்வியுடன் ஒரு மரத்துக்குக் கீழ் சிந்தித்துக்கொண்டிருந்தார். இவர் கண்ணெதிரே ஒரு பழுத்த இலை மரத்திலிருந்து கழன்று காற்றில் அடிபட்டு அங்கும் இங்கும் அசைந்து நிலத்தை அடைந்தது. கண்ணிமைக்காமல் அதைப் பார்த்தபடி இருந்தவர், பதில் கிடைத்துவிட்டது என்று துள்ளிக் குதித்து நடனமாடியபடி தொந்தி வயிறு குலுங்கக் குலுங்கச் சிரித்தார். அப்பொழுது சிரிக்கத் தொடங்கியவர் இறக்கும்வரை சிரித்தார். மக்களும் இவருடன் சேர்ந்து சிரித்தனர். சிரிப்பால் மக்களை ஒருமைப்படுத்தினார்.

ஹொடாய் போன்ற மனிதர் இந்த உலகில் அரிதாகவே பிறக்கிறார்கள். அதிகளவு மக்கள் அவரைப்போல் சிரிப்புடன் இருக்கவேண்டும். கோயில்கள் அதிகளவில் சிரிப்பினால் நிரப்பப்படவேண்டும். சிரிப்பை இழந்துவிட்டால் எல்லாவற்றையும் இழந்துவிடுவோம். இவர் மக்கள் முன் பேசுவதில்லை, ஆன்மிகச் சொற்பொழிவு செய்வதில்லை, போதனைகள் போதிப்பதில்லை, அவரது ஒரே மொழி 'சிரிப்பு.'

இவரது சிரிப்பை முகத்துக்கு முகம் நேராகப் பெற்றவர்கள் ஞானநிலைக்குச் சென்றனர். உள்மாற்றம் உணர்ந்தனர். தன் சிரிப்பு மூலம் 'சக்தியை' மற்றவர்களுக்கு மாற்றினார். ஹொடாய் தனித்துவமானவர். இவரது சிரிப்பில் மக்கள் கரைந்தனர். இவரது சிரிப்பு மக்களுக்குள் தங்கி அவர்களது 'இருப்பை' (Being) தூண்டிவிட்டது. இவர் ஞானமடைந்தவுடன் சிரிக்க ஆரம்பித்தார். யாராவது ஏன் சிரிக்கிறீர்கள் என்று கேட்டால் மேலும் அதிகமாகச் சிரிக்க ஆரம்பித்துவிடுவார். சிரிக்கக் காரணமே கிடையாது.



அவருடன் சேர்ந்து சிரித்தவர்கள் அந்தச் சிரிப்பினால் வளம்பெற்றனர், தூய்மைப் படுத்தப்பட்டனர். தங்களுக்குள் வித்தியாச மாக உணர்ந்தனர். அவர்களுக்குள் உள் மாற்றம் நிகழ்ந்தது.

ஹொடாய் அவர்கள் ஞானமடைந்தபின் நாற்பத்தைந்து வருடம் செய்தது ஒன்றே ஒன்றுதான் அதாவது 'சிரிப்பு.' சிரிப்புத்தான் அவரது செய்தி, சிரிப்புத்தான் அவரது உண்மை, சிரிப்புத்தான் அவரது ஆன்மிகம், சிரிப்புத்தான் அவரது மறைநூல்.

இவரது உருவச்சிலை ஜப்பானில் மட்டுமல்ல இன்று உலகம் பூராவும் வீடுகளில் உள்ளது. ஜப்பானியர்கள், சீனர்கள், கொரியர், வியட்னாமியர், தாய்லாந்து மககள் மத்தியில் மாத்திரமல்ல, இலங்கையர், இந்தியர் மத்தியிலும் இவரது உருவச்சிலை நிலைத்துவிட்டது.

சிரிப்பை இழந்துவிட்டால் எல்லாவற்றையும் இழந்து விடுவோம். நீங்கள் பொதுவாகச் சிரிப்போடு சம்பந்தப்படாத காரணங்களுக்காகச் சிரிக்கிறீர்கள். சிரிப்புக்கூட தொழில் ரீதியாகிவிட்டது, சிரிப்புகூட பொருளாதாரம், அரசியலைச் சேர்ந்ததாக மாறிவிட்டது. அதாவது சிரிப்பு அதன் தூய்மையை இழந்துவிட்டது. நீங்கள் ஒரு குழந்தையைப் போலத் தூய்மையாக, எளிமையாக, வெகுளியாகச் சிரிக்க முடியவில்லை என்றால், உங்களது வாழும்முறையில் பிழையிருக்கிறது என்றே கூறவேண்டும். ஒரு குழந்தையின் முதல் சமுதாயச்செயல் புன்னகைதான். சிரிக்கும் மனிதனால் தான் அழவும் முடியும். உங்களுக்குச் சிரிப்பூட்ட யாரும் தேவைப்படுகிறார்கள், அதன் பின்பே உங்களால் சிரிக்க முடிகிறது. ஹொடாய் முழுமையாகச் சிரிப்பார். அவரது வாய், வண்டி, தொந்தி, அந்தப் பருமனான உடல் பூராவும் சிரிக்கும். 'குழந்தைகள்' என்பதைத் தவிர வேறு எதையும் அவர் தன் வாழ்நாளில் கூறியதில்லை.

ஒருவர் உண்மையாக, இயல்பாக, வெகுளியாக சிரிக்கும்போது 'மனம்' மறைந்துவிடுகிறது. சென்மதம்

கூறுவதே உன் மனமமற்ற நிலைக்குள் நீ பிரவேசி என்பதே. அதை அடைவதற்கு அழகான நுழைவாயில் 'சிரிப்பு.' நடனமும், சிரிப்பும் மிகச்சிறந்த வழிகள். வாய்விட்டுச் சிரிக்கும்போதும் ஒருகணம் சிந்திப்பது நின்று மனமற்றவராக (No-mind) மாறிவிடுகிறோம். சிந்தனையற்ற நிலைக்குச் சிரிப்பு எங்களை அழைத்துச் செல்கிறது. சிந்தனையற்ற நிலையை அடையத்தான் தியானம் செய்கிறார்கள். தியானத்தால் அடையக்கூடிய நிலையைச் சிரிப்பும், நடனமும் எமக்கு தருகிறது. ஏனோதானோ என்றில்லாமல் நடனம் நடைபெற அனுமதித்தால் அதாவது இயல்பாக அந்த நடனம் நிகழ்ந்தால் மனமற்ற நிலையை அடையலாம். நடனமாடும் நடராஜ் தோற்றம் எங்களுக்கு அந்த உண்மையை விளக்குகிறது.

ஹொடாய் தான் ஒரு சென்குரு என்றழைக்கப்பட வேண்டும் என்பதற்காகவோ அல்லது சீடர்கள் தன்னைச் சுற்றியிருக்க வேண்டும் என்பதற்காகவோ இவர் எதுவும் செய்வதில்லை. இவர் ஒரு பையை (sack) தனது முதுகில் இனிப்புகளுடனும், மிட்டாய்களுடனும், பொம்மைகளுடனும் சுமந்துகொண்டு திரிவார். அவற்றைச் சிறுபிள்ளைகளுக்குக் கொடுப்பார். இந்த உலகம் வெறும் பொம்மைதான் என்பதை விளங்கிக்கொள்வதற்காகப் பொம்மை கொடுத்தார்.

ஹொடாயின் சிரிப்பினால் பார்ப்பவர்களின் எண்ணங்கள் அந்தக் கணத்தில் காணாமல் போய்விடுகின்றன. அந்தக் கணத்தில் மக்கள் மனங்கள் 'ஒருமை' நிலை அடைந்தன. அவர் முன்னிலையில் மக்கள் தாங்கள் இருக்கிறோம் என்பதையே உணரமுடியாமல் தங்களைத் தாங்களே தொலைத்தனர். உலகில் உள்ள வித்தியாசங்கள் தனித்தனியே தெரியும்வரை இருமைநிலை நீடிக்கும். 'ஒருமை' (Oneness) நிலையைக் கடந்து அப்பால் சென்றவர்களுக்கு வித்தியாசங்கள் வேறுபாடுகள் எதுவும் தெரியாது. ஹொடாய் அவர்கள் அத்தகையவரே. அவர் வாழும் காலத்தில் விளங்கிக்கொள்ளப்பட முடியாதவராகவே இருந்தார்.

சமுதாயம் உங்களைச் சோகத்தில் பார்க்க விரும்புகிறது, மகிழ்ச்சியாகப் பார்க்க விரும்புவதில்லை. சமுதாயத்திற்கேற்ப முகமூடிகளை மாற்றி மாற்றி அணிந்து வாழ்வதைச் சமுதாயம் உங்களிடமிருந்து எதிர்பார்க்கிறது. உங்கள் சொந்த முகத்திற்கு சமுதாயத்தில் அங்கீகாரம் இல்லாததால் நீங்கள் உங்கள் சொந்த முகத்தை மறந்தேவிட்டீர்கள், உங்கள் சொந்த முகத்தை ஞாபகப்படுத்திப் பார்க்க முயற்சி செய்யும்போது உங்கள் போலி முகமே உங்களுக்கு நிஜ முகமாகத் தெரிகிறது. நீங்கள் வாழும் சமுதாயத்தில் நீங்கள் அழுதுகொண்டு சோகமாக சுலபமாகப் போகலாம். ஆனால் சிரித்துக்கொண்டு, ஆடிப்பாடிக்கொண்டு போகமுடியாது. உங்கள் மகிழ்ச்சியைக் கண்டு அஞ்சுவார்கள், கேலிபண்ணி அடக்கிவிடுவார்கள். எந்த நேரமும், நீங்கள் விரும்பியபொழுதெல்லாம் அழலாம், சோகமாக இருக்கலாம். சமுதாயம் எதிர்பார்ப்பது சோகத்தையே, மகிழ்ச்சியை அல்ல. சோகத்துக்கு அங்கீகாரம் கிடைக்கும், நீங்கள் சிரித்தால் சோகம் வரப்போகிறதென்றும் அந்தச் சிரிப்பு இனிமேல் வரப்போகும் சோகத்துக்கு முன் அடையாளம் என்று கூறிச் சிரிப்பை விரட்டியடித்து, சோகத்திற்கு முடிசூட்டிவிடுவார்கள். சமுதாயத்திற்கு விருப்பமான சோகம் சமூகத்திற்கு ஏற்புடைய சோகம் சிரிப்பால் தகர்த்தப்படவேண்டும். சமூகம் என்றும் சோகத்தின் பக்கம் நிற்கிறது, மகிழ்ச்சிக்கும், சிரிப்புக்கும் சிவப்புக்கொடி காட்டுகிறது.

நீங்கள் யாரும் மாதிரி ஆக வேண்டாம், நீங்கள் நீங்களாகவே இருங்கள், தனிமனிதனாகவே இருங்கள், சுயமாக இருங்கள், சுயமாக வாழ்வதில் பிச்சைக்காரனாக இருந்தாலும், அந்நிலை சக்கரவர்த்தியைவிட மேலானது. சிரித்து, மகிழ்ச்சியாக, நிம்மதியாக இருப்பீர்கள். இறுக்கமாக இருக்கும் சக்கரவர்த்தி தனக்குள் ஒரு ஏக்கத்தை உணர்கிறார். சிரித்துக்கொண்டிருக்கும் ஏழை தனக்குள் ஒரு நிறைவை உணர்கிறார். பயத்தையும், பீதியையும் முன்வைத்து வாழ்பவர்கள் தங்களைச் சுற்றிப் பயத்தை வளர்த்துக் கொள்கிறார்கள். விழிப்புணர்வில் வாழமுடியாமல் மந்தமாகவே வாழ்வார்கள். ஒருவர் வாய்விட்டுச் சிரிக்கும்போது அந்தக் கணத்தில் மெய்யான நிலையை அடைகிறார்கள்.

சமுதாயம் சிரிப்பவர்களையும், ஆனந்தமானவர்களையும் பார்க்க விரும்புவதில்லை. பெற்றோர்கள், தங்கள் பெற்றோர்களால் சிரிப்புக்கு எதிரானவர்களாக வளர்க்கப் பட்டதால் தங்களை அறியாமல் வளரும் தங்கள் குழந்தைகளையும் ஆனந்தத்துக்கும், மகிழ்ச்சிக்கும், சிரிப்புக்கும் எதிராக வளர்க்கிறார்கள். இது பரம்பரை பரம்பரையாக கைமாற்றப்படுகிறது. சிரிப்பதைத் தண்டனைக்குரிய குற்றமாக்கிவிட்டார்கள். ஏளனத்தின் அடையாளமாகச் சிரிக்க விரும்புகிறார்கள். மகிழ்ச்சியின் அடையாளமாக ஏற்படும் சிரிப்பை சிரமப்பட்டு தங்கள் மூச்சுத் திணறும் அளவுக்கு அடக்குகிறார்கள்.

பிறக்கும்போதே குழந்தை சிரிப்புடன் பிறக்கிறது. தவழும்போது சிரிக்கிறது. சிரிப்பை வரமாகப்பெற்று குழந்தை இப்பூவுலகில் பிரவேசிக்கிறது. நீங்கள் வீட்டில் சிரிப்பொலியுடன் இருந்தால் உங்கள் கதவைத் தட்டி சிரிப்பைக் குறையுங்கள் என்பார்கள். ஆனால் நீங்கள் அழுதுகுழறி, சோகப்புயலாக இருங்கள் யாரும் உங்கள் கதவைத் தட்டமாட்டார்கள், சிரிப்பு ஏற்றுக்கொள்ளப்பட வில்லை, சோகம் ஏற்றுக்கொள்ளப்படுகிறது. சோகத்தையும், துன்பத்தையும், விதியையும், கெட்ட தினங்கள், கரிநாட்கள், அச்சம், பீதி, மரணபயம் என்பவைகளை மையமாக வைத்து, வளர்ச்சியில்லாது வாழ்பவர்களுக்கு மகிழ்ச்சி, ஆனந்தம், சிரிப்பு, கும்மாளம் தொல்லையாகத்தான் இருக்கும்.

பிறர் மகிழ்ச்சியை, ஆனந்தத்தை, சிரிப்பைச் சகித்து கொள்ளமாட்டார்கள். சோகத்தை ஏற்கும் சமுதாயம், சிரிப்பை ஏற்காது. சமுதாயம் என்பது என்ன? மனிதர்கள் கூட்டம்தான் சமுதாயம். பிறப்பவர்கள் எல்லோரும் அதில் ஆயுட்கால அங்கத்தினர்தான். காதலர் தினத்தைக் கொண்டாடுகிறார்கள். வெறும் தினத்தை கொண்டாடாது காதலர்களைக் கொண்டாடுங்கள். குழந்தைகள் தினம், அன்னையர் தினம், தந்தையர் தினம் எல்லாம் வெறும் தினங்களைக் கொண்டாடும் கொண்டாட்டங்களாக உள்ளன. வெறும் தினங்களைக் கொண்டாடுவதைத் தவிர்த்து குழந்தையை, அன்னையை, தந்தையை கொண்டாடுங்கள். அவர்களைக் கொண்டாடும் வரை தினங்கள் எல்லாம் வெறும்

தினங்கள் தான். அனைத்தும் சிரிப்பொலிக் கொண்டாட்டங் களாகட்டும்.

சிரிப்பு ஒரு வழிபாடு, சிரிக்க முடிந்தால் பிரச்சினைகள் உங்களைத் தூக்கி விழுங்கிவிடாது. இறுக்கத்தை (Tension/ Stress) தளர்த்திவிடும். இறுக்கமாக இருப்பவர்கள் சிரிக்கமுடியாது. இறுக்கம் நோய்க்குப் பாதை அமைக்கிறது. இறுக்கத்தில் சமயத்தன்மை இல்லை. ஒருவர் முழுமையாகச் சிரிக்க முடிந்தால் ஒருவர் வாழ்வை முழுமையாக அனுபவிக்க முடிந்தவராவார். அத்தகைய வாழவில் சமயத்தன்மை உண்டு.

வாழ்வே ஆன்மிகம். எந்தப் புனித நூலையும் விட, எந்த வழிபாட்டையும் விட மிக உயர்ந்தது வாழ்வு. வாழ்க்கை யைத் தியாகம் செய்யாதீர்கள்! வாழ்வதற்காகத் தியாகம் செய் யுங்கள்! சிரிப்புத்தான் வாழ்வின் சாரம், அதுதான் மதத்தின் சாரம் 'கடினம்', 'கண்டிப்பு', 'இறுக்கம்', 'டென்சன்' (Tension), 'ஸ்றெஸ்' (Stress) இவை ஒருபோதும் வாழ்வாகாது. வாழ்வே மதமாக வேண்டும். சிரிப்பே வழிபாடாகட்டும். சிரிப்புக்குத் தடையாக மதம் இருக்கக்கூடாது. ஆன்மிகம் சிரிப்பைப் போதிக்க வேண்டும். சிரிப்பு! சிரிப்பு!! சிரிப்பு!!! வாய்விட்டுச் சிரியுங்கள்! உடல் தளரச் சிரியுங்கள்! குலுங்கிக் குலுங்கிச் சிரியுங்கள்! எங்கும் சிரிப்பு! கனவில் சிரிப்பு! வேலையில் சிரிப்பு! வீட்டில் சிரிப்பு! கொண்டாட்டத்தில் சிரிப்பு! ஆலயத்தில் சிரிப்பு! நாலா திசையிலும் சிரிப்பு! திரும்பும் இடமெல்லாம் சிரிப்பு! பார்க்கும் இடமெல்லாம் சிரிப்பு! சிரிப்பே வாழ்க்கையாகட்டும்! வாழ்க்கையே சிரிப்பாகட்டும்! வழிபாடு சிரிப்பாகட்டும்! திருமணத்தில் சிரிப்பு! வாழ்வில் சிரிப்பு! மரணத்தில் சிரிப்பு! பிறப்பில் சிரிப்பு!

வாழ்வுக்குத் தொடர் இசைவாக்கம் உண்டு, எக்காலத்திலும், எந்தச் சூழலிலும் எங்கும் நிற்காது. ''நேரமில்லை, நேரமில்லை என்று வாழ்ந்தால் வாழ்வில்

ஏதோ ஒரு இடத்தில் பிழை இருக்கிறது. சிரிப்பே இல்லாமல் வாழ்ந்தால் வாழும் முறையில் பிழையிருக்கிறது'' என்றார் மகா அலெக்சாண்டர்.

ஒவ்வொரு முறையும் சிரிக்கும்போதும், மகிழும்போதும் நீங்கள் நிகழ்காலத்தில் இருக்கிறீர்கள். அதே நேரத்தில் துன்பம் வரலாம் என்ற எதிர்பார்ப்பும் அடிமனதில் இருப்பதால் வருங்காலத்திலும் இருக்கிறீர்கள். அதனால் ஒரே நேரத்தில் நீங்கள் 'இரண்டு' பட்டுவிட்டீர்கள். அதேபோல் இறப்பைப் பற்றிய பயமும் அடிக்கடி குறுக்கிடுவதால் 'இரண்டு' பட்டுக்கொண்டு இருக்கிறீர்கள். அதனால் சிரிப்பை நீங்கள் தொலைத்துவிட்டீர்கள். ஒவ்வொருவருக்குள்ளும் வாழும் ஹொடாயை வெளியில் கொண்டுவந்து சிரித்து 'ஒருமைப்படுங்கள்.'

சிரிப்பில் எல்லைகள் மறைகின்றன. சிரிப்பில் துண்டுபட்ட சமுதாய முகங்கள் மறைகின்றன. மனிதனிடமிருந்து சிரிப்பை எடுப்பது, அவனது வாழ்க்கையை எடுப்பதாகும். சிரிப்பு குழந்தைத் தனமானதா? இல்லை! சிரிப்பு ஒருவரை குழந்தையாக மாற்றக்கூடியது. புன்னகை ஒரு தனிப் பழக்கம். ஆனால் வாய்விட்டுச் சிரிப்பதற்கு தனிப்பழக்கம் தெரியாது.

மனிதன் சிரிப்பிலிருந்து தடுக்கப்பட்டது தான் இந்த உலகத்தில் மனிதனுக்கு எதிராகச் செய்யப்பட்ட பாவங்களிலேயே மிகப் பெரிய பாவமாகும். சிரிப்பு குழந்தைகளுக்கும், அநாகரீகமானவர்களுக்கும், காதலால் பைத்தியமானவர்களுக்கும் உரியதாகக் கருதப்படுகிறது. கோயில்கள், ஆலயங்கள், சர்ச்சுக்கள், மசூதிகள் எல்லாம் சிரிப்புக்கூடங்களாக வேண்டும். மதங்கள் மனிதனை இறுக்கமாக்கிவிட்டது. அச்சுறுத்தும் சிலைகள், ஓவியங்கள், கடவுள் கைகளில் ஆயுதங்கள் மேலும் பீதியையூட்டி இறுக்கமாக்கிறது. வணக்க ஸ்தலங்களில் சிரிப்பைக் குற்றமாக்கி இறுக்கத்திற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. பயம் நரகத்தைப் பெரிதுபடுத்திப் பார்க்கிறது. பேராசை, சொர்க்கத்தைப் பெரிதுபடுத்திப் பார்க்கிறது. சிரிப்பு ஓரம் கட்டப்பட்டுவிட்டது.

மகிழ்ந்திருந்தால், வாய்விட்டுச் சிரித்து கலகலப்பாக இருந்தால் ஏதாவது துன்பம் நேரிடலாம் என உங்கள் மனதிற்குக் கற்பிக்கப்பட்டுவிட்டது. அதனால் கலகலப்பாக நீடித்து இருக்க முடிவதில்லை. குழந்தை வளர வளர சிரிக்காமல் இறுக்கமாக இருக்கப் பழக்கப்படுகிறது. 'சிரித்தல்' நல்ல பழக்கமில்லை, மரியாதையில்லை, கௌரவமில்லை என்று பெற்றோரால் சமுதாயத்தில் போதிக்கப்படுகிறது. பேசாமல் இருந்தால் நல்ல பிள்ளை என்று கற்பிக்கப்படுகிறது. சிரிக்கக் கூடாது என்று எச்சரிக்கப்படுகிறது. யார் அங்கே சிரிக்கிறது என்ற வினா தொடுக்கப்படுகிறது. சிரிப்புச் சத்தம் கேட்டால் தண்டனைக்குரிய குற்றமாகிவிட்டது. சமுதாயத் தினால் வாழ்வின் சுவை பறிக்கப்பட்டுவிட்டது. இழந்த சிரிப்பு மீண்டும் மனிதருக்குள் மலரவேண்டும். திரும்பும் இடமெல்லாம் சிரிப்பொலி கேட்க வேண்டும். பாடசாலை களில் சிரிப்பு பாடமாக்கப்பட வேண்டும், வேலைசெய்யும் இடங்களில், காரியாலயங்களில், தொழிற்சாலைகளில் நகைச்சுவை ஒரு பகுதியாக வேண்டும். 'Stressed' என்ற சொல்லை வலது பக்கத்திலிருந்து இடப்பக்கமாக வாசித்தால் கிடைப்பது 'Desserts' என்ற சொல்லாகும். சிரிப்புத்தான் அந்தப் 'பஞ்சாமிர்தம்' (Desserts) சிரிக்க மறந்ததால் desserts-ஐ தவறவிட்டு Stressed-ஐ பிடித்துக்கொண்டோம். அது எங்கள் வாழ்வில் மறைந்திருக்கிறது. சிரிக்க முடியா விட்டால் வாழ்வின் இரகசியங்களைத் தொலைத்து விடுவோம். நகைச்சுவையை உணர்ந்தால் மனிதன் நோயை உணரவே மாட்டான், இறுக்கமான முகத்துடன் ஒரு சின்ன விடயத்தைக் கூடச் செய்யமுடியாது. சிரிப்பு புனிதமானது, சிரிப்பை பிரார்த்தனையாக்குவோம்.



சிரிப்பில் மதவேற்றுமை மறைகிறது.
சிரிப்பில் இனவேற்றுமை மறைகிறது.
சிரிப்பில் மொழி வேற்றுமை மறைகிறது.
சிரிப்பில் பிரதேச வேற்றுமை மறைகிறது.
சிரிப்பில் நிற வேற்றுமை மறைகிறது.
சிரிப்பில் பகைமை மறைகிறது.
சிரிப்பில் ஏற்றத்தாழ்வு மறைகிறது.
சிரிப்பில் பிரிவினைகள் மறைகிறது.
சிரிப்பில் அனைத்து வித்தியாசங்களும் மறைகிறது.
வாய் விட்டுச்சிரித்தால் நோய் கூட விட்டுப்போகும்.

சென்மதத்தின் முழுச் செயல்முறையுமே எப்படி மனமற்ற நிலையைப் பெறுவது என்பதுதான். அதை அடைவதற்கு சென்ஞானிகள் சிரிப்பையும், சூஃபி (Sufi) ஞானிகள் நடனத்தையும், சைதன்யர்கள் ஆடலையும் பாடலையும் கையாண்டனர். சூஃபிகள் கால் நுனிவிரல்களில் Ballet Dance போலச் சுழன்று சுழன்று நடனமாடி மனமற்ற நிலையை அதாவது மனதுக்கு அப்பால் உள்ள அந்த வெறுமையை அடைவார்கள். ஆம்! சிரிப்பிலும், நடனத்திலும் எல்லா எல்லைகளும், எல்லா வேறுபாடுகளும் மறைந்துவிடுகின்றன. சிரப்பு ஆக்கிரமித்துவிட்டால் எங்களையே மறந்து விடுகிறோம். சிந்தனை உடனே நின்றுவிடுகிறது. மனம் மறைந்துவிடுகிறது. நடனமும் அத்தகையதே. நடனம் ஊடாக மனமற்ற நிலைக்குள் பிரவேசிக்க பிரபஞ்சம் அவர்களுக்குள் ஐக்கியமாகிவிடும் என்பதைத்தான் நடனமாடும் நடராஜர் சிலையும் உணர்த்துகிறது.

குழந்தை புன்னகையைத் தன்னுடன் கொண்டு வருகிறது. அந்தப் புன்னகை மூலம் குழந்தை சமுதாயத் துடன் ஒரு பாகமாகிறது. மிகவும் இயற்கையானதாக அந்தப் புன்னகை தோன்றுகிறது. எல்லாச் சூழ்நிலைகளிலும் சிரிக்க முடிந்தால் எதையும் எதிர்கொள்ளும் சக்தியைப் பெற்று விடலாம் அடிவயிற்றிலிருந்து கிளம்பும் தன் முழுமையான சிரிப்பில் ஞானி ஹொடாய் தானும் கரைந்துவிடுவார். அத்தகைய சிரிப்பு அவரது சிரிப்பு.

அவரிடம் இருந்த ஒரே ஒரு செல்வம் 'சிரிப்பு', அவரிடம் இருந்த ஒரே ஒரு புதையல் 'சிரிப்பு', அவரிடமிருந்த ஒரே ஒரு பொக்கிஷம் 'சிரிப்பு', அவரது அந்த ஞானச் சிரிப்பை அனுபவித்தவர்கள் தங்களுக்குள் 'உள்' மாற்றம் அடைந்தனர். சிரிப்பால் ஆன்மிகம் பரப்பிய அற்புத ஞானி ஹொடாய் அவர்கள் ஆகும்.

ஆசையின் மூலம் மனிதகுலம் இயங்கும்போது இவர் போன்றோர்கள் ஆசையின்மைக்குள் நுழைகிறார்கள். சமுதாயம் தேடும் வரலாற்றுக்குள் இவர் போன்றோர்கள் வரமாட்டார்கள். ஏனெனில் காலத்தைக் கடந்து நித்தியத்தில் வாழ்வதால் இந்த நிலை ஏற்படுகிறது.

அவர் வாழும் காலத்திலும் அவரை மக்கள் விளங்கிக் கொள்ளவில்லை. இக்காலத்தில் வாழ்பவர்களும் அவரை விளங்கிக்கொள்ளவில்லை. எக்காலத்திலும் ஞானி ஹொடாய் அவர்கள் புரிந்துகொள்ளப் படாதவராகவே இருக்கப்போகிறார். இவர் மௌனித்து இருந்த ஞானி. சொற்பொழிவுகளும் போதனைகளும் ஒருவரை அடையாளப்படுத்தும். மௌனித்து இருந்தவரை அடையாளப்படுத்த முடியாது. அதனால் இவரை ஒவ்வொருவரும் தங்கள் ஆசைகளுக்கு ஏற்ப இவருக்குப் பெயர் சூட்டி இவரை அழைத்து அதன்மூலம் தங்கள் ஆசைகள் நிறைவேற்றப்பட்டதாக மகிழ்ச்சி அடைகின்றனர். சிலைகள் ஒவ்வொருவருக்குள்ளும் கட்டுப்படலாம். ஆனால் ஞானிகளுக்கு முன் ஒவ்வொருவரும் கட்டுப்படுவார்கள். அவரின் சிரிப்பைக் கற்பனை ஆக்கி அவரைச் சிம்மாசனத்தில் அமர்த்தி மகுடம் சூட்டி அவரைக் கற்பகத் தருவாக அழகு பார்க்க விழைகிறது பேராசை கொண்ட மனம், ஆனால் ஹொடாய் பணம் கையாளாது யாசித்து வாழ்ந்த துறவி. ஹொடாய் இனிப்புப் பண்டங்களையும், பொம்மைகளையும் ஒரு பையில் போட்டுத் தோளில் சுமந்து திரிந்தவர். அவைகளை சிறு பிள்ளைகளுக்கு வழங்கியவர். இவர் சொற்கள் எதுவும் பேசாத மௌனித்திருந்த துறவி. 'குழந்தைகள்' என்ற சொல்லைத் தவிர வேறு எதுவும் பேசாதவர். 'சிரிப்பு' ஒன்றே அவரையும் மக்களையும் இணைத்த ஊடகமாகும்.

மனிதர்கள் இயல்பாகச் சிரிக்காததால் சிரிப்பூட்டும் கதைகள், துணுக்குள், ஜோக்குகள், தேவையாக உள்ளன. அதற்கும் அக்கம் பக்கம் திரும்பிப் பார்த்து விட்டுத்தான் சிரிக்கிறீர்கள். சிரிப்பதற்கு எல்லை பார்க்கிறீர்கள். சிரிப்பு உள்ளத்தில் கிளர்ச்சியை ஏற்படுத்தும். உடம்பை இலகு வாக்கும், நோயைப் குணப்படுத்தும். வைத்தியசாலைகளில் நகைச்சுவையூட்டுபவர்களையும் பயன்படுத்த வேண்டும்.

கல்வி போதனைகள் நகைச்சுவை ஊடாக கற்பிக்கப்பட வேண்டும். இன்று உலகத்திற்கு அதிகம் தேவைப்படுவோர்கள் காமெடியன்களே, அந்தளவுக்கு மக்கள் இறுக்கமாகி விட்டார்கள். நகைச்சுவை மனிதனுக்கு இயற்கை அளித்திருக்கும் மருந்து. மிக ஆழமாகச் செல்லக்கூடியது சிரிப்புத்தான். Side Effects பக்க விளைவுகள் allergic அல்லாத மருந்து சிரிப்புத்தான். யாரும் தயங்காமல் பருகக்கூடிய மருந்து சிரிப்புத்தான். இது ஒரு சர்வரோக நிவாரணி.

வாழ்வைச் சோகமாக மாற்றக்கூடாது, இறுக்கமாக்கக் கூடாது. தளர்த்துங்கள்! சிரியுங்கள்! நீங்கள் சிரிக்கும்போதும் சிரிக்கின்றீர்கள் இல்லை, சிரிப்பை உங்கள் மீது திணிக்கின்றீர்கள். அது சமாளிக்கப்பட்டதாக இருக்கிறது. சிரிப்பு வயிற்றிலிருந்து வரவில்லை, இயல்பாக வரவில்லை.

சிரிக்காமல் வாழ்வதற்குப் பல காரணங்களைக் கொண்டிருக்கிறீர்கள். சிரிப்பது அநாகரிகமல்ல, சிரிப்பது குழந்தைத்தனம், கௌரவக்குறைவு, மற்றவர்கள் என்ன நினைப்பார்கள் என்றாகி வாழ்வின் சுவையை இழக்கத் தயாராகிவிட்டீர்கள். நன்றாகச் சிரிக்கிற மனிதனால் நன்றாக அழவும் முடியும். எதற்கும் முறைகள் பார்க்கிற மனிதனால் சிரிக்கவும் முடியாது, அழவும் முடியாது, வாழவும் முடியாது. இயல்பான வாழ்வின் சுவையும் தெரியாது. சிரிக்கத் தெரியாத வாழ்வு பூரண வாழ்வில்லை. சிரிக்காத வாழ்வு சமுதாய மதிப்பைப் பெறுகிறது, நகைச்சுவை உணர்வு எல்லோரிடமும் இயற்கையாக இருக்கிறது. அந்தச் சமுதாயம் சிரிப்புக்கு எதிராகக் கட்டுப்பாட்டைப் போதித்திருக்கிறதே! பெரியோர் முன்னிலையில் சிரிக்கக்கூடாது, ஆலயங்கள், கோயில்கள், மசூதிகள், சர்ச்சுகள் உள்ளே சிரிக்கக்கூடாது என எதிர்ப்பார்க்கப்படுகிறது. எவ்வளவுக்கு எவ்வளவு சிரிக்காமல் இறுக்மாக இருக்கிறீர்களோ அதற்கேற்ற கௌரவம் வழங்கச் சமுதாயம் தயாராக இருக்கிறது. கம்ப்யூட்டருக்குச் சிரிக்கத் தெரியாது, நகைச்சுவை உணர்வில்லை, பகுத்தறிவில்லை, விழிப்புணர்வில்லை, தன்னுணர்வில்லை. அதற்குக் கொண்டாட்டம் என்றால் என்ன என்று தெரியாது. மனிதன் கம்ப்யூட்டராக மாறிவிட்டான்.

வாழ்வைக் கொண்டாடுவதைத் தவிர வேறு எந்த விதமான உயர்வான கோட்பாடும் இருக்கமுடியாது. சிரிப்பில்லாத மனிதன் வெறும் பாலைவனத்தைப் போலாகிறான். நகைச்சுவை ஆன்மிகமாக மாறவேண்டும். மனிதன் பாரத்தை இலேசாக்கிவிடுவது நகைச்சுவை. நீங்கள் சிரிக்க நேரமில்லை யென்றால் யமன் தனக்கு இனிமேல் நேரமில்லை என்று உங்களிடம் வந்துவிடுவார் என்று நகைச்சுவையாக சிரிப்பை பற்றி கூறப்படுவதுண்டு. உங்கள் வீட்டுக் கொண்டாட்டங் களில் சற்று நகைச்சுவையைச் சேர்த்து வித்தியாசமாக்குங்கள். உங்கள் கற்பனையையும் சேர்த்துவிடுங்கள், புதுமையாக்குங்கள்.

சிரிப்பு மனிதனுக்கு இயற்கை அளித்த மருந்து. மனிதனால் மட்டுமே சிரிக்கமுடியும். சிரிப்பில்லாத மனிதர் மலர்கள் இல்லாத மரத்தைப் போன்றவர்கள். சிரிப்பில்லாத மனிதர் மரியாதைக்குரியவர்களாகின்றனர். உயர் பதவியில் இருப்பவர்கள், உயர் அந்தஸ்தில் இருப்பவர்கள், பிரதம மந்திரி, ஜனாதிபதி, உயர் நீதிபதி, அரசியல் தலைவர்கள், மந்திரிகள், மதபீடத் தலைவர்கள், துறவிகள், சுவாமிகள், தியாகிகள், பொலிஸ், இராணுவம், கலெக்டர், அரச அதிபர், துணைவேந்தர், ஆசிரியர்கள் இன்னோரன்ன பதவிகளில் இருப்பவர்கள் எல்லாம் தாங்கள் 'இறுக்கமாக, கடினமாக' இருக்கவேண்டும் என்று ஒரு போலித் தோற்றத்தை செயற்கையாக ஏற்படுத்திக் கொண்டுள்ளார்கள். வித்தியாசமாக இருப்பதென்றால் சிரிக்காமல் இருக்கவேணடும் என நினைக்கிறார்கள். அவர்கள் சிரித்தால் சமூகம் அவர்களை தகுதியற்றவர்களாகப் பார்க்கும் என்ற அச்சம் உண்டு. சிரிப்பில்லாத சமுதாயத்தில் சிரிப்பில்லாதிருந்தால்தான் ஒத்துப் போக முடியும். தங்களை வித்தியாசமாக வைத்திருப்பதாக இருந்தால் சிரிக்காமல் ஒரேமாதிரியான பார்வையுடன் தொடர்ந்து இருக்கவேண்டும் அல்லவா!

கொண்டாட்டங்கள், தினங்கள், சடங்குகள் இடம் பெறும்போது சிரிக்கக்கூடாது என காலம் காலமாகத் தடை போடப்பட்டு வருகிறது. இயந்திரத் தனமாக இருத்தல் வரவேற்பைப் பெறுகிறது. மன இறுக்கத்திலிருந்தும், கடினத்திலிருந்தும் தளர்த்தக்கூடியது 'சிரிப்பு.' உங்கள் சிரிப்பு முழுமையானதாக இருக்க அனுமதியுங்கள். சிரிப்புக்கு எதிராக இருக்காதீர்கள். குழந்தைபோல் இருங்கள். குழந்தைத்தனமாக

இருக்காதீர்கள், அது பக்குவமற்ற நிலை. செல்வத்துக்கு, கல்விக்கு, வீரத்துக்கு எல்லாம் கடவுள் உண்டு. ஆனால் நகைச்சுவைக்கு கடவுள் வேண்டும். நகைச்சுவைக்குக் கோயில் வேண்டும், நகைச்சுவையான வழிபாடு வேண்டும், நகைச்சுவை மயமாக வேண்டும். நகைச்சுவை வழங்க அமைப்புத் தேவை. மனிதர்களுக்குத் தேவை தளர்ச்சி, கடினம் அல்ல.

கடவுள், மதம், கோயில் எல்லாம் மனிதனைக் கடினமாக்குகிறது, இறுக்கமாக்குகிறது. மனிதருக்குத் தேவை 'தளர்ச்சி', 'மென்மை' இதையடைய ஒரே ஒரு முறைதான் உண்டு அதுதான 'சிரிப்பு.' அரச சட்டங்களும் மதத்துடன் சேர்ந்து மனிதனை இறுக்கமாக்குகின்றன. கல்வி முறையும் மாணவர்களை இறுக்கமாக்குகிறது. சிரிப்புக்கலை கல்விமுறையில் சேர்க்கப்படவேண்டும். ஆஸ்பத்திரிகளில், வேலை இடங்களில், கல்விக்கூடங்களில் சிரிப்புக் கலையைப் பரப்புங்கள். அதுதான் சிறந்தது. 'சிரிப்புக்கு' ஆலயம் தேவை. காசு, பணம் கிடைக்க வழிபாட்டுக்குக் கடவுளை அறிந்தாகி விட்டது. இரத்தம் சிந்தும் வன்முறைக்குக் கடவுளைக் கண்டுடித்துவிட்டான் மனிதன். ஆனால் மனிதனை இலகுவாக்கும் சிரிப்புக்குக் கடவுளை இன்னும் கண்டு அறியவில்லை. 'நகைச்சுவைக் கடவுள்', 'சிரிப்புக் கடவுள்' மீது மதவாதிக்கு நாட்டமில்லை. மதவாதிகள் மக்கள் மீது ஆதிக்கம் செலுத்தக் கண்டுபிடித்த தந்திரமே குற்ற உணர்வு. நிறைவேற்ற முடியாத விஷயங்களை மக்கள் மீது திணித்து அதைக் குற்றமாக்கி மக்கள் மீது சுமத்திவிடுகிறார்கள். மக்களிடம் குற்ற உணர்வை ஏற்படுத்துகிறார்கள். அதன்பின் வாழ்நாள் முழுக்க குற்ற உணர்வுடன் அடிமையாகின்றார்கள். அவர்கள் பொறியில் சிக்கியவுடன் மதம் மக்கள்மீது வியாபாரமாகிறது.

நகைச்சுவைக்கு, சிரிப்புக்கு, கடவுள், கோயில் தேவை. கோயில் அமைப்பு இல்லாத கோயில்தான் சிரிப்புக்கோயில். இது எந்த இடத்திலும் எந்த நேரத்திலும் தினமும் உருவாகிக்கொண்டேயிருக்க வேண்டும். வானம், பூமி, மரம், செடி, கொடி எல்லாவற்றிலும் 'சிரிப்பு' பொழியட்டும். நகைச்சுவையூடாக உலகம் சிரிக்கட்டும். சகல ஜீவராசிகளும் சிரிக்கட்டும், வானமே சிரிக்கட்டும். இந்தப் பிரபஞ்சம் அண்ட சராசரங்களும் சிரிப்புக் கோயில்களாக வேண்டும்.

சிரிப்பின் வடிவமே தெய்வமாக வேண்டும். அதுவே வழிபாடு. மனிதனை உயர்விக்கும் வழி அது ஒன்றுதான். துன்பம் நீங்கும், பிணி நீங்கும், சிரிப்பு பகைவனை நண்பனாக்கும், வேற்றுமை நீக்கும், ஒற்றுமை மேலோங்கச் செய்யும். **சிரிப்பு, நேசம் இவற்றைக் கொள்கையாகப் பிரகடனம் செய்யும் ஆட்சி தேவை.**

'அன்பு' அரசியலாகட்டும், 'அன்பு' மதமாகட்டும், சிரிப்பும் அன்பும் உட்புறத்தில் மாற்றத்தை ஏற்படுத்துகின்றன, சிரிப்பு கொண்டாட்டமாகட்டும். சோகத்திலிருந்து விடுதலை கொடுப்பது சிரிப்பு. உள்ளார்ந்த வாழ்வு ஒன்று - வெளிக்காட்டும் வாழ்வு இன்னொன்று. எதிர்பார்த்த வாழ்வு ஒன்று - கிடைத்த வாழ்வு இன்னொன்று. அடைய விரும்புகிறது ஒன்று - கிடைத்துக்கொண்டிருப்பது இன்னொன்று. மனிதன் பலவாக பிளவுபட்டுவிட்டான். சிரிப்பும், நேசமும் மனிதனை 'ஒருமை'ப்படுத்தும். பிளவுபட்ட மனிதனை 'ஒருமை'யாக்கும். 'ஒருமைப்படுங்கள்' இதுதான் இன்றைய தேவை. மனிதன் பிளவுபட்டுவிட்டான். வேலைப்பழு, குடும்பப்பொறுப்பு, சமூகம், மதம், அரசியல் எல்லாம் மனிதனைக் கூறுபோட்டு இரண்டாக்கிவிட்டது, பிரித்துவிட்டது, பிளவுபடுத்திவிட்டது, இந்த இரண்டுபட்ட நிலையை, பிரிந்த நிலையை, ஒன்றாக்கக்கூடியது சிரிப்பும், நேசமும்தான். எனவே மனிதன் முதலில் 'ஒருமையாக' வேண்டும். ஒருமைப்படவேண்டும். மனிதர்கள் பார்வைக்கு தனித்தனியாகக் காணப்பட்டாலும் பிளவுபட்ட மனநிலையில் பல முகங்களுடன் தங்களுக்குள் இருக்கிறார்கள். வெளிப்பார்வைக்கு மட்டும் ஒருமுகம் கொண்ட மனிதர்களாக காணப்படுகிறார்கள்.

ஒவ்வொரு தனிமனிதனும் ஒருமைப்படவேண்டும் (Oneness) 'ஒருமைப்படுங்கள்', நீங்கள் 'ஒருவராகுங்கள்' (Oneness) ஒருமையாயிருங்கள், ஒருமைப்படுங்கள். ஒருமைப்பட்டால் சுலபமாக ஒற்றுமைப்படலாம். ஒற்றுமைக்கு முதற்படி ஒருமைப்படல்தான். மனித மனங்கள் பலவாறாகப் பிளவுபட்டு Personality, Split Personality, Multiple Personality என வாழ்கிறார்கள். மனிதன் முதலில் தன்னுடன் இணக்கம் காணவேண்டும். தன்னுடன் தானே ஒத்துப்போக வேண்டும். தன்னை நேசிக்க வேண்டும்.

ஒருமைப்பட்டால் உங்கள் சொர்க்கத்தை நீங்கள் படைப்பீர்கள். மகிழ்ச்சியின் சொந்தக்காரர் ஆகிவிடுவீர்கள். இது சுவாசம் போன்றது. சுவாசிப்பது எப்படி எங்களுக்குள் எங்களை அறியாமலேயே நடக்கிறதோ அதுபோல் மகிழ்ச்சி சுவாசமாகிவிடும். ஒருமைப்படல்தான் வாழ்வின் அடிப்படை விதி. 'ஒருமை' வாழ்வின் பலம். ஒருமையானவர்கள், ஒருமைப்பட்டவர்கள், செயற்கரிய சாதனை படைப்பர். மகாசக்தி அவர்களிடம் பிறக்கும். வலிமை, திடம், செயல்திறன், ஆற்றல், நேசம், கருணை, தன்னை நேசித்தல் மற்றவர்களை நேசித்தல், தன்னை ஏற்றல், பிறரை ஏற்றல் எல்லாம் வெளிப்படும். 'ஒருமைப்பட்டவர்' தன்னைத்தான் அறிவர். தன்னை அறிதல் வாழ்வின் முதல் படி.

நீங்கள்தான் உங்கள் பார்வையாளன். நீங்கள்தான் உங்கள் இயக்குநர். பிற மனிதர்களை உங்கள் காரியம் சாதித்துக்கொள்ள இருப்பவர்களாக மாற்றக்கூடாது. உங்களைச் சார்ந்திருப்பவர்களாக உருவாக்காதீர்கள். அவர்கள் அவர்களுக்காகவே வாழ்கிறார்கள், அவர்கள் உங்களுக்காக அல்ல. வாழ்வு ஒவ்வொருவரும் வளர்வதற்கான ஆசீர்வாதத்தைத் தன்னகத்தே கொண்டது. ஒருவர் தன்னை அறிந்துகொள்ளும் முயற்சியே வாழ்வு. ஆண் - பெண் ஒன்றுசேர்ந்த தாம்பத்திய உறவில் ஒரு கணம் உலகமே நின்றுவிடுகிறது. யாருமே இல்லாத, வெறும் உலகமாகச் சாதாரண உலகமாக தோன்றும் நிலை அது. அந்த அன்புநிலை இல்லாமலேயே முழு உலகமே சாதாரணமாகத் தோன்றும் நிலை இருக்கவேண்டும். அத்தகைய நிலையைத் தரக்கூடியது வாய்விட்டுச் சிரிக்கும் முழுமையான சிரிப்பு. எங்கள் சுவாசம்போல் சாதாரணமாகவே எங்களுக்குள் அந்த நிலை ஆண் - பெண் உறவில்லாமல் தோன்றிவிடக்கூடியது. மதங்கள், வழிபாட்டு முறைகள் மனிதர்களை இறுக்கமாக்கக் கூடாது. மனிதர்களைக் குற்றவாளியாக்கக் கூடாது. மதம், பயம், பீதியைத் தோற்றுவிக்கக் கூடாது. மதங்கள் வழிபாட்டு முறைகள் அனைத்தும் மனிதர்களை இலகுவாக்க வேண்டும்.

வீட்டில் சிரிப்பு தினசரி வாழ்வாகவேண்டும். மனித வாழ்வில் சிரிப்பு கொண்டாட்டமாக வேண்டும். கொண்டாட்டம் சிரிப்பாக மாறவேணடும். மனிதர்களை இலகுவாக்கக்கூடியது இதுதான். சிரிப்பில் உலகத்தை

மறக்கிறோம். சிரிப்புக்கு எதிரானவராகாதீர்கள். சிரிப்பு நாகரிகமானது. மிருகங்களுக்குச் சிரிக்கத் தெரியாது. மனிதனையும் விலங்கையும் சிரிப்பு வித்தியாசப்படுத்துகிறது. மிருகம் தளர்வு நிலையில் இறுக்கமில்லாமல் இருக்கிறது. அதனால் விலங்கினத்திற்கு நகைச்சுவை உணர்வான சிரிப்பின் அவசியம் ஏற்படவில்லை. மனிதர்களைப் பார்த்து மிருகங்கள் சிரிக்கும் காலம் வந்தாலும் ஆச்சரிய்பபடுவதற்கு இல்லை. 'இன்பமே எந்நாளுந் துன்பமில்லை' என்று திருநாவுக்கரசுநாயனார் கூறுகிறார். வாழ்க்கை என்றும் மகிழ்ச்சியினதும், பேரானந்தத்தினதும் அடையாளம் என்கிறார். வாழ்வின் நோக்கமும் இதுதான். இன்று மனோதத்துவ ஆலோசகர்கள் இதையேதான் மீண்டும், மீண்டும் வலியுறுத்திக் கூறுகிறார்கள். திருநாவுக்கரசு சுவாமிகள் ஆறாம் நூற்றாண்டில் இதனை வலியுறுத்தியுள்ளார். எந்தக் காலமாக இருந்தாலும் மக்கள் தினமும் அனுபவிக்க வேண்டியது ஆனந்தம்! ஆனந்தம்! பேரானந்தமே!

ஹொடாய் அவர்களை நம் எல்லோர் மனங்களிலும் அனுமதித்து நாம் எல்லோரும் சிரிப்போம். நாம் எல்லோரும் மகிழ்வோம். நாம் எல்லோரும் ஆனந்தமடைவோம். இந்த முழு உலகத்திலும் வேறு எந்த மனிதனும் எக்காரணமுமின்றி இந்தளவு அதிகமான மக்களைச் சிரிக்க வைத்ததில்லை. இருப்பினும் அந்தச் சிரிப்பினுள் ஒவ்வொருவரும் கரைந்தனர். அந்தச் சிரிப்பினால் ஒவ்வொருவரும் தூய்மைப்படுத்தப் பட்டனர். முன்னெப்போதும் உணர்ந்திராத அளவுக்கு நன்றாகத் தங்களை உணர்ந்தனர். அறிந்திராத ஆழத்திலிருந்து ஏதோ ஒன்று அவர்களுக்குள் ஊடுருவியது. இந்த உலகம் அதிக ஹொடாய்களைப் (Hotei) பெறவேண்டும்.

■■

அத்தியாயம் 29

ரின்சாய் (Rinzai):
'ஒரு கை ஓசையைக் கேளுங்கள்'

Rinzai

ஜப்பானில் வாழ்ந்த ரின்சாய் அவர்கள் மிகப்பெரிய சென் (Zen) ஞானியாவார். இவர் போதிதர்மர் பாதையில் நடந்த மறைஞானி. இவர் சொற்கள் இல்லாமல் ஞானத்தைப் பரப்பியவர். சென்மறை ஞானிகள் சொற்கள் பாவியாது ஓவியங்கள், சித்திரம் வரைதல், கண்புருவ அசைவு, செருமல், கொட்டாவி விடுதல், உடல் அதிர்வு, சிரித்தல், நிலைமைகளைக் குழப்புதல் போன்றவைகள் மூலம் விழிப் புணர்வைத் தூண்டித் தங்கள் சக்தியைப் பிறருக்கு மாற்றியவர்கள். ஞானி ரின்சாய் நிலைமைகளைத் திடீரெனக் குழப்புவதன் மூலம் மக்களின் விழிப்புணர்வைத் தூண்டியவர்.

Eisai

Hakuin

ஜப்பானில் ரின்சாய் சென் தத்துவம் (Rinzai Zen Philosophy) மிகவும் பிரபல்யமானது. ரின்சாய் சென் திடீர் ஞானப்பாடசாலையை (The Rinzai Zen school of sudden enlightenment) ஐசாய் (Eisai) என்ற ஞானி ஸ்தாபித்தார். Rinzai சென் மதக் கருத்துக்கள் 18-ஆம் நூற் றாண்டைச் சேர்ந்த ஜப்பானிய சிந்தனையாளர் 'ஹைகூ'வினால் (Hakuin) வலுவடைந்தது. அவர்

ரின்சாய் சென்கோன்களை (Zen Koan) தொகுத்து வெளியிட்டார். அவற்றில் 'ஒரு கை ஓசையைக் கேளுங்கள்' என்பது மிகவும் பிரபல்யமானது.

தன்னை நாடி வரும் சீடர்களுக்கு Rinzai முதலில் கூறுவது 'இரண்டு கைகளைத் தட்டும்போது ஓசை கிளம்புகிறது. ஒரு கையின் ஓசையை செவிமடுத்துக் கேளுங்கள்' என்பார். ஒருநாள் ஒரு சீடர் வந்து அவரிடம் கூறினார் 'தான் ஒரு கை ஓசையைக் கேட்டதாக, அதற்கு Rinzai; "அதுபற்றிக் கூறுங்கள்" என்றார்.

சீடன்: அது இலைகளின் ஊடே காற்றுக் கடந்து செல்கிற மாதிரி இருந்தது.

ரின்சாய் (Rinzai): காற்றும் இலையும் இரண்டு பொருட்கள், அவை ஒன்றல்ல.

பல மாதங்களுக்குப்பின் சீடன் மீண்டும் மறைஞானியைச் சந்தித்தார்.

சீடன்: கூரையின்மீது மழைத்துளி விழும் ஓசை அது என்றார்.

மறைஞானி: அதையும் மறுத்தார்.

பல வருடங்கள் ஆகிவிட்டன. இந்த குறிப்பிட்ட சீடரைக் காணவில்லை. இந்த குறிப்பிட்ட சீடரைக் கண்டுபிடித்து கூட்டிவர தனது மற்றய சீடர்களை மறைஞானி அனுப்பினார். தேடிச் சென்றவர்கள் அந்தக் குறிப்பிட்ட சீடனை அழைத்து வந்தனர்.

ரின்சாய் (Rinzai): இப்போது நீர் அந்த ஓசையைக் கேட்டு விட்டீர்.

சீடன்: நான் "ஒரு கை ஓசையைக் கேட்டுவிட்டேன்'

ரின்சாய் (Rinzai): தலையசைத்தார்

சீடன்: 'அது பிரபஞ்ச ஒலி. அது எவ்வித உராய்வும் இன்றி எழுகின்ற ஒலி. அது பிறப்பிடமற்றது, தோற்றுவிக்கப் படாதது. மனதைக் கடந்து மனமற்ற (No-mind)

வெறுமைக்குள், மனமற்ற நிலையில், தனி ஒரு கையின் அசைவிலிருந்து வரும் ஓசையைக் கேட்டேன். கூர்மையாகக் கேட்டால் அதுபோலவே பிரபஞ்ச ஓசையும்" என்றார்.

இந்த ஒலியை இந்துக்கள் 'ஓம்' எனவும் கிறிஸ்தவர்கள் 'ஆமென்' எனவும் இஸ்லாமியர்கள் 'ஆமீன்' எனவும் அழைக்கின்றனரா? இதுவே உலகத்தின் பொது 'ஒலி'. ஆங்கிலத்தில் எங்கும் நிறைந்தவர் (Omni present), எல்லாம் அறிந்தவர் (Omni scient), எல்லாம் வல்லவர் (Omnipotent) என்று கூறும்போது அதனுள் 'ஓம்' (Omn), 'ஆமென்', 'ஆமீன்' உள்ளடங்கியிருக்கிறது போல் தெரிகிறது.

ரின்சாயின் சுதந்திரம்:

ரின்சாய்: ஞானமடைவதற்கு முன் தன் 'குரு'விடம் தனக்கு விடுதலை தரும்படி கேட்டார்.

குரு: உன்னைக் கொண்டு வா. 'நீ' இருந்தால் உனக்கு விடுதலை தருகிறேன். ஆனால் நீயே இல்லை. நீயே இல்லாதபோது உனக்கு எப்படி நான் விடுதலை தரமுடியும். நீ ஏற்கெனவே சுதந்திரமானவன். உன்னிடமிருந்துதான் சுதந்திரம் கேட்கிறாய். ஆகவே போய் இந்த 'நான்' எங்கே என்று கண்டுபிடி. 'நீ' எங்கே என்று கண்டுபிடி. பின்பு என்னிடம் வா.

ரின்சாய்: சில மாதங்கள் தியானித்துவிட்டு திரும்பி வந்தார். நான் இந்த உடம்பல்ல. இதைத்தான் கண்டுபிடிக்க முடிந்தது.

குரு: அந்தப் பகுதி அளவுதான் சுதந்திரமாகிவிட்டாய். திரும்பிப்போய் மிகுதியைக் கண்டுபிடிக்க முயற்சிசெய்.

ரின்சாய்: மேலும் சில மாதங்களில் மீண்டும் வந்தார் 'நான்' என் மனமல்ல. ஏனெனில் என்னால் எண்ணங்களைப் பார்க்கமுடிந்தது.

குரு: இப்போது சரி பாதிக்கு மேல் விடுதலை பெற்று விட்டாய். போய் 'நீ யார்' என்பதைக் கண்டுபிடி.

ரின்சாய்: ஒருநாள் தன் குருவிடம் ஓடி வந்தார். இப்போது 'நான்' இல்லாமல் போய்விட்டேன். எங்கும் என்னைக் கண்டுபிடிக்க முடியவில்லை. சுதந்திரமடைந்து விட்டேன், நான் ஒரு 'வெற்றிடம்' (Void/Space), 'ஒன்றுமில்லை' (Nothingness), 'வெறுமை' (Emptiness) என்றார்.

(ரின்சாய் ஞானமடைந்தபின் அவர் கேட்ட முதற்கேள்வி 'என் உடம்பு எங்கே?' எனக் கேட்டுத் தன் உடம்பைத் தேடியவர் ஆவார்.)

ரின்சாய் (Rinzai) அவர்களின் வாழ்வில் நிகழ்ந்த சம்பவம் ஒன்று :

ரின்சாய் அவர்கள் தனது குடிசையில் இரவு தூங்கிக்கொண்டிருந்தார். திருடன் ஒருவன் அந்தக் குடிசையினுள் நுழைந்தான். இவனது நடமாடும் சத்தத்தில் துறவி எழுந்தார். திருடனைக் கண்டதும் துறவி "நீங்கள் வந்த நேரத்தில் நான் கண் விழித்ததற்கு என்னை மன்னியுங்கள். நான் இங்கிருந்து வெளியேறுகிறேன். நீங்கள் பதற்றப் படாமல், அவசரப்படாமல் நீங்கள் வந்த நோக்கத்தை நிறைவேற்றுங்கள் எனக் கூறி'' கடகடவெனச் சிரித்தார். திடீரென வெளியே ஓடினார் துறவி. திகைப்படைந்த கள்வன் பின்தொடர்ந்து ஓடினான். கள்வன் ரின்சாயின் கரத்தைப் பிடித்துக் கேட்டான். ''நீங்கள் செய்வது எனக்கு விளங்கவில்லை''. அதற்கு துறவி "என்னை நான் குழப்பிக் கொண்டிருக்கிறேன். உங்களைக் கண்டதும் எனக்குத் தன்னம்பிக்கை பிறந்துவிட்டது, நான் எனக்குச் சோதனை செய்து பார்க்கிறேன்" என்றார்.

திருடன் "வீட்டின் தலைவரான நீங்கள் திருடனைப்போல் ஓடுகின்றீர்கள். என்னைத் திருடனாகக் கருதாமல் என்னுடன் பழகிய முதல் மனிதர் நீங்கள்தான். மற்றவர்கள் இப்படி நடந்துகொண்டிருந்தால் நான் இத்தொழிலை கைவிட்டிருப்பேன். நீங்கள் செய்வது என்ன? எனக்கு ஒன்றும் விளங்கவில்லை" என்றார். ரின்சாய் "நான் கடகடவென்று சிரித்தவுடன் தெளிவானேன். பல ஆண்டுகள் தவமிருந்தும் என்னுள் எதுவும் நிகழவில்லை, சிரித்த அந்த வினாடி சிலவற்றைத் தகர்த்தேன், சிலவற்றை வெளிப்படுத்தினேன்,

நான் என்னிடமிருந்து துண்டிக்கப்பட்டேன், நீதான் எனது ஆசான்" என்று கள்வனிடம் பணிவாகக் கூறினார். கள்வன் இவரின் காலடியில் விழுந்து தன்னைச் சீடனாக ஏற்கும்படி மன்றாடினார். துறவி "நீங்கள் எனக்குக் குருவானவர். நாங்கள் ஒருவரை ஒருவர் ஏற்று இருப்போம்" என்றார்.

மறைஞானி ரின்ஷாய் அவர்கள் நிலைமையைக் குழப்பி, திருடனுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்திவிட்டார்.

■■

அத்தியாயம் 30

தியோஜினிஸ் (Diogenes) : 'மனிதனைத் தேடுகிறேன்'



இவர் ஒரு கிரேக்க நாட்டு தத்துவ மேதையும், ஞானியுமாவார். மாவீரன் அலெக்சாண்டர், தத்துவ மேதை பிளேட்டோ, தத்துவ மேதை அரிஸ்ரோட்டில், வாழ்ந்த காலத்தில் வாழ்ந்தவர். அரிஸ்ரோட்டிலின் கருத்துக்களுடனும், பிளேட்டோவின் கருத்துக்களுடனும் முரண்பட்டவர். மாவீரன் அலெக்சாண்டரைப் பொது இடத்திலும் பொது மக்கள் மத்தியிலும் அவமானப்படுத்தியவர். அதன் ஊடாக அலெக்சாண்டரின் அகம்பாவத்தை அவருக்கு உணர்த்தியவர். அவர் அதைத் தனது இறுதிக் காலத்தில்தான் உணர்ந்தார்.



தியோஜினிஸ் தன் வாழ்நாளில் பெரும்பகுதி நிர்வாணமாகத்தான் வாழ்ந்தார். மனிதன் நிர்வாணமாகத் தான் பிறந்தான் என்பார். மனிதன் தன்னை ஆடைகளால் மறைத்துக் கொள்வதால் மனம் பலவீனமான ஆளாகிவிட்டான் என்று அவர் கூறுவது வழக்கம்.

இன்று வீட்டு வளர்ப்புப் பிராணிகளான நாய்கள், பூனைகளுக்கு ஆடைகள் அணிவிக்கப்படுகிறது. விருந்து பசாரங்கள் இடம்பெறும் மண்டபங்களில் நாற்காலிகளின் கால்களை நிர்வாணமாகப் பார்ப்பது நாகரிகமாகாது

என்பதனால் அவைகள் துணிகளால் மறைக்கப்படுகின்றன போலும். நிர்வாண நடனம் இடம்பெறும் அரங்குகளில் மேசைகளைக்கூட ஆடைகள் அணிந்து மேசை கௌரவ மாக்கப்படுகிறது. ஆனால் தியோஜினிஸ் நிர்வாணமாகவே வாழ்ந்தார். கிரேக்க நாட்டில் கருங்கடல் பிரதேசத்தில் உள்ள சினோப் (Sinope) நகரில் 412 BCEயில் பிறந்து 323 BCE யில் கொறிந்த் (Corinth) நகரில் இறந்தார். மரணத்தைத் தன் கட்டுப்பாட்டில் வைத்திருந்து 90 வயதில் தான் விரும்பிய பொழுது தனது உடலை இறக்கச் செய்தார்.

தியோஜினிஸ் தனது உடலை நகருக்கு வெளியில் மிருகங்கள் வாழும் இடத்தில் வீசும்படி கேட்டுக்கொண்டார். மிருகங்கள் தன் உடலை உணவாக உட்கொள்ளும் என்றார். அங்குக் கூடியிருந்தவர்கள் மிருகங்களுக்குப் பயப்படவில்லையா எனக் கிண்டலாகக் கேட்டனர். தியோஜினிஸ் "நீங்கள் தடி தந்தால் மிருகங்களை விரட்டிக் கொண்டிருக்கலாம்" என நகைச்சுவையாக கூறினார். "நீ தானே இறந்துவிட்டாய்" என்றனர் மேலும் கிண்டலாக. என் உடல் இறந்து விட்டதென்றால் நீங்கள் எப்படி எனக்குத் தடி தர முடியும் என நகைச்சுவையாக தன்னுணர்வுடன் பேசியபடி இறந்தார். உலகிலே நகைச்சுவையாகப் பேசியபடி இறந்த முதல் மனிதர் இவராகத்தான் இருக்கமுடியும். வாழ்நாள் பூராவும் அறிவியலை நகைச்சுவையுடன் கலந்து ஆழமான கருத்துடன் கொடுத்தவர். இவர் இறந்த கொறிந்த் நகரில் இவருக்கு ஞாபகார்த்த தூண் எழுப்பப்பட்டுள்ளது. அந்தத் தூணின் மேல் நாயின் உருவச்சிலை ஒன்று வைத்துள்ளார்கள். மனிதர்களை விட நாய்கள் மேலானவை என்று காலம் பூராவும் கூறி நாய்களுடன் உலாவியதால் இதன் அடையாளமாக நாயின் உருவச்சிலை வைக்கப்பட்டு இருக்கலாம்

இவரது தத்துவ இயலை குற்றம் காணும் தத்துவம், கிண்டல் செய்யும் தத்துவம், (cynic philosophy) எனக் கூறினர். சமூகம் இவரை அவமதித்தது, கேலி செய்தது, நாய் விசரன் எனவும் அழைத்தது. சம்பிரதாயம், பாரம்பரியம், கலாச்சாரம், நடைமுறைகள், பழக்கங்கள், விதிமுறைகள், சட்டதிட்டங்கள் எதையும் ஏற்காது அவைகளைக் கடுமையாக விமர்சித்தார். அவைகளை மீறியே வாழ்நாள் முழுக்க வாழ்ந்தார். மனிதர்கள்

இயல்பாகவும், இலகுவாகவும் வாழ்வதற்குச் சட்டங்கள், விதிகள், சம்பிரதாயங்கள் தடைகளாக உள்ளன என்றார். பிறர் தனக்கு அங்கீகாரம் வழங்கத் தேவையில்லை எனவும் தனக்குத்தான் அங்கீகாரம் கொடுப்பதாகவும், தன்னைத்தான் ஏற்றுக்கொள்வதாகவும், பிறர் தன்னை ஏற்கத் தேவையில்லை என்றே இறுதிவரை வாழ்ந்தார்.



சோக்கிரட்டிசின் மாணவர்களில் ஒருவரான அந்ரிஸ்தீன்ஸ் இடம் (Antisthenes) இவர் தன்னை மாணவனாக ஏற்றுக் கொள்ளும்படி கேட்டார். அவர் மறுத்து தடியால் அடித்துத் துரத்தினார். "அடிப்பதற்கு இனிமேல் தடியே இல்லை என்னுமளவிற்கு என்னை அடியுங்கள். எனக்கு கற்பிப்பதற்கு உங்களிடம் ஞானம் இருக்கிறது. என்னை மாணவனாக ஏற்றுக்கொள்ளுங்கள்" என்றார். அவர் மாணவனாக ஏற்றுக்கொள்ளப்பட்டார். இவர் அடி உதை பெற்றும் தொடர்ந்தும் மாணவனாக இருந்தார். காலப்போக்கில் தனது குருவை விட அறிவியல் மேதையாகவும், பெரும் ஞானியாகவும் விளங்கினார். அந்ரிஸ்தீன்ஸ் தான் சோக்கிரட்டிஸின் உண்மையான மாணவன் என்பது இவரது கருத்து. பிளேட்டோவிடம் கேட்டனர் தியோஜினிசைப்பற்றி என்ன கூறுகிறீர்கள்? அதற்கு அவர் "சோக்கிரட்டிஸ் இருந்திருந்தால் அவரை விசர் ஆக்கியிருப்பார்" என்றார்.

தியோஜினிஸ் இறகில்லாத பறவையுடன்

பிளேட்டோவிடம் விவாதித்தார். பிளேட்டோவின் தத்துவங்கள் கோட்பாடுகளை தியோஜினிஸ் நிராகரித்தார். ஒருமுறை பிளேட்டோ தனது மாணவர்களுக்கு மனிதனைப் பற்றிக் கூறும்போது மனிதன் ஒரு இறகில்லாத பறவை என்றார்.

தியோஜினிஸ் ஒரு இறகில்லாத பறவையை பிளேட்டோவிடம் காண்பித்து இங்கே பார், இதுதான் உனது மனிதன் என்றார். பிளேட்டோ தனது அக்கருத்தில் பின்பு சிறிது மாற்றம் செய்தார். அறிவியலுடன் நகைச்சுவையைக் கலந்து கிண்டல் செய்வது தியோஜினிசின் பாணியாகும்.



இவரது தந்தை ஒரு வங்கி அதிகாரி. இளமைப் பருவத்தில் தியோஜினிஸ் வங்கியில் பணியாற்றினார். தந்தை நாணயம் வெளியிடு வதற்குப் பொறுப்காக இருந் தார். நாணயத்தில் தந்தை யின் பெயரான ஹைசிசியா (Hicesia) பொறிக்கப்பட் டிருக்கும். இவரும் தந்தைக்கு உதவியாக இருந்தார். ஒரு நாள் அந்த நாணயங்களை உருமாற்றம் செய்து நாணயங்களை செல்லுபடியாகாது செய்துவிட்டார். காசு, பணம், சொத்து, சொத்துரிமை, உரிமம் என்று எதுவும் இருக்கக்கூடாது என விவாதித்தார். இவர் வாழ்ந்துகொண்டிருந்த சினோப் நகரிலிருந்து தண்டனையாகக் கொறிந்த் நகருக்கு நாடு கடத்தப்பட்டார். அங்கு கடற்கரையிலும், மரங்களுக்குக் கீழும், தெரு ஓரத்திலும் வாழ்ந்தார்.

ஒரு நாள் எலியொன்று சந்து பொந்தெல்லாம் இலகுவாக அஞ்சாமல் வாழ்வதைப் பார்த்தார். எலி தனக்குக் கற்பித்தது சுதந்திரம் என்றார். தெருவோரத்திலோ, கோயில் முன்றிலிலோ கிடக்கும் குழாய்கள், தொட்டிகளுக்குள் குளிர்காலத்தில் உறங்குவார்.

ஒரு நாள் ஏழைச் சிறுவன் ஒருவன் தெரு ஓரத்தில் உள்ள தண்ணீர்க் குழாயில் தனது இரு கைகளையும் குவித்துத் தண்ணீர் பருகுவதைப் பார்த்ததும் தனது உணவுக் கோப்பையை உடைத்து எறிந்தார். அன்றிலிருந்து தனது இரு கைகளையும் கோப்பையாகப் பாவித்தார். பொருள் உடைமை, சொத்துடைமைகளுக்கு எதிராகக் குரல் கொடுத்தார். ஆட்சியாளர்களுடன் வாதிட்டார். இவர் அரசுக்கும்,

ஆட்சிக்கும், அதிகாரிகளுக்கும் அஞ்சாதவர். இவர் துணிச்சல் மிக்கவர், பயம் அறியாதவர். யாருக்கும் தலை வணங்காதவர். இவருக்கு அரசனும், ஆண்டியும ஒன்றேதான்.



கொறிந்த் நகரில் ஒரு நாள் காலை மனித எலும்புக் குவியலைப் பார்த்தபடி சூரியஒளியில் உட்கார்ந்து இருந்தார். அந்த வழியாக வந்த அரசன் மாவீரன் அலெக்சாண்டர் "உங்களுக்கு நான் என்ன உதவி செய்ய வேண்டும் என்று சொல்லுங்கள். அதை உடனே நிறைவேற்றுகிறேன்'' என்றார். அதற்கு தியோஜினிஸ் "நீ என் சூரிய ஒளியைவிட்டுப் போ" என்றார். அலெக்சாண்டர் கேட்டார் ''எலும்புக்குவியலில் எதைத் தேடுகிறீர்கள்" என்றார். 'உன்' தந்தையின் எலும்பைத் தேடுகிறேன். அடிமையின் எலும்பு எது உன் தந்தையின் எலும்பு எது என்று வித்தியாசம் கண்டுபிடிக்கமுடியவில்லை" என்றார் தியோஜினிஸ். பொது மக்கள் மத்தியில் அலெக்சாண்டரை ஏளனம் செய்தார். மெய்க்காப்பாளர்கள், போர்வீரர்கள் ஆத்திரம் கொண்டனர். தியோஜினிசைக் கைது செய்ய எத்தனித்தனர். அலெக்சாண்டர் தடுத்தார். தியோஜினிஸ் எதையும் கவனத்தில் கொள்ளவில்லை. எதைப்பற்றியும் அக்கறையும் கொள்ளவில்லை. அலெக்சாண்டர் இரதத்தில் புறப்பட்டுச் சென்றுவிட்டார்.

இவரது வாழ்க்கையில் நிகழ்ந்த சம்பவம் ஒன்று:

கொறிந்த் நகரில் ஒரு நாள் தியோஜினிஸ் சன நடமாட்டம் குறைந்த வழியில் போய்க்கொண்டிருந்தார். பார்ப்போரைக் கவரும் வசீகரத் தோற்றம், ஊடுருவும் காந்தக் கண்கள், மிடுக்கான பார்வை. கம்பீரமான வீரநடை, வலிமை மிக்க உடல் அனைத்தும் கொண்டவர் இவர். இவரது பேச்சு சிங்கம் கர்ச்சிப்பது போல் இருக்கும். இவர் சுதந்திரமாக இயற்கையை இரசித்து நடந்து சென்று கொண்டிருந்தார்.

மனிதர்களைப் பிடித்து அடிமையாக விற்கும் வியாபாரிகள் நான்கு பேர் இவரைப் பார்த்துவிட்டனர். இவரது ஆஜானுபாகுவான தோற்றத்தைப் பார்த்ததும் சற்றுத் தயங்கினாலும் சுற்றி வளைத்துப் பிடித்துவிட்டனர். இவரைப் பிடிப்பதற்கு நாலா பக்கத்திலும் சுற்றி வளைத்தபோது தியோஜினிஸ் நடந்துகொண்ட விதம் அவர்களுக்கு வினோதமாக இருந்தது. முகத்தில் கொஞ்சம் கூடக் கலக்கமோ, அச்சமோ இல்லாமல் அமைதியாக, ஆனால் கம்பீரமாக நின்றார். இவர்கள் மரங்களுக்குப் பின்னால் பதுங்குவதை அவதானித்துவிட்டார். என்னைப் பிடித்துக் கொண்டுபோய் விற்கப்போகிறீர்களா? என்று கேட்டுவிட்டு சிங்கம் கர்ச்சிப்பது போலச் சிரித்தார். உங்களது வறுமையைப் போக்க என்னால் முடியுமென்றால் அது மிகவும் பயன் உள்ளது. நீங்கள் என்னை மறித்துப் பிடிக்க வியூகம் அமைத்தது வீண். என்னிடம் சொல்லியிருந்தால் சம்மதம் தந்திருப்பேன். கொண்டுவந்த கைவிலங்குகளை எடுங்கள் என்றார். மறைத்து வைத்திருந்த இரும்புச் சங்கிலியை எடுத்தனர். இவரது பேச்சு எஜமானின் பேச்சாக இருந்தது. அவர்கள் அடிமை போல நின்றுகொண்டிருந்தனர். இந்த ஆள் பைத்தியம் போல் இருக்கிறார். இவரால் ஆபத்து வந்துவிடுமோ என்று பயந்தார்கள். தயக்கத்துடன் இவரைச் சங்கிலியால் பிணைத்து கூட்டிச் சென்றனர். "உன் நடைமுறைகள் எங்களை திகைப்படையச் செய்கின்றன எனத் தயக்கத்துடன் கூறினர். **தியோஜினிஸ் "நான் சுதந்திரத்தின் இரகசியத்தைக் கற்றுக்கொண்டுவிட்டேன், நான் எனக்கு மட்டும் அடிமை, எனவே என்னை வேறு யாராலும் அடிமையாக்க முடியாது, என் சுதந்திரத்தை யாராலும் பறிக்க முடியாது" என்றார்.**

இவர் கம்பீரமாக முன்னால் நடந்து செல்ல அந்த அடிமை வியாபாரிகள் சங்கிலிகளைத் தூக்கிக்கொண்டு பின்னால் நடந்து சென்றனர். இந்த வியாபாரிகளை திரும்பிப் பார்த்துக் கேட்டார்: "ஏன் எனக்குப் பின்னால் நீங்கள் அடிமைபோலச் சங்கிலியைத் தூக்கிக்கொண்டு வருகிறீர்கள். நான் உங்களை அடிமைப்படுத்தவில்லையே!. என்னைப் போன்று சுதந்திர மனிதர்களாக முன்னுக்கு வாருங்கள். சங்கிலியை வீசிவிட்டு என்னுடன் சேர்ந்து சுதந்திர

மனிதர்களாக நடந்து வாருங்கள். நான் ஓடிப்போக மாட்டேன். நீங்கள் தப்பி ஓடாமல் இருந்தால் சரி. நான் விற்கப்படப் போகின்றேன் என்பதை நினைக்க எனக்குச் சந்தோஷமாக இருக்கிறது. நான் ஏலத்தில் விடப்படப் போகின்றேன். இது எனக்கு மகிழ்ச்சியைத் தருகிறது. நான் ஒரு உயர் பீடத்தில் எஜமான் போல உயர்ந்து நிற்க என்னை விலைபேசி வாங்குபவர்கள் அடிமைபோல் உயர் பீடத்திற்குக் கீழ் நிற்கப்போகிறார்கள்'' என்றார். இதைக் கேட்டதும் அடிமை வியாபாரிகள் இவரைச் சங்கிலியால் பிணைத்து கொண்டு செல்வதில் அர்த்தம் இல்லை எனத் தங்களுக்குள் பேசி, சங்கிலியைக் கழற்றிவிட்டார்கள், இந்தச் சூழலிலும் கூட சுதந்திரமான மனிதராகத்தான் இருந்தார். தனது பொறுப்பைத் தானே முழுமையாக ஏற்றுக்கொண்டார். வியாபாரப்பொருள் போன்று ஏலத்தில் விற்கப்படுகின்ற ஒரு மனிதனுக்கு நிகழ்கின்ற அந்த அசிங்கமான நேரத்திலும் கூட, அடிமையாக விற்கப்படப் போகின்ற அந்தச் சூழ்நிலையிலும் கூட அவர் சுதந்திர மனிதராக இருந்தார்.

இவர் மிடுக்காக நடந்து சென்றுகொண்டிருந்தார். தெருக்களில் போய் வருவோர் இவர்களைப் பார்த்தனர். தியோஜினிசின் ஆளுமைக் கவர்ச்சியும் அப்படிப்பட்டதுதான். வேடிக்கை பார்க்கும் மக்களைப் பார்த்துக் கூறினார் ''என்னுடன் நடந்து வரும் இவர்கள் அடிமைகள். இவர்களைச் சங்கிலியால் பிணைக்கத் தேவையில்லை. இவர்கள் என்னை விட்டு ஓடிவிட மாட்டார்கள். எனக்குக் கட்டுப்பட்டவர்கள்'' எனக் கூறி இவரை அடிமையாக விற்கப்போகும் வியாபாரிகளைச் சுட்டிக்காட்டினார். இதைக் கேட்டவர்கள் இடிந்துபோனார்கள். இறுதியில் மனிதர்களை அடிமையாக விற்கும் கிறேட் (Crate) நகரச் சந்தையை அடைந்தனர். அங்கே அடிமை வியாபாரிகளின் தலைவர் இருந்தார். இந்த அடிமையை நல்ல விலைக்குக் கூடிய சீக்கிரமே விற்றுவிடலாம் என்று வியாபாரிகள் கூறினார்கள். ஏலம்போடும் மேடை மீது ஏறி ஒரு அரசனைப்போல் கம்பீரமாக நின்றார்.

வியாபாரிகளின் தலைவர் உரக்கக் கூறினான். "இங்கே ஒரு பெரிய அடிமை விற்கப்படுவதற்கு வந்திருக்கிறார். பணம் உள்ளவர்கள் உடனே ஏலம் கூறலாம். இது பொது அறிவிப்பு"

என்றான். உடனே தியோஜினிஸ் அந்தத் தலைவரைப் பார்த்துக் கத்தினார். "ஒரு எஜமானை எப்படி விற்பது என்பது உனக்குத் தெரியவில்லை." பின்பு கூட்டத்தினரைப் பார்த்து "இங்கே ஒரு எஜமானர் விலைக்கு வந்திருக்கிறேன். என்னை வாங்கும் சக்தியுள்ளவர்கள் ஏலம் கோரலாம். ஒரு அடிமைக்கு விற்பதற்காக இங்கே ஒரு எஜமான் நிற்கிறேன். ஏனெனில் என்னுடன் வந்த நால்வருக்கும் பணம் தேவைப்படுகிறது. எனவே ஏலத்தை ஆரம்பியுங்கள். நீங்கள் வாங்கப்போவது ஒரு எஜமானை, ஒரு அடிமையை அல்ல என்பதை நினைவில் கொள்ளுங்கள்" என்றார்.

ஏலம் ஏறிக்கொண்டே போனது. இறுதியில் அதிக விலைக்கு விற்கப்பட்டார். செனியாட்ஸ் (zeniades) என்பவர் அதிக விலை கொடுத்து இவரை வாங்கினார். இவர் ஒரு செல்வந்தர். இவரைப் பிடித்த அடிமைகளுக்கு இவரை விற்பனை செய்ததன் மூலம் பெரும் தொகைப்பணம் கிடைத்தது. தியோஜினிஸ் அந்த வியாபாரிகளைப் பார்த்து கூறினார். "உங்கள் வறுமை நீங்க நான் உங்களுக்கு உதவி செய்துவிட்டேன். எவ்வித குற்ற உணர்வும் இல்லாமல் நீங்கள் போகலாம். என்னை வாங்கிய இந்த அடிமையோடு நான் செல்கிறேன்."

இவரை வாங்கிய செல்வந்தர் தியோஜினிஸிடம் "உனக்குப் பைத்தியமா? உன்னை நீ ஒரு எஜமானாக நினைக்கிறாய். நான் ஒரு செல்வந்தன்" என்றார். தியோஜினிஸ் "அடிமை வியாபார சந்தைக்கு வரும் நீயும் ஒரு அடிமைதான். நீ அடிமை இல்லாவிட்டால் இங்கு ஏன் வருகிறாய்?" என்றார். செல்வந்தர் "உன் வேலை என்ன?" என்று கேட்டார். "நான் மனிதர்களை நிர்வகிப்பவன் (Govern Men)" என்றார் தியோஜினிஸ். செல்வந்தர் அதிர்ச்சியடைந்தார். இவருடன் ஒப்பிடும்போது தான் ஒன்றுமில்லை. இவர் எந்தச் சூழலிலும் மகிழ்ச்சியானவர். இவரது ஆளுமை இவரது வசீகரம், எந்தச் சூழலிலும் பயப்படாத இவரது துணிச்சல், கலங்காத மனோதிடம், எல்லாவற்றிற்குமான பொறுப்பெடுத்தல், அடிமை என்ற எண்ணமில்லாத மனம், நிமிடத்துக்கு நிமிடம் வாழும் விடுதலை உணர்வுள்ள முழுமையான மனிதர் இவர். இவர் ஆடையில்லாத நிர்வாண மனிதராக இருந்தாலும் இவர்

முன்னிலையில் தான் வெறுமையானவர் என நினைத்திருக்க வேண்டும். இவரை உடனே விடுதலை செய்தார்.

தியோஜினிஸ் "நான் அடிமையாகக்கூடிய ஆள் இல்லை. அந்த அடிமை வியாபாரிகள் என்னைக் கொண்டு வரவில்லை. நானாகத்தான் வந்தேன்" என்றார். இவர் சுதந்திர மனிதராகப் போய்க்கொண்டிருந்தார். இந்தச் செல்வந்தரது இரு புதல்வர்கள் காலப்போக்கில் தியோஜினிசினது மாணவர்களாக மாறிவிட்டார்கள்.

ஒரு சுதந்திர மனிதனைச் சிறையில் அடைத்தாலும் தன்னைக் கைதியாகப் பார்க்கமாட்டான். அடிமைச் சூழலிலும் தன்னை அடிமையாகப் பார்க்கமாட்டான். சுதந்திர மனிதன் என்றும் சுதந்திர மனிதன் தான். மற்றவர்களை அடக்கி ஆள்கின்ற ஆள் உண்மையில் பலவீனமான ஆளாகத்தான் இருக்கமுடியும். பயந்தவன்தான் மற்றவனைப் பயமுறுத்தி அடக்கி ஆள நினைப்பான். அது தன் சொந்தப் பயத்தை சரிக்கட்டுவதற்காகத்தான். அஞ்சாத மனிதன் எவரையும் அடிமைப்படுத்தமாட்டான். மற்றவர்களின் மரணத்திலும் மகிழ்ச்சி அடையமாட்டான். தன்னுடைய சுதந்திரம்போலவே மற்றவர் சுதந்திரத்தையும் மதிப்பவன் அவன். தனது உயிரைப்போலவே பிறர் உயிரையும் மதிப்பான். பயந்தவன்தான் மற்றவரை அடக்கி ஆளாவிட்டால் தன்னை அடக்கிவிடுவாரோ என்று எப்பொழுதும் பயந்துகொண்டே இருப்பான். அதனால்தான் மார்க்கியவல்லி 'இளவரசன்' (The Prince) என்ற நூலில் 'தாக்குவதே சிறந்த தற்காப்பு' எனக் குறிப்பிடுகிறார். நிக்கோலோ மார்க்கியவல்லி (Nicolo Markiavalli) இத்தாலி நாட்டைச் சேர்ந்தவர். பிறந்தது: 03.05.1469, இறந்தது: 21.06.1527. The Prince என்ற நூலில் அரசியல், நிர்வாகம், இராணுவம், சமூகம் ஆகிய விடயங்கள் பற்றி எழுதியுள்ளார்.

இந்தச் சுதந்திர மனிதர் தியோஜினிஸ் நாளடைவில் எதென்ஸ் நகரை அடைந்தார். கலாச்சாரம், சட்டம், விதிமுறைகள், மரபுகள், சம்பிரதாயங்கள், கோட்பாடுகள் அனைத்தையும் எதிர்த்தார். இவர் அவைகளை மீறினார். மக்களின் இயல்பு வாழ்விற்கும் இயற்கையான வாழ்வுக்கும் அவை தடைகளாக உள்ளன என்றார். மக்கள் தங்கள்

போக்கில் இயல்பாகவும் இயற்கையாகவும் வாழவேண்டும். அத்தகைய வாழ்வு அறிவையும் ஞானத்தையும் கொடுக்கும். இல்லையேல் மக்கள் நடைபிணமாக மாறிவிடுவார்கள் என்பதை தனது இறுதி மூச்சுவரை கூறியவர்.

தனது கையில் லாம்பு (Lamp) கொண்டு திரிந்தார். அது 24 மணிநேரமும் எரிந்துகொண்டே இருக்கும். தெருவில் போய் வருவோர் முகங்களில் அந்த லாம்பைப் பிடித்துப் பார்ப்பார். என்ன செய்கிறீர்கள் என்று கேட்டார் "மனிதனைத் தேடுகிறேன்" என்பார். இவர் இறக்கும் போது இவரது லாம்பு இவருக்கு அருகாமையில் எரிந்தபடி இருந்தது. தியோஜினிஸ் "நீங்கள் மனிதர்களைக் கண்டு பிடித்து விட்டீர்களா?" என்று கேட்டவர்களுக்கு அவர் "இறைவனுக்கு நன்றி, எனது விளக்கைப் பாதுகாத்து விட்டேன்" என்றாராம். இவரைப் பார்ப்பவர்களுக்கு லாம்பை பிறர் முகத்திற்கு நேராகப் பிடிப்பது போல் தெரியும். ஆனால், அவர் லாம்பைத் தன் முகத்துக்கு அருகில் பிடித்துத் தன் கண்களைத்தான் பிறருக்குக் காட்டினார். தன் கண்கள் ஊடாகத் தனது சக்தியைப் பிறருக்கு மாற்றினார். இவரது கண்களை உற்று நோக்கியவர்களுக்குள் 'உள் மாற்றம்' நிகழ்ந்ததை உணர்ந்தனர். அவர்கள் மாறிய மனிதர்களாக வாழ்ந்தனர்.

இவர் போகுமிடமெல்லாம் நாய்கள் இவருடன் சேர்ந்துகொள்ளும். மனிதர்கள் பொய், போலி, பாசாங்கு, நடிப்பு, கள்ளம், கபடம், நயவஞ்சகம், நம்பிக்கைத் துரோகம், பேராசை, செயற்கைத்தன்மை, சூது, வாது, ஏமாற்று, சதி நிரம்பியவர்கள் என்பார். நாய்கள் உண்மையானவை. நிபந்தனைகளும், மரபுகளும் விதிமுறைகளும், சம்பிரதாயங்களும் இல்லாதவை. நாய் நிகழ்காலத்தில் வாழ்கிறது. கணத்துக்குக்கணம் அந்தக் கணப்பொழுதில் வாழ்ந்து கொள்கிறது. ஆனால் மனிதன் இறந்தகால எண்ணங்களும்

எதிர்காலப் பேராசைகளுடனும் இருப்பதால் கணத்துக்குக் கணம் அந்தக் கணப்பொழுதில் வாழ்வதில்லை. நாய்க்கு நண்பன் யார் பகைவன் யார் என்பதும் தெரியும். மனிதனைப்போல் நாய் யாரையும் ஏமாற்றாது. நாய் 'உண்மையின் மீது' குரைக்கும். அந்தக் குரைப்பு உண்மையானது. கள்ளம் கபடம் அற்றது என்று கூறுவாராம்.

மனிதர்கள் தங்களுக்குள்ள அத்தனை வாய்ப்புக் களையும் பிரச்சினை ஆக்குகிறார்கள். மனிதன் ஏற்படுத்திக் கொள்ளும் அத்தனை 'தளை'களும் (குடும்பத்தளை, மொழித்தளை, இனத்தளை, சமூகத்தளை, மதத்தளை, நாட்டுத்தளை...) மனிதனின் சுதந்திரத்தை, ஆனந்தத்தை, ஞானத்தை அபகரிக்கின்றன. மனிதன் எப்படி வாழவேண்டும் என்று சட்டமும் அரசும் சொல்லக்கூடாது என்று வாழ்நாள் பூராவும் ஊர் ஊராகச் சென்று பிரச்சாரம் செய்த தனிப்புரட்சியாளர். 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்று வாழ்ந்தவர் இவர். உங்களது ஊர் எது எனக் கேட்டால் தான் ஒரு உலகப்பிரஜை (Citizen of the world) என்பதே இவரது பதிலாக இருந்தது. மக்கள் இவரைப் புரிந்துகொள்ளவில்லை. எளிதில் புரிந்துகொள்ளமுடியாத மனிதராகவே வாழ்ந்தார். 'பயித்தியக்காரன், நாய் விசரன், லாம்பு விசரன்' என்றால் அது யாரைக் குறிக்கும் என்பதை மக்கள் அறிந்து வைத்திருந்த அளவுக்கு இவரது பெயர் 'தியோஜினிஸ்' என்பதை அறிந்து வைத்திருக்கவில்லை.

தான் எதைச் சொல்கிறாரோ அதன்படி வாழ்ந்தவர்.

தான் எதை ஏற்கவில்லையோ அதை ஏற்றுக் கொள்ளாமலே வாழ்ந்தவர்.

தனக்குச் சரி எனத் தோன்றியதைத் துணிந்து கூறியவர்.

சொல்லுக்கும், செயலுக்கும், வாழ்தலுக்கும் வித்தியாசம் இல்லாது வாழ்ந்தவர்.

சமுதாயம் கூறும் கலாச்சாரம், ஒழுக்கம், சம்பிரதாயம், மனிதர்களுக்கு எதிராக இருக்கின்றன. அவைகளுக்காக மனிதர்கள் இல்லை என்று எதென்ஸ் நகரில் உள்ள பொது இடமான சந்தை மைதான (Market Place) முன்றிலில் கூறினார். இந்த இடத்தில்தான் பொது விவாதங்கள்



இடம்பெறும். யாரும் தங்கள் கருத்துக்களைக் கூறலாம். தாங்கள் அறிந்த செய்திகளைத் தெரிவிப்பதற்கும் அறிவியலைப் பரப்புவதற்கும் இந்தச் சந்தை மைதானமே விவாத அரங்காக இருந்தது. அங்குப் பிற நாடுகளிலிருந்;து செல்வோரும் அந்த மைதானத்தில்தான் தாங்கள் அறிந்த உண்மைகளை உரைப்பார்கள். அங்கு சோக்கிறட்டிஸ், பிளேட்டோ, அரிஸ்ரோட்டல் போன்றோர் பிரபல்யமான வர்கள். இந்த மைதானத்திலே பிளேட்டோவுடனும், அரிஸ்ரோட்டல் உடனும் தியோஜினிஸ் பல தடவை எதிர்வாதம்புரிந்தார். அவர்களது பல கருத்துக்களுடனும் கோட்பாடுகளுடனும் முரண்பட்டார். இவரது கருத்துக்களைக் குதர்க்க தத்துவம் (Cynic Philosophy) என்றே பலரும் அழைத்தனர். மனிதனைக் குழப்புவதற்கு ஒரு நடுவிரல் போதுமானது. ஒரு நடுவிரலைத் தூக்கிக் காட்டினால் சமுதாயமே விசராகிறது. ஒரு சமுதாயத்தை விசராக்க ஒரு நடுவிரலே பேதுமானதாக இருக்கிறதே! அந்த விரல்தான் குழப்பத்துக்குக் காரணம் ஆகிறதே! சமுதாயம் இப்படித் தேவையற்றவைகளை 'ஒழுக்கம்' என்று கூறுகிறதே என்று கூறிக் கிண்டல் செய்வார்.

இவர் இறுதிவரை யாருடனும் ஒத்துப்போகவில்லை. இவர் தனக்கென்று சீடர்களை உருவாக்கவில்லை. இவரது விவாதங்கள் இவரது கருத்துக்கள் அடுத்த தலைமுறைக்குக் கொண்டு செல்லப்படவில்லை. இவருடன் யாரும் பழகவே விரும்பவில்லை.

சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த சந்திப்பொன்று அலெக்சாண்டருக்கும் - தியோஜினிசுக்கும் இடையில் நிகழ்ந்தது. இந்தச் சந்திப்பு சீனப் பேரரசன் "வூ" வுக்கும் போதிதர்ம ருக்கும் இடையில் நடந்த சந்திப்பை நினைவூட்டுகிறது. பிற்காலத்தில் 'வூ'

அரசனுக்கு நடக்கப்போவதை முற்கூட்டியே உணர்த்தி காப்பாற்ற முனைந்தார் போதிதர்மர். ஆனால் அரசன் 'வூ' வுக்கு போதிதர்மரை விளங்கிக்கொள்ள முடியவில்லை. அதே நிலைதான் மாவீரன் மகா அலெக்சாண்டரது நிலையுமாக இருந்தது. அந்த நிகழ்வை இங்கே கவனியுங்கள்.

அலெக்சாண்டர் இந்தியாவைக் கைப்பற்ற புறப்பட்ட போது தியோஜினிசைக் காணச் சென்றார். இவர் ஒரு மகாஞானி என்பதை அலெக்சாண்டர் உணர்ந்தேயிருந்தார். எதென்ஸ் ஆற்றங்கரையில் நிர்வாணமாகப் படுத்திருந்தார். அவரது நாய் அவருடன் விளையாடிக்கொண்டிருந்தது. இவரது தோற்றத்தைக் கண்ட அலெக்சாண்டர் திகைத்தார். ஆடை எதுவுமின்றி அழகானவராக இருந்தார். அலெக்சாண்டரோ எல்லா அலங்காரங்களையும் ஆபரணங்களையும் அணிந்துகொண்டு அவர் முன்னிலையில் நின்றார்.

''உங்களோடு ஒப்பிடும்போது நான் வெறுமையாக உள்ளேன். உங்களிடமோ எதுவுமே இல்லை. ஆனால் உயர்ந்தவராக இருக்கிறீர்கள். எது உங்களை உயர்வாக்குகிறது?'' என்று கேட்டார் அலெக்சாண்டர். அதற்குத் தியோஜினிஸ் ''எனக்கு எந்த ஆசையும் இல்லை, என்னிடம் எதுவுமில்லை, என்னுடையது என்று எதுவுமே இல்லாமல் இருப்பதே என் பலம். நான் என்னை வென்றுவிட்டதால் உலகை வென்றுவிட்டேன். என்னுடைய வெற்றி என்னோடு வரப்போகிறது. உன்னுடைய வெற்றி நீ இறக்கும்போது உன்னிடமிருந்து பிடுங்கிக்கொள்ளப்படும்'' என்றார்.

தியோஜினிஸ் : எதற்காக என்னைப் பார்க்க வந்தாய்?

அலெக்சாண்டர் : இந்தியா செல்கிறேன்.

தியோஜினிஸ் : எதற்காக?

அலெக்சாண்டர் : இந்தியாவை வெல்லுவதற்காகப் போய்க் கொண்டிருக்கிறேன்.

தியோஜினிஸ் : வென்றபின் என்ன செய்வாய்?

அலெக்சாண்டர் : உலகத்தை வெல்லுவேன்.

தியோஜினிஸ் : உலகத்தை வென்றபின் என்ன செய்வாய்?

அலெக்சாண்டர் : அதற்குப் பின் நிம்மதியாக ஓய்வெடுப்பேன்.

தியோஜினிஸ் : கடகடவெனச் சிரித்தார். தன் நாயைத் தன்அருகே அழைத்தார். நாயைப் பார்த்து 'இவர் சொல்வதைக் கேட்டியா! உலகை வென்றபின் இந்த மனிதர் ஓய்வெடுக்கப் போகிறாராம்! நீயும் நானும் ஒரு சிறு இடத்தைக்கூட வெல்லாமல் ஓய்வெடுத்துக் கொண்டிருக்கிறோம்' என்று நாயிடம் கூறிவிட்டு அலெக்சாண்டரிடம் கூறினார். "ஓய்வுதான் உன்னுடைய கடைசி இலட்சியம் என்றால் இந்த அழகான ஆற்றங்கரையில் என்னுடனும் என் நாயுடனும் இங்கே நீ இப்போதே சேர்ந்து கொள்ளலாமே. இங்கே தேவையான இடம் இருக்கிறது. நான் இங்கே ஓய்வெடுத்துக்கொண்டுதான் இருக்கிறேன். இறுதியில் ஓய்வெடுப்பதற்காக ஏன் உலகம் முழுவதும் துன்பம் துயரங்களை உண்டாக்க வேண்டும்?. இங்கேயே இப்போதே நீ ஓய்வெடுத்துக்கொள்" என்றார்

அலெக்சாண்டர் : வெட்கப்பட்டார். நீங்கள் கூறுவது அறிவுப் பூர்வமாகத்தான் இருக்கிறது. ஆனால் நான் இப்போது ஓய்வெடுக்க முடியாது. உலகத்தை முதலில் வெல்லவேண்டும்.

தியோஜினிஸ் : உலகத்தை வெல்லுவதற்கும் ஓய்வெடுப் பதற்கும் தொடர்பு எதுவும் இல்லை. உலகத்தை வெல்லுவதற்குச் செல்லாமல் இங்கே நான் நிம்மதியாக ஓய்வெடுக்க வில்லையா?

அலெக்சாண்டர் : நீங்கள் சொல்வது நியாயம்தான். ஆனால் நான் இந்தியா நோக்கிப் புறப்பட்டு விட்டேன். பாதியில் நிற்கமாட்டேன்.

தியோஜினஸ் : நீ பாதி தாண்டமாட்டாய்!!

இந்தியாவைக் கைப்பற்ற நடந்த போரில் சாணக்கியரின் போர் வியூகத்தால் அலெக்சாண்டர் தோல்வியடைந்தார். சாணக்கியரின் மதிநுட்பம் அலெக்சாண்டரின் பேராசையை தவிடுபொடியாக்கியது. யானைகளை மையமாக வைத்தே வியூகம் அமைத்தவர் சாணக்கியர். அரசியலில் இன்று 'சாணக்கியம்' என்ற சொல் பிரபல்யமாகிவிட்டது.

யார் இந்த சாணக்கியர்?

இவர் பூர்வீகத்தில் கேரளாவைச் சேர்ந்த அந்தணர். மெலிந்த நலிந்த தோற்றமுடையவர். வட இந்தியாவில் பீகாரை அண்மித்த பகுதியான பாடலிபுரம் போய்ச் சேர்ந்து அரசவையில் இடம்பெற்றார் என்ற வரலாறும் உண்டு.

இவரைப்பற்றிய பிறிதொரு வரலாறு:

வட இந்தியாவில் தட்சசீலத்தைச் சேர்ந்தவர். பல்கலைக் கழகத்தில் பயின்றவர். தனந்தர் என்பவருடைய தந்தை அந்த நாட்டு அரசனையும் வம்சத்தையும் கொலை செய்து அரசியைத் தன் மனைவியாக்கி தானே தனக்கு மகுடம் சூட்டிக்கொண்டாராம். தனந்தருடைய அரசவையில் சாணக்கியர் இடம்பெற்றார். அரச விருந்துபசாரமொன்றில் வேணுமென்றே தனந்தர் (நந்தர்) சாணக்கியரை அவமதித்தார். சாணக்கியர் அரசவையிலிருந்து வெளியேறி தனந்தரை அழிக்க திடசங்கற்பம் பூண்டார் எனப் பிறிதொரு வரலாறு கூறுகிறது.

சாணக்கியர் ஒருநாள் நாடகமொன்று பார்த்துக் கொண்டிருந்தபோது அரச வேடம் பூண்ட ஒரு இளைஞர் இவரைக் கவர்ந்தார். அந்த இளைஞன் மாடு மேய்க்கும் ஆயனால் வளர்க்கப்பட்ட சந்திரகுப்தன் ஆவார். அந்த இளைஞருக்குச் சாணக்கியர் பயிற்சி கொடுத்து தனந்தருடன் போர் தொடுத்தார். ஆனால் தோற்றுப்போயினர். தவறுகளைத் திருத்திப் போர் முறையை மாற்றி மீண்டும் போர் தொடுத்து தனந்தரை வென்று பாடலிபுரத்தைக் கைப்பற்றி சந்திரகுப்தனை அரசன் ஆக்கினார்.

சாணக்கியர் அரசு பொறுப்புக்களிலிருந்து தன்னை விடுவித்து தன் அனுபவங்களைத் திரட்டி அர்த்த சாஸ்திரம் என்ற நூலை எழுதினார். இந்நூலில் போர்முறை, இராஜ தந்திர உத்திகள், சமூக நீதி, இராஜநீதி கூறப்பட்டுள்ளன. இவர் அரச நிர்வாகத்தை உருவாக்கிக் காட்டியவர்.

இவருடைய வாழ்க்கை பற்றிய தகவல்கள் குழப்பமாக உள்ளன. சனகா என்பவரின் மகன் என்பதால் சாணக்கியர் என்று அழைக்கப்பட்டார் என்றும் கூறப்படுகிறது. இவரது இயற்பெயர் விஷ்ணுகுப்தா எனவும் வட இந்தியாவைச் சேர்ந்தவர் எனவும் குடில வம்சத்தைச் சேர்ந்தவரென்பதால் கௌடில்யர் என அழைக்கப்பட்டார் எனவும் கூறப்படுகிறது. இத்தகவல் தவறானது. இவர் தென் இந்தியாவில் கேரளாவைச் சேர்ந்தவர் எனவும் கூறப்படுகிறது. அவரது வாழ்க்கை வரலாறு எப்படியாயிருந்தாலும் அலெக்சாண்டரை எதிர்க்க இந்திய மனங்களில் ஒரு புதிய எழுச்சியை உருவாக்கியவர் சாணக்கியரே.

இந்தியாவிற்கு அலெக்சாண்டர் புறப்படும்போது தத்துவமேதை அரிஸ்ரோட்டில் அவருக்குக் கூறியிருந்தார். இந்தியாவிலிருந்து ஒரு துறவியைக் கூட்டிவாருங்கள். அத்துறவியிடம் சந்நியாசம் என்றால் என்ன? 'ஆன்மா', 'மரணம்', 'மரணத்தின் பின்', கர்மா இவைகளைப் பற்றிய இந்திய கோட்பாட்டையும் அறிய வேண்டும் என்றார். அலெக்சாண்டர் இந்தியாவில் விசாரித்து அறிந்து ஒரு துறவியைச் சந்தித்தார். அவரது பெயர் தந்தமெஸ் (Dantemus). இந்தியப் பெயரை கிரேக்க நாட்டினர் பிழையாகவும் உச்சரிக்கலாம். அதனால் இந்தப் பெயர் சரியா, தவறா என்பதுஃ தெரியவில்லை.

அலெக்சாண்டர் இந்தியத் துறவியினது அருகாமையில் சென்றார். தியோஜினிசின் நினைவு வந்தது. அதே பார்வை, அதே கண்கள், அதே தோற்றம், அதே பேச்சு, ஆடை எதுவுமின்றியிருந்தார்.

அலெக்சாண்டர் : நான் அரசன் அலெக்சாண்டர். என்னுடன் கிரேக்க நாட்டுக்கு வந்துவிடுங்கள். உங்களுக்கு வேண்டிய அனைத்தும் செய்து

தருகிறேன். எனது விருந்தினராக எனது அரண்மனையில் தங்கியிருக்கலாம். என்னுடன் வாருங்கள்.

தந்தமெஸ் : வருவது, போவது எல்லாமும் கழித்து விட்டவன் நான். இனி உலகுக்கு வருவதும் இல்லை உலகத்திலிருந்து போவதும் இல்லை. வருவதையும் போவதையும் கடந்து விட்டவன் நான். அதாவது கருவறையையும் கல்லறையையும் கடந்துவிட்டேன் என்ற பொருள்படக் கூறினார்.

அலெக்சாண்டர் : இது மன்னனின் ஆணை, வந்துவிடுங்கள்.

தந்தமெஸ் : கடகடவெனச் சிரித்தார். யாரும் எனக்கு ஆணையிட முடியாது. மரணம் கூட எனக்கு ஆணையிட முடியாது.

அலெக்சாண்டர் : வாளை எடுத்தான். வாளுக்கு வேலை கொடுக்காமல் வந்துவிடுங்கள்.

தந்தமெஸ் : நீ என்னதான் செய்வேன் என்று கூறுகிறாயோ அதை நான் எனக்கு ஏற்கெனவே செய்துவிட்டேன். என் தலை உருண்டு விழும்போது உன்னோடு சேர்ந்து நானும் வேடிக்கை பார்ப்பேன்.

அலெக்சாண்டர் : எப்படிப் பார்க்க முடியும். நீங்கள் இறந்துவிடுவீர்களே!

தந்தமெஸ் : நான் இனிமேல் இறக்கமுடியாது. என்னுடைய மரணத்தை நீ வேடிக்கை பார்ப்பது போல, நானும் வேடிக்கை பார்ப்பேன். நீயும் பார்ப்பாய், நானும் பார்ப்பேன். இந்த உடலின் பயனும் நிறைவேறிவிடும். உன் ஆசைகளும் முடிந்து விடும். நான் ஏற்கெனவே இறந்துவிட்டேன்.

அலெக்சாண்டர் : திகைப்புற்றார்! வாளை உறையினுள் போட்டார்.

தந்தமெஸ் : அலெக்சாண்டரது கண்களை உற்று நோக்கினார், கண்களை இமைக்காமல் உற்று நோக்கியபடியே இருந்தார். கண்கள் அகன்று விரிந்துகொண்டே போனது. அவரது கண்களை நேருக்கு நேர் சந்திக்கத் தயங்கினார் அலெக்சாண்டர்.

அலெக்சாண்டர் : அவரை வணங்கி மரியாதை செலுத்திவிட்டு பின் நகர்ந்து சென்றார். (ஞானி தந்தமெஸ் தனது கண்ஒளியின் ஊடாக அலெக்சாண்ட ருக்குள் 'உள்' மாற்றம் ஏற்படுத்திவிட்டார்.)

ஒரு சிறு பிரதேசத்தை கைப்பற்றிய அலெக்சான்டர் முழு இந்தியாவையும் தன் ஆசையின்படி கைப்பற்ற முடியாமல் தோல்வியுற்ற நிலையில் கிரேக்கம் திரும்பும்பொழுது தியோஜினிஸையும், தந்தமெஸ்ஸையும் நினைவுகூர்ந்தார். பாதி வழியில் கடும் நோயுற்றார். 'பாதிவழி தாண்ட மாட்டாய்' என்று தியோஜினிஸ் சொன்னது ஞாபகத்துக்கு வந்தது.

தந்தமெஸ்ஸிடமும், தியோஜினிசிடம் மரணத்தைத் தாண்டிய ஒன்று இருந்தது. அவர்கள் மரணத்துக்கு அப்பால் இருப்பதைக் கண்டுகொண்டனர். அவர்களிடமிருப்பது என்னிடம் இல்லை. என்னிடம் ஒன்றுமே இல்லை. அழுதார். தனது சேவகர்களை அழைத்து, தான் இறந்தபின்பு என்னு டைய உடலைக் கல்லறைக்குக் கொண்டு செல்லும் போது தன் கைகளை வெளியே தொங்கப்போட்டு விடுங்கள் என்று ஆணையிட்டார். சேவகர்கள் ஏன் என்று கேட்டனர். 'அலெக்சாண்டர் வெறுங் கையோடு வந்தான், வெறுங்கையோடு போகின்றான் என்பதை மக்கள் தெரிந்து கொள்ள வேண்டும். என் வாழ்க்கை முழுக்க வீணாகிவிட்டது. என் கைகள் எல்லோரும் பார்க்கக்கூடியதாக வெளியே தொங்கட்டும். மாவீரன் அலெக்சாண்டர் எதையும் எடுத்துச் செல்லவில்லை. வெறுங்கையோடுதான் போகிறான் என்பதை உலகு அறியட்டும்' என்றார். அவரது உத்தரவு நிறைவேற்றப் பட்டது.

அலெக்சாண்டருக்கு மரணத்தை நோக்கிய விழிப்பை ஏற்படுத்தியவர் தந்தமெஸ். இவரின் கூற்று ஊடாகவே தன்னை மீளாய்வு செய்துகொண்டார் அலெக்சாண்டர்.

தியோஜினிஸ் கூறியது போல் பாதி தாண்டவே இல்லை. கிரேக்க நாட்டை அடையுமுன் அலெக்சாண்டர் பாதியில்; இறந்துவிட்டார். இவர் இறந்த அதே தினத்தில் தியோஜினிசும் இறந்ததாக வரலாறுகள் கூறுகின்றன. உலகில் எல்லா அலெக்சாண்டர்களும் இறந்தே போகிறார்கள். இதையேதான் புத்தர் கூறுகிறார் "உன்னையே நீ வெல், வேறு எந்த வெற்றியும் உன்னுடையது ஆகாது. இதை உன்னிட மிருந்து எடுத்துக்கொள்ளமுடியாது. எது உன்னிடமிருந்து எடுத்துக்கொள்ள முடியாதோ அதுதான் உன்னுடையது. உன்னிடமிருந்து எடுத்துக்கொள்ளக்கூடியது எதுவும் உன்னுடையதாகாது."

தன்னையே வென்றெடுத்தவருக்கு எங்கள் தலையை தாழ்த்தும்போது எங்களுக்குள் ஏதோ ஒன்று ஊடுருவி விடுகிறது. இது கோயில்களில், ஆலயங்களில், பள்ளி வாசல்களில், குருத்துவாராவில், பன்சாலைகளில், சினோகோஜ்ஜில், எங்கும் சாத்தியமில்லை. இதை அடைவதற்கு எந்தக் குறுக்கு வழியும் இல்லை.

தியோஜினிஸ் தனக்கென்று சீடர்களை உருவாக்க வில்லை. தனது அடையாளமாக எந்த அடையாளங்களையும் விட்டுச் செல்லவில்லை. சோக்கிரட்டீஸ், பிளேட்டோ, அரிஸ்ரோட்டில் போன்றோர்களினது கருத்துக்கள் அவர்களது சீடர்களின் வாய்வழி மூலம் பரவி நூல்களாக வெளி வந்துள்ளன. தியோஜினிஸ் வழிப்போக்கன் போல வாழ்ந்து இறந்தார். தியோஜினிஸின் கருத்துக்களை ஏற்காமல் அவைகளைக் குதர்க்க விவாத தத்துவங்கள் என்று கூறி ஏளனத்துக்கு உள்ளாக்கிவிட்டனர். சோக்கிரட்டிஸ், தியோஜினிஸ், தந்தமெஸ், திலோபா, போதிதர்மர் போன்றோர் உண்மையானவர்கள். அவர்களுக்கு உலகம் கொடுத்த பெயர் 'விசரர்கள்'. இவர்கள் தங்கள் வாழ்நாள் முழுக்க 'உண்மை பேசியவர்கள்'. உண்மையைத் தவிர வேறெதுவும் தெரியாதவர்கள். தங்கள் சொந்த அனுபவங்களைக் கூறியவர்கள். சொல்லுக்கும் செயலுக்கும் வித்தியாசம்

அறியாதவர்கள். தங்கள் கருத்துக்களைத் துணிந்து கூறியவர்கள். அரசன், ஆண்டி எல்லோரையும் சமமாகவே பார்த்தவர்கள்.

பல நூலாசிரியர்கள் தியோஜினிஸைப் பற்றியும் அவரது நாய்களைப்பற்றியும் நகைச்சுவை கலந்த அவரது கருத்துக்களைப் பற்றியும் தத்தமது படைப்புக்களில் குறிப்பிட்டுள்ளார்கள். அவற்றில் சிலவற்றை இங்குப் பார்ப்போம்.

வில்லியம் பிளேக்கின் (William Blake) 'சொர்க்கத்தினதும் நரகத்தினதும் திருமணம்' (The marriage of Heaven and Hell), சாள்ஸ் டிக்கின்ஸ்ன் (Charles Dickens) 'டோம்பியும் மகனும்', (Dombey and Son) என்ற தனது நாவலில் டோம்பி தனது நாய்களுடன் நட்பாக இருப்பதை தியோஜினிஸ் உடன் ஒப்பிட்டுள்ளார்.

வலரியா மான்பிரடி (Valeria Manfredi) தனது நூலான அலெக்சாண்டர்: உலகத்தின் முடிவு (Alexander: The ends of the earth) என்ற நூலில் அலெக்சாண்டர் தியோஜினிஸை நேரடியாகச் சந்தித்ததைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளார். சேர் ஆதர் கொனன்டொயில் (Sir Arther Conondoyle) 'கிரேக்க உபந்நியாசர்' The Greek Interpreter) என்ற நூலில் தியோஜினிஸின் கருத்துக்களைப் பற்றி குறிப்பிட்டுள்ளார்.

சேக்ஸ்பியர் 'ஏதென்ஸ் நகர திமோன்' (Timon of Athen) என்ற கதையில் திமோனை தியோஜினிஸ் உடன் ஒப்பிடுகிறார். திமோனின் நாயை தியோஜினிசின் குதர்க்க விவாத தத்துவத்துடன் (Cynic Philosophy) இணைக்கிறார்.



தியோஜினிசின் உருவச்சிலை வற்றிக்கன் அருங்காட்சியகத்திலும் (Museum of Vatican) டாவின்சி வரைந்த மொனலிசா ஓவியம் உள்ள பாரிஸ் நகர லூவர் (Louvre) அருங்காட்சியகத்திலும் உள்ளது. கிரேக்க நாட்டிலும் இவரது உருவச்சிலை கையில் லாம்புடனும், நாயுடனும் இவர் தனது சாப்பாட்டுக் கோப்பையை உடைப்பது போன்ற சிலைகளும் உள்ளன.

தியோஜினிசும் அலெக்சாண்டரும் உரையாடும் காட்சி பளிங்குக் கல்லில் செதுக்கப்பட்டு றோமில் (Rome, Italy) வற்றிக்கானுக்கு அண்மையில் உள்ள விலா அல்பனியில் (Villa Albani) உள்ளது. சரித்திர முக்கியத்துவமானதாக அந்தச் சிற்பம் கருதப்படுகிறது.

மருத்துவத்துறையில் 'தியோஜினிஸ் நோய் அறிகுறி' (Diogenes syndrome) என்ற மருத்துவக் கலைச்சொல் பாவிக்கப்படுகிறது. பொதுவான நடைமுறைகளுக்கு விரோதமாக நடப்பவர்களுக்கு (Behavioural Disorder) உளவியலிலும் மருத்துவத்திலும் தியோஜினிசின் பெயர் பாவிக்கப்படுகிறது.

தியோஜினிசினைப் பற்றிய உலகத்தின் கணிப்பு அன்றும் இன்றும் இப்படித்தான் இருக்கிறது.

தியோஜினிஸ் என்றால் ஞானம், தீர்க்க தரிசனம், தன்னை வெல்லல், துணிச்சல், உண்மை உரைத்தல், மரணத்தைத் தன் கட்டுப்பாட்டில் வைத்திருத்தல் போன்ற கருத்துக்களும் தியோஜினிஸ் என்ற பெயருக்கு அர்த்தமாக கொடுக்கப்பட வேண்டும்.

போதிதர்மரும் தியோஜினிசும் ஒருவரை ஒருவர் சந்தித்திருந்தால் உலகில் அது ஒரு வரலாற்று மிக்க அற்புத சந்திப்பாக அமைந்திருக்கும்.

நான் ஏன் பிறந்தேன் படத்தில் மக்கள் தலைவர் திரு எம். ஜி. இராமச்சந்திரன் அவர்கள் பாடுவதாக அமைந்த இந்தப் பாடலை கவிஞர் திரு. வாலி அவர்கள் இயற்றி திரு. சங்கர் கணேஷ் அவர்கள் இசையமைத்து திரு. டி.எம். சௌந்தரராஜன் அவர்கள் பாடிய ஒரு பாடலில் தியோஜினிஸ் பற்றிய குறிப்பு காணப்படுகிறது.

இதோ அந்தப் பாடல்:

தம்பிக்கு ஒரு பாட்டு அன்புத் தங்கைக்கு ஒரு பாட்டு
வாழ்வில் நம்பிக்கை வளர்வதற்கு உதவும் நான் சொல்லும் கதைப்பாட்டு
பிறப்பால் வளர்ப்பால் இருப்பவர் எல்லாம் மனிதர்கள்

அல்ல என்றாராம்
இனத்தால் அல்ல மனத்தால் மட்டும் வாழ்பவன் மனிதன் என்றாராம்
ஒரு மேதை பகல்வேளை கையில் விளக்குடன் சென்றாராம்
மனிதன் எங்கே? மனிதன் எங்கே? காணவில்லை
தேடுகிறேன் நான் என்றாராம்.....
.....

■■

அத்தியாயம் 31

இந்தியாவின் நல்லெண்ணத் தூதுவர் (Goodwill Ambassador)



போதிதர்மர் தான் விஜயம் செய்த நாடுகளில் இந்தியப் பௌத்தத்தை மாத்திரமல்ல இந்தியக் கலையான தற்காப்புக் கலையையும் பரப்பினார். அந்நாடுகளில் இந்தியாவின் ஆன்மிக, கலை, நல்லெண்ணத் தூதுவராகவும் மருத்துவ விஞ்ஞானியாகவும் செயல் பட்டுக்கொண்டார்.

போதிதர்மர் சித்தரா? யோகியா? மகானா? ஞானியா? சிந்தனையாளரா? அறிவியல் மேதையா? மருத்துவ விஞ்ஞானியா? மானிடவியல் விஞ்ஞானியா? புரட்சியளரா? புத்தரா? அதற்கும் அப்பாலா...? போதிதர்மர் யார் என்பது புரியமுடியாத புதிராகவே இன்றும் உள்ளது.

போதிதர்மர் ஒரு மிகப்பெரும் ஞானி மாத்திரமல்ல அவர் ஒரு மாபெரும் சித்தரும் ஆவார். போதிதர்மர் தமிழகத் திலிருந்து சீனதேசம் சென்று அங்கு மருத்துவத்திலும் சிறந்து விளங்கியது போல் வெவ்வேறு கால கட்டங்களில் அங்கிருந்தும் சீனச் சித்தர்கள் தமிழகம் வந்து மருத்துவத்தில் சிறந்து விளங்கியிருக்கிறார்கள்.

அட்டாங்க யோகம், அட்டமா சித்தி இவைகள் அனைத்தையும் பெற்று சித்தர்கள் தங்களை நன்கு உணர்ந்தவர்கள் (self-Realized) ஆனார்கள். அதன் வழிகளில்


திருமூல சித்தர்

ஞானம் அடைந்தனர். இவர்கள் வாழ்க்கை முறைகள் பற்றியும், யோக முறைகள் பற்றியும், நிறைய உபதேசம் செய்திருக்கிறார்கள். சித்தர் போகர் சிங்கம், புலி, பசு, பூனை போன்ற விலங்கினங்களுக்கும் உபதேசம் செய்தார் என அவர் பற்றிய தகவல்கள் கூறுகின்றன. மருத்துவத்தின் தந்தை சித்தர்களே ஆவார்கள். போகரை வேதியியலின் தந்தை என்றும் கூறலாம். சித்தர்களில் தலைமையானவர் திருமூலரே. தாவரங்களின் இலை, பூ, காய், விதைகள், தண்டு, வேர் போன்ற வற்றின் தனித்தன்மைகளையும் சித்தர்கள் நன்கு ஆராய்ந் துள்ளனர். குழந்தைகள் பிறப்பதைப் பற்றியும் சித்தர்களின் வைத்திய நூல்களில் விளக்கமாகக் கூறப்பட்டுள்ளது. சித்தர்களின் ஆய்வுக்கு உட்படாதது எதுவும் இல்லை. அவர்கள் மிக்க அறிவியல் சார்ந்தவர்கள் ஆவார்கள்.

சித்தர்கள் அட்டாங்க யோகங்களையும் அட்டமா சித்திகளையும் பெற்று எல்லாம் அறிந்தவர்களாகவும், எல்லாம் வல்லவர்களாகவும், எந்தக் கணத்திலும் எங்கும் செல்லக்கூடிய சக்தியுடையவர்களாகவும், உலகில் எங்கு எது நடந்தாலும் அதனை அறியக்கூடிய ஆற்றல் பெற்றவர்களாகவும் இருந்தார்கள். கூடுவிட்டுக் கூடு பாய்தல் (பரகாயப் பிரவேசம்) கலையைத் தெரிந்தவர்கள் சித்தர்கள். அதாவது உடலிலிருந்து நீங்கி வேறு உடலுக்குள் பிரவேசித்தலாகும். உயிர் வேறு (பிரக்ஞை - consciousness), உடல் வேறு என்பதற்கு இது ஒரு சான்றாகும்.

அட்டாங்க யோகங்களாவன:

இயமம் : கொல்லாமை, வாய்மை, கள்ளாமை.

நியமம் : தவம், மனத்தூய்மை, தத்துவ நூலோர்தல்.

ஆதனம் : சுகம், திடம், வீரம், மயூரம்.

பிராணயாமம் : பிராணவாயுவைத் தடுத்தல், வாயுவை உட்செலுத்துதல், வெளிச்செலுத்துதல்.

பிராப்தியாகாரம் : மனமானது புலன்கள் வாயிலாகச் சென்று உழலாவண்ணம் தடுத்தல்.

தாரணை : உந்தி, இதயம், உச்சி ஆகியவற்றில் உள்ளத்தை நிலைநிறுத்தல்.

தியானம் : மனம் கடந்து அப்பால் செல்லல்.

சமாதி : தன் உணர்வைக் கடந்து வெறும் உடலாக இருத்தல்.

அட்டமா சித்திகளாவன:

அணிமா : அணுப்போன்று சூக்குமமாதல், உடலைச் சுருக்குதல்.

இலகிமா : பஞ்சைப் போல இலேசாதல், ஆகாயத்தில் பறத்தல், வேகமாகச் செல்லுதல், நீரில் நடத்தல்.

மகிமா : மலைபோன்று பெரிதாகுதல், உடலைப் பெருப்பித்தல்.

கரிமா : கனமாதல், கல்லாக மாறுதல்.

பிராப்தி : எல்லாப் பொருட்களையும் தன்பால் வரவழைத்தல், அதாவது மனதில் நினைத்ததை அடைதல்.

பிராகாமியம் : உருவம் மாறுதல், வாயு மூலமாகப் பிறரது உடலினுள் உயிரைச் செலுத்துவதாகும்.

வசித்துவம் : பொதுஜனங்களை தன்பால் ஈர்த்தல்.

ஈசத்துவம் : தெய்விக நிலையை அடைதல்.

சீனதேச சித்தர்கள்:





காளங்கிநாதர் காசியில் பிறந்து சீனாவில் சித்த மருத்துவ விஞ்ஞானத்தைப் பரப்பி பின்பு காஞ்சிபுரத்தில் சமாதியானார் எனவும், இதை மறுத்து அவர் சீனாவில் பிறந்து இந்தியாவில் திருமூலரின் சீடனாக இருந்து பின்பு சீனா சென்று சமாதியானார் எனவும் தகவல்கள் கூறுகின்றன. இவரது சீடரான போகர் சீன தேசத்தவர் எனவும், போகரின் சீடரான புலிப்பாண்டியும் சீன தேசத்தவரே எனவும் இவர்கள் இருவரும் பழனியில் சமாதியானார்கள் எனவும் ஏடுகள் கூறுகின்றன. பிறிதொரு சீன தேசத்துச் சித்தரான அழுக்கண்ணர் திருக்குறுங்குடியில் சமாதியானார் என ஏடுகள் கூறுகின்றன.

சீன ஞானி லா-சூ தான் போகரா?

சீனப் பெருஞானியான லா-சூ (Lao-Tzu)அல்லது லாசீ (Lao-Zi) இவரே என்று பேராசிரியர் இராமையா யோகி அவர்கள் 'போகர் 7000 நூல்' மதிப்புரையில் கூறியுள்ளார் என அறியவருகிறது. அகத்திய முனிவர் போகரைச் சீன தேசத்தவரே எனக் குறிப்பிடுகிறார்.



Bhogar traversing the sky

இவைகள் பல்லாண்டுகளுக்கு முன் நடந்த சம்பவம் என்றபடியால் ஏடுகளில் தெளிவாக வரையறுத்துக் கூறப்படவில்லை. இதனாலேயே தகவல்கள் ஒன்றுக்கொன்று முரண்படுகின்றன. பெரும் சித்தர்கள், மகரிசிகள் தாங்கள் அறிந்த உண்மைகளை மற்றும் மருத்துவ விஞ்ஞானத்தைச் சீன - பாரத தேசங்களுக்கு இடையில் பரப்பி நல்லுறவு நிலவ ஆன்மீகப் பாலமாகவும் இருந்துள்ளார்கள்.

லாசி, லா-சூ, லாவோற்சு (Laozi/Lao Tzu) என்பதெல்லாம் இந்த ஞானியைக் குறிக்கும் பெயர்கள். இவரைப்பற்றிக் கூறும் ஏடுகளிலொன்று இவரது காலத்தை கி.மு. 551-479 எனக் கணிக்கிறது. இவரது வரலாற்றைக் கூறும் ஏடுகளில் தகவல்கள் வித்தியாசப்படுகின்றன.

இவர் சீனாவிலிருந்து இந்தியாவிற்குள் பிரவேசித்து சமாதி நிலையிலிருந்தும் கூடுவிட்டுக் கூடு பாய்ந்தும் பல கால கட்டங்களில் வாழ்ந்து பிற்காலத்தில் சித்தர் போகர் என அழைக்கப்பட்டவரும் லா-சூ வே என அறியவருகிறது. லாசூவின் தாவோ மதக்கோட்பாடுகள் (Taoism) காலப் போக்கில் போதிதர்மரின் சென்மதக் கோட்பாடுகளுடன் கலந்துவிட்டது. இவரைப் பற்றியும் இவரது மத நூல் Dao De Jing பற்றிய விளக்கமும் அத்தியாயம் 11-இல் காணப்படுகிறது.



பௌத்த துறவியான போகரின் இயற்பெயர் போ-யாங். இப்பெயரே போ-யர் என மருவி பின்பு போகர் (Bhogar) என நிலைத்துவிட்டதாக அவரைப் பற்றிய பிறிதொரு தகவல் கூறுகின்றது. இவர் தஞ்சைப் பெருங்கோயிலின் கோபுரத்தின் உச்சிக்குக் கலசம் கொண்டு சென்று வைக்க பொறியியல் தொழில்நுட்ப ஆலோசனை வழங்கியவர் என்றும் கூறப்படுகிறது. இவர் கூடுவிட்டுக் கூடு பாய்ந்து பல காலகட்டங்களில் வாழ்ந்துள்ளார் என நம்பப்ட டுகிறது.

சித்தர்கள் நாடு, இனம், மொழி, மதம் என்ற கட்டுப்பாட்டில் வாழ்ந்தவர்கள் அல்ல. பல நாடுகளில் சித்தர்கள் அப்படித்தான் வாழ்ந்துள்ளார்கள்.

கதிர்காமத்தில் போகர்:





கிரிஜா பாபாஜி

போகர் பழனியில் சமாதி எய்து வதற்கு முன் அவர் இலங்கையிலுள்ள (Sri Lanka) கதிர்காமத்திற்குச் சென்று 1008 தாமரை இதழ் வடிவம் கொண்ட யந்திர ஸ்தலம் (Yantra Shrine) அமைத்தார் எனக் கூறப் படுகின்றது. அங்கு சித்தர் கிரிஜா பாபாஜி நாகராஜ் இவரிடம் கிரியா யோகம் கற்று போகரின் சீடர் ஆனார். கிரியா பாபாஜி கதிர்காமத்தில் சமாதி எய்தினார். அவரது நினைவாலயமான கிரிஜா பாபாஜி ஸ்தலம் (kriya Babaji shrine) அங்கு அமைந்துள்ளது. சித்தர் யாழ்ப்பாணத்து சுவாமியும் கதிர்காமத்திலேயே சமாதி யடைந்தார்.

சித்தர் போகரை சீனா வரும்படி மனவழிமூலம் (Telepathy) வேண்டுகோள்:

சித்தர் போகர், சித்தர் காளங்கிநாதரின் சீடர் ஆவார். இந்தியாவிலிருந்து சென்ற காளங்கிநாதர் சீனாவில் மூலிகை மருத்துவத்தையும் சித்த மருத்துவ விஞ்ஞானத்தையும் பரப்பியவர். தமிழ்நாட்டில் பழநியில் இருந்த தனது சீடன் போகரை சீனாவிற்கு உடனே வரும்படி மனவழிமூலம் செய்தி அனுப்பினார்.



சித்தர் போகரும்
சித்தர் காளங்கிநாதரும்



சித்தர் போகர்

அதை மனவழிமூலம் பெற்றுக் கொண்ட போகர் விமானம் நிர்மாணித்தும், அட்டமா சித்திக் கலையைப் பிரயோகித்தும் பறந்து சீனா சென்றடைந்தார். அங்குத் தன் குருவைச் சந்தித்தார். போகருக்கு நீடித்த காலம் வாழும் காயகல்ப கலையையும், அதற்கான மூலிகைத் தயாரிப்பையும் விளக்கி விட்டு தன் பணியைத் தொடரும்படி கேட்டுக்கொண்டுவிட்டு காளங்கிநாதர் சமாதிநிலைக்குச் சென்றுவிட்டார் என அபிதான சிந்தாமணி, தமிழ்மொழி அகராதி என்ற நூல்களில் சித்தர்களைப்பற்றிய பகுதியில் காணப்படுகிறது.

இந்தியா - சீனா ஒருவரை ஒருவர் புரிந்துகொள்ள பௌத்தம் ஆன்மிகப் பாலமாக இருந்துள்ளது. இந்திய - சீன நல்லுறவுக்குச் சித்த வைத்தியமும் ஆரோக்கியப் பாலமாக இருந்துள்ளது.

போதிதர்மர் கண்ட சீன - இந்திய நல்லுறவு மீண்டும் மலர வேண்டும்.

■■



பாகம் 3

எல்லாமானவராகவும் எல்லாமற்றவராகவும் இரு

Be empowered as well as unempowered

அத்தியாயம் 32

'சும்மா இரு' - 'Be Non-self'

'உண்மையை' மறைப்பதற்கே இன்று உலகில் சொற்கள் அதிகம் பயன்படுத்தப்படுகிறது. பழைய உண்மை, புதிய உண்மை என்று உண்மையில் வேறுபாடில்லை. இருப்பது எதுவோ அது 'உண்மை'. உண்மையைப் பற்றிப் பேசும்போது அதற்கு ஆதாரங்களைத் தேடிப்பிடிக்க வேண்டிய அவசிய மில்லை. அந்த ஆதாரங்கள் உண்மைக்கு எதையும் சேர்த்து விடப்போவதில்லை. உண்மை என்பது உண்மைதானே! உண்மைக்கு பெருமையும் புகழும் சேர்க்கவும் முடியாது.

போதிதர்மர் அவர்கள் உண்மையைப் பேசுவதற்காகவே சொற்களைப் பயன்படுத்தியவர். காரணம் உண்மையைத் தவிர வேறு எதுவும் தெரியாதவர். உண்மையின் ஊடாகத்தான் அவரைப் புரிந்துகொள்ள முடியும். போதிதர்மரைப் புரிந்துகொள்ளக்கொள்ள உண்மையை அனுபவிக்கத் தொடங்குகிறோம்.

இன்று புதிதாக இருப்பது காலம் கடக்கப் பழசாகிவிடும். இன்று பழையது என்று சொல்லப்படுவது ஒரு காலத்தில் புதிதாக இருந்தது, அது இயற்கை. புதிதும் அற்றது, பழசும் அற்றது, இரண்டும் அற்றது, ஆதியும் அந்தமும் அற்றது எதுவோ அதுதான் 'உண்மை'. அது நிரந்தரமானது, அழிவற்றது, இயற்கையானது. உண்மையை உணர்ந்தவர்கள் உண்மையாகவே உண்மையை உணர்ந்தவர்களாக இருப்பதால் அவர்கள் அறிந்திருப்பதும் அதே நிரந்தர உண்மையைத்தான். வருங்காலத்தில் உண்மையை உணர்பவர்களும் இதே உண்மையைத்தான் உணரப்போகிறார்கள்.

போதிதர்மர் அவர்கள் உண்மை என்று நினைப்பதை, உண்மை என்று கருதுவதை உண்மை என்று உணர்வதைச் சொல்லிவிடும் நேர்மையாளர். அதுதான் ஒரு மனிதனின் நேர்மையாகும். போதிதர்மர் ஏதாவது சொல்கிறார் என்றால் அதைத் தம் சொந்தப் பொறுப்பாகவே சொன்னார். தனது சொந்தக்குரலில் பேசினார். இரவல் குரலில் பேசவில்லை. 'உண்மையை' வெளிப்படுத்த நூல்களிலோ அல்லது பிறர் சொன்னதிலோ ஆதாரங்களைத் தேடுவது நம்பிக்கை யின்மையின் அடையாளம். போதிதர்மா அவர்களுக்கு தான் சொல்வதில் அழுத்தமான நம்பிக்கை இருந்தது.

"உங்கள் அனுபவத்தால் உண்மையை உணர்ந்து பாருங்கள்" என்கிறார் புத்தர். உபநிடதங்களும் இதையேதான் கூறுகின்றன.

இந்த உலகில் பல மொழிகள், அத்தனை வகையான மக்கள் இருக்கிறார்கள், அதனால் அத்தனை வகைகளில் தங்களை வெளிப்படுத்திக்கொள்கிறார்கள். உலகில் உள்ள அத்தனை மொழிகளும் உலகத்திற்கு வளம் சேர்த்து விடுகின்றன. பூங்காவில் உள்ள பலவகை மலர்கள் பூங்காவிற்கு அழகு சேர்ப்பது போலப் பல மொழிகள் உலகிற்கு அழகு சேர்க்கின்றன. 'ஆன்மிகம்' என்பது எங்களுக்கும், இயற்கைக்கும் இடையே நடக்கும் உரையாடலுக்கு ஒரு தொடர்பை ஏற்படுத்தும் மொழி போன்றதே. மதங்களை, மார்க்கங்களை எல்லாம் ஒவ்வொரு மொழி என்று எடுத்துக்கொண்டால் எந்தப் பிரச்சினையும் இல்லை. எந்த மொழியும் பயனுள்ளவைதான். ஒரே நிகழ்வை வெவ்வேறு உணர்வுகளில், வெவ்வேறு வடிவங்களில் வெவ்வேறு மொழிகளில் வெளிப்படுத்த முயல்வதே மதங்களும் மார்க்கங்களும் ஆகும். இதைப் புரிந்துகொண்டால் எல்லாமே சரியாகிவிடும். ஆன்மிகம் என்பதே சொல்ல முடியாததைச் சொல்ல முயல்வதுதானே!

பலவகை மனிதர்கள் அதனால் பலவகை மதங்கள், மார்க்கங்கள், சமயங்கள். ஒவ்வொரு வகை மனிதருக்கும் ஒவ்வொரு வகை பிரியங்கள்தானே! பெயர் இல்லாத ஒன்றுக்குப் பெயர் வைத்துவிட்டார்கள் 'கடவுள்' என்று.

அந்தப் பெயர் இல்லாத 'உண்மைக்கு'ப் பல வகையான பெயர்களைக் கண்டுபிடித்துவிட்டார்கள்.

வடிவங்கள் என்பது முக்கியமல்ல, 'ஆன்மிகப் பிரக்ஞை' தான் முக்கியமானது. ஒவ்வொரு வடிவமும் அழகானதுதான். எத்தனை வகை மனிதர்கள், ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு முகம், அதனால் வித்தியாசமான அழகு அல்லவா!. ஒவ்வொரு மனிதனதும் கைரேகை பிறருடையதிலிருந்து முழுக்க வேறுபட்டுத்தான் இருக்கிறது. அதனால் எந்தப் பிரச்சினையும் எழவில்லையே! இதைப் புரிந்து கொண்டால் உலகளாவிய சகோதரத்துவம் சாத்தியமாகும். மத, மொழி, நிற, இன, உடை, உணவு உணர்வு, நாடு, கலாச்சாரம், சம்பிரதாயம், மரபு, பழக்கவழக்கங்கள் அனைத்து வித்தியாசங்களும் உலகிற்கு அழகைப் படைக்கின்றன.

இந்த வித்தியாசங்களை நாம் இரசித்துக்கொண்டால் நாங்கள் எல்லோரும் மனிதர்களாகிவிடுவோம்.

உபநிடதத்திற்கென்று (இந்து மதம்) ஓர் அழகுண்டு
அங்கே வாழும் முறை இருக்கிறது,

குரானுக்கென்று (இஸ்லாம்) ஓர் அழகுண்டு
அங்கே சமத்துவம் இருக்கிறது,

பைபிளுக்கென்று (கிறிஸ்துவம்) ஓர் அழகுண்டு
அங்கே காருண்யம் இருக்கிறது,

தம்மபதம், திரிபீடம் (பௌத்தம்) இவைகளுக்கென்று
ஓர் அழகுண்டு
அங்கே நேயம் இருக்கிறது,

கல்பசூத்திராவுக்குகென்று (சமணம்) ஓர் அழகுண்டு
அங்கே அகிம்சை இருக்கிறது,

ஹிராந்த்சாகிப்பிற்கென்று (சீக்கியம்) ஓர் அழகுண்டு
அங்கே சேவை இருக்கிறது,

சென் –கோன் – Zen-Koans (சென்) இற்கென்று
ஓர் அழகுண்டு
அங்கே கடின உழைப்பும் முயற்சியும் இருக்கிறது,

அவஸ்ரா (Avesta)விற்கென்று (சொறாஸ்ரிறிய மதம்)
ஓர் அழகுண்டு
அங்கே சகிப்புத்தன்மை இருக்கிறது,

ஸ்பண்டஹாறிகாவிற்கென்று spandakarika (தந்திரா) ஓர் அழகுண்டு
அங்கே இயல்பாக வாழ்தல்; இருக்கிறது,

ரால்மெட்டு – Talmudக்கென்று (ஜடைஸ்ம்) ஓர் அழகுண்டு
அங்கே மரபுகள் இருக்கிறது

ராவோஜிங்க்கு (Dao de jing) என்று (Taoism) ஓர் அழகு உண்டு அங்கே இயற்கையுடன் நகர்தல் இருக்கிறது,

எண்ணூலுக்கென்று (சாங்கியம்) ஓர் அழகுண்டு
அங்கே அளவு பரிமாணம், இயற்கைத் தன்மையும் இருக்கிறது,

நூல்கள் அடங்கிய நூலுக்கு (சூஃபி மதம்) ஓர் அழகுண்டு
அங்கே கலைப்படைப்பு இருக்கிறது,

இவைகளைக் கூறும் மொழிகளான சமஸ்கிருதம், அரபு, அரமிக் (ஹீபுறு) பாலி, பிரகிறிட், பஞ்சாபி, சீனம், பஹ்லவி (Pahlavi), ஹீபுறு இவைகள் ஒவ்வொன்றும் வெவ்வேறு மொழிகளே. இந்த அனைத்து வித்தியாசங்களும் உலகுக்கு அழகு சேர்க்கின்றன.

மனிதர்கள் பல மொழிகளை, பல மதங்களை, மார்க்கங்களைத் தெரிந்துகொள்வது நல்லது. அவைகள் மனிதகுலம் வளம்பெற உதவியாக இருக்கும். மனிதர்கள் பக்க சார்பற்றவர்களாகவும், மதமற்றவர்களாகவும், பரந்த

மனத்தவர்களாகவும் மாறிவிடுவார்கள். நாம் அனைவரும் மனிதநேயம் கொண்டவர்களாகிவிடுவோம். எல்லாவற்றிற்கும் மேலாக 'மனிதனாகி'விடுவோம்.

சிந்தனையைப் பற்றிய சீன சென் ஓவியம் ஒன்று இவ்வாறு வரையப்பட்டுள்ளது, அதில் ஒருவர் தணிவு நிலையில் (Relaxed) இருக்கிறார். அந்த ஓவியத்தின்மேல் இவ்வாறு எழுதப்பட்டுள்ளது.

'இவர் ஒரு சிந்தனையாளர், எவ்வகையிலும் சிந்தித்துக்கொண்டிருக்கவில்லை'



சிந்தனையாளன் மட்டுமே அங்கிருப்பது. ஆனால் அங்கு சிந்தனையில்லை. இந்த ஓவியத்தில் சிந்தனைகள் இருக்கின்றன, சிந்தித்தல் இருக்கிறது, ஆனால் சிந்தனையாளன் இல்லை. அந்த ஓவியத்தில் காணப்படும் சிந்தனையாளன் தணிவு நிலையில் உள்ளத்தில் எதுவித எண்ணங்களும் எழாமல் இருக்கிறான். அவனது தன்உணர்வு எங்கும் சென்றுவிடவில்லை. அது ஓய்வாக இருக்கிறது. ஓவியத்திலுள்ள மனிதன் 'சும்மா' இருக்கிறான்.

மனிதன் மிக முக்கியமானவன். மனிதனைப் பொறுத்துத் தான் நிகழ்வுகள் நகர்கின்றன. ஆடுபவரும், ஆட்டி வைப்பவரும், ஆட்டத்தை நிறுத்துபவரும் எல்லாம் மனிதர்களே.

மாசுபட்ட வெளியுலகச் சூழலைப் பற்றி அதிகம் பேசுகிறோம் ஆனால் மாசுள்ள மனங்கள் (Pollution of the mind) அதைவிட தீமை விளைவிக்கக்கூடியவை. 'Energy Crisis' பற்றிய விஷயங்கள் பத்திரிகைகளில், வானொலிகளில் தொலைக்காட்சிகளில் தினமும் முக்கிய செய்தியாகிக் கொண்டிருக்கிறது. ஆனால் மனிதருக்குள் இருக்கும் Internal

Crisis அதைவிட முக்கியமானது. மனித வர்க்கத்துக்குள்ளே 'Energy' முடங்கிக்கிடக்கிறது. மனிதர்களுக்குள்ளே புதைந்து கிடக்கும் 'சக்தியை' மனிதன் தோண்டிப் பார்க்கவில்லை. மனிதருக்குள் மறைந்திருக்கும் 'அற்புத சக்தியை' 'அபார சக்தியை' வெளிக்கொணர்ந்து பிரயோகித்தால் அது உடலுக்கும், உள்ளத்துக்கும், உலகத்துக்கும் உபயோகமானது.

இயற்கையைத் தவிர்த்தால்,

மனிதனால்தான் ஒவ்வொன்றும் ஏதோ ஒன்றாகிறது.

மனிதனால்தான் மாற்றங்கள் நிகழ்கின்றன.

மனிதன் தன்னை நம்ப நம்ப 'அபார சக்தி கொண்டவன் ஆகின்றான்.'

மனிதனைவிட உயர்ந்த சக்தியும் மனிதனே!

கிழக்கு, மேற்கு, 3-ஆம் உலக நாடுகள், வளரும் நாடுகள், வளர்ந்த நாடுகள், இடது சார்பு நாடுகள், வலது சார்பு நாடுகள், ஏழ்மை நாடுகள், செல்வந்த நாடுகள், அணி சேர்ந்த நாடுகள், அணி சேராத நாடுகள், மத சார்பு நாடுகள், மொழி சார்பு நாடுகள் என அனைத்துப் பிளவுகளும் மனித குலத்தைக் கொன்றுவிடுகின்றன.

கிழக்கின், மேற்கின், வடக்கின், தெற்கின் நாகரிகங்களை, வாழ்க்கை முறைகளை ஒருவருக்கொருவர் புரிந்து வாழ அங்கே மனித வித்தியாசங்கள் முக்கியமற்று மறைந்துவிடும், தேசங்களுக்கிடையிலான புரிந்துணர்வும் மலர்ந்துவிடும். நாகரிக வித்தியாசங்களை, வாழ்க்கை முறைகளை ஒன்றோடொன்று கலந்து குழப்பாமல் அவையவைகளை அதன்வழிகளில் புரிந்து ஏற்றுக்கொள்ள மனித உறவு பிரபஞ்சத்தின் மத்தியாகிவிடும்.

கிழக்கிற்கும், மேற்கிற்கும் இடையிலான சில வித்தியாசங்களை இங்குக் கவனிப்போம்.

Way of writing and Reading :

ஆசியாவில் உள்ள மத்திய கிழக்கு நாடுகளில் எழுத்துக்களை வலப்பக்கத்திலிருந்து இடப்பக்கம் நோக்கி

எழுதுதலும், வாசித்தலும் வழக்கமாக உள்ளது. மேற்கு உட்பட ஏனைய பல நாடுகளில் இடப்பக்கத்திலிருந்து வலப்பக்கமாக எழுதுதலும், வாசித்தலும் வழக்கமாக உள்ளன.

Structure of Letters:

சில கிழக்கத்தேய எழுத்துக்கள் செங்குத்தானவை ,(Vertically structured), பொதுவாக மேற்கத்தய எழுத்துக்கள் கிடையானவை (horizontally structured) எனலாம்.

Greetings:

கிழக்கில் வரவேற்புக்கு (greetings) இருதயத்திற்கு அருகாமையில் செங்குத்தாக (verticlal) இருகரம் கூப்பி (with clasped hands), தலை வணங்கி நிமிர்ந்து (verticlal) மரியாதை வழங்கப்படுகிறது.

மேற்கில் கைகுலுக்கி (Hand shaking) மரியாதை வழங்குகிறார்கள். அதாவது கரங்கள் கிடையாக (Horizontally) நகர்கின்றன.

கிழக்கில் Vertical Greetings, மேற்கில் Horizontal Greetings எனலாம் (Western civilization is more horizontally based while oriental civilization is more vertical)

Family System:

கிழக்கில் மூதாதையரை மையப்படுத்திய குடும்ப அமைப்பு பலமாக உள்ளது. (In the orient, there is a tradition that the ancestors are the core of the family system).

கிழக்கில் கூட்டுக்குடும்ப அமைப்பு நிலவுகிறது.

பொதுவாக மேற்குலகில் அத்தகைய அமைப்பு அஸ்திவாரமாக இல்லை. ஆனால் தனித்துவம் மதிக்கப்படுகிறது. தனி மனித சுதந்திரம் சுதந்திரமாக உள்ளது.

Food Habits:

கிழக்கில் Rice and spicy food ஐயும் மேற்கில் Meat and potatoவையும் மையப்படுத்திய உணவு பிரதானமாகிறது. சிலேடையாக மேற்கை Meat and potato culture என்று சொல்வது போலக் கிழக்கை spicy culture என்று சொல்லலாம் போலத்தோன்றுகிறது.

Education:

கிழக்கில் ஆசிரியரை மையப்படுத்திய (Teacher Centred) கல்விமுறையாகவும் மேற்கில் மாணவரை மையப்படுத்திய (Student Centred) கல்விமுறையாகவும் உள்ளது

Political Approach:

கிழக்கில் தன்னை மையப்படுத்திய (Self centred அரசியலும், பொதுவாக மேற்கில் மக்களை / தேசத்தை மையப்படுத்திய (People Centred / Country Centred) அரசியலுமாக நகர்கிறது.

மேற்கில் தீர்வை நோக்கிய அரசியலும் கிழக்கில் தீர்வை பிரச்சினையாக்கி அரசியலாக்குவதும் பொது அம்சமகாக வுள்ளன.

மேற்கில் எதிர்கட்சியும் ஆளும் கட்சிபோலவும் கிழக்கில் எதிர்க்கட்சி எதிரிக்கட்சி போலவும் செயற்படுகின்றன. மேற்கில் சிரித்துக்கொண்டு கைகுலுக்கி சிநேகபூர்வ அரசியலும் கிழக்கில் பகையுணர்வுடன் விரோத அரசியலும் பொது அம்சங்களாகின்றன.

Time Value:

கிழக்கில் நேர விரயம் அதிகம். மேற்கில் நேரச் சிக்கனம் அதிகம் எனலாம்.

உணவிலும், வாழ்க்கை முறைகளிலும், சிந்திக்கும் விதத்திலும், Body Languae பிரயோகத்திலும் கிழக்கும் மேற்கும் வித்தியாசப்படுகிறது.

நாட்டுக்கு நாடும், நாடுகளுக்குள்ளும் புரிந்துணர்வு இல்லாமல் பகையுணர்வினால் பிளவுகள் நாளுக்கு நாள் பெரிதாகிக்கொண்டே செல்லுகிறது. இந்தப் பிளவுகள் அனைத்து மக்களையும் அளிக்கக்கூடிய போரைத் தோற்றுவிக்கப்போகிறது. வேகமாக வளரும் விஞ்ஞானம் இதைச் சுலபமாகச் செய்துவிடும். ஒரு நாட்டின் அதி உயர் இரகசியத்தைத் திருடுதல், தகவல்களுக்குள் . வேறு தகவல்களைப் புகுத்தி தகவல்களைக் குழப்பிவிடுதல் போன்ற அதியுயர் தொழில்நுட்பப் போரும் இடம்பெறத்தான் போகிறது. இராணுவப்போர் இல்லாமல் கணனியே (Computer) இப்போரில் முக்கிய பங்கு வகிக்சப்போகிறது. நோய்களைப் பரவச்செய்து மனித குலத்துக்கு அழிவை ஏற்படுத்தும் போர் இல்லாத போரும் இடம்பெறத்தான் போகிறது.

அப்படி ஏதும் நடப்பதற்கு முன்பு புதிய ஒரே பார்வையைப் பரவ விடவேண்டும். புதிய மானிடத்தைப் பிரசவிக்க வேண்டும். அப்படிப்பட்ட புதிய மனிதன் மேற்கத்தியவனாகவோ, கிழக்கத்தியவனாகவோ தெற்கோ, வடக்கோ என்று வித்தியாசம் எதுவுமில்லாமல் ஒரே சமயத்தில் எல்லாமானவராக உலகப்பிரஜையாக இருப்பார். அத்தகைய பிரஜைகள் அன்புக்கோட்டால் எல்லைகளற்ற உலக வரைபடத்தை வரைந்துவிடுவார்கள்.

இன்று வாழ்வு ஏதோ காரணங்களுக்காக நிகழ்கிறது. காரணங்களுக்குப் பின்னால் வாழ்வு ஓடுகிறது. மனிதவாழ்வு இயல்பாக இயற்கையாக நதிபோல் ஓடவில்லை. 'காரணங்களால்' வாழ்வு தீர்மானிக்கப்படுகிறது. அதனால் மனிதர்கள் காரணங்களை விரும்புகிறார்கள்.

தொழில் நுட்ப நாகரிகம் தொடர்ச்சியான தேவைகளை அதிகரிக்கச் செய்வதுடன் துன்பத்தையும், அச்சத்தையும் சேர்த்தே உருவாக்குகிறது. மனிதம் மனிதனுள் புகலிடம் தேடிப் பதுங்கிக்கொண்டது. மனிதனில் மறைந்திருக்கும் மனிதத்தை மனிதன் வெளியில் கொண்டு வரவேண்டும்.

அதற்கு ஒவ்வொருவரும் தங்களுக்கு உண்மையாக இருக்க வேண்டியது ஒவ்வொருவரினதும் தலையாய பொறுப்பாகும்.

நாம் பாவிக்கும் சொற்கள் நமது 'தளைகளை'த் தகர்த்திட வேண்டும். நாம் பாவிக்கும் சொற்கள் எங்களைச் 'சிறைப்படுத்தக்கூடாது'. நாம் பாவிக்கும் சொற்கள் எங்களுக்கு 'விடுதலை' தரவேண்டும்.

பாவிக்கும் சொற்கள் மூலம் அறியாமையிலிருந்து 'விடுதலை' பெறுவோம்! பாவிக்கும் சொற்கள் மூலம் போலியிலிருந்து 'விடுதலை' பெறுவோம்!!

பாவிக்கும் சொற்கள் மூலம் பொய்யிலிருந்து 'விடுதலை' பெறுவோம்!

நமக்கு நாமே விடுதலை கொடுத்து அந்த "விடுதலையை' நாம் அனுபவிப்போமாக.

போதிதர்மர் அவர்கள் ஒரே சமயத்தில் எல்லாமற்றவ ராகவும் எல்லாமானவராகவும் இருந்த ஒரு உலகப்பிரஜை ஆவார். போதிதர்மரின் மறுபக்கம் அன்பு, மனிதநேயம், மனித உணர்வு, பரிவு, நிசப்தம், கருணை, காருண்யம் ஆகும். அவர் உண்மையை உணர்ந்த உண்மையானவர். உலகம் பலபல போதிதர்மர்களை ஈன்றெடுக்க வேண்டும்.அவர் போன்றோர்களிலிருந்து சும்மா இருத்தல் மனித குலத்தை அடைந்தால்;,

அந்த சும்மா இருத்தலில் இருந்து
மனிதன் தன்னை அறிந்துவிடுவான்.
அந்த சும்மா இருத்தலில் இருந்து
மனிதன் உண்மையை உணர்ந்துவிடுவான்
அந்த சும்மா இருத்தலில் இருந்து
மனிதன் எல்லாம் ஆனவனாகவும் எல்லாம் அற்றவன் ஆகவும் விடுவான்
அந்த சும்மா இருத்தலில் இருந்து
உலகில் போர்கள் மறைந்துவிடும்
அந்த சும்மா இருத்தலில் இருந்து
உலகில் வேறுபாடுகள் மறைந்துவிடும்
அந்த சும்மா இருத்தலில் இருந்து
உலகில் மனித உணர்வுகள் மதிக்கப்படும்
அந்த சும்மா இருத்தலில் இருந்து
உலகில் மனிதம் மலர்ந்து மனிதனாகிவிடுவான்

போதிதர்மர் போன்று ஆழமான அமைதியையும் (Deep peace. great tranquility), அச்சமற்ற மனதினையும் (absence of fear), திடமான மனஉறுதியையும் (indomitable will) ஆழமான மனித உணர்வையும் நாம் எல்லோரும் பெற்றிடுவோம்.

மேற்கத்திய மனநிலை, பழக்கங்கள், கலாச்சாரங்கள், சூழல் நன்கு தெரிந்த கிழக்கும் அதே நேரத்தில் கிழக்கின் மனநிலை, பழக்கங்கள், கலாச்சாரங்கள், சூழல் நன்கு தெரிந்த மேற்கும் உருவாக வேண்டும். அப்போதுதான் எதையும் அரசியல் மயப்படுத்தாமல், அரசியலாகப் பார்க்காமல், மனித உணர்வாகப் பார்க்க முடியும்.

உலக அனைத்து மதங்களும் இதை நோக்கி நகரவேண்டும்!

உலக நாடுகளின் அரசியல் இதை நோக்கி நகரவேண்டும்!!

உலக அனைத்து மனித மனங்களும் இதை நோக்கி நகரவேண்டும்!!!

'சும்மா இருப்போமா'!!!

''யாதும் ஊரே யாவரும் கேளிர்''
மனித நேயத்துடன் வணக்கம்!

■■



Bestowing Blessing

சில ஆய்வு நூல்கள் (Selected Bibiliography)

1. Glimpses of World History
By Jawaharlal Nehru
Penguin Publications - 1934

2. The Discovery of India
By Jawaharlal Nehru
Penguin Publications - 1941

3. Bodhi Dharma : The Greatest Zen Master
Discourse by Osho -1987

4. Eastern Religion
By Michael. D.Coogan
Duncan Baird Publishers - 2005
London

5. The Essence of Buddha
The Path to Enlightenment
By Ryuho Okawa
Time Warner Paper Back Publishers - 2003
London

6. Zen Keys
By Thich Nhat Hanh
Double Day Publishers -2005
New York

7. மறுபிறப்பு பற்றிய ஆச்சரியமான தகவல்கள்
ஆசிரியர்: எஸ். குருபாதம்
மணிமேகலைப் பிரசுரம் - 2013
சென்னை, இந்தியா

Pictorial Images
Source -Google


போதிதர்மர் பற்றிய அற்புதமான விஷயங்கள்
The Miraculous Revelations of Bodhidharma
அசிரியர் : எஸ் குருபாதம்
Author : S. Gurupatham
Bodhidharma's image was sculpted
by Sangave Gunajothy (14 years old)
Kitchener(Waterloo), Ontario, Canada
March 14, 2014

குறிப்புகளுக்காக:

குறிப்புகளுக்காக:

போதிதர்மரைப்பற்றி இவர்கள்:



இந்நூலாசிரியர் எஸ்.குருபாதம்

- 'இந்தியாவில் பௌத்தம் படிப்படியாக குன்றி வந்ததனால் போதிதர்மர் இந்தியாவைவிட்டு சீனா பயணமானதற்கு அதுவும் ஒரு காரணமாக இருக்கலாம்'.

பாரத முதல் பிரதமர்

திரு ஜவகர்லால் நேரு.

Book : Glimpses of World History

- 'தென் இந்தியாவில் தமிழ்மொழி பேசும் இடத்தில் மாபெரும் பௌத்த ஞானி இருந்தார்'.

Xuan Zang (596-664 C.E):

சீனாக் கல்விமானும் துறவியும் .Book : Eastern Religions

- 'போதிதர்மர் புத்திக்கூர்மையும், மதியூகமும், அறிவும், ஞானமும் உள்ளவர்'.

Hieun Tsang (629 A.C.) சீனக் கல்விமானும் துறவியும். Book: Glimpses of world History

Highlights of Bodhidharmar :

- கௌதம புத்தருக்குப் பின்பு உலகு கண்ட புத்தர் இவர்.
- தமிழகத்தில் பிறந்து, தமிழைத் தாய் மொழியாகக்கொண்டவர், தமிழ்நாட்டிலேயே ஞானமடைந்தவர்.
- ஆன்மீகபோதனைக்காக வெளிநாடுகள் சென்ற முதல் இந்திய மகான்.
- "சென்" மதக்கோட்பாட்டை ஆசியாவில் முதன்முதல் நிறுவிய முதல்குரு.
- நெற்றிக்கண் கொண்டவர் (3rd eye), நோக்கு வர்மக்கலையின் முன்னோடி.
- சுவரை உற்றுநோக்கும் தியானத்தை அறிமுகப்படுத்தியவர்.
- தற்காப்புக்கலையின் தந்தை, புரட்சிகர ஞானி.
- மருத்துவ விஞ்ஞானி, அக்கியூபஞ்சர் மருத்துவச் சிகிச்சையின் தந்தை?
- உடல் உறுப்புகள்தானம் பற்றி உலகில் முதன்முதல் மருத்துவ விஞ்ஞான அறிவிப்பு.
- மனிதருக்கு 6புலன்கள் எனவும் 6வது புலன் காதுக்குள் உள்ள sense of balance எனவும் மருத்துவ கண்டுபிடிப்பு.
- மூலிகை மருத்துவ சிகிச்சையில் கைதேர்ந்த மாபெரும் சித்தர், மூலிகைத் தேயிலை அறிமுகம்
- கிழக்கே தோன்றிய அறிவியல் மேதை ஞான ஒளி போதிதர்மர்.